


THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Tuesday, the 4th November 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Magisterial posts

* 821 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government propose to convert all the magisterial posts into gazetted posts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

SRI S. LAZAR: இப்பொழுது சிவில் ஜுடிஷியரில் எல்லோரும் கெஜட் ஆபீஸர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? அதே "குவாலிபிகேஷன்ஸ், அதே சர்வீஸ் கண்டிஷன்ஸ்" இருக்கிற கிரிமினல் ஜுடிஷியரில் இருக்கக்கூடிய எல்லா மாஜிஸ்டிரேட்டுகளையும் ஒரே மாதிரியாக கெஜட் ஆபீஸர்களாக நியமிப்பதற்கு சர்க்கார் முயற்சிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்பொழுது இருக்கிற மாஜிஸ்டிரேட்களில் ஜில்லா மாஜிஸ்டிரேட்கள், சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட்கள் கெஜடெட் உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள். ஜில்லா முனிசீப் பதவியை ஒத்தது சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட் பதவி. அதற்குக் கீழே உள்ள அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்கள், சப்-மாஜிஸ்டிரேட்கள் கெஜட் பதவி இல்லாத உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள்.

SRI M. JAGANNATHAN: May I know what prevents the Government from converting these magisterial posts into gazetted posts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Only the feeling that there is no necessity. It is that that prevents the Government from doing it.

SRI T. T. DANIEL: May I know on what basis, the posts are declared as gazetted posts? Do the Government declare posts as gazetted taking into consideration the scales of pay attaching to them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Not only the scales of pay but also the status are taken into account. We cannot declare all posts as gazetted posts. Then there will be no value for gazetted posts. Therefore, certain posts are necessarily kept as non-gazetted posts.

[4th November 1958

SRI S. LAZAR : இந்த மாஜிஸ்டிரேட்கள் காடரிலே சப்-மாஜிஸ்டிரேட்கள்தான் கெஜடெட் ஆக்கப்படாமல் இருக்கிறார்களா ? அவர்கள் எத்தனை பேர்கள் ? அவர்களை கெஜடெட் ஆக்குவதில் அதிகப்படியாக சர்க்காருக்கு செலவோ அல்லது கஷ்டமோ என்ன இருக்க முடியும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சப்-மாஜிஸ்டிரேட்கள்மட்டுமல்ல அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்களும் கெஜட் பதவி இல்லாத உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள். எல்லோரையும் கெஜடெட் ஆக்கி விட்டால், கெஜடெட் பதவிக்கு மதிப்பு இல்லாமல் போய்விடும்.

SRI M. JAGANNATHAN : In view of the fact that these magistrates are discharging very useful and dignified functions, viz., dispensation of criminal justice, will the Government consider the desirability of converting those posts into gazetted posts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think that, simply because a sub-magistrate's post is not declared as a gazetted post, the sub-magistrate's dignity will in any way be affected.

Dalmia Cement Factory

* 822 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of employees in Dalmia Cement and other allied factories at Dalmiapuram, who developed tuberculosis during the period from 1952 to 1957;

(*b*) whether the nature of work and the atmosphere in which they work contribute to the development of this disease;

(*c*) whether these patients are treated at the expense of the management;

(*d*) whether in cases where such tuberculosis employees are discharged from service any special remuneration is paid to them by the management; and

(*e*) whether the management takes back into service tuberculosis-attacked employees after recovery?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) to (*e*) Particulars are given in the paper [a] placed on tht table of the House.

SRI S. LAZAR : It is stated in the paper placed on the table that the company doctor is of opinion that the atmosphere in the factory has in no way contribued to the development of tuberculosis. May I request the Government kindly to enquire into the matter by appointing a doctor of their own?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This is not a matter relating to this particular factory. The question has been examined generally and there are certain factories which are classed as contributing to the spread of particular diseases. On such examination, we find that this factory does not come under the category of those which contribute to the spread of tuberculosis.

---

[a] Printed as Appendix I on page 582 infra.

4th November 1958]

SRI S. LAZAR : From the particulars given here, we see that two or three people contract tuberculosis every year. May I ask him to re-investigate the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that it is only the general average; whether one is employed in the cement factory or any other factory or keeping quiet, the disease is prevalent.

Rickshaws

*823 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of (1) cycle rickshaws and (2) ordinary rickshaws for which licences have been issued in Conjeevaram, Chingleput, Salem, Madras, Vellore, Madurai and Tiruchirappalli towns during the years 1956, 1957 and 1958;

(*b*) the number of (1) cycle rickshaws and (2) ordinary rickshaws that have been refused licences in each of the towns during the years 1956, 1957 and 1958 and the reasons therefor; and

(*c*) the number of licences renewed in respect of old rickshaws during the year 1958?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The particulars are furnished in columns (2) to (7) of the statement [a] placed on the table of the House.

(*b*) Columns (8) to (13) of the statement placed on the table of the House furnished the information required.

During the year 1957, 59 cycle rickshaws in Vellore and three cycle rickshaws in Tiruchirappalli had been refused licences for the reason that they were defective and not road-worthy. During the year 1958, 59 cycle rickshaws had been refused licences in Vellore on the ground that they were found either not road-worthy or not previously licensed. In Madurai 15 cycle rickshaws had been refused licences as they were new vehicles which were not licensed previously. Thirty-two cycle rickshaws have been refused licences in Tiruchirappalli as these were in excess of the maximum of 200 cycle rickshaws fixed by Government.

(*c*) The information required is specified in columns 14 and 15 of the statement [a] placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : போதுமான அளவுக்கு ஸைகிள் ரிக்ஷாக்களை அனுமதிக்காமல் இருப்பதற்கு சர்க்காருடைய கொள்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஸைகிள் ரிக்ஷா, சாதாரணமாக கையினால் இழுக்கப்படும் ரிக்ஷாவை விட கொஞ்சம் மேலானது என்றாலும் அதுவும் அந்தத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுடைய உடலை கெடுக்கக் கூடியது என்பது தான் அரசாங்கத்தின் அபிப்பிராயம். 1955-ல் கூடிய தொழில் அமைச்சர்கள் மகா நாட்டில்கூட இதை படிபடியாகக் குறைத்து விடவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. குறைப்பது என்றால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். அதோடு கூட இது நடுத்தர வகுப்

[a] Printed as Appendix II on page 583 infra.

பினர்களுக்கு ஒரு சௌகரியமான போக்குவரத்து சாதனமாக இருக்கிறது. ஆகையினால் குறைப்பதுமில்லை, அதிகப்படுத்துவதுமில்லை என்பதுதான் இப்பொழுது சர்க்கார் அனுசரித்து வருகிற முறை.

Sri A. A. RASHEED : Is it not beneath the dignity of human beings that man should serve as a beast of burden? If so, will the Government abolish all the hand-drawn rickshaws in the State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : That question also has been under consideration.

Sri K. VINAYAKAM : Are the Government aware of the fact that cycle rickshaws and the hand-pulled rickshaws are the cheapest mode of conveyance which can negotiate the narrow lanes in the City of Madras for which the city is famous? Will the Government therefore restore the cut that has been effected in the grant of licences to these rickshaw-pullers?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : If cycle rickshaw is the cheapest mode of conveyance, I may tell the hon. Member that hand-pulled rickshaw is still cheaper. But that would not be the criterion here; because we want a cheap mode of transport, we should not make men take to this hard kind of labour which affects their health.

Sri M. C. MUTHUKUMARASWAMY: இந்த ரிக்ஷா இழுப்பவர்களில் நூற்றுக்கு நூறு ஹரிஜனங்கள். ஆனால் லைசென்ஸ் பெறுபவர்கள் நல்ல கொழுத்த முதலாளிகள். அவர்கள் ஏழைகளிடமிருந்து வாடகையைப் பெறுகிறார்கள். ஆகையால், இதைத் தவிர்ப்பதற்கு லைசென்ஸ்கள் எல்லாவற்றையும் ஹரிஜனங்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதில் ஜாதிப் பிரச்னை, பிரிவினை ஒன்றுமில்லை. யார் ரிக்ஷா வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது.

Srimathi P. K. R. LAKSHMIKANTHAM : சென்ற வருடம் மதுரையில் 600 லைசென்ஸ்கள் வழங்கப்பட்டன என்று தெரியவருகிறது. அதை குறைப்பதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த வருடத்தில் குறைந்திருப்பதாகத் தெரிகிறது. அது உண்மை தானா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : லைசென்ஸ்கள் குறைக்கப் படாது என்றாலும், வண்டிகள் கெட்டுப்போனால், புதிய வண்டிகள் வாங்குவதற்கு அனுமதி தருவது இல்லை. சர்க்காரின் கொள்கை இப்பொழுது ஓடுகின்ற வண்டி "ரோட் வொர்த்தியாக" இல்லாவிட்டால், அதற்குப் பதிலாக புதிய வண்டிக்கு லைசென்ஸ் கொடுப்பதில்லை. அந்த வகையிலே லைசென்ஸ்கள் கொஞ்சம் குறைக்கப்படலாம்.

Sri K. ANBAZAGAN : இந்த அளவு புதிய சைகிள்-ரிக்ஷா அனுமதிக்கப்படாத காரணத்தினாலே, அதை ஓட்டுகிறவர்களுக்கு வேலையில்லாமல் போய்விடுகிறது. அவர்களுக்கு மட்டுமாவதுமாற்று வேலை தேடித் தருவதற்கு அரசாங்கம் ஏதேனும் முயற்சிசெய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுப்பது ஒரு பொதுப் பிரச்னை. அதுபற்றி பொதுவாக கவனம் செலுத்தப்படுகிறது.

4th November 1958]

Pathways to burial-grounds for the use of Harijans

* 824 *Q.*—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to the answer given to the starred question No. 264 on 10th March 1958, the further action taken for providing pathway to burial-grounds for the use of Harijans of the villages mentioned therein? 9–10 a.m.

The Hon. Sri P. KAKKAN : The Collector is taking steps to acquire the required extent of land and to provide pathways for the benefit of the Harijans, in the villages concerned.

Sri M. JAGANNATHAN: குறைந்தது இன்னும் எவ்வளவு காலத்திற்குள் இந்த இடுகாடுகளுக்குப் போகும் பாதைகள் ஹரிஜனங்களுக்கு அமைத்துக் கொடுக்கப்படும் என்பதைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் சொல்லுவார்களா ?

The Hon. Sri P. KAKKAN : இன்னும் நான்கு மாதத்தில் அந்த வேலை முடியும் என்று கலெக்டர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.

Opening of new bus route in Periakulam taluk

* 825 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லாவில் பெரியகுளம் தாலூகா, சின்னமனூர் to சிப்பாலகோட்டை, வெங்கிடாசலபுரம் to காமாட்சி புரம், எழுமலை to எம். கல்லுப்பட்டி, தேனி—கோவிந்த நகரம் ஆகிய ஊர்களுக்கு எப்பொது பஸ் விடப்படும் ?

The Hon. Sri V. RAHAIAH : *Chinnamanoor to Seepalakottai*—The Regional Transport Authority, Madurai is, considering the question of extending the routes of seven buses to ply in this area. Buses are expected to ply in this route by the end of October 1958.

Another proposal to vary the route of the bus plying between Chinnamanoor and Vanniyar estate to Seepalakottai had to be dropped because the applicant withdrew his application.

Venkatachalapuram to Kamatchipuram.—The Regional Transport Authority, Madurai, is considering the extension of the routes of three buses to this area. Buses are expected to ply by the end of October 1958.

Elumalai to M. Kallupatti.—The road is not fit for bus traffic. Buses cannot be permitted now.

Theni to Govindanagaram.—There is a bridge under construction between Theni and Govindanagaram. The question of providing bus facility on this road can be considered only after this bridge is completed.

Sri N. R. THIAGARAJAN : இந்த கிராமங்களில் பஸ் விட வேண்டும் என்று சென்ற மூன்று வருஷங்களாக நான் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறேன். அப்படி யிருந்தும் அதைப்பற்றி சரியாக கவனிக்கப் படவில்லை. அதை உடனடியாக சீர் செய்து சீக்கிரமாக ஒரு உத்தரவு போட்டு அந்த கிராமங்களுக்கு பஸ் விட வேண்டும் என்று சர்க்கார் ஒரு உத்தரவு போடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri V. RAMAIAH : கனம் அங்கத்தினர் அவர்கள் நான் சொன்ன பதிலை கவனித்தால் இந்த மாதத்திலேயே அங்கேயெல்லாம் பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கலாம். அவருடைய மூன்று வருஷ பிரயத்தனத்திலே இப்பொழுது பலன் கிடைத்து விட்டது என்று நான் நம்புகிறேன்.

[4th November 1958

Cost of living index

*826 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) விலைவாசி உயர்வு விஷயமாக எடுக்கக்கூடிய புள்ளி விவரம் எந்தெந்த பொருள்களின் விலைவாசிகளை வைத்து எடுக்கப்படுகிறது ?

(ஆ) எந்த ஆண்டு முதல், இதுபோன்ற முறையில் எடுக்கப்பட்டு வருகிறது ?

(இ) எத்தனை இடங்களில் எடுக்கப்படுகிறது ?

(ஈ) எந்த இடங்களில் எடுக்கிற புள்ளி விவரங்களின் அடிப்படையில் பஞ்சப்படி கொடுக்கப்படுகிறது. ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த புள்ளி விவரங்களைக் கண்டு பிடிக்கக்கூடிய செண்டர்கள் பல இடங்களில் இருந்த போதிலும் ராஜ்யம் பூராவும் கொடுக்கப்படும் பஞ்சப்படி குறைந்த அளவில் புள்ளி விவரம் இருக்கக்கூடிய சென்னையில் எடுக்கப்படும் புள்ளி விவரங்கள் அடிப்படையில் கொடுப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சென்னையில் வாழ்க்கைத் தரம் குறைந்திருக்கிறது என்று கனம் அங்கத்தினர் கருதுகிறார் என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட புள்ளி விவரங்கள் ஆறு இடங்களில் எடுக்கப் படுகின்றன. அதாவது கடலூர், திருச்சி, மதுரை, கோயமுத்தூர், நாகர் கோவில், சென்னை நகரம். இவைகளையெல்லாவற்றையும் சேர்த்துத் தான் மொத்தத்தில் புள்ளி விவரம் நிர்ணயிக்கப்படுகிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தப் புள்ளி விவரங்கள் எந்த அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. மார்க்கெட் விலையை அனுசரித்து கணக்கிடப்படுகிறதா ? டிபார்ட்மெண்ட் விலைக்கும் மார்க்கெட் விலைக்கும் வித்தியாசம் இருக்கிறதே, அதாவது மார்க்கெட் விலை அதிகமாக இருக் கிறதே, அதனால் எந்த விலையை அடிப்படையாக வைத்துக்கொண்டு புள்ளி விவரங்களை கணக்கில் எடுக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விலைகள் எல்லாவற்றை யும் அவ்வப்போது பார்த்துத்தான் இது நிர்ணயிக்கப்படுகிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : கழிந்த வாரம் வந்திருக்கிற ஸ்டாட்டிஸ்டிகல் புள்ளி விவரத்தைப் பார்த்தால் ஒரு மூட்டை ஆனைக் கொம்பன் அரிசி மார்க்கெட்டில் 40 ரூபாய்க்கு விற்கப்படுவதாக கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆனால் அதே அரிசி இன்றைக்கு மார்க்கெட்டில் 68 ரூபாய் விலைக்கு விற்கப்படுகிறது. அதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மார்க்கெட் விலை, மற்றுமுள்ள எல்லா விலைகளையும் கணக்குப் பார்த்துத்தான் ஸ்டாட்டிஸ்டிக்ஸ் எடுக்கப்பட்டு புள்ளி விவரம் நிர்ணயிக்கப்படுகிறது.

SRI S. RAMALINGA PADAYACHI : இம்மாதிரி புள்ளி விவரங்கள் சேகரிக்கும்போது சினிமா போன்றவைகளின் கணக்குளெல்லாவற்றையும் சேர்த்து எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவைகளையெல்லாம் சேர்ப்பது இல்லை.

SRI V. K. KOTHANDARAMAN : இப்பொழுது புள்ளி விவரங்களை எடுக்கக்கூடிய அதிகாரிகள் ஆபீஸ்களில் இருந்து கொண்டே விலைவாசிகளை நிர்ணயிக்க அது சம்பந்தப்பட்ட முதலாளிகளுக்கு லெட்டர் எழுதி அவர்கள்

---

[a] Printed as Appendix III on page 584 infra.

4th November 1958]

கொடுக்கக்கூடிய விலைவாசிகளை வைத்துக்கொண்டு புள்ளி விவரங்களை தயாரிப்பது சர்க்காருக்கு தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன். இதுபோன்று தயாரிப்பது முறையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொதுவாக குற்றம் சாட்டினால் அதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏதாவது ஒரு அதிகாரியைப்பற்றி குறிப்பாக எடுத்துச் சொல்லி புகார் சொல்லக் கூடிய தகவல் இருந்தால் அதை என்னிடம் எழுதிக் கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. JAGANNATHAN : May I know, Sir, whether the Government will come forward to compile index numbers for more places than the six mentioned in the statement placed on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think it is necessary. These six places cover fairly the entire State.

Statistics about lands under cultivation.

* 827 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகாரா அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

இம்மாகாணத்திலே (1) நஞ்செய் பூமி, (2) தோட்டக்கால் பூமி, (3) புஞ்செய் பூமி ஆகியவைகளிலே ஒவ்வொரு இனத்திலும் எத்தனை எத்தனை ஏக்கராக்களில் இப்பொழுது வெள்ளாண்மை செய்யப்பட்டு வரு கின்றது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : மேஜையில் மீது வைக்கப்பட்டி ருக்கிற புள்ளி விவரங்கள் 1955–56-க்கு எடுக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. 1955-ம் வருஷத்திற்குப் பிறகு அநேகம் புஞ்சை பூமிகள் நஞ்சை பூமிகளாக மாற்றப்பட்டருக்கின்றன. ஏனென்றால் பல அணைக் கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆகையால் நஞ்சை பூமி விஸ்தீர்ணம் அதிகமாகி இருக்கலாம். ஆகவே 1958-ம் வருஷத்திய புள்ளி விவரங் களை எடுத்து இந்த சபை மேஜையின் மீது வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 1955–56-க்குப் பிறகு அதிகப்படியான புஞ்சை நிலங்கள் நஞ்சையாக மாற்றப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : நஞ்சை, புஞ்சை, தோட்டக்கால் இவைகளைத் தவிர புறம்போக்கு தரிசு நிலங்களையும் வெள் ளாண்மை செய்ய சர்க்கார் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அவைகளை சாகுபடிக்குக் கொண்டு வருவது என்பது சுலபம் அல்ல. சேலம் ஜில்லா ஆத்தூரில் சுமார் முப்பது ஆயிரம் ஏக்கருக்கு மேலுள்ள நிலத்தை நிலமில்லாதவர்களுக்கு வெள் ளாண்மைக்காகக் கொடுக்கப்படுடிருக்கிறது. அவற்றில் வெள்ளாண்மை செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அவைகளைப் பற்றியெல் லாம் பரிசீலனை செய்ய வேண்டியதாக இருக்கிறது.

---

[a] Printed as Appendix IV on page 585 infra.

[4th November 1958

Industries started in Coimbatore district

* 828 *Q*.—Sri P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) முதலாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலே என்னென்ன தொழிற்சாலைகள் எந்தெந்த இடங்களிலே கோயமுத்தூர் ஜில்லாவிலே கவர்ன்மெண்டாலும், கவர்ன்மெண்டு உதவியோடு தனிப்பட்டவர்களாலும் நிறுவப்பட்டிருக்கின்றன ?

(ஆ) இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலே என்னென்ன தொழிற்சாலைகள் எந்தெந்த இடங்களிலே ஏற்படுத்துவதற்காக கவர்ன்மெண்டால் திட்டமிடப்பட்டிருக்கின்றன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No industry was started by the Government in Coimbatore district during the First Five-Year Plan period. A statement [a] showing the names of the industrial units in the private sector which were sanctioned loans under the State Aid to Industries Act is placed on the table of the House.

(*b*) The Government do not propose to start any major industry in the Coimbatore district during the Second Five-Year Plan period.

Sri P. G. MANICKAM : மேஜை மீது வைக்கப்பட்டுள்ள கணக்கின் படி மில்களுக்கு அதிகக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பட்ட மில்களில் குறிப்பாக ஏழை தொழிலாளர்களையும், ஹரிஜனங்களையும் வேலைக்கு அமர்த்துவதுபற்றி இங்கே கவனிக்கப்படவில்லை என்பதைப் பற்றி இந்த சட்ட சபையில் பல தடவை சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே குறிப்பாக ஹரிஜனங்களுடைய நன்மையைக் கருதி ஒரு குறிப்பிட்ட அளவு ஹரிஜனங்களை வேலைக்கு அமர்த்திக்க வேண்டும் என்பதைப் பற்றி மில்காரர்களுக்கு இந்த அரசாங்கம் தெரிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்பொழுது கேட்கப்படுகிற உப கேள்வி மூல கேள்விக்கு ஒன்றும் சம்பந்தம் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Harijan Christians treated on a par with Harijan Hindus

* 829 *Q*.—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether Harijan Christians are treated on a par with Harijan Hindus in the matter of (i) supply of a pair of plough bulls, (ii) assignment of lands and house-sites, (iii) allotment of residential houses in colonies, and (iv) employment opportunities?

The Hon. Sri P. KAKKAN : The Harijan converts are treated on a par with Harijan Hindus in the matter of provision of house-sites and assignment of land for cultivation purposes but not treated on a par with Harijan Hindus in the supply of plough bulls, allotment of residential houses and employment opportunities.

Sri S. LAZAR : பொருளாதாரத் துறையில் அவர்களும் உயர வேண்டுமென்ற நொக்கத்துடன் அநேகப்பட்ட சலுகைகள், அதாவது மாடுகள் கொடுப்பது, வீடுகள் கட்டிக் கொள்வதற்கு இடம் தருவது, தொழில்களை நடத்துவதற்கு வசதிகள் செய்து கொடுப்பது, இப்படிப்பட்ட மூன்று வழிகளிலும் அவர்களுக்கும் சமமான அளவு கொடுக்கப்படாதன் காரணம் என்ன ?

---

[a] Printed as Appendix V on page 586 infra.

4th November 1958]

THE HON. SRI P. KAKKAN : தாழ்த்தப்பட்ட கிருஸ்தவர்கள் அன்டச்சபிள்ஸ் இல்லை என்று மத்திய சர்க்கார் சொல்லுகிறார்கள். அதனால் அப்படி கொடுப்பதை அங்கீகாரம் செய்யவில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI S. RAMALINGA PADAYACHI : ஹிந்து ஹரினங்களைப்போல் முஸ்லீம் ஹரிஜனங்களும் இருக்கிறார்கள். அந்த விதத்தில் இவர்களும் மதம் மாறியிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கும் இப்படிப்பட்ட சலுகைகள் கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இல்லை.

SRI M. K. SOMASUNDARAM : மதம் மாறிய கிருஸ்தவ ஹரிஜனங்களுக்கும் ஹிந்து ஹரிஜனங்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளைக் கொடுக்காததன் காரணம் என்ன? அவர்கள் கிருஸ்துவ மதத்திற்கு மதம் மாறினாலும்கூட அவர்களும் ஹிந்து ஹரிஜனங்களைப்போலவே தாழ்த்தப்பட்ட நிலைமையில்தான் இருக்கிறார்கள் என்பதை கனம் மந்திரிக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதனால் ஹிந்து ஹரிஜனங்களுக்கு வழங்கப்படும் சலுகைகளையே அவர்களுக்கும் வழங்கப்பட முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இதைப்பற்றி நான் முதலிலியே பதில் சொல்லிவிட்டேன். தாழ்த்தப்பட்ட கிருஸ்துவ ஹரிஜனங்களுக்கும் மனைக்கட்டு வழங்குதல், நிலம் ஆர்ஜிதம் செய்தல் இவை போன்றவைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் மாடு வாங்குவது, வீடுகள் கட்டிக்கொடுப்பது போன்ற பொருளாதாரத்தில் உயரக்கூடிய உத்யோகங்கள் கொடுப்பது போன்றவைகள் கொடுப்பது இல்லை. ஏனென்றால் அவர்கள் அன்டச்சபிள்ஸ் இல்லை என்று மத்திய அரசாங்கத்தார் கருதுகிறார்கள். ஆகவே ஹிந்து ஹரிஜனங்களுக்கு கொடுக்கப்படும் சலுகைகள் அவர்களுக்குக் கொடுப்பது இல்லை.

SRI S. LAZAR : தீண்டாமை அடிப்படையில் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார். தீண்டாமை மதம் மாறியவர்களிடமும் இருக்கிறது என்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? அப்படி தெரிந்திருந்தால் அதையெல்லாம் மத்திய அராசங்கத்திற்கு எடுத்து உரைக்க இந்த அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : மதம் மாறியும் அவர்களிடையேயும் தீண்டாமை இருக்கிறது என்பதைத் தெரிந்து வருத்தப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிறேன்.

SRI R. SUBRAMANIAM : இந்த வீடு கட்டிக் கொடுக்கும் விஷயத்தில் ஹிந்து ஹரிஜனங்களுக்குக் கொடுக்கும் சலுகை மதம் மாறிய ஹரிஜன கிருஸ்துவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், தஞ்சை ஜில்லாவில் பசுபதி கோயில் என்னும் கிராமத்தில் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கும் வீடுகள் கிருஸ்துவர்களுக்கே கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? 9-20 a.m.

THE HON. SRI P. KAKKAN : எனக்குத் தெரியாது. அது பற்றி விசாரிக்கிறேன்.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : கிரமாத்தில் வசிக்கும் ஹரிஜனங்களைப்போல் நகரத்தில் வசிக்கும் ஹரிஜனங்களுக்கும் வீடு கட்டிக்கொடுப்பதற்கு ஏதாவது திட்டம் வகுக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது செய்யப்படும் உதவி, முதல் கிரேட் பஞ்சாயத்து போர்டு வரைக்கும்தான் நீடிக்கப்பட்டிருக்கிறது. பின்னால்தான் அதை கன்ஸிடர் பண்ண வேண்டும். சேரி அபிவிருத்தித் திட்டம் வருகிறது. அதை பற்றி பின்னால் கவனிக்கலாம்.

[4th November 1958

SRI K. ANBAZHAGAN : இந்து ஆதித் திராவிடர்களைப்போல் மதம் மாறிய கிறிஸ்தவ ஆதித் திராவிடர்களும் சமூகத்தில் பல இடங்களில் தீண்டாதவராகவே கருதப்படுவதாலும், இந்து ஆதித் திராவிடர்களைப் போலவே பொருளாதாரத் துறையில் சென்னை மாநிலத்தில் அவர்களுடைய வாழ்க்கை ஒரேவிதமாக இருப்பதாலும் அவர்களுக்குப் பொருளுதவி செய்வதற்கு, செக்யூலர் ஸ்டேட் என்று சொல்லிக்கொள்கிற அரசாங்கம் மத வேற்றுமையை அடிப்படையாக வைத்திருக்கக்கூடாது என்று மத்திய அராசங்கத்திற்கு ஆலோசனை கூறப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : இதைப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும்.

SRI T. S. RAMASWAMY PILLAI : The Hon. Minister has stated that they are still considered as untouchables by the Central Government?

MR. SPEAKER : He has not stated so.

THE HON. SRI P. KAKKAN : I only stated that they are not treated as untouchables.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know whether they are still treated as untouchables or Scheduled Castes? I want a clear answer from the Hon. Minister?

THE HON. SRI P. KAKKAN : Even in the Untouchability Offences Act, 1955, enacted by the Government of India, Harijan converts have not been shown as untouchables. Hence the intension of the Government of India seems to be to restrict the welfare schemes to Scheduled Castes and Hindu Harijans alone.

Sri Ranganathaswami Devasthanam

MR. SPEAKER : The hon. Member Sri K. R. Viswanathan is absent. The question and the answer will be printed in the official proceedings.

* 830 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the annual income derived from out of the wet and dry lands at Kanjankollai village, Chidambaram taluk, belonging to Sri Ranganathaswami Devasthanam of Srirangam; and

(*b*) the manner in which the income is realised and spent?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A sum of Rs. 200 has been fixed as a charge on the properties endowed to the temple.

(*b*) Under the compromise decree of the Sub-Court, Cuddalore, in O.S. No. 1 of 1932, the sum of Rs. 200 is realised from the defendants 2 to 12 to the suit in cash and is utilised for the performance of the Tholasi Sahasranama Archanai daily and to meet the cost of prasadam, payment to Archaka and other incidental items.

4th November 1958]

Season and Crop Report of the Madras State

* 831 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to State—

(*a*) when the Season and Crop Report of the Madras State for 1955–56 was got ready and circulated to Members of Legislature;

(*b*) the reasons for the delay; and

(*c*) whether there is any proposal by the Government to publish such reports during the year immediately following?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The printed copies of the Season and Crop Report for 1955–56 were got ready for distribution in March 1958 and were supplied to the Members of the Legislature in batches by the first week of April 1958.

(*b*) the reasons for the delay are—

(i) The data required for the Report were not received by the Director of Statistics in time from the districts; and

(ii) There was delay in printing of the Report in the Government Press.

(*c*) The normal rule is that the Report should be published within six months after the close of the fasli and that rule will be followed by all means possible.

Hand-made paper

* 832 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

1958-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 10-ம் தேதி 22-ம் நம்பர் கேள்விக்கு அளித்த பதிலை அனுசரித்து கையினால் செய்யப்பட்டு வரும் காகிதத்தின் தரத்தை உயர்த்தி அதை கூடுதல் அளவு கிடைக்கச் செய்து அதை எல்லா அரசாங்க இலாக்காக்களிலும் உபயோகிப்பதற்கு அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The quality of the handmade paper manufactured in the Government Handmade Paper Unit at Gandhigram and supplied for use in Government offices is quite satisfactory and up to the standard. There is a good demand for handmade paper in this State and it is proposed to increase the production capacity of the unit at Gandhigram from 5 to 10 reams a day. Two more departmental units, one at Shenbagaputhur in Coimbatore district and the other at Arapakkam in North Arcot district have been sanctioned and they will start functioning shortly. The Controller of Stationery and Printing has been permitted to place orders with the unit at Gandhigram, for the supply of 270 reams of paper during 1958–59 for use in Government offices. Orders for the supply of 25 reams of handmade paper every month have been received from the Khadi and Village Industries Commission, Bombay. The Controller of Stationery and Printing has also been permitted to purchase 260 reams of handmade paper from the pulp-making unit at Tanjore, for supply to Government offices. The Government have also ordered that only handmade paper should be used in the Department of Khadi.

[4th November 1958

SRI A. VEDARATHNAM : நம்முடைய அரசாங்கத்தின் காகிதத் தேவை எவ்வளவு ? அதில் எத்தனை சத விகிதம் இப்பொழுது கையினால் செய்த காகிதம் உபயோகிக்கப்படுத்தப்படுகிறது ? கையினால் செய்த காகிகதத்தை அதிகமாக உபயோகப்படுவதற்கு அரசாங்கம் மேலும் என்ன என்ன முயற்சி எடுத்துக்கொள்ளும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கத்தின் காகிதத் தேவையைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை. ஆனால், இந்த கையினால் செய்யப்படும் காகித உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : May I know how does the cost of it work out as compared to the machine-made paper?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

Manufacture of fancy articles from sea-shells

*833 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் கடலிலிருந்து எடுக்கும் சங்குகளை கொண்டு, வளையல், பொம்மை முதலியவைகளை செய்யும் தொழிற்சாலை ஒன்று நம் ராஜ்ஜியத்தில் ஏற்படுத்தும், உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

(ஆ) ஆம் என்றால், அது எப்போது, எங்கே ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No, Sir. But there is a proposal to set up two training centres for the manufacture of fancy articles from sea shells, one at Madras during 1958–59 and the other in the Kanyakumari district during 1959–60 or 1960–61.

SRI V. K. KOTHANDARAMAN : நமது ராஜ்யத்திலிருந்து சங்குகளை வாங்கிக்கொண்டு சென்று கல்கத்தாவிலே வளையல், மோதிரம், பொம்மைகள், இன்னும் பலவிதமான பொருள்களை உற்பத்தி செய்து மீண்டும் இங்கே கொண்டுவந்து ஒன்றுக்குப் பத்தாக அவை விற்கப்படுகின்றன. ஆகவே, இதே ராஜ்யத்தில் அவைகளைச் செய்வதற்கென தூத்துக்குடியில் ஒரு தொழிற்சாலையை வெகு சீக்கிரத்தில் துவக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இங்கே தொழிற்சாலை வைத்து பயிற்சி கொடுப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்று நான் சொன்னேன். ஆனால், வங்காளத்திற்கு இந்தச் சங்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டு, அங்கே சில தொழில்கள் நடக்கின்றன. வளையல்கள் செய்வதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வளையல்கள் இங்கே வருவது இல்லை. அந்த வளையல்களை வங்காளப் பெண்மணிகள் சுமங்கலிக்கு அடையாளமாகப் போட்டுக்கொள்கிறார்கள். இந்த சங்கு அங்கு நல்ல விலையாகிறது. இருந்தாலும் தனிப்பட்டவர்கள் முயற்சியினால்கூட இங்கே தொழிற்சாலை கீழக்கரையிலும் மற்ற இடங்களிலும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

SRI A. SAMUEL NADAR : தொழிலாளிகள் கடலிலிருந்து எடுத்துவரும் சங்குகளை ஊதந்து எடுப்பதில் குறைவான அளவுள்ள சங்குகளை சர்க்கார் என்ன செய்கின்றது என்று கேட்கிறேன் ?

4th November 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி தனியாக கேள்வி மீன் இலாகாவை பரிபாலனம் செய்யும் அமைச்சர் அவர்களுக்குப் போட்டால் அவர் பதில் சொல்வார்கள்.

SRI T. S. RAMASWAMY PILLAI : தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது தனியார் துறையில் ஆரம்பிக்கப்படுமா, அல்லது அரசாங்கமே ஆரம்பிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கம் ட்ரெயினிங் ஸெண்டர்கள் அமைக்கப் போகிறது என்று சொன்னேன்.

SRI V. SUBBIAH : சிப்பியிலிருந்து சுண்ணாம்பு உற்பத்தி செய்கின்றார்கள். இந்த உயர்தரமான சுண்ணாம்பை உற்பத்தி செய்கின்றவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்கின்றார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

Construction of a bridge across river at Gudiyattam

*** 834 *Q*—SRI V. K. KOTHANDARAMAN** : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லா, குடியாத்தம் ஆற்றில் பாலம் கட்டிய போது அதற்காகக் கைப்பற்றப்பட்ட வீடுகள், காலி மனைகளுக்கு பணம் கொடுத்தாகிவிட்டதா ?

(ஆ) இல்லை என்றால், ஏன் ?

(இ) எப்போது கொடுக்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) As the bridge was executed in municipal area many buildings and lands were involved in the alignment of approach roads on either side of the bridge and so, many enquiries had to be made. This accounts for the delay in finalisation of land acquisition proposals by the Revenue Department.

(*c*) Soon after passing of the award.

SRI V. K. KOTHANDARAMAN : பாலத்தைக் கட்டுவதற்கு எடுக்கப்பட்ட வீடுகளையும், காலி மனைகளையும் கொடுக்க வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகை நான்கு வருஷங்கள் ஆகியும் கூட இதுவரையில் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால், அதனால் ஏழைகள் வீடு கட்டிக்கொள்வதற்குப் பணம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் வேறு தொழில் செய்து பிழைப்பதற்கும் வழியில்லாமல் ரொம்பவும் கஷ்டப்படுகிற காரணத்தால், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையை வெகு விரைவிலே......

THE HON. SRI P. KAKKAN : விரைவிலே கொடுப்பதற்கு கலெக்டரை சர்க்கார் துரிதப்படுத்திக்கொண்டிருக்கிறது. கலெக்டர் அவர்கள் வெகு சீக்கிரம் கொடுக்க ஏற்பாடு செய்து விடுவார்கள். இருந்தாலும், நோடிபிகேஷன் செய்வதற்கு அதிக நாள் ஆவதோடு ட்ராப்ட் நோடிபிக்கேஷன் செய்வதற்கும் அதிக நாள் ஆகிவிட்டது. இந்த விஷயத்தில் " டிலே " இருக்கிறது என்பதைத் தெரித்துக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : நான்கு வருஷங்களுக்கு மேல் ஆகிறது. பாலம் கூட கட்டி பூர்த்தியாகிவிட்டது. இன்னும் கால தாமதம் ஆவதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதோடு கூட, உடனடியாக அவர்களுக்கு அந்த உத்தேச நஷ்ட ஈட்டுத் தொகையில் ஒரு பகுதியையாவது பட்டுவாடா செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

[4th November 1958

THE HON. SRI P. KAKKAN: வெகு சீக்கிரம் இந்தத் தொகையையெல்லாம் கொடுத்து விடுவதற்கு ஏற்பாடு செய்வதினால், அதற்குள்ளாக ஒரு பகுதியைப் கொடுப்பது தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Electricity cut

* 835 *Q*.—SRI V. K. RAMASWAMY MUDALIYAR (on behalf of Sri K. Ramachandran): Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the probable period for which the electricity cut will continue; and

(*b*) the alternative proposal with the Government, if any, to avoid such cuts in future?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) The power cut has been completely removed with effect from the 1st July 1958.

(*b*) The State Government have taken up the Periyar and Kundah Hydro-Electric Schemes and these are now under execution. The first generator in the Periyar Scheme has been commissioned on the 12th October 1958, and the remaining two units will be commissioned by the end of 1958–59. The Kundah Project will be completed by 1960.

Besides the above, the Government of India will be establishing a thermal station with an installed capacity of 250 M.W. at Neyveli, which is expected to be commissioned in 1961. After meeting the demands of the Neyveli Lignite Corporation it is expected that about 200 M.W. will be fed into the Madras grid for distribution in the State.

It is hoped that with the commissioning of these projects there will not be any necessity hereafter to impose a cut.

9-30 a.m. SRI S. PAKKIRISAMI PILLAI: இந்தப் பவர் கட் எடுத்தது எல்லோரும் மகிழ்ச்சி அடையும்படியான நிலையில் இருந்தாலும், இப்பொழுது இருக்கும் படியான "ஸ்டேகரிங்" நிலைமையில் பல தொழிற்சாலைகளும் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டு இருப்பதினால் அதை எப்போது தளர்த்தி விடுவார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: "ஸ்டேகரிங்" அமுலில் வைத்திருப்பதினால் தொழிலாளர்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. பெரியார் பிராஜக்டும், குந்தா பிராஜக்டும் பூர்த்தியான பிறகு இதைத் தளர்த்தலாமா என்று யோசனை செய்யப்படும். இப்போது ஒன்றும் திட்டவட்டமாகச் சொல்லமுடியாது.

(Some hon. Members indicated their desire to put supplementaries.)

MR. SPEAKER: We are having a discussion on the Electricity Board Budget; hon. Members may speak on that. I do not think hon. Members want me to allow further supplementaries on this question. I pass on to the next question.

4th November 1958]

Plastic industry

* 836 *Q.*—Sri S. LAZAR (on behalf of Srimathi T. N. Anandanayaki) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to start plastic industry in Madras State;

(*b*) whether the raw material used in that industry is available in our State; and

(*c*) if so, in what quantity?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*), (*b*) & (*c*) There is no proposal to start plastic industry in this State in the public sector.

As regards raw materials, it is not clear whether the member refers to the intermediaries which are the immediate raw materials from which the plastic goods are manufactured or to the basic raw materials which are required for the manufacture of these intermediaries. Some of the immediate raw materials required for plastic industry are phenolic resins, phenol and urea formaldehyde moudling powders, cellulose acetate, cellulose, acetate butyrate, polytyrene moulding powders, casein and polyvinyl compounds and polyvinyl chloride.

None of these raw materials are produced in Madras State. With the exception of phenol formaldehyde moulding powder, demands for other raw materials in India are mostly met from imports.

Some of the basic raw materials required for the manufacture of plastics and plastic intermediaries are benzene, sulphuric acid, caustic soda, carbon dioxide, chlorine, methonal coke, acetylone, calcium carbide, etc.

These raw materials are available in this State. Information regarding the exact quantities in which these raw materials are available for plastic industry is not known.

Sri S. LAZAR : அமைச்சர் சொன்னதிலிருந்து ஒரு சில பொருள்கள் இங்கே கிடைக்கின்றன. ஒரு சில பொருள்கள் இல்லை. ஆனால் நம் நாட்டில் எராளமாக பொருள்கள் வெளியிலிருந்து கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் சர்க்காரே இங்கே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த யோசனை செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : மூலப் பொருள் கிடைக்கிறது. ஆனால் அதை அயல் நாடுகளுக்கு அனுப்பி அங்கே சாமான்களாகச் செய்யப்பட்டு இங்கே இறக்குமதி செய்யப்படுகிறது என்று சொன்னேன். இங்கேயே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த பிரைவேட் செக்டார் யாராவது முன் வந்தால் வேண்டிய உதவியை அரசாங்கம் அளிக்கலாம்.

Sri K. VINAYAKAM : முந்திரிக்கொட்டையில் இருந்து பிளாஸ்டிக் செய்யலாம் என்று ஒரு சிலர் சொல்கிறார்களே (மிஸ்டர் ஸ்பீக்கர்—யார் சொல்கிறார்கள் ?) அது வாஸ்தவமா ? அப்படியானால் இங்கே முந்திரிக்கொட்டைகள் அதிகமாக இருப்பதனால் இவற்றில் இருந்து பிளாஸ்டிக் தயாரிக்க முடியுமா என்பது பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பிளாஸ்டிக் தயாரிப்பதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் உண்டென்று சொன்னேன். முந்திரிக்கொட்டை ஓடும் அதில் சேர்ந்திருக்கலாம்.

[4th November 1958

Sri A. GOVINDASAMY : முந்திரிக்கொட்டை ஓட்டில் இருந்து பிளாஸ்டிக் தயாரிக்கலாம் என்ற கருத்தை அமைச்சர் அவர்களும் வலியுறுத்தினார்கள். (கனம் பக்தவசலம்.—நான் அப்படிச் சொல்லவில்லை.) ஒப்புக்கொண்டார்கள். முந்திரி ஓடும் நம் நாட்டில் எராளமாகக் கிடைகிற காரணத்தினால் இங்கே பிளாஸ்டிக் தொழிலை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பிலாஸ்டிக் தயாரிக்க முந்திரி ஓடு மட்டும் போதும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு தனி நபர்கள் முன்வந்தால் சர்க்கார் உதவி செய்யும்.

Sri A. A. RASHEED : Sir, may I know the amount spent in the import of plastic sheets, granules, etc., from foreign countries?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I have the figures about the quantities imported, but not the value.

Sri M. JAGANNATHAN : Sir, arising out of the answer given by the Hon. Minister that if raw materials for the manufacture of plastic are available in our State, why should it not be possible for the Government to start the manufacture in the public sector itself?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, the Government have already enunciated their industrial policy and under that policy certain industries have come in the public sector and others are in the private sector. This is one of the industries which is classified under the private sector.

Forest Department Schemes

* 837 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the scheme to be implemented by the Forest Department during the Second Five-Year Plan in Tiruchirappalli district; and

(*b*) the schemes so far implemented ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The following six schemes are to be implemented by the Forest Department during the Second Five-Year Plan in the Tiruchirappalli district;

(1) Scheme for creation of fodder banks and improvement to grazing.

(2) Scheme for cashew cultivation.

(3) Scheme for creation of river, can aand lake fringe forests.

(4) Scheme for expansion of planting activities of valuable commercial timber species such as teak.

(5) Scheme for rehabilitation of degraded forests and afforestation of low hill areas.

(6) Scheme for extension of casuarina plantations.

4th November 1958]

Of course "the scheme for rehabilitation of degraded forests and afforestation of low hills" has been completed during 1956–57 itself and the plantations raised are being maintained. The other schemes are under various stages of implementation. A statement [a] showing the targets achieved so far and those proposed for 1958–59 is laid on the table of the house.

Sri S. Lazar: தேக்கு மரம் நடுவது சம்பந்தமாக ஆற்று அல்லது வாய்க்கால் கரைகளில் உற்பத்தி செய்ய இரண்டாவது ஐந்தாண்டு திட்டப்படி துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

The Hon. Sri M. Bhaktavatsalam: இது புதிய திட்டம். முதலில் கொஞ்சம் தாமதம் ஏற்படுகிறது. இதைத் திட்டப்படி முடிப்பதற்கு வேண்டிய கவனம் செலுத்தப்படுகிறது..

Cashew cultivation

* 838 Q.—**Sri A. Vedarathnam**: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லா கடற்கரையோரப் பகுதிகளில் முந்திரி சாகுபடிக்கு ஏதேனும் திட்டமுண்டா ? அப்படியானால் அதன் விபரம் என்ன ?

The Hon. Sri M. Bhaktavatsalam: The answer is in the negative.

Sri V. K. Ramaswamy Mudaliyar: Sir, inasmuch as there has been a large scale increase in cashew cultivation, especially under the Forest Department, is there any proposal with the Government to start a cashew factory in the near future as we have not got such a factory in this State?

The Hon. Sri M. Bhaktavatsalam: Government have no such proposal. But there are a few factories. For example in the Kadambuliyur Firka of South Arcot district, a cashew factory was started three or four years ago.

Sri A. Vedarathnam: தஞ்சை ஜில்லாவில் கடற்கரைப் பகுதியில் ஏராளமாக முந்திரி சாகுபடி செய்ய வசதி இருந்தும் அந்தச் சாகுபடி விருத்தி செய்யப்படவில்லை. சிறப்பாக கோடிக்கரைக் காட்டில் நிறைய முந்திரி பயிரிடுவதற்கு வசதி இருக்கிறது. ஆகவே அங்கே பயிரிடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri M. Bhaktavatsalam: அரசாங்கம் நேரிடையாகப் பயிரிடுவதைவிட தனி நபர்கள் பயிரிட முன்வந்தால் அவர்களுக்கு உதவி அளிப்பதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கம். அங்கே ஐயாயிரம் ஏக்கரா முந்திரி பயிரிடப்படலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு 60 ரூபாய் கடன் கொடுத்து உதவவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Sri S. Ramalinga Padayachi: உடையார்பாளையம் தாலுகாவில் முந்திரிப் பயிருக்கு ஏற்ற நிலத்தின் "சாயில்" ஒத்திருக்கிறது. அங்கே இருக்கும் காடுகளை எடுத்து அங்கே முந்திரிகளைப் பயிரிட அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. Bhaktavatsalam: அதைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன். அங்கே என்ன பயிரிடலாம் என்பதை பற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை.

Sri S. Ramakrishna Thevar: இந்த முந்திரி விவசாயம் செய்வது எங்கள் பகுதியில் அவ்வளவு பழக்கம் இல்லை. என் தொகுதியில் நீண்ட கடற்கரைப் பிரதேசம் இருக்கிறது. திருவாடானை முதல்

[a] Printed as Appendix VI on page 587 infra.

சுந்தரப்பட்டணம் வரை 35 மைல்கள் கடற்கரைக் காடு இருக்கிறது. அங்கே கொஞ்ச இடத்தை பரிசீலனை செய்து முந்திரி பயிரிட முடியுமா என்று யோசனை செய்து காட்டினுல் அதைத் பின்பற்றி தனிப்பட்டவர்கள் சாகுபடி செய்ய முன் வருவதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எங்கெங்கே தகுதி இருக்கிறதோ அங்கெல்லாம் முந்திரிப் பயிர் சாகுபடி செய்யப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. முந்திரிப் பயிர் செய்வதற்கு லாயக்கற்ற இடங்களில் வேறு என்ன பயிர் செய்யலாம் என்றும் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

SRI A. VEDARATHNAM : சர்க்காருடைய ரிசர்வ் பாரஸ்டுகளில் தனியார் முந்திரி சாகுபடி செய்ய வர முடியாது. அதைச் சர்க்காரே எடுத்துக்கொண்டுதான் செய்ய வேண்டும். கோடிக்கரைக் காடுகள் சர்க்காரைச் சேர்ந்தவையாதலால் அங்கே சர்க்காரே முந்திரிச் சாகுபடி செய்வதற்கு முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பற்றித் தான் முன்பு பதிலளித்தேன். காட்டிலாகாவைச் சேர்ந்த பகுதிகளில் எங்கெங்கே எந்தெந்தப் பயிர் வைப்பதற்கு தகுதி இருக்கிறதோ அங்கங்கே அந்தந்தப் பயிர் சாகுபடி செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI A. GOVINDASAMY : காலியாக இருக்கிற இடங்களில் எல்லாம் முந்திரிப் பயிர் நடுகிருர்களா ? அல்லது காலியாக உள்ள இடங்களில் முந்திரிப் பயிர் செய்வதற்கு ஏற்ற சாயில் இருக்கிறதா என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு முன்னல் சொன்ன பதில்களை எல்லாம் அங்கத்தினர் அவர்கள் கவனித்து இருப்பார்கள். மற்ற அங்கத்தினர்கள் இந்த காட்டில் பயிரிடலாம் அந்தக் காட்டில் பயிரிடலாம் என்று சொன்னபோதுகூட இந்தத் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு முந்திரிப் பயிர் வைக்கப்படுகிறது என்று சொன்னேன்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : தஞ்சை ஜில்லாவில் ஆற்றோரங்களில் முந்திரி சாகுபடிக்கான சிறந்த வண்டல் மண் நிறைந்து இருக்கிறபடியால் அங்கு முந்திரி சாகுபடிக்குத் தனிப்பட்டவர்கள் முன்வந்தால் அரசாங்கம் உதவி அளிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே சொன்னேன், ஏக்கர் ஒன்றுக்கு 80 ரூபாய் கடன் உதவி அளிக்கப்படும் என்று. சர்க்கார் வசத்தில் இருக்கும் ஆற்றோரப் பகுதிகளில் எல்லாம் தேக்கு பயிரிடப்பட்டுவருகிறது.

Scholarships to Backward Class Students

* 839 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether it is a fact that students belonging to the Backard Classes were not permitted to renew their applications for scholarships as a result of which they did not get their scholarships renewed by the Central Government for the year 1957–58?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

4th November 1958]

SRI K. VINAYAKAM : பிற்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் மத்திய சர்க்காரிடத்தில் சலுகைக் கேட்டால் மாகாண சர்க்காருக்கும் மனுப்போடக்கூடாது என்று தடுப்பதால் மத்திய சர்க்காரிடத்திலிருந்து சலுகை வராவிட்டால் மாகாண சர்க்காரிடத்திலிருந்தும் உதவிபெற முடியாமல் தவிக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத்தெரியமா ? 9-40 a.m.

THE HON. SRI P. KAKKAN : ஸ்காலர்ஷிப் வேண்டுமென்கிற மாணவர்கள் மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்கும் தான் அப்ளை பண்ணவேண்டும். மத்திய சர்க்கார் அவர்களது மனுவை ரின்யூவல் பண்ணாவிட்டால் மாகாண சர்க்கார் அவர்களுக்கு உதவி செய்ய ஏற்பாடு செய்துவிடுகிறது.

Rebate in respect of handloom cloth

* 840 *Q.*—SRI A. MARIAPPAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கைத்தறி ஜவுளிகளுக்கு 12 நயா பைசா கொடுத்து வந்த ரிபேட் தொகையை 6 நயா பைசாவாக குறைக்கப்பட்டிருப்பது சர்க்கார் அறியுமா ?

(ஆ) தெரிந்ததிருந்தால் மீண்டும் 12 நயா பைசாவாக கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The duration of the special additional rebate announced in April 1958 expired on 31st August 1958. The Government of India have since restored the special additional rebate for the period from 1st October to 15th November 1958 (both days inclusive). Representations have also been made to the Government of India for allowing the special additional rebate during other festival seasons in the year up to a total period of four months.

SRI S. M. ANNAMALAI : இந்தப் 12 நயா பைசா ரிபேட் நவம்பர் மாதம் 15-ம் தேதியோடு முடிவடைகிறது. மேலும் தொடர்ந்து கொடுக்க இந்த சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது என்பதைப் பற்றித்தான் என்னுடைய பதிலில் படித்தேன். இந்த மாதிரி ஸ்பெஷல் ரிபேட்டை இதர பண்டிகை காலங்களில் வருஷத்தில் நான்கு மாதங்கள் வரைக்கும் அனுமதிக்க மத்திய சர்க்காரிடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கங்களில் சேராத நெசவாளிகளையும் இந்த செஸ் நிதியிலிருந்து ரிபேட் மூலமாக அல்லது வேறு எந்த முறையின் மூலமாகவோ உதவி செய்வதற்கு சர்க்காருக்கு ஏதாவது உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : தனி கேள்வி வேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM ; Sir, I may answer question 842 also.

MR. SPEAKER : கேள்வி 841, 842 இரண்டுக்கும் பதில் அளிக்கலாம்.

Death of Government servants on duty during the Presidential tour

* 841 *Q.*—SRI M. P. SARATHI and SRI C. MUTHIAH : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஆகஸ்டு மாதம் ஜனாதிபதி அவர்கள் இந்த ராஜ்யத்திற்கு விஜயம் செய்கையில் ரயில்வே லயனில் பந்தோபஸ்துக்காக நின்ற ஊழியர்கள் யாரேனும் விபத்துக்குள்ளாயினரா ?

(ஆ) எந்த இடங்களில், எவ்வளவு பேர் ?

(இ) உயிர் சேதம் உண்டா ?

THE HON. SRI **M. BHAKTAVATSALAM:**

(*a*) Yes, Sir.

(*b*) & (*c*) One Police constable was killed between mile 100/9–10 near Villupuram Station.

* **842 SRI A. GOVINDASAMY and SRI C. MUTHIAH:** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் நமது ஜனாதிபதி அவர்கள் தமிழ் நாட்டில் ரயில் சுற்றுப் பிரயாணம் செய்த சமயம் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எத்தனை பேர்கள் ஆபத்துக்குள்ளாகி உயிர் இழந்தார்கள் ?

(ஆ) இவர்களில் மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எத்தனை பேர்கள் சென்னை, ராஜ்ய உத்தியோகஸ்தர்கள் எத்தனை பேர்கள் ?

(இ) சென்னை ராஜ்ய உத்தியோகஸ்தர் குடும்பத்திற்கு ஏதாவது நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதா ?

(ஈ) அப்படியானால் தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) One Police constable of the State Government was killed between mile 100/9–10 near Villupuram station.

(*c*) & (*d*) The question of granting gratuity to the members of the bereaved family is under consideration.

SRI A. GOVINDASAMY: எத்தனை பேர் அதில் படுகாயம் அடைந்திருக்கிறார்கள் ? அவர்கள் எல்லோருக்கும் நிவாரணம் அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த விபத்தைப் பற்றி நான் கொஞ்சம் விபரம் சொல்ல வேண்டும். இந்தக் குறிப்பிட்ட கான்ஸ்டேபிள் ரயில்வே லைன் காவலுக்காக நியமிக்கப்பட்டிருந்தவர். இவர் லைனில் படுத்துக்கொண்டு தூங்கி விட்டார். 11–20-க்கு ஒரு ரயில் வந்தது. ரயில் வருவதை உணர்ந்தவுடன் தலையைத் தூக்கினார். தலையில் அடிபட்டு விழுந்து விட்டார்.

SRI C. MUTHIAH: ஆர்ம்டு ரிசர்வ் போலீசைக் காபந்துக்காகப் போட்டார்களா ? கிராமவெட்டி தலையாரிகளை காபந்துக்காகப் போட்டார்களா ? வெட்டி தலையாரிகளில் யாராவது உயிரை இழந்தார்களா ? அப்படி உயிர் இழந்திருந்தால் அவர்கள் குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதைப் பற்றி தனியாகக் கேள்வி போடவேண்டும். ஆர்ம்டு போலீஸ் காவலில் இருந்தாலும், தலையாரி இருந்தாலும் ஆபத்து ஒரே மாதிரிதான்.

Manufacture of agricultural implements

* 843 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any industry for the manufacture of agricultural implements has been started in Tiruchirappalli district;

(*b*) the date when the same will go into production; and

(*c*) the details about this Small Scale Industry?

4th November 1958]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Unit has just started functioning and is now doing some servicing work. Regular production will commence shortly.

(*c*) A statement is placed on the table of the House.

Sri S. LAZAR : Sir, is it going to be a mere servicing centre or will implements be manufactured there? If implements are going to be manufactured, may I know the extent to which it will cover the requirements of the State or the district concerned?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : It is now started only as a servicing centre. It may be developed into a regular manufacturing centre.


MR. SPEAKER : Yes, we shall sit till 2 p.m. and I will adjust the time available. I shall give five minutes only for each Member, 15 minutes each for leaders of parties and one hour for the Minister.

* SRI R. KRISHNASAMI NAIDU : தலைவர் அவர்களே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள ராஜ்ய மின்சார ஸ்தாபனத்தின் வரவு செலவுக் கணக்கு அறிக்கையை நான் மனமார வரவேற்கிறேன். இந்த ராஜ்ய சர்க்கார் பல வருஷ காலங்களிலே செய்துள்ள பல முன்னேற்றகரமான—பாராட்டத் தகுந்த—பல நல்ல காரியங்களிலே, மின்சாரத் துறையில் இந்த ராஜ்யத்தில் இந்த சர்க்கார் பணியாற்றியுள்ள திட்டங்களைப்பற்றிய வரையில், அனைவரும் பாராட்ட வேண்டிய விஷயங்கள் இவை என்பதை யாரும் மறுக்க முடியாது. சர்க்காரானாலும், தனி மனிதர்களானாலும், யாரானாலும்கூட, இவர்கள் செய்துள்ள வேலைகளைப்பற்றி பாராட்டத் தகுந்த வேலைகளைப்பற்றி—இந்தச் சபையோ, பொது மக்களோ, மற்றைய ஸ்தாபனங்களோ, பாராட்ட வேண்டிய விஷயங்களைப் பாராட்டாமல் விட்டுவிட்டால், இந்த நல்லகாரியங்களைப்பற்றிய வரையில் பொது மக்களுடைய ஆதரவு இருக்கிறது என்பதை எல்லோரும் தெரிந்தகொள்ள முடியாது.

" செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்."

என்றார் வள்ளுவர். ஆகையால் பாராட்டத்தகுந்த விஷயங்களை, இத்தகைய முக்கியமான பொறுப்பு வாய்ந்த சபையிலே, கட்சிப் பாகுபாடு, கொள்கை வேறுபாடு இல்லாமல், நடு நிலைமையோடு கவனித்து, முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதை, பாராட்டவேண்டிய தன்மையை இழந்து விடக்கூடாது. கடந்த இரண்டு மூன்று தினங்களாக நடந்துகொண்டிருக்

[Sri R. Krishnasami Naidu] [4th November 1958

கின்ற இந்த விஷயத்தைப்பற்றிய பேச்சுக்களில் முடிவிலே "பாராட்ட முடியும் என்று சொல்ல முடியாது" என்று சொல்லிக்கொண்டு சில அங்கத்தினர்கள் பேசினார்கள். அது அவ்வளவு நல்ல முறையல்ல. பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டும் பண்பாடு வேண்டும். பாராட்ட வேண்டியதைப் பாராட்டக்கூடிய கொள்கை வேண்டும். இது ஒரு கஷ்டமான காரியம். கிராமங்களில் பிரதான குடும்பங்களில் கல்யாணம் போன்ற நல்ல காரியங்கள் நடக்கும் வீட்டுக்குப் போகின்றவர்கள் என்று சிலர் இருப்பார்கள். அதே போல சாவு போன்ற இழவு வீடுகளுக்குப் போகின்றவர்கள் என்று சிலர் இருப்பார்கள். இந்த இழவு வீட்டுக்குப் போகின்றவர்கள் எப்போதாவது கல்யாண வீட்டுக்குப்போய் விட்டால், அங்கு போனவுடனே, "ஒத்தைக் கட்டணமா, இரட்டைக் கட்டணமா," என்று இந்த மாதிரிக் கேட்க ஆரம்பித்துவிடுவார்கள். ஏனென்றால், இவர்களுக்கு இழவு வீட்டுக்குப் போன பழக்கம். கல்யாண வீட்டுக்குப் போனாலும், அவருக்குப் பழைய ஞாபகம் வந்துவிடும். அவருடைய பழைய பழக்கம் வந்துவிடும். இந்த மின்சாரத் துறையில் நம் ராஜ்யத்தில், நம் சர்க்கார் முன்னேற்றகரமான பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்று திருப்திகரமான மனப்பான்மையைக் காட்டுவதாகப் பேசாமல், வேண்டுமென்றே பேசுவதாகத் தோன்றுகிறது.

"யானையைப் பார்க்க வெள்ளெழுத்து என்று சொல்ல வேண்டிய தில்லை." ஒரு ஜில்லாவில் இத்தனை ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன. ஆயிரக் கணக்கான கிராமங்கள். இப்போது நூற்றுக் கணக்கான கிராமங்களுக்குத்தான் மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. இதை எந்த வகையில் பாராட்டுவது என்று பேசுகிறார்கள். மின்சாரத்துறை நம் ராஜ்யத்தில் எப்படி உருவாகிக்கொண்டு வந்திருக்கிறது, எந்தெந்த வருஷங் களிலே எத்தனையெத்தனை பம்ப்செட்டுகள் கிராமங்களில் கொடுக்கப் பட்டுள்ளன, கிராமங்களுக்கு எப்படியெப்படி மின்சாரம் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரங்களெல்லாம் ஒரு சரித்திர வரலாறு போலக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவே முதலில் பாராட்ட வேண்டியதாகும். அதை நடு நிலைமையோடு வாசித்துப் பார்த்தால் பல நல்ல விவரங்கள் கொடுக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கலாம். அப்படிப் பார்க்கும்போது 1945–46-ம் வருஷத்திலிருந்து 1958-ம் வருஷம் மார்ச் மாதம் முடிய 10, 12 வருஷங்களில் எத்தனை கிராமங்களில் பம்ப் செட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன, எத்தனை கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. எப்படி மின்சார அபிவிருத்தி செய்யப்பட்டி ருக்கிறது என்பதைப் பார்த்தால் எல்லோரும் ஒரு மனதாக, ஏக மனதாக இதை ஆதரித்தாக வேண்டும். அவ்வளவு வேகமாக முன்னேறி வந்திருக் கிறது. மத்திய சர்க்கார் திட்டங்களும், மாகாண சர்க்கார் திட்டங்களும், இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலே நமது ராஜ்யத்துக்கு வகுத்துக் கொண்ட டார்ஜெட்டை விட அதிகப்படியான காரியங்களோடுகூட நிறை வேற்றப்பட்டு வந்திருக்கிறது என்பது பாராட்டுக்குரிய விஷயமாகும். அந்த வகையிலே இந்த வரவு செலவுத் திட்டத்தையும், இந்த அறிக்கை யையும் ஒரே மனதாகப் பாராட்டியிருக்கவேண்டும். இந்தப் பாராட்டுதல் களெல்லாம் அமைச்சருக்கோ அல்லது ஒரு கட்சிக்கோ அல்ல. ஆகையால் இதிலே அவ்வளவு பாராட்டத் தக்க அம்சங்கள் இருக்கின்றன என்று நான் இதைப் பாராட்டுகிறேன். இந்த சந்தர்ப்பத்தில் இரண் டொரு விஷயங்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

(Sri R. Srinivasa Iyer in the Chair.)

"குருப்பிங் ஸிஸ்டம்" என்று ஒன்று இருக்கிறது. சங்கரன்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற இடங்களிலும் இது இப்போது அமுல் நடத்தப் படுகிறது. இது மாகாணம் பூராவிலும் அமுல் நடத்தப்படுவதால், எல்லா இடங்களிலும் அமுல் நடத்திவிட்டு இரண்டு தாலூக்காக்களில் மட்டும் அமுல் நடத்தாமல் இருப்பது நியாயமல்ல என்பதற்காகவே இங்கும் அமுல் நடத்தப்படுகிறது. இந்த தாலூக்காக்களுக்கு கேரளா விலிருந்து சப்ளை கொடுக்கப்பட்டு வருகிறது. குருப் ஸிஸ்டம் கொண்டு வருவதன் மூலம் வரக்கூடிய அனுகூலங்களும், விசேஷ நன்மைகளும் என்னவோ தெரியவில்லை. மாகாணம் பூராவிலும் அமுலாக்கிவிட்டு இந்த

இரண்டு தாலூக்காக்களில் நடத்தவில்லையென்றால் பாரபட்சம் காட்டு வதாகும் என்ற தவறான மனப்பான்மையோடு தவறான—கண்ணோட் டத்தோடு—அங்கும் அமல் நடத்தப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இதை எடுத்து விட்டால் இதனால் யாரும் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இந்தப் பகுதிக்கு குருப்பிங் ஸிஸ்டம் வேண்டாமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எதிர்காலத்தில் மின்சாரமானது நம் ராஜ்யத்திலே வேறு பல துறைகளில் இன்னும் அதிகமாக வேண்டியிருக்கும் என்று கருதப் படுகிறது. அணுசக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு வழி இருக்கிறது என்று சொன்னால் அதைத் தீவிரமாக ஆராயவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

மின்சார போர்டுக்குக் கொடுத்த பணத்திற்கு 5½ சத விகிதம் வட்டி கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் வைத்திருப்பதைப் பார்த்தால், சர்க்கார் கொஞ்சம் வியாபார மனப்பான்மையோடு நடந்துகொண்டிருக் கிறது என்று நினைக்கிறேன். எந்த சதவீதத்தில் பொதுமக்களிட மிருந்து அரசாங்கம் வாங்கியதோ, அதே வட்டி வீதத்தில் கொடுக்கப் பட்டிருக்க வேண்டும். இதைச் சர்க்கார் புனராலோசனை செய்யவேண்டு மென்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மின்சார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த நிதி நிலை அறிக்கையைக் குறித்து ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அமோகமாக வரவேற்றும், எதிர்க்கட்சிக்காரர்கள் ஒதுக்கிவைத்திருக்கிற தொகையைக் கொண்டே நல்ல முறையில் பாராட்டியும் சில வார்த்தைகள் கூறியிருக்கிறார்கள். மொத்தம் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை யிலே மூன்றிலே ஒரு பங்கு செலவு செய்திருக்கிறோம் என்றும், அதே போல இந்தியா நாட்டிலேயே மூன்றாவதாக நமது நாடு முன்னேறி வருகிறது என்றும் பெருமையாகச் சொல்லிக்கொள்வதிலிருந்து, வேறு எந்தத் திட்டமும் பெருமையாகச் சொல்லிக்கொள்ளத் தக்க அளவுக்கு முன்னேறவில்லையாயினும், இப்படி வெளிச்சம் போட்டுக் காட்டுவதிலே நமது மாகாணம் அதிகமாக முன்னேறியிருக்கிறது என்பதை பெருமையுடன் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலே உள்ள பெரு வாரியான மக்கள் விவசாய மக்களாக இருக்கிறார்கள் என்று தெரிந்தும், விவசாயத்தை நம்பித்தான் நாம் அனைவரும் இங்கு இருக்கிறோம் என்பதை அறிந்தும், உழவரது மேன்மையையும், உழவரது நல்ல பண்பினையும் அழகாகப் பாடிக்காட்டுகிற ஆளும் கட்சியினைச் சேர்ந்தவர்கள், நாம் சுதந்திரம் பெற்று 11 ஆண்டுகள் ஆகியும், விவசாயிகளின் துயரைப் பற்றிச் சொல்லும்பொழுது, "படமுடியாது இனித் துயரம், பட்டதெல்லாம் போதுமையே" என்ற வேதனை விருத்தம் பாடுகிற நிலையிலேதான் முடிக்கிறார்கள். மின்சார வளர்ச்சிக்காக ஏறத்தாழ 55 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று அவர்கள் சொன்ன போதிலும்கூட, இந்த நாட்டிற்கு முதுகு எலும்பு போன்ற விவசாய மக்களுக்கு 70,000 பம்பு செட்டுகள் கொடுத்தும்கூட, விவசாய மக்கள் முன்னேறியிருப்பதாக அவர் களே சொல்லவில்லையென்றால், எங்களைப்போன்றவர்கள் எப்படி ஒப்புக் கொள்ள முடியும் ? 10.30 a.m.

அடுத்தபடியாக, குந்தா மின்சார திட்டத்திற்காக கானடா நாட்டி லிருந்து 12.5 கோடி ரூபாய் கடனாகப் பெற்று, அதன் மூலமாக அந்தக் குந்தாத் திட்டத்தை அதிகப்படியாகவும், நல்ல முறையில் சீரும் சிறப்பு மாகச் செய்து வருவதாகவும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் "அண்டா" என்று சொல்லக்கூடிய இந்தக் குந்தாத் திட்டத்திற்காக வெளிநாட்டிலிருந்து 12 கோடி ரூபாய் பெறுகிற அமைச்சர், தாம்பரம் ரயில்வே நிலையத்திலிருந்து விழுப்புரம் ரெயில்வே நிலையத்திற்கும், சென்னை சென்டிரல் ரெயில்வே நிலையத் திலிருந்து அரக்கோணம் ரெயில்வே நிலையத்திற்கும் மின்சார ரெயில் ஓட்டவேண்டுமென்பதற்காக திட்டம் தீட்டி வைத்திருக்கிற மர்மம் என்ன ? ஏன் அந்தத் திட்டத்திற்காக இவ்வாறு அந்நிய நாடுகளிலிருந்து கடனைப் பெற்று, அவைகளை நிறைவேற்றக் கூடாது ? அந்தத் திட்டங்கள்

[Dr. Srimathi Sathiyavanimuthu] [4th November 1958

வருங்காலத் திட்டங்களாயிருந்தால், அவைகளைத் துரிதமாகச் செய்தால், அவற்றின் மூலம் பல கோடி ரூபாய் வருமானம் கிடைக்குமல்லவா ? ஆகவே அத் திட்டங்களை பரிசீலித்து அவற்றை நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன். 20,000 கிராமங்களிலே 7,000 கிராமங் களுக்குத்தான் மின்சார வசதி செய்து கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. நமது தமிழ் நாட்டிலுள்ள மொத்தம் 3 கோடி ஜனத்தொகையில் ஏறத்தாழ 2¼ கோடி மக்கள் இப்படிப்பட்ட 20,000 கிராமங்களிலே வாழ்வதாகத் தெரிகிறது. எனவே முக்கால் பங்கு மக்கள் வாழ்கிற கிராமங்களில் 7,000 கிராமங்களுக்குத்தான் விளக்கு வெளிச்சமோ, மின் சார சக்தியோ—அது சிவசக்தியாக இருந்தாலும் சரி, மின்சக்தியாக இருந்தாலும் சரி—கொடுத்திருந்தாலும், எந்த சக்தியும் வயிற்று சக்திக்கு உதவவில்லையென்பது வெளிப்படையாகத் தெரிகிறது. தேவை அல்லா ததைச் செய்வதைவிட்டு, தேவையானதைச் செய்யவேண்டியதுதான் அமைச்சரின் காரியம். எது தேவையோ அதைச் செய்வதை விட்டுவிட்டு, வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறோம், நாட்டிலே மூன்றாவதாக முன் னேறியிருக்கிறோம் என்றெல்லாம் வீண் பெருமைக்காகச் சொல்வதினாலே மக்களுக்கு எந்தவிதமான நலனும் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. " வெளிச்சம் போடுகிறார்கள் " is very slang expression. It is not parliamentary. Is it in order, Sir?

TEMPORARY CHAIRMAN (SRI R. SRINIVASA IYER): It is parliamentary. The hon. Member (Srimathi Sathyavanimuthu) will continue.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : பேசுவதைத் தடுப்பதன் மூலமாக சொல்லுகிற குறைகள் திரை மூடப்படும் என்று எண்ணினால் ஏமாற்றமடைவார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Another point of order, Sir. It is the privilege of a Member to raise points of orders. That cannot be objected to, Sir.

TEMPORARY CHAIRMAN (SRI R. SRINIVASA IYER). தயவுசெய்து கனம் அங்கத்தினர் மேலும் பேசும்படிக் கேட்டுக்கொள் கிறேன். இன்னொரு மெம்பரை "insinuate" செய்ய வேண்டா மென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : மூன்று கோடி மக்களில் 2¼ கோடி மக்களுக்கு இந்த மின்சார வசதியில்லாததன் காரணமாக, இந்த மின்சார சக்தியினால் அவர்கள் பயனடையாத நிலையில் இந்த நாட்டு மக்களுக்கே இதனால் பயனில்லை என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அமைச்சரிடம் கண்ணீர்விட்டுக் கதறி, "வாருமையா ராமைய்யா, எங்கள் குறையைத் தீருமைய்யா" என்று சொல்வதிலிருந்து, அவர்களே கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறார்கள், இந்தத் திட்டத்தின் மூலமாக நல்ல பயன் ஏற்படவில்லை என்று சொல்லிக்கொண்டு, விடை பெற்றுக்கொள்கிறேன்.

* SRI A. PERUMAL : கனம் தலைவர் அவர்களே, கனம் மின்சார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்த வரவு செலவுத் திட்ட அறிக் கையின் மீது சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எங்கள் முதுகுளத்தூர் தாலூகாவில் இதுவரையிலும் எந்தவிதமான மின்சார வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை, சில மாதங்களுக்கு முன்பு நமது அமைச்சர் அவர்கள் எங்கள் தாலூகாவில் சுற்றுப் பிரயாணம் செய்யும்

4th November 1958] [Sri A. Perumal]

பொழுது, கமுதி டெவலப்மெண்ட் ஆபீசில் தங்கியிருந்தார்கள். நாங்கள் வாழும் பிரதேசம் மிகவும் பிற்போக்கான பிரதேசம். அங்கேயுள்ள விவசாய மக்களுக்கு எந்த விதமான வசதியும் இல்லாததால், மின்சார சப்ளை செய்துகொடுக்கவேண்டும், பம்பு செட்டுகள் கொடுக்கவேண்டுமென்று விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் மந்திரி அவர்கள் அதற்கு ஒன்றும் பதிலளிக்கவில்லை. ஒரு தாலூகா பிற்போக்கான தாலூகாவாகயிருந்தால், அதிலேயுள்ள குறைகள் எல்லாவற்றையும் கொஞ்சம் கொஞ்சமாக நிவர்த்திபண்ணி, முற்போக்கான தாலூகா வுடன் இணைத்தால்தான் நமது சர்க்காருக்கு நல்ல மதிப்பு ஏற்படும். இப்படி ரொம்ப பிற்போக்காக இருக்கும் தாலூகாவை இன்னும் பிற் போக்காகப் போகும்படி செய்தால், அங்கேயுள்ள மக்களிடத்தில் நமது அரசாங்கம் நல்லதொரு மனப்பான்மை காட்டவில்லை என்று நினைக்கக் கூடும். இதை கனம் அமைச்சர் அவர்கள் உணரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தேர்தல் காலங்களிலே எங்கள் பகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்வது மிகவும் கஷ்டமாகயிருக்கிறது. அதனால் சிற்சில கிராமங்களுக்கு மட்டும் ரோடு வசதி செய்திருக்கிறார்கள். முதுகுளத்தூர் தாலூகாவில் 4 அல்லது 5 கிராமங்கள் தவிர, மற்ற கிராமங்களுக்கு மின்சார வசதியே கிடையாது. மிகவும் தாழ்மையோடு நமது அமைச்சர் அவர்களிடத்தில் அங்கே சுற்றுப் பிரயாணம் செய்யும்பொழுது, எங்கள் குறைகளைப்பற்றித் தெரிவித்தும்கூட, அவர்கள் எந்தவிதமான பதிலும் கொடுக்காததினால் ரொம்பவும் வருந்துகிறேன். எங்கள் பகுதியிலே கிணறுகள் மூலமாக கிடைக்கும் தண்ணீரை வைத்துக்கொண்டு விவசாயம் செய்து அங்கேயுள்ள மக்கள் காலம் கழிக்கவேண்டியிருக்கிறது. வேறு எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் கிடையாது. அங்கே எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லை. அப்படியிருக்கக்கூடிய பகுதிகளுக்கு மின்சார வசதியாவது கொடுக்கவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை தயவுசெய்து நமது அமைச்சர் அவர்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மழையை நம்பித்தான் நாங்கள் மகசூல் செய்யவேண்டியிருக்கிறது. 10-40 a.m.
மழை பெய்து விளைந்தால்தான் நாங்கள் வாழ்க்கையை நடத்த முடியும். மழை இல்லாத காலத்தில் எங்கள் தாலூகாவில் மிகவும் பஞ்சம் ஏற்பட்டுவிடும். இப்பொழுது என்னுடைய தாலூகாவில் ஒரே ஒரு பகுதியிலே, அதுவும் கமுதியிலிருந்து தெற்கே 5 மைல் உள் அடங்கி 3 கிராமங்களில் 50 விவசாயிகள் 50 கிணறுகளுக்கு டெபாஸிட் கட்ட தயாராய் இருக்கிறார்கள். அங்கு மின்சார சப்ளை கிடைத்தால் நான்கு பக்கங் களிலுமுள்ள ஜனத்தொகைக்கு உணவு சப்ளை செய்ய முடியும் என்று அவர்கள் அபிப்பிராயம் இருக்கிறது. சொல்லுகிறார்கள். விவசாயிகள், மந்திரி அவர்களிடம் முறையிடுவது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதா ? அப்படியிருந்தும் இதை ஏன் கவனிக்கவில்லை, ஏன் பதில் சொல்லவில்லை என்று எனக்கு மிகவும் அதிசயமாகயிருக்கிறது. இனி மேலாவது அந்தத் தொகுதியில் மின்சார சப்ளை செய்துகொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRIMATHI T. N. ANANDANAYAKI :** கனம் தலைவர் அவர்களே, மின்சார போர்டு இந்தப் பெரிய சிறப்பு மிகுந்த அறிக்கையை தயாரித்துக் கொடுத்ததுபற்றி உண்மையிலேயே அவர்களைப் பாராட்டவேண்டும். இவ்வளவு தெளிவாகவும், விரிவாகவும் அங்கத்தினர்களும், மற்றவர்களும் புரிந்துக்கொள்ளக்கூடிய அளவிலே மிக அழகாக அச்சடிக்கப் பட்டிருக்கிற இந்த அறிக்கையை நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதனுடைய முன்னேற்றத்தைப் பார்க்கும்போது, அதுவும் மின்சார வேகத்தில்தான் போய்க்கொண்டிருக்கிறது என்பதை நாம் மாத்திரமல்ல, நம்மை எதிர்க்கின்றவர்களும் ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும். இன்றைய சூழ்நிலையிலே பொருளாதார வளர்ச்சி தேவை. அது மின்சாரத் துறையில் நாம் எவ்வளவு தூரம் முன்னேறுகிறோமோ அதைச் சார்ந்திருக்கிறது. விவசாயமாக இருந்தாலும் சரி, கனரகத் தொழிலாக இருந்தாலும் சரி, சிறு கைத்தொழிலாக இருந்தாலும் சரி, மின்சார சக்தி இல்லாவிட்டால் நாம் எதிர்பார்க்கக்கூடிய அளவிலே வெற்றிகரமாக

[Srimathi T. N. Anandanayaki] [4th November 1958

முன்னேறுவது மிகமிக கஷ்டம் என்பதை ஒத்துக்கொண்டுதான் தீர வேண்டும். நம்முடைய சென்னை மாகாணத்திலே, பிற இலாகாக்களைக் காட்டிலும், மிகத் துரிதமான அளவிலே மின்சார இலாகா முன்னேறியிருக்கிற பெருமையை அதற்கு அளிக்காவிட்டால், நன்றாக வேலை செய்பவர்களைத் தட்டிக்கொடுக்காமல் விட்டுவிடுவோமானால், அவர்கள் இன்னும் முன்னேற்றத்திற்கு வேலை செய்வதிலே ஊக்கம் குறைந்துவிடும். நன்றாகச் செய்திருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு, இனிமேல் எதை எதை செய்யவேண்டுமோ அதை துரிதமாகச் செய்யவேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு மேலும் ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும். 13 மாகாணங்களைக் கொண்ட இந்திய நாட்டிலே நமது மாகாணம் மூன்றாவது இடம் பெற்றிருக்கிறது. அதுவும் நமக்கு பிற மாகாணங்களை விட தண்ணீரிலிருந்து மின்சார சக்தி எடுப்பதற்குள்ள வசதிகள் மிகக் குறைவு. இன்றைக்கு எடுத்துக்கொண்டால், மோயாறு, பாபனாசம், மேட்டூர், பைகாரா என்ற திட்டங்கள்தான் இருக்கின்றன. பிற மாகாணங்களில் இருக்கக்கூடிய அவ்வளவு தண்ணீர் சக்தி நம் மாகாணத்தில் கிடையாது. தெர்மல் ஸ்டேஷன் வைத்து மின்சார சக்தி உண்டாக்க வேண்டுமென்று சொன்னால், கரி விலை அதிகமாக இருப்பதினால், மின்சாரத்தின் விலையும் அதிகமாகிவிடும். ஆகையினால், இன்றைய நிலையிலே தண்ணீர் சக்தியை எவ்வளவு பயன்படுத்தமுடியுமோ அவ்வளவையும் பயன்படுத்தித் தீரவேண்டும். அந்த வகையில் பிற மாகாணங்களைப்போல் நம் மாகாணத்தில் தண்ணீர் சக்தி இல்லாவிட்டாலும், அதைப் பயன்படுத்தி நம்முடைய மாகாணம் மூன்றாவது இடம் பெற்றிருக்கிறது போற்றத்தக்கது தான். பம்பாய், மேற்கு வங்காளம், வடக்கு மாகாணங்களாக இருந்தாலும் மீதி 7 மாகாணங்களைக் காட்டிலும் தெற்கேயுள்ள நம் மாகாணம் மின்சாரத்தில் அதிகமாக முன்னேறியிருக்கிறது. வடக்கே மின்சாரத்தின் வேகம் முடங்கிப்போயிருக்கிறது, தெற்கே மின்சக்தி முன்னேறியிருக்கிறது. இதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நம்முடைய மாகாணத்தின் உழைப்புத்தான் இதற்குக் காரணம் என்றாலும், மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் கிடைத்ததனால்தான் நாம் இவ்வளவு தூரம் வெற்றி பெற முடிந்தது என்பதை அங்கத்தினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதை ஆட்சேபிப்பவர்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடுவதில் அவா உள்ளவர்களாகத்தான் இருக்க முடியும்.

இந்த மாநிலத்தில் மின்சார சக்தியை 56 சத விகிதம் தொழிலுக்கு பயன்படுத்துகிறோம். நம்முடைய மாகாணத்தை எடுத்துக்கொண்டால் விவசாயத்தின் அளவுக்கு தொழில் வளரவில்லை. இன்றைய நிலையில் அது விவசாய மாகாணமாகத்தான் இருக்கிறது. இனிமேல் பழுப்பு நிலக் கரி கிடைத்து, அதிலிருந்து கிடைக்கும் உப பொருள்களை பயன்படுத்தும் அளவுக்கு அந்தத் துறை விரிந்து போய்விட்டால், இதைத் தொழில் மாகாணமாக ஆக்க முடியும். இன்றைய அளவிலே விவசாய மாகாணமாக இருக்கக்கூடிய நம் மாகாணத்தில் 56 சத விகிதம் மின்சார சக்தி தொழிலுக்கு பயன்படுத்தப்படுகிறது என்றால், தொழில் முன்னேற்றம் மிகச் சிறந்த அளவிலே இருந்திருக்கிறது என்றுதான் கொள்ளவேண்டும். அதே சமயத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். விவசாய மாகாணமாக காட்சி அளிக்கின்ற சென்னையிலே 19 சத விகிதம்தான் மின்சாரம் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. அது அவ்வளவு திருப்தி கரமாக இல்லை. மேலும் விவசாயத்துறைக்கு மின்சார உதவியை அதிகரிக்கவேண்டுமென்று மின்சார அமைச்சர் அவர்களையும், மின்சார போர்டையும் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்தோமானால், கிட்டத்தட்ட தொழிலுக்கு ஏற்ற அளவிலே உழவையும் கொண்டுபோய்விட்டு விடலாம். உழவும் இப்பொழுது பெரிய தொழிலாக இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. கனரகத் தொழிலைப் போல இதிலும் சட்டங்கள், திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இதையும் பெரிய தொழிலாகக் கருதி முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். மேலும் நாம் 100-க்கு 100 உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்று சொல்லுகிறோம். அப்படியிருக்கும்பொழுது, அதற்கு அத்தியாவசியமான விவசாயத்திற்கு முதல் இடம் கொடுத்து 19 சத விகிதம் மின்சார உதவியை அதிகப் படுத்துவதற்கு எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்ய வேண்டும்.

4th November 1958] [Srimathi T. N. Anandanayaki]

அடுத்தபடியாக, ஒரு அங்கத்தினர் பேசும்போது பம்பு செட்டுகள் விநியோகம் ஒரு புறமும், மறுபுறத்தில் மின்சார விநியோகமும் இருப்பதால், இதில் ஒன்றுக்கொன்று இணைப்பில்லையாதலால் முன்னேற்றம் மிக தாமதப்படுகிறது என்று கூறினார்கள். ஒரு காரியம் பல இலாகாக்களில் சிக்கிக்கொண்டால், காலதாமதம் ஏற்படுகிறது, காரியத்தை கெடுத்துவிடுகிறது என்பதை இன்றைய சூழ்நிலையில் புரிந்துகொள்ள வேண்டும். பம்பு செட்டுகள் விநியோகத்தையும் மின்சார இலாகாவே எடுத்துக்கொண்டால், 19 சத விகிதத்திலிருந்து இரண்டு பங்கு, மூன்று பங்கு அதிகமாக விவசாயத் துறையில் மின்சாரத்தை பயன்படுத்த முடியும் என்று எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக, தனியார் துறையிலே இப்பொழுது 8 ஸ்தாபனங்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவைகளை எவ்வளவு சீக்கிரம், அரசாங்கம், மின்சார போர்டு எடுத்துக்கொள்ளுகிறார்களோ, அந்த அளவுக்கு இதன் மூலமாக தமிழ் நாட்டில் "ரூரல் எலக்ட்ரிபிகேஷன்" விறுவிறுப்பாக முன்னேறும். 1951-வது ஆண்டில் 1,000 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்துவந்த மின்சார இலாகா இன்றைக்கு 7,000 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கிறது என்றால், அது எவ்வளவு வேகமாக முன்னேறியிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். கிட்டதட்ட 7 பங்கு 5, 6 ஆண்டுகளிலே முன்னேறியிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது மின்சார இலாகாவைப் பார்த்து, மின்சார போர்டைப் பார்த்து, முன்னேற்றம் காணவில்லை என்று சொன்னால், இனிமேல் அவர்களுக்கு முன்னேறுவதற்கு ஊக்கமே ஏற்படாது. முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதைப் பாராட்டிவிட்டு, இன்னும் அதிகமாக முன்னேறவேண்டுமென்று சொன்னால் அதைப் புரிந்துகொள்ள முடியும். அப்படிச் செய்யவில்லை என்றால், வேண்டுமென்றே முன்னேற்றத்திற்கு திரைபோட்டு மூடிய குற்றச்சாட்டுக்கு ஆளாகவேண்டும்.

அடுத்தபடியாக, மின்சாரம் கொடுப்பதற்கு 'பிரையாரிடி லிஸ்டு, போட்டிருக்கிறார்கள். சென்னைக்கு அண்டையிலுள்ள ஜில்லாக்களிலே வெகு சீக்கிரத்தில் மின்சாரம் பாய்ச்சப்படுகிறது. ஆனால், பிற்பட்டவர்கள் வசிக்கும் பிற்பட்ட ஜில்லாக்களிலே மின்சார வசதி வீட்டிற்குமில்லை. தொழிலுக்குமில்லை, விவசாயத்திற்குமில்லை. பிற்பட்ட சமூகத்தினர் வாழும் அதிகமாக பிற்பட்ட ஜில்லாக்களில், அதாவது, ராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற ஜில்லாக்களில் வெகு சீக்கிரம் மின்சாரத்தைப் பாய்ச்சவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். !இவைகளுக்கு பிரையாரிடி லிஸ்டில் முதல் இடம் கொடுக்கவேண்டும். ஏற்கனவே முன்னேற்றம் கண்டுள்ள ஜில்லாக்களை பின்னே தூக்கிப் போட்டு, இந்த பிற்பட்ட ஜில்லாக்களை முன்னே தூக்கிப் போட்டு, அங்கே சீக்கிரமாக மின்சார சக்தியைப் பாய்ச்சினால், நன்றாக இருக்கும்.

கடைசியாக ஒரு வார்த்தை, தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் இன்னும் 8 தனியார் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இந்தப் பகுதிகளில் கிராமங்கள் வேறு துறைகளிலே முன்னேற்றம் அடைந்திருந்தாலும், மின்சாரத் துறையில் முன்னேற்றம் காணவில்லை. இந்த கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுத்து உதவினால், சிறுசிறு கிராமங்களெல்லாம் சிங்காரத் தோட்டங்களாகிவிடும். தனியார் கையிலே இருக்கும் ஸ்தாபனங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டால்தான், நாம் எந்த அளவுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று நினைக்கிறோமோ அந்த அளவுக்கு விஸ்தரிக்க முடியும். அதே சமயத்தில் தனியார் ஸ்தாபனங்கள் 'விஸ்தரிப்பதற்கு அரசாங்கத்தினிடம் அதிக வசதி இருக்கிறது. எங்களிடம் அன்னிய செலாவணி போன்ற வசதிகள் கிடையா' என்று சொல்லக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இந்த நிலையிலே இதனால் கிராம மக்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, தனியார் கையில் இருக்கும் ஸ்தாபனங்களை உடனடியாக அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்தல ஸ்தாபனங்களிடமிருந்து இதைக் கொஞ்சம் தாமதமாக எடுத்துக்கொண்டாலும், தனியார் ஸ்தாபனங்களை உடனடியாக அரசாங்கம் எடுத்துக்கொண்டு அந்தந்த கிராமங்களுக்கு மின்சார வசதி செய்துகொடுத்தால், மின்சார இலாகா நல்ல முறையில் வேலை செய்கிறது என்ற பெருமைக்கு ஆளாகமுடியும்.

[4th November 1958

*Sri T. KARIA GOUNDER : கனம் தற்காலிக தலைவர் அவர்களே, இந்த மின்சார இலாகா சமர்ப்பித்திருக்கிற அறிக்கையின் மீது நான் பேசாமல் இருந்துவிடலாம் என்று நினைத்தேன். காரணம் என்னவென்றால் . . .

Sri A. GOVINDASAMY : On a point of order, Sir : தற்காலிக தலைவர் என்று குறிப்பிட்டது முறையா என்று கேட்கிறேன்.

TEMPORARY CHAIRMAN (Sri R. SRINIVASA IYER) : தற்காலிகமாகத் தான் என்னைத் தலைவராக நியமித்திருக்கிறார் சபாநாயகர் அவர்கள். அதனால் அப்படிச்சொல்லுவதிலே ஒன்றும் தவறு இல்லை என்று நினைக்கிறேன்.

*Sri T. KARIA GOUNDER : நான் பேசாமல் இருந்துவிடலாம் என்று நினைத்த காரணம், இந்த தேசத்திலே மூன்றாவதாக இருக்கக்கூடிய நம் மகாணத்தில், மாநில ரீதியில் எடுத்துக்கொண்டால் எங்கள் ஜில்லா முதலாவதாக இருக்கிறதே என்பதினால் தான்.

10-50 a.m. இன்றைய தினம் மின்சார இலாகா நல்ல வேலை செய்து வருகிறது. இன்றைய தினம் விவசாயிகள் நல்ல முறையில் வாழ்கிறார்கள் என்றால் அது மின்சார இலாகாவினால்தான் என்றும் அதனால் வேறு எந்த இலாகாவும் இந்த நாட்டில் இல்லை என்றும் எதிர் காலத்தில் சரித்திரத்தை எழுதிகிறவர்கள் இதைப்பற்றி எழுதுவார்கள் என்பதைப்பற்றி இந்த சபையின் முன் தெரிவிக்க விரும்புகிறேன். என்னைப் போன்ற விவசாயிகள் இந்த நாட்டில் மின்சாரத்தின் வழியாக குறிப்பாக சொல்ல வேண்டுமானால் பொருளாதாரத்தில் மேலே போய்க்கொண்டிருப்பதற்கெல்லாம் காரணம் இந்த மின்சாரம்தான். இப்பொழுது எங்கள் ஜில்லாவில் மூலை முடுக்குகளிலெல்லாம் மின்சாரம் வந்து விட்டது. இந்த மின்சாரத்திற்கு எவ்வளவு சக்தி இருக்கிறதோ அதைப்போலவே அந்த இலாகாவும் ரொம்பவும் விறுவிறுப்பாக வேலை செய்கிறது என்பதை ஒவ்வொருவரும் மறுக்க முடியாது. அதிலும் குறிப்பாகச் சொன்னால் அந்த இலாகாவின் தலைவராக இருக்கக்கூடிய கனம் மந்திரி அவர்கள் எங்கள் ஜில்லாவில் சுற்றுப் பிராயாணம் செய்ய வந்தபோது அங்குள்ள எல்லா எம். எல். ஏ.க்களும், மின்சார இலாகாவில் உத்தியோகத்தில் இருக்கக்கூடியவர்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடியபோது கனம் மந்திரி அவர்கள் "உங்களுக்கு என்ன குறை இருக்கிறது என்ன தேவை இருக்கிறது" என்று எல்லோரையும் கூட்டிக் கேட்டார். அப்பொழுது சில நண்பர்கள் சொன்னார்கள், "இப்பொழுது 50 ரூபாய் மினிமம் சார்ஜ் அதிகமாக வசூலிக்கிறார்கள்" என்பதைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். அதைப்பற்றி விசாரிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். அப்படிப்பட்ட குறையைக்கூட நானும் சொன்னேன். என்னுடைய தொகுதியில் கூட இந்தக் குறையினால் மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. கனம் மந்திரி அவர்கள் அதைக் கேட்டு "பல கிராமங்களில் தண்ணீர் வசதிக் குறைவாலும், சாமான்கள் கிடைக்காத காரணத்தாலும் காலதாமதம் ஏற்படுகிறது, அவர்களுக்கு எல்லாம் விதி விலக்கு அளித்து இப்பொழுது வசூலிக்கப்படும் மினிமம் சார்ஜ் வசூலிக்கப்படும் காலத்தை நீடித்துக் கொடுக்க உத்தரவு போடப்படும். அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதைப்பற்றி தெரிவிக்கப்படும்" என்றும் தெரிவித்தர். அந்த அடிப்படையில் ஒரு உத்தரவையும் போட்டு விட்டு வந்தார். அந்த இலாகா இப்பொழுது செய்து வரும் சுறுசுறுப்பான வேலையைப்பற்றி வேலையைப்பார்த்து மற்றவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் சிலர், ஆளும் சர்க்காரை குறை கூற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் குறை கூறுகிறார்களே தவிர வேறு எந்த விதத்திலும் அந்த இலாகாவைப்பற்றி குறை கூறவே முடியாது. அப்படிப்பட்ட குற்றம் கூறும் மனது இருந்தால் அதை இனிமேலாவது விட்டு விட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த முறையில் அவர்களுடைய மனதை திருப்பிக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த இலாகாவிலுள்ள அதிகாரிகளுடைய மனமும், மற்றவர்களுடைய மனமும் எல்லாம் இப்பொழுது திரும்பிப்போயிருக்கிறது. குறைகளைச் சொல்லலாம்

4th November 1958] [Sri T. Karia Gounder]

என்னன்ன தேவை என்று சொன்னால், அதைச் செய்ய வேண்டும் அல்லது இதைச் செய்ய வேண்டும் என்ற அளவில் சொன்னால் நன்றாக இருக்கும். நேற்றைய தினம் பல நண்பர்களும் சொன்னார்கள், ஸ்பீக்கர் கூட சொன்னார், (?) விலைவாசிகள் உயர்ந்து போய் விட்டது என்று. விலை வாசிகள் உயர்ந்து போனால் உற்பத்தி பெருகவேண்டும். அப்படி உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால் மின்சார இலாகாவும், அந்த இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளும் நல்ல முறையில் வேலை செய்தால்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். இப்படியேதான் பல அங்கத்தினர்கள் எல்லா கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். இதற்கு ஆதரவாக திட்டத்தை அவர்கள் சமர்ப்பிக்க வேண்டுமேயொழிய மற்றபடி வெளிச்சம்கூட போடவில்லை என்றும் வெளிச்சம் காணப்படவில்லை என்றும் "வாருமய்யா ராமய்யா குறைகளைத் தீருமய்யா" என்ற அளவிலும் பேசக்கூடாது.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : On a point of order, Sir "வாருமய்யா ராமய்யா எங்கள் குறைகளைத் தீருமய்யா" என்று நான் சொல்லவில்லை, நேற்று ஒரு அங்கத்தினர் பேசியபோது அப்படிச் சொன்னார் என்றுதான் நான் சொன்னேன். அப்படிச் சொன்னதைத்தான் நான் பாட்டுப்பாடி காண்பித்தேனே தவிர நான் சொல்லவில்லை.

TEMPORARY CHAIRMAN (SRI R. SRINIVASA IYER) : நேற்று அங்கத்தினர்பேசியது ரிக்கார்டில் இருக்கிறது, அப்படி இல்லை என்று நீங்கள் இன்றுசொன்னதைத்தான் அவர் சொன்னார். அதில் தவறு ஒன்றும் இல்லை.

* SRI T. KARIA GOUNDER : கனம் மந்திரி ராமய்யா அவர்கள் இளம் வயதுள்ளவர். அருமையான நிர்வாகத்தை நடத்திக்கொண்டு வருகிறார். நானே அவரிடம் சென்று ஒரு வேலையைப்பற்றி கேட்டேன். அதற்கு அவர் கண்டிப்பாக முடியாது என்று சொல்லி விட்டார். அது சட்ட விரோதமா? இப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்றி வந்தால் இந்த மாகாணம் பூராவிலும் மின்சாரத்தை சப்ளை செய்யலாம். அதன் பிறகு இந்த உணவு பிரச்னையை தீர்த்துக்கொள்ள முடியும். அதைத் தீர்க்க காலம் தாழ்த்த வேண்டிய அவசியமில்லை. அதற்காக எல்லோரும் சேர்ந்து ஒரு திட்டத்தை வகுத்து அதைத் தீர்க்க ஏற்பாடு செய்துகொள்ளலாம். அப்படி இல்லாமல் ஒரு படி அரிசி ஒரு ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்று சொல்லிக்கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. ஆனால் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மக்கள் சிந்திக்கவே இல்லை. அப்படி உற்பத்தி செய்ய வேண்டுமானால் மின்சாரம் மூலமாக கொஞ்சம் செலவாகிறது. அதனால் மின்சாரத்தை போதிய அளவு உற்பத்தி செய்தால் இதை தீர்த்துக்கொள்ளலாம். இப்பொழுது குந்தா, நெய்வேலி திட்டம் முதலியவைகள் நிறைவேறினால் தமிழ் நாட்டில் மூலை முடுக்குகளிலெல்லாம் விளக்குகள் வந்து விடும், அதைப்பற்றி சந்தேகமே இல்லை. ஏற்கனவே மாகாணம் பூராவும் மின்சாரம் வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதனால் அந்த திட்டங்கள் நிறைவேறினால் எல்லா இடங்களுக்கும் மின்சாரம் வந்து விடும் என்பதில் சந்தேகமே இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தலைவர் அவர்கள் நான் பேசுவதை நிறுத்த வேண்டும் என்பதற்காக மணி அடிக்கக் காத்துக் கொண்டிருக்கிறார், அதனால் இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன். நான் பேசுவதற்கு இந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு கனம் மந்திரி அவர்கள், நாளடைவில் சென்னை மாகாணம் முழுவதற்கும் மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அவர் அதற்கு பல்லாண்டு காலம் வாழவேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திந்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI K. ANBAZHAGAN : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மின்சார திட்டத்தைக் குறித்து இன்று விவாதிக்கப்படுகிறது. இந்த வரவு செலவு திட்டத்தைப்பற்றிய விவாதத்தில் நானும் கலந்து கொள்ள மகிழ்ச்சி அடைகிறேன். மின்சார உற்பத்தியைப் பொறுத்த வரையில் சென்னை மாகாணம் ஓரளவு முன்னேறி இருக்கிறது என்பதையும்

[Sri K. Anbazhagan] [4th November 1958

மின்சார உற்பத்தி விநியோகத்தைக் கையாள அமைக்கப்பட்டிருக்கிற ஒரு தனி போர்டு, அந்தக் குழுவைச் சார்ந்த அதிகாரிகள் எந்த அளவு பணியாற்றி வருகிறார்கள் என்பதைப்பற்றியும் பொதுவாக யாரும் குறை கூறவில்லை. அவர்களுடைய பணியில் குற்றமும் காணவில்லை. ஆனால் மின்சாரம் எந்தெந்த துறையில் எந்தெந்த அளவு விநியோகிக்கப்படுகிறது, எந்த அளவு அதனால் மக்கள் பயனடைகிறார்கள், அதன் மூலம் பொது மக்களுடைய குறிக்கோள் நிறைவேற்றப்படுகிறதா, அப்படிப் நிறைவெற்றப்படினும் அது எந்த அளவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது, அது எந்த அளவுக்கு அவசரமானதாக இருக்கிறது, திட்டங்கள் பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனவா, அல்லது அப்படிப் பூர்த்தி செய்ய முடியாமல்தான் இருக்கின்றனவா, அப்படி இருந்தால் அதற்கான காரணங்கள் என்ன என்று இப்படிப்பட்ட பல்வேறு கோணங்களில் இதைப்பற்றி எண்ணிப்பார்க்கவேண்டும். அப்படி எண்ணிச் சொல்லும்போது எல்லா கட்சி உறுப்பினர்களும் அவரவர்கள் குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும், உண்மையிலேயே அமைச்சர் அவர்களைப் பாராட்டிப் பேசியிருந்தாலும் கடைசியில் அவரவர்கள் சார்ந்துள்ள பகுதிகளிலுள்ள குறைகளைப்பற்றியும் அங்கங்கே நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களைப்பற்றியும், இருக்கக்கூடிய சில சிக்கல்களைப்பற்றியும் வலியுறுத்தியே பேசியிருக்கிறார்கள். கனம் அமைச்சர் அவர்களும் மின்சாரத்தைப் பயன்படுத்தும் இந்த முறையில் இயன்ற எல்லாவற்றையும் செய்கிறோம் என்றுதான் சொல்லுகிறார்கள். இதைக்கண்டு பலர் பெருமைப்படுகிறார்கள். ஆனால் இன்றைய தினம் ஏழை விவசாயிகளுக்கு இந்த மின்சாரம் முழு அளவுக்குப் பயன் படவில்லை, அவர்களால் பயன்படுத்திக்கொள்ளவும் முடியவில்லை. அப்படிப்பட்ட ஒரு நிலைமையையும் அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. அதனால் செல்வம் உள்ள விவசாயிகளுக்குத்தான் அது பயன் கொடுக்கும் முறையில் அமைந்திருக்கிறது. செல்வமுள்ள விவசாயிகள் தங்களிடமுள்ள பணத்தை முன் பணமாகக் கட்டியோ அல்லது கடன் வாங்கிக் கட்டியோ அல்லது அரசாங்கத்தினிடமிருந்து கடன் வாங்கியோ தங்களுடைய நிலமுள்ள பகுதிகளில் மின்சாரத்தைக் கொண்டு வந்து தங்களுக்கு வேண்டிய நீர்ப்பாசன வசதியைச் செய்து கொள்ளுகிறார்கள். அந்த முறையில் அவர்களால் மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடிகிறது. ஆனால் ஏழை விவசாயிகள் அப்படி பயன்படுத்திக்கொள்ள முடியாமல்தான் பகலும் இரவும் பாடுபடுகிறார்கள், நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு இந்த மின்சாரம் இன்றைய தினம் பயன்படவில்லை என்பதை நான் ஒரு குற்றமாகக் கூட அல்ல குறையாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எப்படி எப்படி அது பயன்பட வேண்டுமோ, அப்படிப் பயன்பட வேண்டுமானால் கனம் அமைச்சர் அவர்கள் அதற்கானதொரு தக்க திட்டத்தைத் தீட்டி அதை அந்த போர்டு மூலமாக நிறைவேற்றியாக வேண்டும். விவசாயிகளுக்கு உழவு மாடுகள் வாங்கித் தருவது போலவும், விவசாயம் செய்வதற்குக் கடன் தருவது போலவும், ஏழை விவசாயிகளுக்குப் பம்பு செட்டுகள் வாங்கித்தருவது போலவும், விதை கட்டுக் கடன் வாங்குவது போலவும், அந்த அடிப்படையில் அவர்களுக்கு எளிதில் மின்சாரம் கிடைக்கிற வகையில் கனம் அமைச்சர் அவர்கள் வழி செய்து கொடுத்தால் பெரும் நன்மையாக இருக்கும். (கனம் மின்சார அமைச்சர் அவர்கள் குறுக்கிடல்) அந்த நிலையில் பம்பு செட்டுகள் வைத்துத் தண்ணீர் இரைப்பதாக இருந்தாலும் மின்சாரத்திற்கு அதற்காக முன் பணம் கட்ட வேண்டியதாக இருக்கிறது. அந்த அளவில் குறைந்த பட்ச முன் பணம் அவர்களிடமிருந்து கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. அந்தக் கட்டணம் மினிமம் காரண்டி என்ற அடிப்படையில் கேட்கப்படுகிறது. இன்றைக்கு மின்சாரம் கொடுப்பதில் பற்றாக்குறை இருக்கிறது. உணவு உற்பத்திக்கு இன்றைய தினம் நாட்டில் இருக்கக்கூடிய உபயோககரமான சக்திகளுள் எளிதாகக் கிடைக்கக்கூடியதும், கிடைக்கவேண்டியதும் இந்த மின்சார சக்திதான். இதைப் பயன்படுத்திக்கொண்டால்தான் இன்றைய தினம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு பெரும் உதவியாக இருக்கும். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு இன்றைய தினம் நாட்டில் புதிதாகப் பயன்படக்கூடியது மின்சார சக்தி ஒன்றுதான், மற்ற சக்திகள் கிடைப்பதற்கில்லை வாய்ப்புமில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்

4th November 1958] [Sri K. Anbazhagan]

அதனால்தான் மின்சார சக்தியைக் குறைந்த செலவில் விவசாயிகளுக்கு அளிக்க வழிவகை செய்ய அரசாங்கம் முயற்சிக்கக்கூடாதா? அதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க முயற்சி எடுத்துக்கொள்ளக்கூடாதா? என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே உணவு உற்பத்தியைப் பெருக்க உதவும் வகையில் மின்சாரத்தை விநியோகிக்கக்கூடிய ஒரு திட்டத்தை நல்ல முறையில் அமைக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். முதலில் ஏழை விவசாயிகளுக்குப் பயன் அளிக்கக்கூடிய வகையில், அதனால் அரசாங்கத்திற்கு பொருள் நஷ்டம் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் திட்டம் வகுக்க வேண்டும். மின்சார நிர்வாகத்துக்கு நஷ்டம் ஏற்பட்டால் அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும். நம்முடைய தென்னாட்டைப் பொறுத்த வரையில் இது ஒரு விவசாய நாடாக இருக்கிறது. உற்பத்தியாகும் மின்சாரம் அவ்வளவையும் விவசாயத்திற்கு மட்டும் கொடுக்க வேண்டும் என்று நான்சொல்லவில்லை. நாட்டின் வருமானத்தைக் கணக்கிட்டுப் பார்க்கும் போது பெரும்பாலான மக்களுடைய தொழில் விவசாயத் தொழில் ஒன்று தான். ஆகவே அந்தத் துறைக்கு அதிகமாக மின்சாரத்தை பங்கிட்டுக்கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கும்போது அவர்களுக்குக் குறைந்த செலவில் கொடுக்க வேண்டும். அவர்கள் கட்ட வேண்டிய யூனிட் கட்டணம் மிக குறைவாக இருக்கவேண்டும். இப்பொழுது வாங்கும் கட்டணத்தையும் உற்பத்திக்காகும் செலவையும் பார்த்தால் கட்டணத்தைக் குறைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இதைப்பற்றி நான் சொல்லும்போது குற்றமாகக் கூறவில்லை எனினும் திருத்தம் செய்ய வேண்டும் என்று தான் சொல்லுகிறேன். நஷ்ட ஈடு கேட்கும்போதும் குறைந்த அளவில் கேட்கவேண்டும். எந்த அளவில் குறைந்த பட்ச செலவில் கொடுக்கலாம் என்பதைத் திட்டமிட்டு அந்த அடிப்படையில் கொடுக்க முயற்சிக்க வேண்டும். மேலும் சென்னை மாகாணத்தில் வட நாட்டு மாகாணங்களில் உள்ள ஜீவ நதிகளைப்போன்றவை இல்லை என்று சொல்லப்படுகிறது. இங்குள்ள விவசாயிகள் விவசாயத்தை நம்பி இருப்பதால் அதற்கு வேண்டிய ஜீவ நதிகள் இங்கு இல்லாதது ஒரு குறையே. வட நாட்டில் ஓடக்கூடிய அவ்வளவு ஜீவநதிகள் இங்கு ஓடவில்லை என்ற காரணத்தால் அந்தக் குறையைப்போக்க இங்கே இலவசமாகக் கூட மின் சக்தியை வழங்க முயற்சிக்க வேண்டும். அதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தைச் சரிகட்டுவதற்கு மத்திய அரசாங்கத்தை அணுக வேண்டும். அதற்கு வேண்டிய அவசியமும் நியாயமும் இருக்கிறது. அந்த முறையில் இந்த கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக நான் தெரிவிப்பேன். நாம் உற்பத்தி செய்கிறது மின்சாரத்தைத் தொழில் துறைக்குப் பயன்படுத்துகிறபோது—இண்டஸ்ட்ரிகளுக்குச் சப்ளை செய்யும்போது கட்டணம் குறைவாக இருக்கவேண்டும் என்பது பற்றி காங்கிரஸ் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார். நோக்கம் நல்லதாக இருக்கலாம். ஆனால் நம் நாட்டைப் பொறுத்த வரையில் மின்சாரத்தை எந்தத் துறையில் பயன்படுத்துவது நமக்கு அதிக லாபத்தைத் தரும் என்று கேட்டால், குடிசைத் தொழிலுக்குச் சற்று மேல் நிலையில்—சில சில இயந்திரங்களைத் துணையாகக் கொண்டு தனித் தனியாக நடைபெற்று வருகிற சிறு சிறு தொழில்களுக்கு விநியோகம் செய்வதன் மூலமே நாட்டின் தொழில் வளம் அதிகமாக பெருகும். ஜப்பானைப் போலவோ அல்லது சுவிட்சர்லாந்தைப்போலவோ கைக்கெடியாரம் போன்ற சிறு சிறு பொருள்களைத் தயாரிப்பதற்குச் சில புது இயந்திரங்களைப் பொருத்தி, அவற்றை மின்விசை கொண்டு இயக்குவித்துத் தொழில் நடத்துவதற்கும், மிகக் குறைந்த செலவில் பரவலாக மின்விசையை நாம் விநியோகிக்கும் திட்டத்தை வகுக்கவேண்டும். சர்க்காவை நம்பி சுற்றிக் கொண்டிருக்கலாம். அதில் நல்ல கொள்கை உறுதியும் இருக்கலாம். அதில் நூல் அறுந்து போகாமல் நூற்கவும் வரலாம். ஆனால் அதுவே நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திவிடும் என்று எண்ணிக் கொண்டிருப்பது மிக மிகத் தவறாகும். அது 'சில நேரத்தில் பலரது பசியைப் போக்கக்கூடும். அதைவிட உயர்ந்த அளவில் பயன் அளிக்கக்கூடிய முறையில் மின்சாரத்தைப்பயன்படுத்தி கிராமங்கள்தோறும் சிறு சிறு தொழிலை வளர்ப்பதற்குத் திட்டமிட வேண்டும். அப்படிப்பட்ட தொழில்

[Sri K. Anbazhagan] [4th November 1958

களுக்குக்குறைந்த செலவில் மின்சாரத்தை விநியோகம் செய்வதையே தொழில் வளர்ச்சித் துறையில் அரசாங்கம் தன்னுடைய முதன்மையான கடமையாகக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

மூன்றாவதாக நான் சொல்வேன். இன்றையதினங்கூட முனிசிபாலிடி, மேஜர் டவுன் அல்லது மேஜர் பஞ்சாயத்து என்று உள்ள இடங்களுக்கு எவ்வளவு எளிதாக மின்சார விஸ்தரிப்புக் கிடைக்கிறதோ, அவ்வளவு எளிதாக மைனர் பஞ்சாயத்துக்களுக்குக் கிடைக்கவில்லை. அப்படிக் கிடைத்தாலுங்கூட அங்கேயுள்ள சாதாரண சிறிய மில்களுக்கு, ரைஸ்மில் போன்றவற்றுக்கு மின்விசை கொடுக்கப்படவில்லை. ரைஸ் மில் இருக்க லாமா வேண்டாமா என்பது வேறு பிரச்னை. ரைஸ் மில் இருக்கிற வரை யிலும் அவற்றுக்கு மின்சாரம் கொடுக்கும்படியாக அரசாங்கம் திட்டம் இடவேண்டும். ஏனென்றால் அப்படிக் கொடுத்து ஊக்குவிப்பதன் மூல மாகத்தான் அவர்கள் புதுத் புதுத் தொழில்களில் ஈடுபடுவதற்கு (எண்ணவும் முயற்சிக்கவும்) வழிவகை ஏற்படும். சாதாரண ரைஸ் மில்லுக் காவது, மின்சக்தியைப் பயன்படுத்த ஆரம்பித்தால்தான் அதற்குப் பிறகு மின்சாரத்தை வேறு எந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்ற எண்ணம் ஏற்படும். கிராமத்து மக்கள் அதற்குத் துணையாக வருவார்கள் அவர்கள் மிகவும் உற்சாகத்தோடு மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்கிற நேரத்தில் எதிர்பாராத தடைகளும், சிலநேரத்தில் வெட்டுகளும் இன் றைக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவற்றை எல்லாம் எதிர்காலத் தில் நிச்சயமாகத் தவிர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மின்சார உற்பத்தி அதிகமாக இல்லாத காரணத்தினாலும், இன்றைய தினம் மக்களுடைய தேவையும் அதிக வேகமாக வளர்ந்து வருகிற கார ணத்தினாலும் (ஹைட்ரோ எலக்ட்ரிக் ஸ்கீம்) நீர் மின் விசை உற்பத்தி மட்டும் போதுமானதாக இல்லை. அப்படிப் போதுமானதாக இருக்க முடி யாது என்பதை முன்கூட்டியே உணர்ந்த காரணத்தால்தான் நெய்வேலி பழுப்பு நிலக்கரியைப் பயன் படுத்தி மின்விசை உற்பத்தி செய்யும் திட்டத் தை உடனடியாக அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்று வற்புறுத்தப் பட்டு வந்தது. எப்படியோ இன்று வருத்தத்திற்குரிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. நெய்வேலியில் நிலக்கரி கிடைக்கிறது; அதை எடுத்துப் பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாம் என்கிற கருத்தால் அந்தத் திட்டத்தை கொஞ்சம் சிரமப்பட்டாவது நமது அரசாங்கமே வைத்துக் கொண்டிருந்திருக்குமானால் ஒரு வேளை அந்தத் திட்டம் மிக வேகமாக நிறைவேறியிருக்கும் என்று நான் நம்புகிறேன். காரணம், மின்சார போர் டின் நிர்வாகஸ்தர்களாக இருப்பவர்கள் காட்டுகின்ற உற்சாகம், அவர் களுடைய மிகத் திறமையான, தீவீரமான பணி எந்த அளவு குந்தா திட்டத்தில், பெரியாறு திட்டத்தில் முன்னேற்றத்தைத் தந்திருக்கிறது என் பதை நாம் பார்க்கிறோம். அதிலும் தலைமை மின்சார பொறியியலாளர் மேல் நாடுகளுக்குச் சென்று அங்கு இத் திட்டத்தை வெற்றிகரமாக நிறை வேற்றுவதற்கான கருவி காரணங்களை யெல்லாம் நேரில் பார்வையிட்டு அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி நமக்குத் தேவையான உயர்ந்த இயந்திரங்களை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார் என்பதையும் அவரே நேரில் ஈடுபட்டு வாங்கி வந்த காரணத்தினால் ஒரு கோடி ஒன்றரைக் கோடிக்கு மேல் நமக்கு மிச்சம் கிடைத்திருக்கிறது என்பதனையும் அமைச் சர் அவர்கள் பெருமையோடு கூறும் நேரத்தில் இப்படிப்பட்ட திறமை வாய்ந்த சிக்கனம் செய்வதிலே சிறந்த சாமர்த்தியமுடைய அதிகாரிகள் எல்லாம் நம்மிடம் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால், நெய்வேலித் திட்டத்தை, 60 கோடி ரூபாய் முதலீடு திட்டத்தையும் நமது அரசாங்கமே தன்னுடைய மேற்பார்வையில் எடுத்துக் கொண்டிருக்குமானால் இன்றைய தினம் அது மிக மிக வேகமாக வளர்ந்திருக்கும் என்று கூறுவேன். அது தனிக் கார்ப்பரேஷனிடத்தில் ஒப்படைக்கப்பட்டு மத்திய அரசாங்கத்தின் மேற்பார்வையிலும் போய்விட்ட காரணத்தினால்தான் துணைத் தொழில் நிலையங்களும்கூட இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. உண்மையாகவே நெய்வேலியில் ஏற்படுத்தி இருக்கவேண்டிய இந்தத் துணை நிலையங்கள் இன்றளவும் நிறுவப்படாதது தமிழ் நாடு புறக்கணிக்கப் படுகிறது என்பதற்கு மற்றொரு எடுத்துக் காட்டாகத்தான் அமைகிறது.

இவை நிறைவேற்றப்பட்டு மின் சக்தி உற்பத்தி நிலையம் அமைந்தாலொழிய தமிழ் நாட்டு மக்களுடைய தேவையை மின்சாரத் துறையில் போதுமான அளவு நிறைவேற்ற முடியாது. முன்னர் இதே சட்ட மன்றத்தில், இந்த மின் சக்தி நிலையமும் அடிப்படைத் திட்டத்தில் சேர்ந்து இருப்பதாகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். "அப்படி இல்லை போலிருக்கிறதே, ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படை மூலத்திட்டத்தில் சேர்க்காது விலக்கிவிட்டார்கள் என்பது உண்மையா? என்று நான் கேள்வி கேட்ட நேரத்திலும்" அடிப்படைத் திட்டத்தில்தான் இருக்கிறது. "சந்தேகக் கண் கொண்டவர்களுக்கு எல்லாமே சந்தேகமாகத்தான் தோன்றும்" என்று தான் பதிலளித்தனர். இரண்டு நாட்களுக்கு முன்னால் தான் உள் நாட்டு அமைச்சர் ஓர் அறிவிப்பில் இவை அடிப்படைத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்றும், ஒரு வேளை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கக்கூடும் என்றும் சந்தேகம் தோன்ற தெரிவித்திருக்கிறார்கள். தமிழ் நாடு எந்த அளவு கைவிடப்படுகின்றது என்பதற்கு இது ஒரு சான்றாகும். 60 கோடி ரூபாய் மூலதனத்தில் திட்டப்பட்டிருக்கிற நெய்வேலித் திட்டத்தின்படி அமைக்கவேண்டிய துணை நிலையங்களைக் கூட இன்னும் அமைப்பதற்கு ஆலோசனை செய்யவில்லை என்றால், சுரங்கத்தில் இருந்து வெளியே வரக்கூடிய பழுப்பு நிலக்கரி கூட நம்மைப் பார்த்து பழித்துக் கொண்டுதான் வெளி வரும்! அது பெருமையாகாது. வெளியே எடுத்து வந்த நிலக்கரியைக் கூடப் பயன்படுத்திக் கொள்ள தவறி விட்டோம் என்று நிலைமை ஏற்பட்டுவிடும். அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், அவர் மிகவும் இளமையானவர், உற்சாகத்துடன் காரியத்தைத் தீவிரமாகவும் திறமையாகவும் நிறைவேற்றக்கூடிய ஆற்றல் படைத்தவர் என்று பலராலும் அவர் போற்றப்படுகிற காரணத்தினாலும் நானும் அவரோடு ஒரு சாலையில் படித்தவன் என்ற காரணத்தினாலும் இந்த விஷயத்தை வலியுறுத்தி அவரிடத்தில் கேட்டுக் கொள்கிறேன். நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தை ஒட்டிய மின்சார உற்பத்தி நிலையத்தை உடனடியாக ஏற்படுத்த மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும். இல்லையானால் இன்றைக்கு நம் ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய மின்சார முன்னேற்றங்கூட பின்னால் தடைப்படக்கூடிய பரிதாபகரமான நிலைமை இருக்கிறது என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

அடுத்தபடியாக நான் தெரிவித்துக் கொள்வேன். இன்றைய தினம் தமிழ் நாட்டில் மின்சார உற்பத்தியை மேலும் அதிகப்படுத்தவேண்டும் என்னும் விருப்பம் நமக்கு இருக்குமானால் அணு மின் உலைத் திட்டத்தை உடனடியாக இந்த நாட்டில் ஏற்படுத்தியாகவேண்டும். அணு சக்தி உற்பத்திக்கு வேண்டிய பல பொருள்கள் நம்முடைய நாட்டில் கிடைக்கிறது. அவற்றை வேறு காரியத்திற்குப் பயன்படுத்திக்கொள்வது என்பதும் சாத்தியமில்லை. ஆகவே இந்தத் துறையில் தமிழ் நாடு முன்னேற்றம் அடைவதற்குச் சாதகமாக, இந்த நாட்டில் அணு மின் உலைத் திட்டத்தை ஏற்படுத்துவதற்குச் சர்க்கார் எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர்—எப்போதும் "வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது" என்று நாங்கள் சொல்கிறோம் என்பதை சுட்டிக்காட்டி இந்த மின்விசையில் வடக்கு மங்குகிறது, தெற்கு பொங்குகிறது என்பதாகப் பேசினர். குறிப்பாக ஓர் அம்மையார் அவ்வாறு எடுத்துச் சொன்னார்கள், பின் தங்கித் தளர்ந்திருக்கிற நிலையில் வடக்கையும், தெற்கையும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள் என்றாலும், வளர்ந்திருக்கிற நிலை என்று கருதினால் காங்கிரசாரும் வடக்கு தெற்கு என்று பார்ப்பதற்குத் தயங்கவில்லை. இந்த மன்றத்திலும் இந்த மின்விசை சம்பந்தப்பட்ட மட்டில் காங்கிரஸ் உறுப்பினர்கள் இடத்திலேயே வடக்கு தெற்கு வேற்றுமை உணர்ச்சி புகுந்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த மின்சார வினியோகத்தை அரசியல் பிரச்னையாகக் கருதாமல் நாட்டு மக்களின் அத்தியாவசியமான பிரச்னையாகக் கருதி பாரபட்சமற்ற நிலையில் வினியோகம் செய்வதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அணு மின் உலைத் திட்டத்தையும் பயன்படுத்திக்கொள்ள இந்த அரசாங்கம் அவசியம் முன்

[Sri K. Anbazhagan] [4th November 1958

வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறையில் ஒரு தனி போர்டை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதில் அமைச்சருக்குப் பொறுப்பு இருக்கிறது. அதே சமயத்தில் இந்த போர்டினுடைய குறைபாடுகளைப் பற்றி எடுத்துக் கூறி விவாதிக்கலாமே தவிர ஓட்டுப் போடுவதற்குத் தீர்மானம் கொண்டு வருவதற்கு சட்டமன்றத்திற்கு உரிமை இடையாது. வாதிட்டு வாக்குக் கூறலாம். ஆனால் வாக்கின் மதிப்பைக் கணக்கிட்டறிய முடியாது. ஆகவே இன்றைக்கு உள்ள நிலை போர்டாரிடத்தில் சென்று ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்டால் " எங்களுக்கு என்ன தெரியும் ? அமைச்சர் சொல்கிற படி நடக்கிறோம். அமைச்சரைப் போய்ப் பாருங்கள் " என்று அவர்கள் சொல்வதும், அமைச்சரிடத்திலே வந்து கேட்டால் " அது போர்டாரின் நிர்வாகத்தில் அல்லவா இயங்கிக் கொண்டிருக்கிறது. அவர்கள் தான் செய்யவேண்டும். அவர்களிடம் போய்க் கேளுங்கள் " என்று சொல்வது மாக, அங்கும் இங்கும் அலைய வேண்டியதாக ஆகி, இருக்கிறது. வீட்டுக்கு மருமகள் வந்துவிட்டால் மாமியார் யாராவது பிச்சைக்காரன் வந்தால்கூட " நான் எப்படிப் போடுவது ? புதிதாக வீட்டுக்கு வந்திருக்கிற மருமகள் தான் போட வேண்டும், அவளைக் கேளு " என்று மருமகளைக் காட்டுவதும், மருமகளோ ? " நான் சுதந்திரமாகச் செய்ய முடியுமா ? வீட்டுக்குப் பெரியவர் மாமியார் இருக்கிறாரே, அவர் சொன்னால் நான் போடுகிறேன் " என மாமியாரைக் காட்டுவதும் சில இடத்தில் வழக்கம். அப்படி அமைச்சர் மாமியாராகவும், மின்சார போர்டு மருமகளாகவும் ஆகிவிடாமல் இரண்டு பேரும் இணைந்து மக்களுக்கு வேண்டிய வசதிகளை யெல்லாம் செய்து கொடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போர்டும், அமைச்சரும் சேர்ந்து பணியாற்றக்கூடிய சூழ் நிலை இருந்தால் தான் நல்லபடியாக வேலை செய்ய முடியும். அதேபோல தொழிலாளர்களுக்கும் அந்த ஸ்தாபனத்திற்கும் நல்லதொரு உறவு நிலை இருக்கவேண்டும். அதற்கு அடிப்படையாக அவர்களுடைய குறைகள் எல்லாம் சரியான முறையில் தீர்க்கப்பட வேண்டும். அவர்களுடைய குறைகள் இன்று நேற்று உண்டானதல்ல. நீண்டநெடு நாளாக அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அவர்களுடையகுறைகள் நீக்கப்படுவதன் மூலமாகத்தான் மின்சாரத் துறையில் நாம் இன்னும் வேகமாக முன்னேறுவதற்கு வழி ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

11-10 a.m

(Mr. Speaker in the Chair.)

கடைசியாக ஒரு வேண்டுகோள். இந்தத் துறையில் இன்றையதினம் 80 கோடி ரூபாய், 90 கோடி ரூபாய் மூலதனம் சேர்ந்திருக்கிறது. ஒரு நாளில் போட்டதல்ல இத்தனையும். கொஞ்ச கொஞ்சமாகப் போட்டு அதற்கு 5 சத விகிதம் வட்டியும் வாங்கி வருகிறார்கள். தனிப்பட்ட மார்வாடி 5 சத விகிதம் வட்டி வாங்கினால் ஐயோ கொடுமை என்று சொல்லத் தோன்றும். இது சர்க்கார் வாங்குகிற வட்டியாதலால் அதைக் கண்டிக்க முடியாது. இந்த வட்டியை குறைக்க வேண்டும் அப்படி குறைப்பதன் மூலமாகத்தான் இந்தத் துறையில் அதிக முன்னேற்றமும், மக்களுக்கு அதிக நன்மையும் நாம் புரிந்தவர்களாக ஆவோம்.

இன்னொன்று. இந்த போர்டில் சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெறுவது மிகவும் அவசியமானதாகும். அப்போது தான் அதை நல்ல முறையில் நடத்துவதற்கு வழி ஏற்படும். அதற்கும் வழி செய்யவேண்டும். இந்த போர்டுக்கு ஆலோசனை கூறுவதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் மூன்று சட்டசபை அங்கத்தினர்கள்தாம் இருக்கிறார்கள். குறைந்த பட்சம் ஜில்லாவிற்கு ஒருவர் என்ற அடிப்படையிலாவது 12 பேர்கள் இடம் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

Sri P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, 1958-59-ம் ஆண்டு மின்சார போர்டு நிர்வாக அறிக்கையை முதன் முதலாக இந்தச் சட்டசபை முன்பாக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து விவாதத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அதற்காக கனம் ஸ்ரீ ராமையா அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். சென்ற காலத்தில் நாம் மூன்று துறைகளில் அடைந்திருக்கிற முன்னேற்றங்களைக் குறித்து அங்கத்தி

4th November 1958] [Sri P. S. Chinnadurai]

தினர்கள் இங்கே பலவாருகப் பேசினுர்கள். நாம் அடைந்திருக்கிற முன்னேற்றம் நாம் அடையவேண்டிய முன்னேற்றத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் குறைந்ததுதான் என்றும் குறிப்பிட்டார்கள். அப்படிக் கூறுகிறபோது குறைகளேயே எடுத்துக் கூறுகிருர்களே என்று காங்கிரஸ் தரப்பில் இருக்கிற சில அங்கத்தினர்கள் மிகவும் குறைப்பட்டுக் கொண்டார்கள். குறைகள் ஒன்றையே கூறுவது தான் வழக்கம் என்ருகி விட்டால் சலிப்படைய வேண்டியதுதான். சென்ற காலத்தில் மின்சாரத் துறையில் நாம் நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம். அதை யார் இல்லேயென்று சொல்கிருர்கள் ? இந்தியாவிலேயே இன்றையதினம் நாம் மின்சாரத் துறையில்—உற்பத்தித் துறையில்—மூன்ருவது ஸ்தானம் வகிக் கிறோம் என்று பெருமை கொள்ளலாம். பதின்மூன்று ராஜ்யங்களில் நமது ராஜ்யம் இந்தத் துறையில் மூன்ருவதாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக சென்ற ஐந்தாண்டு காலங்களில் நாம் அடைந்திருக்கிற முன் னேற்றம் சாமான்யமானது அல்ல. அதை யாரும் குறைத்து மதிப்பிட வில்லே. அதைப் போற்றுகிறோம். கிராமங்களுக்கு மின்சாரத் தொடர்பு கொடுப்பதிலாகட்டும், பம்பு செட்டுகளுக்குத் தொடர்பு கொடுப்பதிலா கட்டும் நாம் அபரிமிதமான முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம் என்று சொல்லிக் கொள்வதில் சென்னே ராஜ்யத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் ஒவ்வொரு பிரஜையும் பெருமை கொள்ளலாம். சந்தேகம் இல்லே. ஆனல் நாம் இன்றையதினம் அடையவேண்டிய முன்னேற்றத் தை வைத்துப் பார்க்கிறபோது, இந்த ராஜ்யத்தில் தேவையை வைத்துப் பார்க்கிறபோது ஏற்கெனவே நாம் அடைந்திருக்கிற முன்னேற்றம் சாதாரணமானது என்கிற முறையில் கவனித்துப் பார்க்க வேண்டியவர்க ளாக இருக்கிறோம்.

இன்றைக்கு நாம் அடைந்திருக்கிற முன்னேற்றம் 1909-ம் ஆண்டி லிருந்து வந்ததாகும். அந்த நாளில் இருந்து இந்த நாள் வரைக்கும் எத்தனேயோ அமைச்சர்கள் வந்து போய்க் கொண்டிருக்கிருர்கள். மின் சார இலாகாவில் அன்றையதினம் இருந்து இன்றைய தினம் வரையில் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேலே செய்து கொண்டிருக்கிருர்கள். மிகவும் போற்றத் தக்க கடுமையான—கொடுமையான—காரியங்களே எல் லாம் அவர்கள் தேச உணர்ச்சியோடு செய்து வருகிருர்கள். அவர்களுடைய நிலேமை எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அவர்களுடைய நிலேமையைச் சீர்திருத்தி அவர்களுக்கு உற்சாகம் அளிக்க வேண்டாமா ? இன்றையதினம் இருபதாயிரம் கிராமங்களுக்கு மேல் என்றைக்கு மின் சாரம் தங்கள் பகுதிக்கு வரும் என்று ஏங்கிக் கொண்டிருக்கிற நிலேமை இருக்கிறது. தங்களுக்கு மின்சாரம் தேவை என்பதை கிராம மக்கள் உணருகிருர்கள். ஆயில் என்ஜின் போய் பம்பு செட்டுகளே எப்போது வைப்போம் என்று ஏங்குகிருர்கள். நாம் அணு யுகத்தில் இருக்கிறோம். அணு மின் உலேத் திட்டங்கள் எல்லாம் பக்கத்து ராஜ்யங்களில் உண்டாக்கப் பட்டு வருகிறது. அப்படிப்பட்ட முன்னேற்றம் ஏதுவும் நம் ராஜ்யத்தில் வரவில்லேயே என்று அவர்கள் ஆதங்கப்படுவதில் தவறு இருக்க முடியுமா? அணு யுகத்திற்கு ஏற்ற கால கட்டத்திற்கு ஏற்ற மாறுதல்கள்இந்த நாட்டில் செய்வதற்கு முன்பாக வேகமாக இந்த மின் விசையை எல்லா கிராமங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அவற்றுக்குரிய முன்னேற்றமான திட்டங்களேப் போடுவதற்கு ஏற்ற சூழ்நிலே நம் நாட்டில் உண்டா என்று பார்த்தால் நிச்சயம் உண்டு என்று அமைச்சர் அவர்கள் நம்பிக்கை தெரிவிக்கும் முறையில் குறிப்பிட்டார்கள். சுமார் 10 லட்சம் கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்குரிய ஹைட் ரோ எலெக்ட்ரிக் பவர் இந்த நாட்டில் உற்பத்தி செய்யமுடியும் என்று அவர்கள் குறிப்பிட்டதை நான் வரவேற்கிறேன். அதற்குரிய காரியங்கள் எல்லாம் விரைவில் செய்யப்பட்டாக வேண்டும். இந்தக் காரியங்களில் அமைச்சர் அவர்களுக்கு எல்லோரும் உறுதுணேயாக இருப்பார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மின்சார போர்டு சமீபத்தில்தான் அதிகாரிகளேக் கொண்டு அமைக்கப்பட்டது. அதில் உத்யோகச் சார்பற்றவர்கள் சேர்க்கப் படவில்லே. இவ்வாண்டும் உத்யோகச் சார்பற்றவர்களேச் சேர்க்கும் உத் தேசம் சர்க்காருக்கு இல்லேயென்று அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக

[Sri P. S. Chinnadurai] [4th November 1958

தம் அறிக்கையில் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிருர்கள். நான் நம்பு கிறேன். அடுத்த ஆண்டிலாவது இந்த போர்டில் உத்யோகச் சார்பற்றவர் கள் சிலர் இடம் பெறும்படியாக இந்தச் சர்க்கார் செய்வார்கள் என்று. அப்படிச் செய்ய வேண்டும் என்பதாகவும் கேட்டுக் கொள்கிறேன். உத்தி யோகச் சார்பற்றவர்கள் இந்த போர்டில் அங்கம் வகிக்கும்படியாகச் செய் வதன் மூலம்தான் இந்த போர்டினுடைய வேலே இன்னும் திறம்பட, துரிதமாக நிறைவேற்றப்படுவதற்கு உதவுபடியாக இருக்கும் என்றுசொல்ல விரும்புகிறேன்.

இந்த மின்சார போர்டுக்கு ஆலோசனே கூற இன்னெரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தக் குழுவில் சட்டசபை அங்கத்தினர்கள் சிலர் இடம் பெற்றிருக்கிருர்கள். ஆனல் சட்டசபை எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் யாராவது இருக்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன். எனக்குத் தெரிந்த வரையில் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் யாருமே இல்லே. ஏன் இல்லே ? இந்தப் பொறுப்பில் அவர்களேயும் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று அரசாங்கம் கூறுகிறதா ? மின்சார அமைப்பு சம்பந்தப் பட்டவரை ஆளும் கட்சியினருக்கு இருக்கக்கூடிய அக்கறையில் எதிர்க்கட்சி யைச் சேர்ந்த யாருக்கும் குறைச்சலான அக்கறை இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஆகவே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களேயும் இந்த ஆலோசனேக் குழுவிலும் சரி, மின்சார போர்டிலும் சரி நியமிப்பதற்கு சர்க்கார் முன்வரவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில் உணவு உற்பத்தி சம்பந்தப்பட்ட வரையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறது. உணவுப் பிரச்சனேயைக் கட்சிப் பிரச்னேயாகக் கருதக் கூடாது. அரசியலுக்கு அப் பாற்பட்டதாக—எல்லாக் கட்சிகளும் சேர்ந்து இந்தப் பிரச்சனேயை அணுக வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். மின்சாரமும்—உணவுப் பிரச் சனேயோடு சம்பந்தப்பட்ட ஒரு முக்கியமான பிரச்சனேதான். உணவுத் துறையில் இனிமேல் ஏற்பட இருக்கிற அபிவிருத்தி எல்லாம் இந்த மின் சாரத் திட்டங்களேயே பொறுத்திருக்கிறது. ஆகவே இந்தப் பிரச்சனேயிலும் —இதை ஒரு கட்சிப் பிரச்சனேயாக ஆக்கிவிடாமல் எல்லாக் கட்சிகளுக்கும் இதில் பொறுப்பு இருப்பதாக—கட்சிக்கு—அரசியலுக்கு அப்பாற்பட்ட பிரச் சனேயாக இதை எல்லோரும் சேர்ந்து அணுகுவதற்கு ஏற்ற முறையில் இதை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகள் உபயோகிக்கின்ற மின்சாரம் சம்பந்தமாக பல முறை இங்கு எடுத்துக் கூறிவிட்டேன். எத்தனேயோ உதாரணங்கள் எல்லாம் எடுத்துக் கூறி அமைச்சர் அவர்களே கவர்ச்சி செய்ய முயற்சி
1-20 a.m. எடுத்திருக்கிறேன். ஆனல் அவைகளில் ஒரு சில தான் பயன் பெற்றிருக் கின்றன. இன்னும் நான் சொன்னவை எல்லாம் வெற்றிபெறும் என்ப தில் இப்போதும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இன்னும் குறிப்பிடுவன வற்றை யெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உறுதியாக இருக்கிறது. விவசாயி கள் சம்பந்தப்பட்ட வரையில் என்ன சொல்லியிருக்கிறேன் என்ருல், அவற்றையெல்லாம் இங்கு மீண்டும் எடுத்துச் சொல்லுவது என்பது முடி யாத காரியம். அதற்குத் தகுந்த நேரம் இப்போது இல்லே. மந்திரி அவர் கள் இவைகள் எல்லாம் என்னவென்று அறிய விரும்புவார்களாளுல் நமது சட்டசபை நடவடிக்கைகளிலிருந்தே நான் மின்சாரம் சம்பந்தமாக பேசியவற்றையெல்லாம் எடுத்துச் சேர்த்துக் கொடுக்கவும் தயாராக இருக் றேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக ஒன்றிரண்டு விஷயங்களே சொல்ல விரும்புகிறேன். இரவு காலத்தில் மின்சாரம் கொடுப் பதா அல்லது பகல் நேரத்தில் கொடுப்பதா என்கிற பிரச்னே இப்போது தீவிரமடைந்திருக்கிறது. குறிப்பாக கோயமுத்தூர் ஜில்லாவில் அனேகமாக எல்லாம் புஞ்சை பூமிகள்தான். புஞ்சை பூமிகளுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்குத்தான் மின்சாரம் அதிகமாகப் பயன்படுகிறது. அதில் கோயமுத்தூரில் செய்யப்படுகிற விவசாயத்திற்கு சிறிய சிறிய பாத்தி யாக தண்ணீர் பாய்ச்ச வேண்டியிருக்கிறது. கூடுதலாகவும் பருத்தி, சோளம் போன்றவைகள் சாகுபடியாகின்றன. அதிலும் வெங்காயம்,

4th November 1958] [Sri P. S. Chinnadurai]

வெள்ளைப்பூண்டு போன்றவைகளுக்கு பாத்தி பாத்தியாக மடை போட்டு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இது நிச்சயமாக இரவு காலத்தில் சாத்திய மாகாது. இரவு காலத்தில் தான் மின்சாரம் கொடுக்க முடியும் என்று சொன்னால் நிச்சயமாக பல தொல்லைகளுக்கு இடம் அளிக்கும் என்பதை என்னால் சொல்லமுடியும். இரவில் பாம்பு கடித்துவிடும் என்றோ அல்லது வேறு ஏதாவது இம்மாதிரிப்பட்ட தொல்லைகள் இருக்கும் என்றோ நான் சொல்ல முன்வரவில்லை. இரவு காலத்தில் நிச்சயமாக பாத்தி பாத்தியாக பார்த்து மடையை மாற்றி விடுவது என்பதும் முடியாத காரிய மாகும். ஆகவே இது மிகவும் கஷ்டமான காரியமாகும். நெல், அல்லது கரும்பு போன்ற பயிர்களுக்கு என்றால் ஒரேயடியாது தண்ணீர் பாய்ச்சி விடலாம். இந்த பயிர்களுக்கு அவ்விதம் முடியாது. இந்த நிலைமைகளை எல்லாம் அமைச்சர் அவர்கள் அங்கு வந்திருந்தபோது கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள பல்லடம் தாலுகா விவசாயிகள் எல்லாம் அமைச்சர் அவர்களிடத்தில் சகஜமாக உட்கார்ந்திருந்து தெரிவித்தார்கள். இப்போது அறிக்கையில் கூறியிருக்கிறார்கள், கூடிய சீக்கிரத்தில் சில ஜில்லாக்களுக்கு பகல் நேரத்தில் மின்சாரம் கொடுப்பது சாத்தியமாகலாம் என்றும், அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அவ்விதம் சில ஜில்லாக்கள் என்று குறிப்பிட்டிருப்பதில் கோயமுத்தூர் ஜில்லா இடம் பெறும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இன்னொரு இடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது, அதாவது சில இடங்களிலிருந்து இரவு காலத்தில் மின்சார பெற்றுக் கொள்ளுகின்றோம் என்று அங்குள்ள விவசாயிகளே முன் வந்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மாதிரியான விவசாயிகள் யார் என்று தெரியவில்லை. நிச்சயமாக கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள விவசாயிகளாக இருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். மற்ற ஜில்லாக்களிலுள்ள விவசாயிகளாக இருந்தாலும் கூட, அவ்விதம் கூறுகின்றவர்கள் புஞ்சை நிலம் வைத்திருக்க மாட்டார்கள். அவ்விதம் ஒருக்கால் அவர்கள் புஞ்சை நிலம் வைத்திருந்தாலும்கூட அவர்கள் நிர்ப்பந்தத்தின் மூலமாகத்தான் அவ்விதம் ஒப்புக்கொண்டிருக்க முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். மாமியார், மருமகள் கதையைப்பற்றி இங்கு அதிகமாக பேசப்பட்டது. நானும் என் ஒரு கதையை சொல்லக்கூடாது என்று எண்ணுகிறேன். மாமியார் மருமகளை மிரட்டுவதைப்பற்றி பேசப்பட்டது. நான் மருமகள் மாமியாரை மிரட்டுவதைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். மாமியாருக்கு வெள்ளை அப்பம் கொடுத்த கதையைப்பற்றி பலர் கேட்டிருக்கலாம். வெள்ளை அப்பம் கேட்ட மாமியாருக்கு மருமகள் சூடான வெள்ளையப்பத்தை கொடுத்தபோது கையே வெள்ளையப்பம் போலாகிவிட்டது. பின்னால் கணவன் வந்து, கேட்கும் போது வெள்ளையப்பம் வேண்டாம், வேண்டாம் நான் ஏற்கெனவே வாங்கின வெள்ளையப்பம் போதும் என்று மாமியார் சொன்னதாக ஒரு கதை உண்டு. அதே மாதிரி, சர்க்கார் என்ற மருமகள் விவசாயிகளைப் பார்த்து இரவில் மின்சாரம் வேண்டுமா அல்லது பகலில் மின்சாரம் வேண்டுமா என்று கேட்டு தொல்லை கொடுக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் மின்சார கட்டணம் சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்திற்கு உபயோகிக்கப்படும் மின்சாரத்திற்கு கட்டணத்தை குறைக்க முடியுமா என்று மத்திய சர்க்காரை இந்த சர்க்கார் கலந்திருக்கிறது என்று நம்புகிறேன். மத்திய சர்க்காரும் இதைப்பற்றியுள்ள விவரங்களை கேட்டு எழுதியிருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். இப்போது இருக்கின்ற கட்டணம் மிகவும் குறைவு. இந்த நிலையில் வேறு எங்குமே இல்லை என்று இங்கு கூறப்பட்டது. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் சமீபத்திலுள்ள மைசூர் ராஜ்யத்தில் இதைவிட கட்டணம் குறைவு என்றே நம்புகிறேன். (கனம் ஸ்ரீ வி. ராமய்யா : எவ்வளவு என்று கூற முடியுமா?) இந்த புள்ளி விவரங்கள் எல்லாம் என்னிடம் இல்லை. அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றால் இலாகா மூலம் எழுதிக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். சில இடங்களில் எல்லாம் ஹை-டென்ஷன் மின்சாரம் கொடுத்து குறைந்த கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அதே போன்று விவசாயத்திற்கு கொடுத்து குறைவான விகிதத்தில் கட்டணம் வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு அரசாங்கம் ஏதாவது ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த

[Sri P. S. Chinnadurai] [4th November 1958

அறிக்கையில் ஒரு இடத்தில் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், ஆயில் இன்ஜின் வைத்தும் இன்னும் பல விதங்களில் சாகுபடி செய்வதை விட மின்சாரத்தை உபயோகித்து சாகுபடி செய்வதாக இருந்தால் அதிக மான சிக்கனத்தை விவசாயிகள் ஏற்படுத்திக் கொள்ளமுடியும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. உதாரணமாக தஞ்சை ஜில்லாவிலோ அல்லது திருச்சி ஜில்லாவிலோ இருக்கின்ற நிலத்தீர்வையையும் வாய்க்கால் பாசனம் மூலமாக தண்ணீர் பாய்ச்சுவதற்கு ஆகின்ற செலவையும், கணக்கிட்டு மின்சார கட்டணத்திற்கு ஆகின்ற செலவையும் கணக்கிட்டு பார்த் தால் இதிலுள்ள வித்தியாசம் தெரியும். இதை அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்ததா என்று தெரியவில்லை. ஆனால் கோயம்புத்தூர் ஜில்லா வில் விளைகின்ற நெல்லாக இருந்தாலும் சரி, தஞ்சாவூர் ஜில்லாவில் விளை கின்ற நெல்லாக இருந்தாலும் சரி ஒரே விலையில் தான் நெல்லை விற்க வேண்டியிருக்கிறது. ஆகவே குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை விவ சாயிகளுக்கு கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு வாய்க்கால் பாசனத்தின் மூலம் விவசாயம் செய்கின்றவர்கள் நல்லபடியாகத்தான் விவசாயம் செய்து வருகின்றார்கள் என்று நம்மால் அறிந்து கொள்ள முடியும். சாதாரணமாக இப்போது இருபோக புஞ்சைக்கு நீர் தீர்வை ஒரு ஏக்கருக்கு என்ன இருக் கின்றது, அதே சமயத்தில் மின்சாரத்தின் மூலம் தண்ணீர் பாய்ச்சுவதில் ஒரு ஏக்கருக்கு என்ன செலவு ஏற்படுகின்றது என்பதை கணக்கிட்டுப் பார்த்தால் மின்சாரக் கட்டணம் மிக குறைவு என்று சொல்லுவதற்கு இடமில்லை. ஆகவே மின்சார கட்டணத்தை குறைத்து கொடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக தொழி லாளர்கள் சம்பந்தமாக இங்கே பேசும்போது பல அங்கத்தினர்கள் குறை கூறி பேசினார்கள். மின்சார திட்டங்கள் எல்லாம் வெகுவாக முன்னேற் றம் அடைந்திருக்கின்றன என்று பாராட்டி விட்டு அந்த இலாகாவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களை குறைவாக பேசுவது அவர்களுக்கு நாம் நன்றி கூறுவதாக இராது. காங்கிரஸ் அங்கத்தினர்கள் பலர் தொழி லாளர்களை மிகவும் இழிவாக கூறினார்கள். மின்சார அபிவிருத்தி ஏற்பட்ட தற்காக பாராட்டுகின்றோம் என்று சொல்லிவிட்டு அந்த இலாகாவிலுள்ள தொழிலாளர்களை மட்டும் பழித்து பேசுவது என்றால் அது எந்த மட்டில் பொருத்தமாகும் என்று எனக்குத் தெரியவில்லை. அவர்களுக்கு அர சாங்கம் கொடுத்த இடைக்கால நிவாரணத்தை அவர்கள் ஏற்றுக்கொண் டார்கள். அதற்காக பொது மக்கள் சார்பில் அரசாங்கத்திற்கு நன்றி செலுத்த வேண்டும். அதோடு பல சிபாரிசுகள் தொழிலாளர்களுக்கு செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் அமுல் நடத்துவதற்கு உட னடியாக அரசாங்கம் முன்வரவேண்டும் என்பது என்னுடைய வேண்டு கோள். இந்த வகையில் மின்சார அபிவிருத்திக்காக காரியங்களை செய்வ தற்கு உறுதுணையாக என்னைப் பொறுத்தவரையில் நானும் எனது கட்சி யும் என்றும் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்வதோடு, இதற்காக எங்களுடைய ஒத்துழைப்பை அரசாங்கம் நிச்சயமாக எதிர்பார்க்க லாம் என்பதை தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித் துக் கொள்கிறேன்.

11-30 a.m. *SRI S. PAKKIRISAMI PILLAI: கனம் தலைவர் அவர்களே கனம் அமைச்சர் அவர்கள், எலெக்ட்ரிசிடி போர்டின் வரவு செலவுக் கணக்கின் மீது நிகழ்த்திய பிரசங்கம் வெகு அழகான முறையிலே எப்படி இந்த டிபார்ட்மெண்ட் தன்னுடைய வேலைத் திறனைப் பெருக்கி நம் ராஜ் யத்திலே வெவ்வேறு இடங்களில்—மூலை முடுக்குகளில், பட்டி தொட்டிகளில்—விஸ்தரித்திருக்கிறார்கள் என்பதை விளக்கிக் காட்டியிருப்பதைப் படிக்க, அதைக் கேட்க, நாம் அத்தனை பேர்களும் மகிழ்ச்சியடைகிறோம். அதைக் குறித்து நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. எலெக்ட்ரிஸிடி அதிகாரி கள் மிகவும் திறமையாக வேலை செய்கிறார்கள். அதிலும் முக்கியமாக சீப் என்ஜினியருக்கு மிகுந்த ஆர்வம் இருக்கிறது. நம் ராஜ்யத்திலே எல்லா இடங்களிலேயும் மக்கள் பயனடையும்படியான முறையில், மின் சார வசதியைப் பெருக்கி வழங்குவதற்காக எவ்வளவு சீக்கிரமாக விஸ் தரிக்க முடியுமோ அந்த வழியிலே செய்யவேண்டுமென்று அவா அவ ருக்கு நிறைய இருக்கிறது. அவரைச் சேர்ந்த சிப்பந்திகளுக்கும் அதே மாதிரியான ஒரு ஆசை இருப்பதை நான் நிறைய பார்த்திருக்கிறேன்.

4th November 1958] [Sri S. Pakkirisami Pillai]

ஆனால், நமது நாட்டின், நம் பகுதியின் வளத்தைப் பெருக்குவதற்கு இந்த ஹைட்ரோ-எலெக்ட்ரிஸிடியைக் கொண்டுவருவதற்கு வெவ்வேறு திட்டங்களைத் தயாரித்திருக்கிறார்கள், வெகு சீக்கிரமான காலத்தில். ஹைட்ரோ-எலெக்ட்ரிஸிடி மூலமாகத்தான் நமக்கு மிகவும் மலிவான கட்டணத்திலே எலெக்ட்ரிஸிடி கிடைக்கும் என்று எல்லோருக்கும் தெரியும். அதன் வழியாக பல திட்டங்களை அமைத்து நாம் எலெக்ட்ரிஸிடியை அடையும்படியான நிலையில் இருக்கிறோம். ஆனால், சென்னையிலேயும், சாதாரணமாக நகரங்களிலேயும், நகர சுற்றுப்புறங்களிலேயும் இருப்பவர்களுக்கு, அதிகமான கட்டணத்தைக் கொடுத்து இந்த சக்தியைப் பெறும்படியான நிலை இருக்கிறது. வீடுகளில் இந்த மின்சாரத்தை நாம் விளக்கு வெளிச்சத்திற்கோ அல்லது மற்ற உபயோகத்திற்கோ எடுத்துக்கொள்ளவேண்டுமென்றால், அதிகமான பணத்தைக் கொடுத்துத்தான் எடுத்துக்கொள்ளும்படியான நிலையில் இருக்கிறார்கள். இவ்வளவு அதிகத் தொகை கொடுத்து எடுத்துக் கொள்ளும்படியான நிலையில் இருப்பதால், இங்கே நகரங்களிலும், நகரச் சுற்றுப்புறங்களிலும் மத்தியதர வகுப்பினர்களும், கீழ் மத்தியதர வகுப்பினர்களும் இதை நாடுவதற்கு வழியில்லை. அவர்களால் இவ்வளவு பணம் கொடுத்து, இந்தக் கட்டண வீதம் கொடுத்து வாங்க முடியாது. சாதாரணமாக நம் லட்சியம் தொழிலாளர்களும் தம் வீடுகளில் சமையல் செய்வதற்கு மின்சாரத்தை உபயோகப்படுத்தக்கூடிய ஒரு நிலையை உண்டாக்க, அந்த லட்சியத்தை வைத்துக்கொண்டு அதற்காக வேலை செய்ய வேண்டிய திட்டத்தைச் செய்யவேண்டியது அவசியம். அந்த மாதிரியான நிலையில்தான் மேல் நாடுகளிலெல்லாம் இருந்துகொண்டு வருகிறது. அந்த நாள் வருவதற்கு இன்னும் எத்தனை காலம் ஆகுமோ தெரியாது. இப்போது கிராமங்களில் விவசாய மக்கள் எந்தெந்த வகையிலே வசதி பெற்றிருக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் தங்களுடைய பிரசங்கத்திலே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதிலேயும் இருக்கிற பல கஷ்டங்களைப்பற்றி அநேக நண்பர்கள் இங்கே எடுத்துச் சொன்னதிலிருந்து, சாதாரணமாக, விஸ்தரிக்கும் போது கஷ்டம் இருந்துகொண்டுதான் இருக்கும், பூர்த்தியாகும்படியான நிலை ஆன பிறகு வெவ்வேறு வழியிலே இந்தக் கஷ்டங்களையெல்லாம் போக்கி எல்லோருக்கும் நல்ல வழியிலே பயன்படும் நிலையை ஏற்படுத்த பின்னால் யோசிக்கலாம் என்று சொன்னாலும் கூட, இந்த மாதிரியான விஸ்தரிப்பில் எப்படியாகியிருக்கிறது என்பதை நாம் பரிசீலனை செய்தாக வேண்டும். முதலில் கட்டுப்பாட்டை உண்டாக்கினார்கள். அப்புறம் ஸ்டாக்கரிங் உண்டாக்கியிருக்கிறார்கள். இதனால் பெரிய தொழிற்சாலைகளில் இருக்கும்படியான தொழிலாளர்கள் சாதாரணமான வேலை நேரங்களில் வேலை செய்ய முடியவில்லை. அவர்கள் இரவு நேரங்களில் வேலை செய்யும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் பல கஷ்டங்களும் மேற்கொள்ள இருக்கின்றன. இந்த ஸ்டாக்கரிங் வைத்திருக்கிற காரணத்தினால் தொழிலாளர்கள், $1\frac{1}{4}$ மணி நேரத்தையோ அல்லது $1\frac{1}{2}$ மணி நேரத்தையோ சரிப்படுத்த, இரவு பகல் எல்லாம் ஓடும்படியான தொழிற்சாலைகளில், 3 ஷிப்ட் வேலை செய்யும் தொழிற்சாலைகளில், மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைக் குறித்து பி. அண்டு ஸி. தொழிற்சாலைக்கு கட்டுப்பாட்டைப்பற்றி இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டுப்பாட்டை எப்படி ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முதன் முதலாக என்ஜினீயர்கள், இப்போது இருப்பவர்களுக்கு முன்னால் இருந்த என்ஜினீயர்கள், பேஸின் பிரிட்ஜ் தொழிற்சாலையில் பாய்லர்கள் உடைந்து போயிருக்கின்றன, ஆகையால் நீங்கள் ஸ்டாக்கரிங்குக்கு ஒத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். பாய்லர் ரிப்பேர் ஆன பிறகு இன்னொரு பாய்லர் உடைந்து விட்டது, ஆகையால் இந்த ஸ்டாக்கரிங்கைத் தவணை நீடித்து இருக்கும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு மற்றும் சில பாய்லர்கள் உடைந்து விட்டன என்று சொன்னார்கள். ஆனால், இப்போது எல்லா பாய்லர்களுமே ரிப்பேர் ஆகிவிட்டது. கிராம மக்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்கும் நிலை இருப்பதால் ஸ்டாக்கரிங் பீரியட்டை எடுத்துவிட முடியாது என்று சொல்லுகிறார்கள். அதே சமயத்தில் சாதாரண விடுமுறை நாளான வார விடுமுறைநாளான ஞாயிற்றுக்கிழமை இருப்பதைமாற்றி சனிக்கிழமையை விடுமுறையாக, நகர மக்களுக்கு விடுமுறை இல்லாத நாளை, பெரிய தொழிற்சாலையில் வேலை செய்பவர்களுக்கு

[Sri S. Pakkirisami Pillai] [4th November 1958

ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது மாதிரியான ஒரு நெருக்கடியை ஏற்படுத்தியதின் விளைவாக, ஸ்டாக்கரிங் பீரியட்டில் 1½ மணி நேரத்தைச் சரிப்படுத்த தொழிலாளர்கள் காலையில்—விடியற்காலையில்—எழுந்து 6½ மணிக்கும் 7 மணிக்கும் சென்று உள்ளே போய் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. மத்தியானத்தில் உணவு உட்கொள்ளும் நேரம் குறைக்கப்பட்டு, அரை மணி அல்லது முக்கால் மணி நேரத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சாப்பிட்டு விட்டு ஓடி ஓடி உள்ளே போய் வேலை செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இரவுக் காலங்களில் நீண்ட நேரம் வேலை செய்து விட்டு வீட்டுக்குத் திரும்ப வேண்டியிருக்கிறது. இதனால் அவர்களுடைய உடல் நலம் பாதிக்கப்பட்டு, பலவித நோய்களால் பீடிக்கப்பட்டு, அகால மரணம் அடையக்கூடிய ஒரு நிலையை இந்த ஸ்டாக்கரிங் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த வழியிலே தொழிலாளர்களை பாதிக்கும்படியான நிலையை ஏற்படுத்தி இந்த விஸ்தரிப்புத் திட்டம் ஏற்படுத்தி கிராம மக்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுப்பதை எதிர்ப்பதற்காகச் சொல்லவில்லை. தொழிலாளர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தத் தொல்லை இல்லாமல் விஸ்தரிப்புச் செய்திருந்தால் மிகவும் நன்மையாக இருக்கும். அதே சமயத்தில் இந்த "Staggering period"-ஐ எடுத்துவிட்டால் பல ஆயிரக்கணக்கான தொழிலாளிகள்
11-40 a.m. நன்மை அடைவார்கள். எவ்வளவு சீக்கிரமாக இதை எடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக இதை எடுக்கவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விதத்திலும் தொழிலாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த விஸ்தரிப்புத் திட்டத்திலே பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகளை, தொழில் கோர்ட்டிலே தீர்ப்பு அளித்திருக்கிறபடி குறைந்தபட்ச சம்பளத்தையோ, பஞ்சப்படியையோ கொடுக்காமல், மிகவும் குறைவான சம்பளத்தைக் கொடுத்து அரசாங்கத்தார் நியமித்திருக்கிறார்கள். இதனால் அவர்கள் அன்றாடச் சாப்பாட்டிற்கே கஷ்டப்பட்டுக்கொண்டு, பட்டினியாக இருந்து வேலை செய்யும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஒரு பக்கத்திலே தொழிலாளர்களை வாட்டியும், இன்னொரு புறத்திலே அவர்களுக்கு இம்சை கொடுத்தும், கிராமத்திலுள்ள மிராசுதார்களுக்கு வசதி செய்வதற்கான திட்டம் இது என்று நினைக்கும்படித் தோன்றுகிறது.

இந்த மின்சார இலாகாவானது மற்ற எல்லா ராஜ்யங்களையும் விட நல்ல முறையில் வேலை செய்துகொண்டு வருகிறது என்று சொல்லும்பொழுது கண்ணை மூடிக்கொண்டிருக்க முடியாது. அதைப் பார்க்கிறோம், பாராட்டுகிறோம். இருந்தாலும் மற்றவர்களுக்கு கஷ்டம் கொடுக்காமல் இந்த வசதியைச் செய்து கொடுக்க முடியாதா, ஏன் அந்த மாதிரி யோசனையின் கீழ் திட்டத்தை ஏற்படுத்தவில்லை? இப்பொழுது கொழும்புத் திட்டத்தின் கீழே கிடைத்த உதவியைக் கொண்டும் கானடா அரசாங்கத்தினிடமிருந்து கிடைக்கும் உதவியைக்கொண்டு குந்தாத் திட்டத்தை நிறைவேற்றப்படுகின்றது. அந்த உதவி கிடைத்ததற்கு மகிழ்ச்சியடைகிறோம். அந்த மாதிரி வகையிலே பல்வேறு துறைகளிலேயும் பணத்தைப் பெற்று இதை விஸ்தரித்துக் கொண்டு போவார்களேயானால் நன்மையாக இருக்கும். பொதுவாக, இப்பொழுது அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பாராட்டிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

Sri M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மின்சார போர்டு தோன்றிய பிறகு இந்த சபை முன்பு விவாதத்திற்கு வந்துள்ள முதல் வரவு செலவுத் திட்டம் இது. ஓரளவுக்குப் பாராட்டக்கூடிய முறையில் அமைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்தப் பாராட்டுதலுக்குரியவர்கள் மின்சார போர்ட்டார்தானா என்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டிய விஷயம். இந்த போர்டு தோன்றி ஒரு வருஷம், சில மாதங்கள்தான் ஆகியிருக்கிறது. அதற்குள்ளாகவே இந்த மின்சார போர்டு அமைந்ததினுடைய சாதக பாதகங்களைத் திட்டவட்டமாகக் கூறுவது சாத்தியமல்ல. என்பது என்னுடைய அபிப்பிராயம். இரண்டொரு வருஷங்கள் ஆன பிறகு அவர்களுடைய

4th November 1958] [Sri M. Kalyanasundaram]

வேலையை பரிசீலனை செய்த பிறகு இந்த போர்டு தனியாக அமைந்ததி ஞலே ஏற்பட்டிருப்பது நன்மையா, தீமையா என்பதை நாம் திட்டவட்ட மாகக் கூறமுடியும். ஆனல் இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய முன் னேற்றத்திற்கு பூராவும் பொறுப்பானவர்கள் இந்த மின்சார போர்டு அல்ல. கொடுத்த பொறுப்பை எவ்வளவு தூரம் நிறைவேற்றியிருக்கி ருர்கள் என்பதைப் பார்க்க முடியுமே தவிர, வேறு திட்டவட்டமாக ஒன் றும் சொல்ல முடியாது. இந்தத் திட்டங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்ட திட்டங்கள். இந்த மின்சார போர்டு இப்பொழுது அமைந்தது அதனு டைய அதிருஷ்டம். (சிரிப்பு) அதே சமயத்தில் நமது அமைச்சர் அவர் களும் இந்த இலாகாவிற்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டது அவர்களுடைய அதிருஷ்டம் என்று வேண்டுமாஞல் வைத்துக்கொள்ளலாம். அவர் பொறுப்பேற்றவுடனே ஒரு துரதிருஷ்டம் ஏற்பட்டது. ஒரு நெருக்கடி ஏற்பட்டது. எங்கே இருட்டு ஏற்பட்டு விடுமோவென்று இருந்தது. அதி லேயும் தப்பித்துக்கொண்டு விட்டார்கள். நல்ல வேளை மழை பெய்து நீர்த் தேக்கங்களிலே ஜலம் இருக்கிறது. நெருக்கடியும் தீர்ந்துவிட்டது. இங்கே இப்பேர்ப்பட்ட நெருக்கடி வரக்கூடாது என்பது என்னுடைய ஆசை. ஆனல் அப்பேர்ப்பட்ட நெருக்கடி வராமல் இருப்பதற்கும், வந்தாலும் சமாளித்துக்கொள்வதற்கும் தெர்மல் ஸ்டேஷனை, அதாவது நீராவி சக்தி யினுல் ஓடக்கூடிய நிலையங்களை அமைக்கவேண்டு மென்ற யோசனையைக் கூறியிருக்கிருர்கள். நெய்வேலித் திட்டம் முடிந்த பிறகு அத்தகைய தட்டு குறைந்துவிடும் என்று நிச்சயமாக வாக்குறுதி அளித்திருக்கிருர்கள். நெய்வேலித் திட்டம் சிக்கிரமாக நிறைவேற்றப்படவேண்டுமென்பதுதான் என்னுடைய அவா. ஆனல் அங்கிருந்து வரக்கூடிய செய்திகள் கவலைக் கிடமாக இருக்கின்றன என்பதையும் என்ஞல் தெரிவித்துக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. நெய்வேலித் திட்டம் வெற்றி அடைவது அங்கு இருக்கக்கூடிய பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுப்பதில் அடையக்கூடிய வெற்றியைப் பொறுத்திருக்கிறது. அதைத் தோண்டி எடுப்பதில் நிச்சய மான வெற்றி ஏற்படும் என்பதற்குள்ள முறையில் பரிசீலனை செய்து நடத்தி, அந்தப் பரிசீலனையினுல் குந்தகம் ஏற்படாமல் வேலை செய்தால் தான், நெய்வேலித் திட்டம் வெற்றிகரமாக நடைபெறும் என்ற நம் பிக்கை ஏற்படும். அதிலும் கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். அதோடு நிற்காமல் ஜல விசை மூலம் நமது உற் பத்தி சக்தியைப் பெருக்கிக் கொள்ளவேண்டியது ரொம்பவும் அவசியம். இங்கே பல நண்பர்கள் கூறியபடி, மலிவான விலையில் மின்சார உற் பத்தி செய்யவேண்டுமென்று சொன்னுல், அது ஜல விசையை உபயோகித் துத்தான் தயாரிக்க முடியும். ஆகவே, நமக்கு இருக்கக்கூடிய வசதிகளை மட்டும் கணக்கிடாமல், பக்கத்து ராஜ்யங்களில் என்னென்ன வசதிகள் இருக்கின்றன என்பதையும் கணக்குப் பார்த்து, அந்த ராஜ்யங்களோடு நல்ல முறையில் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்து, ஜல விசையைக் கொண்டு மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாஞல், நிச்சயமாக நமது தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மட்டுமல்லாமல், மலிவான விலையில் மின்சாரத்தை கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற் படுத்த முடியும். பற்றாக்குறையைப் போக்குவதற்கு தெர்மல் ஸ்டேஷன் களை அதிகமாக்கிக் கொண்டு போனபோதிலும், அது உற்பத்திச் செலவை அதிகப்படுத்தும் தன்மையிலே இருக்குமாதலால், மின்சாரத்தை சாதாரண மக்கள் பயன்படுத்துவது குறையும் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்பு கிறேன். அண்டை ராஜ்யங்களோடு, குறிப்பாக கேரளா, மைசூர் ராஜ்யங் களோடு நாம் ஒரு ஒப்பந்தத்திற்கு வருவோமேயாஞல், மூன்று ராஜ்யங் களும் சேர்ந்து செய்யக்கூடிய பல திட்டங்கள் இருக்கின்றன. அதிலே கவனம் செலுத்தி, ஜல விசையை உபயோகித்து மின்சார உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வகையிலே கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இந்த மின்சார போர்டு அமைப்பைப் பற்றி சில வார்த் தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த போர்டை தற்காலிகமாக, பரீட் சார்த்தமாக உத்தியோகஸ்தர்களைக் கொண்டு அமைத்திருக்கிருர்கள் என்று மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள் என்று நினைக்கிறேன். அது எந்த அளவுக்கு நன்ருக வேலை செய்வதற்கு உதவி செய்திருக்கிறதோ

தெரியாது. எனக்கு வந்திருக்கக்கூடிய புகார்களிலிருந்து பார்க்கும்பொழுது, சேர்மன் முழுநேர சேர்மனாக இல்லாததினால், வேலை தடைப்படுகிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். சென்ற மூன்று தினங்களாக இந்த சபையிலே விவாதம் நடக்கிறது. அங்கத்தினர்கள் எல்லோரும் மிகவும் அக்கரை காட்டி பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நேரம் போதாத தினால்தான் நேரத்தை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அப்படி யிருந்தும் கூட இந்த மின்சார போர்டு சேர்மனுக்கு ஒரு நிமிஷம்கூட இந்த சபையிலே வந்து இருப்பதற்கு நேரமில்லாமல் இருக்கிறது. அவ்வ ளவு வேலை அவருக்கு இருக்கிறது. அப்பேர்ப்பட்டவரை இந்த போர்டுக்கு சேர்மனாக வைப்போமேயானால், எப்படி இந்த போர்டு நல்ல முறையில் வேலை செய்யும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஐ. ஸி. எஸ். அதிகாரியாக இருப்பதினால் ஸர்வ வல்லமை படைத்தவர் என்று என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. இந்த மின்சாரத்தைப் பற்றி எனக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவுதான் அவருக்கும் தெரியும். இந்த மாதிரி மின்சார போர்டை ஏற்படுத்தியிருக்கிற ராஜ்யங்களைப் பார் போமேயானால், எனக்குத் தெரிந்த மட்டில் அந்த இலாகாவிலே அனுபவ முள்ள அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள். கேரள ராஜ்யத்திலே ஏற் கெனவே எலெக்டிரிகல் சீப் எஞ்சினியராக இருந்தவரை இந்த போர்டு சேர்மனாக உயர்த்திவிட்டு, வேறொருவரை சீப் எஞ்சினியராகப் போட்டி டிருக்கிறார்கள். ஆறு அங்கத்தினர்கள் முழுநேரம் வேலை செய்கின்ற அங்கத் தினர்கள். நம்மைவிட ஒரு சிறிய ராஜ்யத்திலே இந்த நிலைமை ஏற்பட்டிருக் கிறது என்று சொன்னால் திறமையாக வேலை செய்வதற்கு தனி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இதிலே போய் எவ்வளவு செலவு அதிகமாகும் என்று பார்க்காமல் முழுநேரமாக இருக்கக்கூடிய ஒரு சேர்மன் இருக்கவேண்டும் என்பது தான் என்னுடைய

11-50 a.m. கருத்து. சீப் என்ஜினியர் அவர்களை ரொம்பவும் அமைச்சர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். இந்த வெற்றிக்குக் காரணம் சீப் என்ஜினியர் ஒருவர் தான் என்பது போல அமைச்சர் அவர்கள் பிரசங்கத்தைப் படித்துப் பார்த்தால் தெரிகிறது. நான் சீப் என்ஜினியரை எந்த விதத்திலும் குறை சொல்லவில்லை. அவரை பாராட்டுவதிலே ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால், இந்தச் சாதனைக்கு சீப் என்ஜினியர் ஒருவரின் உற்சாகமும் உழைப்பும் மட்டும் காரணமல்ல. அந்த டிபார்ட்மெண்டில் இருக்கக்கூடிய எல்லா அதிகாரிகளும், அதற்கு மேலாக அங்கு இருக்கக்கூடிய தொழி லாளர்கள் அனைவரும் சேர்ந்துதான் இத்தகைய சாதனைகளை ஏற்படுத் தினார்களே தவிர, சீப் என்ஜினியர் ஒருவர் முயற்சியினால் மட்டுமல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். சீப் என்ஜினியரை சேர்மனாகப் போடுவதற்கும் எனக்கு ஆட்சேபனை இல்லை. அவருக்கும் மற்ற சீப் என்ஜினியர்களைப் போல் சம அந்தஸ்து கொடுப்பதிலும் எனக்கு ஆட் சேபனையில்லை. அவரைப் பற்றி மற்ற விஷயங்களில் எனக்கு வேறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும், அவரை ஒரு என்ஜினியர் மட்டும் என்று நான் கருதுகிறேன். ஒரு சீப் என்ஜினியருக்கு கொடுக்கக்கூடிய சம அந்தஸ்து அவருக்கும் கொடுக்கவேண்டும். மற்ற இலாகாவிலுள்ள சீப் என்ஜினியர்களுக்கு வேறு சம்பளம், அதுவும் முக்கியமாக மந்திரி அவர்களின் பாராட்டுக்குரிய ஸ்தானத்தில் இருக்கும் சீப் என்ஜினியருக்கும் வேறு சம்பளம், இம்மாதிரி சம்பளத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சம்பளம் அதிகமாகக் கொடுத் தால் தான் அந்தஸ்து உயரும் என்று கருதுவது அல்ல. இருந்தாலும், சம அந்தஸ்து இருக்கவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். சம் பளத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது என்பது என்னுடைய அபிப் பிராயம். என்னுடைய முக்கியமான கருத்து என்னவென்றால், எலக் டிரிஸிடி போர்டுக்கு முழு நேரமும் கவனம் செலுத்தக்கூடிய ஒரு சேர்மன் இருக்கவேண்டுமென்பது தான். அதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆலோசனைக் குழுவைப் பற்றி சொல்லுகிறேன். எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு, எவ்வளவு பேர்களுக்கு இந்தக் குழுவில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பது அல்ல என்னுடைய கவலை. நம் முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய திறமை படைத்தவர்கள், அனுபவம்

4th November 1958] [Sri M. Kalyanasundaram]

உள்ளவர்கள், எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், எந்த மதத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும், இந்தக் குழுவில் இடம் பெற வேண்டுமென்பது தான் என்னுடைய அபிப்பிராயம். அந்த ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றிருப்பவர்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் என்ற குற்றச்சாட்டிற்கு இடம் அளிப்பதாக இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். அந்த எண்ணத்துடன் ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் திட்ட வட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். தொழிலாளிகள் பிரதிநிதியாக ஒருவர்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார். தொழிலாளர்கள்தான் தேசத்தின் முன்னேற்றத்திற்கு முக்கியம் என்று சொல்லுகிறோம். தொழிலாளர்கள் அந்தஸ்து உயரவேண்டும், தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு அளிக்கவேண்டுமென்று வெளியிலே பிரசங்கத்திற்கு மட்டும் வைத்துக்கொண்டால் போதாது. காரியாம்சத்தில் காட்டவேண்டும். இப்பொழுது ஒரு சந்தர்ப்பம் கிடைத்தபொழுது கூட, சர்க்கார் அவர்களுடைய அதிகாரத்தை எப்படி உபயோகப்படுத்தியிருக்கிறார்கள் ? இந்த சமயத்தில்கூட ஒரே ஒரு பிரதிநிதியை ஆலோசனைக் குழுவில் போட்டிருக்கிறார்கள். அந்த ஒரு பிரதிநிதியும் யார் ? அவர்கள் கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய, காங்கிரஸில் ஒரு பிரிவான தொழிலாளர் பிரிவை சார்ந்திருக்கக்கூடிய பிரதிநிதியை நியமித்திருக்கிறார்கள். ஏன் இப்படி பாரபட்சம் காட்டவேண்டுமென்று தெரியவில்லை. அந்த ஸ்தாபனத்திற்கு தொழிலாளர்களில் பிரதிநிதித்துவம் இருக்கிறதா என்பதை கவனிக்க வேண்டும். தமிழ் நாட்டில் தொழிற் சங்க காங்கிரஸ்தான் ஏக பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனம் என்று சர்க்கார் பரிசீலனை செய்து அறிவித்திருக்கிறது. இதுமாதிரி செய்வது தங்கள் கட்சியைச் சார்ந்த ஒரு ஸ்தாபனத்திற்கு பிரதிநிதித்துவம் கொடுப்பதுமட்டுமல்ல, அரசியல் காரணத்திற்காகவும் இப்படி செய்யப்படுகிறது என்ற குற்றச்சாட்டுக்கு இடம் அளிக்கிறதா, இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை ஒரு கட்சிப் பிரச்னை ஆக்காமல், எல்லாக் கருத்துக்களையும் பிரதிபலிக்கக்கூடிய பிரதிநிதிகள், தொழிலாளிகளிடம் செல்வாக்கு உடையவர்கள், தொழிலாளர்களின் மனப்பான்மையை நன்ருகப் புரிந்துகொண்டவர்கள் ஆகியோர்கள்தான் இந்த ஆலோசனைக் குழுவில் இடம் பெறவேண்டுமென்பதை நான் சொல்லாமலே அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

அதோடு, உற்பத்தியாகக்கூடிய மின்சாரமானது மலிவான விலையில் ஜனங்களுடைய உபயோகத்திற்கு போய்ச் சேரவேண்டும். அதுதான் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம். எலக்டிரிஸிடி போர்டு பிரதேசத்திலே ஒரு நிலை, தனிப்பட்ட லைசென்ஸிகள் நடத்தக்கூடிய பகுதியிலே ஒரு நிலை என்கின்ற வித்தியாசத்தை அகற்றவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். எலக்டிரிஸிடி போர்டார் 10 சத விகிதம் வருமானம் இருந்தால் போதும் என்கின்ற அடிப்படையில் நிர்ணயிக்கிருர்கள். தனிப்பட்ட லைசென்ஸிகள் 15 சத விகிதம் வருமானம் வேண்டுமென்று கோருகிருர்கள். ஏன் இந்த வித்தியாசம் இருக்கவேண்டுமென்பதைப் பற்றி யோசனை செய்யவேண்டும். சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய புள்ளிவிவரப்படி 85 சத விகிதம் சர்க்காரே நடத்துகிறது. இன்னும் 15 சத விகிதம் தான் தனியார் கையில் இருக்கிறது. அந்த 15 சத விகிதம் கூட சர்க்காரே எடுத்து நடத்திவிடலாம். இரண்டு கோடி ரூபாய் கடன் வேண்டுமென்று கேட்டபொழுது, இரண்டே நிமிஷத்தில் இரண்டு கோடி ரூபாயும் பெறக்கூடிய அளவுக்கு நாட்டிலே எலக்டிரிஸிடி போர்டின் அந்தஸ்து உயர்ந்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தனியார் நடத்தும் எல்லா ஸ்தாபனங்களையும் எடுத்துக்கொள்ளுவதானல் இன்னும் இரண்டு கோடி ரூபாய் தேவைப்படலாம். ஆகவே, இன்னும் அதிகமாக இரண்டு நிமிஷங்கள் செலவு செய்து மேலும் 2 கோடி ரூபாய் பிரட்டி இந்த ஸ்தாபனங்களையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் சமமான முறையிலே அபிவிருத்தி ஏற்படுவது சாத்தியமாகும். லைசென்ஸிகள் நடத்தக்கூடிய பிரதேசத்தில் ஒரு நிலை, எலக்டிரிஸிடி போர்டு நடத்தக்கூடிய இடத்தில் ஒரு நிலை என்ற நிலைமை

[Sri M. Kalyanasundaram] [4th November 1958

இருக்கிறது. இதனுல் எலக்டிரிஸிடி போர்டு பாராட்டத்தக்கக்கூடிய முறையில் வெகு திறமையாக வேலை செய்கிறது என்று அர்த்தமல்ல. லைசென்ஸிகள் சர்க்காருக்கு கொடுக்கக்கூடிய பணம், டைரக்டர்களுக்கு கொடுக்கக்கூடிய லாபம், இவ்வளவையும் கொடுத்து, எலக்டிரிஸிடி போர்டு கொடுப்பதைவிட தொழிலாளிகளுக்கு அதிகச் சம்பளமும் கொடுக்கிருர்கள். அப்படியிருந்தும்கூட அவர்களுக்கு லாபம் கிடைக்கிறது. எலக்டிரிஸிடி போர்டு சர்க்காருக்கு கொடுக்கவேண்டிய 70 கோடி ரூபாய்க்கு கொடுக்கவேண்டிய வட்டியையும் கொடுக்காமல் கடனுக சேர்த்துவைத்துக் கொள்ளுகிறது. இந்த வருஷத்தில் இந்தத் தொகைக்கு நமக்கு வட்டி கூட கொடுப்பதை நாம் பார்க்க வில்லை. ஒரு சமயம் அடுத்த வருஷம் கொடுக்கிருர்களோ என்னவோ, தெரியாது. வட்டியையும் சேர்த்து கணக்கு எழுதிக்கொள்ளுகிருர்கள். அதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனையில்லை. அபிவிருத்திக்காக அவசியம் ஏற்பட்டால் கொடுக்கவேண்டுமென்பது தான் என்னுடைய அபிப்பிராயம். தனியார் நடத்தும் இடங்களில் கன்ஸியூமர்களுக்கு அதிருப்தியோ, புகார்களோ இல்லை. எலக்டிரிஸிடி ரேட்டில் அவ்வளவு வித்தியாசமில்லை. ஒரே ஒரு கம்பெனியில் தான் ரேட் ரொம்ப அதிகமாக இருந்தது. அதை இப்பொழுது ஒழித்து விட்டார்கள். தென் ஆற்காடு ஜில்லாவிலிருந்த ஸ்தாபனம் அது. அந்த ஸ்தாபனம் சர்க்காரையும், பொதுமக்களையும் நஷ்டம் வந்ததாக ஏமாற்றி வந்தது. நல்ல வேளையாக அதை சர்க்கார் எடுத்துக்கொண்டு விட்டார்கள். ஆனுல் அவர்களுக்கு நஷ்டம் வந்தது உண்மைதானு என்பதை பரிசீலனை செய்வது அவசியமாக இருக்கிறது. ஒரு பினுமி கம்பெனியை வைத்துக் கொண்டு அதனிடமிருந்து சாமான்களை அதிக விலைக்கு வாங்கியதாகக் காட்டி, நஷ்டம் வந்ததாக கணக்குக் காட்டியிருக்கிருர்கள். அம்மாதிரி நஷ்டம் வருவதாகக் காட்டி ரேட்டை உயர்த்துவதற்கு அனுமதி கோரினுர்கள். யூனிட்டுக்கு 5 3/4 அணு, 6 அணு உயர்த்துவதற்கு அனுமதி கோரினுர்கள். நல்ல வேளையாக அந்தக் கம்பெனி இப்பொழுது சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது. கடந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. இனி அப்பேர்ப்பட்ட நிலை வராது என்று நினைக்கிறேன். இதிலிருந்து ஒரு படிப்பினை கிடைத்ததால் அப்பேர்ப்பட்ட நிலைமை ஏற்படாது என்று எண்ணுகிறேன். ஆகவே, தனியார் கையில் இருக்கக்கூடிய மற்ற ஸ்தாபனங்களையும் சர்க்கார் சீக்கிரம் எடுத்துக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால், தனியார் நடத்தக்கூடிய பகுதியிலும், சர்க்கார் நடத்தக்கூடிய பகுதியிலும் ஏற்றத் தாழ்வு இல்லாமல், விலை ஒரே மாதிரியாகத்தான் இருக்க வேண்டும். மினிமம் காரண்டியும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும். கிராம அபிவிருத்திற்கு அவர்களிடத்தில் பணம் இல்லாவிட்டால்கூட, அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளுவதற்கு சர்க்கார் திட்டங்கள் போட்டு யோசனை கூறவேண்டும். அதற்கான வசதியையும் செய்துகொடுக்க வேண்டும். இல்லாவிட்டால், அவைகளை சர்க்காரே உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். போர்டு ஏரியாவில் கிராம விஸ்தரிப்பு துரிதமாக நடக்கிறது. ஆனுல், லைசென்ஸிங் ஏரியாவில் அவ்வளவு வேகமாக நடக்கவில்லை. லைசென்ஸிங் ஏரியா வேறு தேசம் போல் இருக்கிறது. இரண்டு ராஜ்யங்களுக்குள் சண்டை வருவதுபோல் தகராறுகள் ஏற்படுகின்றன. லைசென்ஸ் பிரதேசத்தில் பிரவேசிப்பதற்கு சர்க்காருக்கு உரிமை இருந்தாலும்கூட, பல தகராறுகளுக்கு இடம் அளிக்கிறது. லைசென்ஸிங் ஏரியாவிலுள்ள ஸ்தாபனங்கள் தங்களிடம் பணம் இல்லை, வசதியும் இல்லை, எப்பொழுது சர்க்கார் எடுத்துக்கொள்ளுவார்களோ என்று நிச்சயமாகத் தெரியவில்லை என்ற காரணத்தைச் சொல்லிவிடுவதால் விஸ்தரிப்புக்கு இடம் ஏற்படாமல் போய்விடுகிறது. இந்தக் காரணத்தை காண்பிப்பதால் விஸ்தரிப்புக்கு தடை ஏற்படுகிறது.

அதோடுகூட, சர்க்கார் ஹரிஜன இலாகாவின் உதவியைக் கொண்டு ஹரிஜனங்கள் வசிக்கும் இடங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு திட்டம் போட்டிருக்கிருர்கள். இப்பொழுதுதான் வேலை ஆரம்பமாகியிருக்கிறது.

4th November 1958] [Sri M. Kalyanasundaram]

லைசென்சு பிரதேசங்களில் இது துரிதமாக நடைபெறவில்லை. பல கஷ்டங்கள் இருக்கின்றன. அப்படி கஷ்டங்கள் இருப்பதால் ஒன்று லைசென்சு முறையை ஒழித்துவிடவேண்டும், அப்படி ஒழித்து விட்டு லைசென்சு 12 noon. தார்களுடைய பிரதேசத்தையும் எலெக்ட்ரிசிட்டி போர்டு எடுத்துக்கொள் வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும், அல்லது லைசென்சு பிரதேசங்களும் மின்சாரத்தை விஸ்தரிக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஆலோசனை குழு சம்பந்தப்பட்டமட்டில் ராஜ்யம் பூராவும், ஆலோசனை குழு இருக்கக்கூடிய ஜில்லாக்களைத்தவிர மற்ற சில பிரதேசங்களிலும் தனித்தனியாக ஆலோசனை குழு அமைக்கும் யோசனையை கவனிக்கவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடுகூட இப்பொழுது புதியதாக போடப்பட்டிருக்கக்கூடிய திட்டங்களைப்பற்றி சில வார்த்தைகள் கூற வேண்டியதாக அவசியம் இருக்கிறது. திட்டங்களெல்லாம் காலத்தில் போட்டு குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே அவைகள் நிறைவேறவேண்டும் என்பதற்கான நடவடிக்கை எடுப்பது நல்லதுதான், அது வரவேற்கக்கூடிய கருத்துத்தான். ஆனால் வேகமாக வேலை செய்யவேண்டும் என்பதற்காக வீண் செலவும் விரயமும் ஏற்படாமல் இருக்கும்படியாக பார்த்துக்கொள்ளவேண்டும். நாம் செலவு செய்யக்கூடிய ஒவ்வொரு ரூபாயும் நியாயமான வழியில் செலவழிக்கப்படுகிறதா என்பதையும் பார்க்கவேண்டும். எவ்வளவோ பெரிய நிறுவனங்களில் 70 கோடி ரூபாய் மூலதனம் போட்டு எவ்வளவோ ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் நூற்றுக்கணக்கான அதிகாரிகளும் பணியாற்றும் துறையில், செலவு சரியானபடி நடைபெறுகிறதா என்பதை கண்காணிக்கவேண்டிய ஒரு அவசியமும் இருக்கிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக அதைப்பற்றி சபையில் பேசக்கூடிய ஒரு உரிமை இல்லாமல் இருக்கிறது. பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் இதைப்பற்றி விரிவாகப் பேசுவதற்கும் சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறது. ஆடிட்டர்கள் இருக்கலாம். ஆடிட்டர்கள் அதைத் தெரிந்துகொண்டு பார்ப்பதும் இல்லை. ஆடிட்டர்கள் வரும்போது இப்பொழுதுள்ள நிலைமை எப்படியோ இருக்கும். ஆடிட்டர்களுடைய கணக்கில் வராமல் இருப்பதை விவாதிக்கத்தான் பப்ளிக் அகவுண்ட்ஸ் கமிட்டி வைத்திருக்கிறோம். அதில் விவாதிப்பதற்கும் சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறது. எழுபது கோடி ரூபாய் மூலதனம் போட்டு நடத்தப்படும் ஒரு நிறுவனத்தைப்பற்றி இங்கேயாவது அல்லது பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலோ விவாதிக்க சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறது. அப்படி இல்லாமல் அதைப்பற்றி இந்த சட்ட சபையிலும் பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டியிலும் விவாதிக்க சந்தர்ப்பம் இருக்கும்படியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். பட்ஜெட் மீது வோட்டு எடுப்பது போன்று இதிலும் வோட்டு எடுக்கவேண்டும் என்று இருக்கவேண்டும். அந்த முறையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து இங்கே அதை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்கு வேண்டிய கவனம் செலுத்தவேண்டும் என்றும் கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் எதிர்கட்சி உத்தியோக பற்றற்ற முறையில் கொண்டு வந்தால் அந்தத் தீர்மானம் ஒரு வருஷத்திற்கு சபையின் முன்பு வருவதற்கு சாத்தியம் இல்லை. அதனால் சர்க்காரே அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக்கொண்டு வந்து நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பெரிய திட்டங்களைப் போட்டு விட்டு, அவற்றில் சில மூன்றில் ஒரு பாகம் வேலை பூர்த்தியாயிருக்கிறது. திட்டம் போடப்பட்ட காலத்திற்கு 1½ வருஷத்திற்கு முன்னதாகவும், போட்ட எஸ்டிமேட்டிற்குக் 1½ கோடி ரூபாய் குறைவாக செலவு செய்யப்பட்டிருக்கிறதாகவும் அதன் மூலம் பணம் மிச்சப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் எந்த அளவில் அப்படிப்பட்ட மிச்சம் ஏற்பட்டிருக்கிறது என்ற விவரத்தை கனம் அங்கத்தினர்

[Sri M. Kalyanasundaram] [4th November 1958

களுக்குக் கொடுக்கவில்லை. நான் எங்கேயோ பார்த்தேன் படங்கள் போட்டு இருப்பதைப்பற்றி. அப்படிப்பட்ட படங்களை சட்டசபை அங்கத்தினர்களுக்கு கொடுத்திருக்கலாம். அதனால் எந்த விதமான நஷ்டமும் ஏற்பட்டிருக் காது என்று நான் நினைக்கிறேன். ஆனால் பணம் மிச்சமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். நான் கேட்கிறேன். பெருமைக்காக எஸ்டிமேட்டை அதிகமாகப் போட்டு விட்டு குறைந்த அளவில் செலவு செய்து விட்டு மிச்சம் காட்டியதாகக் காட்டவேண்டும் என்பதற்காக அப்படி போட்டிருக்கிறார்களா அல்லது நிஜமாகவே மிச்சம் ஏற்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிவிக்கவேண்டும். உள்ளபடியே திட்டம் போட்டு அதற்கு குறைவாக செலவு செய்து சிக்கனம் காட்டப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். பத்து கோடி செலவுக்கு பன்னிரெண்டு கோடி எஸ்டி மேட்டு போட்டு விட்டு சிக்கனமாக செலவு செய்திருக்கிறோம். இரண்டு கோடி ரூபாய் பணத்தை மிச்சம் காட்டியிருக்கிறோம் என்ற அளவில் செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும் அறியவிரும்புகிறேன். எப் படிப்பட்ட சிக்கன முறை கையாளப்பட்டது என்பதை தெரிவிக்க வேண்டும். 1½ கோடி ரூபாய் எப்படி மிச்சப்படுத்தப்பட்டது என்ற புள்ளி விவரத்தைச் சொன்னால் நன்மையாக இருக்கும். அது தெரியாமல் அதிகாரிகளைப் பாராட்டுவதற்கு இடம் இல்லை என்பதை மட்டும் தெரிவித் துக்கொள்ளுகிறேன்.

பெரியாறு சம்பந்தமாக பல அதிகாரிகள் அங்கே போன சமயத்தில் சொன்னார்கள், இப்பொழுது குந்தா ப்ராஜெக்ட் திட்டம் நடந்துகொண்டி ருக்கிறது, அதனால் செத்த பாம்பை அடிப்பதில் பிரயோசனம் இல்லை என்று விட்டு விடுகிறேன். இங்கே நடப்பதை எடுத்துக்காட்ட விரும்புகி றேன். குந்தா சம்பந்தப்பட்டமட்டில் அங்கே இருக்கக்கூடிய விஷயங்களை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகி றேன். குந்தா திட்டம் சம்பந்தப்பட்டமட்டில் அங்கே தகராறுகள் ஏற் படுவதெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களால்தான் வருகிறது என்று அர்த்தப்படும்படியாக சில அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். அப்படி கனம் மாதா கௌடர் அவர்கள் பேசியதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் அப்பொழுது நான் இங்கே இல்லை. அந்த திட்டம் அவர் பகு திக்குப் பக்கத்தில் தான் நடைபெறுகிறது. அதனால் அவருக்கு அங் குள்ள நிலைமையைப்பற்றி அறிந்து கொள்வதற்கு அதிகப்படியான சந் தர்ப்பம் இருக்கிறது. அதனால் அவர் அங்கே நேரடியாகச் சென்று அங்குள்ள நிலைமையை நேரில் கண்டு வந்து எனக்குத் தெரிவித்தால்.... அப்படி தெரிவிக்கும்போது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர் கள் அப்படிப்பட்ட தகராறுகளைச் செய்துகொண்டு வருகிறார்கள் என்று சொன்னால்....அதன் மேல் என்ன செய்யச் சொன்னாலும் நான் செய்வதற்கு தயாராக இருக்கிறேன். அவர் அங்கு போய் பார்த்தால் என் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல் எல்லாக் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்களும் அங்கே தகராறுகள் செய்து வருவதை பார்க்கலாம். அங்கு தகராறுகள் வருவதற்கு என்ன காரணம் என்பதை கொஞ்சம் கவனிக்கவேண்டும். அந்த பகுதியில் அந்தத் திட்டத்தின் வளர்ச்சிக்கு அவர் கள் எவ்வளவு துரிதமாக செயல்படவேண்டும் என்று எண்ணுகிறார்களோ அதைப் போலவே நாங்களும் எண்ணுகிறோம் என்பதை மட்டும் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த வர்களுக்கு எவ்வளவு ஆசையும் ஆர்வமும் இருக்கிறதோ அந்த அள வுக்கு எங்கள் கட்சிக்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். ஆனால் மற்ற கட்சிகளைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆகவே இது ஒரு கட்சிப் பிரச்னையல்ல. குந்தா திட்டத்தில் வேலை செய்கிறவர்கள் எல்லோரும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அந்த நிலைமையில் கனம் மாதா கௌடருக்கு எந்த விதமான சந்தேகமும் ஏற்படவேண்டிய தில்லை. இதை கனம் மாதா கௌடர் மறுக்க முடியாது. ஆகவே உண்மையான விவரங்களைத் தெரிந்து கொண்டு வந்து சொன்னால் நன்மை யாக இருக்கும். அதன் பிறகு அவர் எதைச் சொன்னாலும் அதைச் கேட்டுக்கொள்வதற்கு தயாராக இருக்கிறேன். அதன் பிறகு என்னுடைய கருத்தை மாற்றிக்கொள்வதற்கும் தயாராக இருக்கிறேன் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

4th November 1958] [Sri M. Kalyanasundaram]

குந்தா திட்டத்தில் சுமார் 12 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். தொழிலாளர்கள் வேலை செய்தால்தான் அந்தத் திட்டம் பூர்த்தியாகும். தொழிலாளர்கள் ஓரளவு கஷ்டமும் தியாகமும் அனுபவிக்க வேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ப்ராஜெட்டுகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு மற்ற இடங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் வசதிகள் கிடைக்கும் என்று நான் சொல்லவில்லை. அப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுப்பதும் சுலபம் அல்ல. கண் மூடித்தனமாக எல்லா வசதிகளையும் அவர்கள் கேட்கவில்லை. அந்த இடத்தில் அவர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள். அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சம் சில சலுகைகளைச் செய்ய வேண்டாமா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். தோட்டத் தொழிலாளர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு இரண்டு கம்பளிகள் கொடுக்கிறார்கள். அப்படி இவர்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று சொல்லவில்லை. இந்த 12 ஆயிரம் தொழிலாளர்களும் சர்க்கார் அல்லது கண்ட்ராக்டர்கள் கீழ் வேலை செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு கம்பளியாவது கொடுக்கவேண்டியது அவசியம் இல்லையா என்பதை அவர்கள் விசாரணை செய்து பார்க்கவேண்டும். அங்கே தொழிலாளர்கள் ரொம்பவும் கஷ்டப்பட்டு வேலைசெய்கிறார்கள். எட்டாயிரத்துக்கு மேலுள்ள தொழிலாளர்கள் கண்ட்ராக்டர்களின் கீழ் வேலை செய்கிறார்கள். கண்ட்ராக்டர்கள் தொழிலாளர்கள் சம்பந்தமாக எந்த விதமான பொறுப்பும் எடுத்துக்கொள்ளவில்லை. தொழிலாளர்களுக்குள்ள மஸ்டர் ரோல் கூட அவர்கள் வைத்துக்கொள்ளவில்லை. இப்படிப்பட்ட தகவல் எனக்கு வந்திருக்கிறது. அந்தந்த தொழிலாளர்களுக்கு அந்தந்த மாதத்தில் கொடுக்கக்கூடிய சம்பளத்தை எந்த ரிஜிஸ்தரிலும் எழுதி வைத்துக்கொள்ளவில்லை. அதனால்தான் தொழிலாளர்கள் அப்படிப்பட்ட ஒரு ரிஜிஸ்தரை வைத்துக்கொள்ளவேண்டும் என்று கிளர்ச்சி செய்கிறார்கள். இதனால் திட்டத்தை முடிக்கக்கூடாது என்ற முறையில் கிளர்ச்சி செய்கிறார்கள் என்று அர்த்தமா என்று கேட்கிறேன். திட்டத்தை நாசம் செய்யவேண்டும் என்று கிளர்ச்சி செய்கிறார்களா என்று கேட்கிறேன். முதலாளிகளைக் கேட்க தொழிலாளர்களுக்கு உரிமை இருக்கிறது. தாங்கள் எந்த ஆட்களின் கீழ் வேலை செய்கிறோம் என்று தெரியவேண்டும் என்று தான் அவர்கள் கேட்கிறார்கள். ஸ்கீம் பூர்த்தியான பிறகு தங்களுக்கு காம்பென்சேஷன் கிடைக்கவேண்டும் என்பதற்காகவும், நஷ்ட ஈடு கிடைக்கவேண்டும் என்பதற்காகவும், அவர்கள் அப்படி கேட்கிறார்கள். மூன்று வருஷத்திற்கு மேல் வேலை செய்த பிறகு திட்டம் பூர்த்தியான பிறகு அங்கே வேலை செய்த தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்ற தொடர்பு இருக்கிறபடியால் இதைக் கேட்கிறார்கள். பெரிய கண்ட்ராக்டர்கள், கானன் அண்ட் பங்கர்லி போன்ற பெரிய கண்ட்ராக்டர்கள் . . .

Mr. SPEAKER: இது வரையில் குறுக்கே பேச வேண்டாம் என்றிருந்தேன். கண்ட்ராக்டர்களுடைய பெயரை இங்கே குறிப்பிடவேண்டாம். நீங்கள் சொல்வதைப்பற்றி ஆட்சேபிக்க இங்கே அவர்கள் இல்லை. அதனால் அவர்களுடைய பெயரைச் சொல்லவேண்டாம். அவர்கள் மீது குற்றம் சாட்டினால் அதைப்பற்றி பதில்சொல்வதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடையாது. அதிகாரிகள் மீது குற்றம் சொன்னால் மந்திரிகள் பதில் சொல்வதற்கு இருக்கிறார்கள். அதனால் கண்ட்ராக்டர்கள் பெயரைச் சொல்லவேண்டாம். பொதுவாகச் சொன்னால் போதும். கண்ட்ராக்டர்களுடைய பெயரை இந்த இடத்தில் சொல்வது சரியல்ல. வேறு இடத்தில் சொல்லிக்கொள்ளலாம்.

Sri M. KALYANASUNDARAM: பி. அண்ட் சி. மில்லைக் குறிப்பிட்டு சர்க்கார் விசாரிணை செய்யவேண்டும் என்று சொல்வது போல் இவர்களுடைய பெயரைச் சொல்லுகிறேன்.

Mr. SPEAKER: தயவு செய்து உட்காருங்கள். நீங்கள் கொடுக்கக்கூடிய உதாரணம் சரியல்ல. எலெக்ட்ரிக்சிட்டி போர்டு சம்பந்தமாக பேசும் போது பி. அண்ட் சி. மில்லைப்பற்றியும் பேசுவது சரியல்ல.

[4th November 1958

SRI M. KALYANASUNDARAM : இப்பொழுது கண்ட்ராக்டர் என்று சொல்லக்கூடிய கானன் டங்கர்லி அண்டு ஹிண்ட் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் . . .

MR. SPEAKER : If the hon. Member does not avoid referring to them, I will have to ask him to discontinue his speech.

SRI M. KALYANASUNDARAM : The principal employer is the Electricity Board. The contractors are only agents of the Electricity Board. It is the Electricity Board which is responsible for the action of the contractors as the principal employer according to the Industrial Disputes Act. Hence my right to criticise the actions of the contractors cannot be taken away.

MR. SPEAKER : In view of the explanation, the hon. Member may continue.

SRI M. KALYANASUNDARAM : இந்த இரண்டு பேர்களும் சர்க்காருக்கு ஒரு அக்ரிமெண்ட் எழுதிக்கொடுத்துவிட்டு கண்ட்ராக்ட் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி எழுதிக் கொடுத்தபோது தொழிலாளர்களுக்கு சலுகைகள் கொடுக்கவேண்டும் என்றும் எழுதியிருக்கிறார்கள்.

12-10 p.m. அதோடு நான் சொல்லிக் கொண்டிருந்த விஷயம் இது தான். தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டியிருக்கும். அதிலிருந்து தப்பிக் கொள்ளவேண்டிய இரண்டுபேரும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. சர்க்கார் முன்பே இதைப்பற்றி நன்றாகப் பரிசீலனை நடத்தியிருந்தால் இந்த அளவுக்கு இன்றைய தினம் அதிருப்தி ஏற்பட்டிருக்காது. அதைத் தவிர்த்திருக்கமுடியும். லேபர் வெல்பார் ஆபீசர் இவற்றையெல்லாம் பரிசீலனைசெய்யவேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கலாம். நாங்கள் என்னவோ அவர்களிடத்திலே வீணான கிளர்ச்சி உணர்ச்சியை, மனப்பான்மையைத் தூண்டிக் கொண்டு வருவதாக—அரசியல் துவேஷத்தினால் சொல்லலாமே தவிர உண்மை அப்படி அல்ல. நேரடியான நடவடிக்கையில் தொழிலாளர்கள் இறங்கக்கூடாது, முதலில் அமைச்சரைச் சந்தித்துப் பேசவேண்டும், மின்சார போர்டாரைச் சந்தித்துப் பேசவேண்டும், அதற்குள் அவசரப்பட்டுக்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று அவர்களைத் தடுத்து நிறுத்தினேன். அது தப்பு என்கிற குற்றச்சாட்டை என் மீது சுமத்தினால் அதை வேண்டுமானால் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அந்தப் பிரதிநிதிகள்கூட இன்றைக்குச் சென்னை வந்திருக்கிறார்கள். அவர்களைச் சந்தித்துப் பேச அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

முன்பும் அப்படித்தான் ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அந்த ஸ்ட்ரைக் வராது தடுப்பதற்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் அவர்களோடு கலந்து பேசி அதன் மீது அந்த நடவடிக்கை தள்ளிவைக்கப்பட்டது. அதற்காக எங்களைச் சர்க்கார் பாராட்டவேண்டும். நாங்கள் யாருடைய பாராட்டுதலையும், முகஸ்துதியையும் விரும்பவில்லை. தேசத்திற்குத் தொண்டு செய்வது ஒன்று தான் எங்களுடைய குறிக்கோள். அப்படியிருக்க அநாவசியமாக எங்கள் பேரில் குற்றம் சுமத்துவதை விவரம் தெரியாமலே குற்றம் சாட்டிக்கொண்டு போவதைத்தான் மறுக்க விரும்புகிறேன். தொழிலாளர்கள் கொஞ்சம் கூலி ஜாஸ்தியாகக் கேட்பதனால் போட்டிருக்கக் கூடிய திட்டமே குலைந்து போய்விடும்—நாசமகாப் போய்விடும் என்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்களே, அவர்களை மிகத் தாழ்மையுடன் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். பணம் எப்படி. இன்றையதினம் வீணாகச் செலவாகிக் கொண்டிருக்கிறது. பல துறையில் விரயமாகிக் கொண்டிருக்கிறது என்பதைப் பரிசீலனை செய்தீர்களா ? என்னிடத்தில் அதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருக்கின்றன. அந்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம் உண்மையிலே பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்தால் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் மிச்சமாகும்.

4th November 1958] [Sri M. Kalyanasundaram]

உதாரணமாக அந்த மலைப் பிரதேசத்தில் ஜல்லிக்கு என்ன கூலி கொடுக்கிறார்கள் என்று பார்க்கலாம். சாதாரணமாக சமவெளிப் பிரதேசத்தில் ஒரு யூனிட்டுக்கு 26 ரூபாயிலிருந்து 32 ரூபாய் வரையில் ஆகும். பி. டபுள்யூ. டி. ஐயும் விசாரிக்கலாம். நான் தனிப்பட்ட கண்டிராக்டர்கள் பல பேரை விசாரித்திருக்கிறேன். ஜல்லி உடைத்து அதை எந்த இடத்தில் கொண்டுவந்து கொட்டவேண்டுமோ அந்த இடத்தில் கொண்டு வந்து கொட்டுவதற்கு ஒரு யூனிட்டுக்கு 32 ரூபாயைவிட அதிகம் இல்லை. ஒரு யூனிட் என்பது 100 கன அடி ஆகும். நீலகிரி மலைப் பிரதேசம் ஆகையால் இதைவிட ஜாஸ்தி செலவாகும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் எவ்வளவு ஜாஸ்தியாகும் ? பத்து ரூபாய் இருபது ரூபாய் ஆகுமா ? அல்லது ஒன்றிரண்டு மடங்கு இதைவிட ஆகுமா ? இரண்டு மடங்கே அதிகமாகிறது என்று வைத்துக்கொண்டாலும் ஒரு யூனிட்டுக்கு 64 ரூபாய்தான் ஆகும். ஆனால் இன்றையதினம் ஒரு யூனிட்டுக்கு எவ்வளவு ரூபாய்க்கு பில்லில் கையெழுத்திடப்பட்டுக் கொண்டிருக்கிறது தெரியுமா ? அதைச் சொன்னால் நீங்கள் எல்லாம் ஆச்சரியப்பட்டுபோவீர்கள். ஒரு கண்ட்ராக்ட் கம்பெனிக்கு ஒரு யூனிட்டுக்கு 75 ரூபாய் என்று பில் பாஸ் செய்யப்படுகிறது. ஆனால் அதே கண்டிராக்டர்களே இன்றையதினம் நம் கண் முன்னால் கல் உடைப்பவர்களுக்கு—அந்தத் தொழிலாளர்களுக்கு—ஒரு யூனிட்டுக்கு 7 ரூபாய் தான் கொடுத்து வருகிறார்கள். பாக்கி 68 ரூபாய் என்ன ஆகிறது ? அவர்களுக்கு எவ்வித முயற்சியும் இல்லாமல் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கிறது. இந்த மாதிரியாக செலவாகவில்லையா என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் பார்த்துத் தெரிந்து கொள்ளமுடியும்.

இன்னொரு விஷயம். உத்தியோகஸ்தர்களுக்கு என்று வீடுகட்டுகிறார்கள். அந்த வீடுகள் எப்படி இருக்கின்றன என்பது வேறு விஷயம். ஒரு வீடு 500 சதுர அடிக்கு மேல் இல்லை. அம்மாதிரி 5 வீடுகள் ஒரு ப்ளாக், இப்படி ஒரு ப்ளாக் கட்டுவதற்கு கானன் டங்கர்லிக்குக் காண்டிராக்ட் விட்டிருக்கிறார்கள். காண்டிராக்ட் தொகை எவ்வளவு ? ஒரு ப்ளாக்குக்கு 13 ஆயிரத்து ஐநூறு ரூபாய். அந்தக் கட்டிடத்தை அவர்களே கட்டுகிறார்களா என்றால் இல்லை. அவர்கள் மொத்தமாகக் கண்டிராக்ட்டுக்கு எடுத்துத் தங்களுக்கு கீழ் சப்கண்டிராக்ட்டுக்கு விட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு ப்ளாக்கு 13,500 ரூபாய்க்கு எடுத்து சப் கண்டிராக்டருக்கு 6,500 ரூபாய்க்கு விட்டிருக்கிறார்கள். இடையில் ஒரு ப்ளாக்குக் எவ்வித முயற்சியும் அவர்களால் செய்யப்படாமல் இருக்கும்போதே கிடைப்பது ஏழாயிரம் ரூபாய். இதை அரசாங்கத்தார் கவனித்தார்களா ? மின்சார போர்டார் கவனித்தார்களா ? அக்ரிமெண்டுபடி கானன் டங்கர்லி உத்தியோகஸ்தர்களைக் கொண்டே கட்டவேண்டும் என்று ஏன் வலியுறுத்தக் கூடாது ? இல்லையானால் அக்கிரிமெண்டை ரத்து செய்துவிட்டு அந்த சப்-கண்டிராக்டரிடமே இன்னும் ஒரு ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாகவேண்டுமானாலும் கண்ட்ராக்டை கொடுத்து கட்டிடத்தை நல்ல உறுதியாகவும், அழகாகவும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்தால் இந்த போர்டாருக்கு ஒரு ப்ளாக்கில் ஐயாயிரம் ரூபாய் மிச்சம் ஏற்படும். இப்படிப்பட்ட ஊழல் மலிந்து நிர்வாகச் செலவில் பணம் விரயமாகக் கொண்டிருப்பதை இந்த இடத்தில் நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவராமல் வேறு எந்த இடத்தில் சொல்வது என்று எனக்குப் புரியவில்லை.

Mr. SPEAKER : தாங்கள் இதுவரை 33 நிமிஷங்கள் பேசி இருக்கிறீர்கள். எதிர்க் கட்சித் தலைவர் அரை மணி நேரம் பேசவேண்டும். கனம் அமைச்சர் அவர்கள் ஒரு மணி நேரம் பேச வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். இரண்டு மணிக்கு சபை முடியவேண்டி இருப்பதால் இன்னும் 5 நிமிடங்களுக்குள் கனம் அங்கத்தினர் அவர்கள் தன்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri M. KALYANASUNDARAM : இம்மாதிரி இன்னும் நாலைந்து விஷயங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் எழுத்து மூலமாக நான் அமைச்சர் அவர்களிடத்தில் கொடுக்கிறேன். அவற்றைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[Sri M. Kalyanasundaram] [4th November 1958

குந்தா திட்டம் சம்பந்தப்பட்ட வரையில் தொழிலாளர்களைக் குறை சொல்லாமல் குறைந்தபட்ச வசதிகளையாவது அவர்களுக்குக் கொடுத்து அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தால்தான் அவர்கள் அதிக உற்சாகத்துடன் வேலை செய்வார்கள் என்பதை எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன்.

மின்சார போர்டின் கீழ் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் மார்ச் 13-ம் தேதியே ஸ்ட்ரைக் செய்வதாக நோட்டீஸ் கொடுத்திருந்தார்கள். அப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமை ஏற்படக் கூடாது என்பதற்காகவே அப்போது தொழில் அமைச்சராக இருந்த ஸ்ரீ வெங்கட்ராமன் அவர்கள் தக்க நடவடிக்கையெடுத்துக்கொண்டார்கள். மின்சார அமைச்சராக இருந்த ஸ்ரீ ராமையாவும், எதிர்க்கட்சித் தலைவர்களும் எல்லோரும் ஒருமுகமாக இருந்து தொழிலாளர்களுடனும் கலந்து பேசி அவர்களுடைய குறைபாடுகளை எல்லாம் விசாரிப்பதற்கு ஒரு கமிட்டி நியமிப்பது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. மின்சார போர்டும் அதை ஒப்புக்கொண்டது. அதே நல்லெண்ணத்துடன் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளும் ஒத்துழைத்ததால் அந்தக் கமிட்டி நல்ல முறையில் பரிசீலனை நடத்தி அவர்களுடைய சிபார்சுகளை சமர்ப்பித்திருக்கிறார்கள். ஆனால் இந்த அறிக்கையைப் பார்க்கும்போது அந்தச் சிபார்சுகள் எதையும் ஒப்புக்கொள்ளவில்லை என்று மின்சார போர்டார் குறிப்பிட்டிருப்பதை பார்க்கும்போது யாரும் அதிர்ச்சி அடையாமல் இருக்க முடியாது. ஒரு சமரசம் காண்பதற்காக பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அதில் போர்டார்கள் நடந்து கொண்டவிதம் ஒருமுகமாகக் கூடக் கையெழுத்திடாமல் ஒன்று சேர்ந்த அறிக்கையாக அது வெளிவராது செய்த நிலைமை, இவையெல்லாம் எதைக் காட்டுகிறது ? தொழில் அமைதிவேண்டும், தொழில் அமைதியை உண்டாக்க எல்லோரும் பாடுபடவேண்டும் என்று பிரசங்கம் செய்துவிட்டால் மட்டும் போதுமா ? தொழிலாளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி எத்தனை முறை நிறைவேற்றப் படாமல் தட்டிக் கழிக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் தொழில் அமைதியை உண்டாக்குவதற்கு இவர்கள் சாதகமாக நடந்து கொள்கிறார்களா என்பது தெரியும்.

புதிதாக இவ்வளவு கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்புக் கொடுத்திருக்கிறோம், இத்தனை பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுத்திருக்கிறோம் என்று தொழிலாளர்களுடைய குறைகளை நீக்காமல் பேசிக்கொண்டிருப்பதால் மட்டும் தொழிற்பெருக்கம் நாட்டில் ஏற்பட்டுவிட்டதாகவும் ஆகாது. தொழில் அமைதியை நாம் உண்டு பண்ணியவர்களாகவும் ஆக மாட்டோம். மின்சாரத் தொழிலாளர்களுக்கு நாம் கொடுத்த வாக்குறுதிப்படி பேச்சு வார்த்தை நடத்தும் போதும் கூட மின்சார போர்டார் எவ்வளவு நியாயமற்ற முறையில் நடந்துகொண்டார்கள் என்பது தெரியும். இப்படிப்பட்ட மனோபாவம் உடையவர்கள் இருக்கிற வரையிலும் தொழில் அமைதியை நாட்டில் ஏற்படுத்திவிட முடியாது என்பதை அமைச்சர் அவர்கள் நன்கு உணரவேண்டும். ஹரிகர ஐயர் மிகவும் அனுபவம் உடையவர். தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் மாத்திரமல்ல. எல்லோருமாக ஒன்று
12-10 p.m. சேர்ந்து தயாரித்துக் கொடுத்திருக்கிற ரிப்போர்ட்டுகளின் சிபாரிசுகளை இந்த மின்சார போர்டார் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று சொன்னால் இவர்களுடைய மனோபாவத்தை எடுத்துக் காட்டுவதற்கு இதைவிட வேறொரு சான்று வேண்டாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இடைக்கால நிவாரணம் கொடுக்கப்பட்டது. தபால் தந்தி ஊழியர்களுக்கு 5 ரூபாய் இடைக்கால நிவாரணம் கொடுத்திருக்கிறார்கள். அதன் அர்த்தமென்ன ? இரண்டாவது பே கமிஷனுடைய சிபாரிசுகள் அமுலுக்கு வருகிற வரையிலும் இந்த இடைக்கால நிவாரணம் கொடுக்கப்படும் என்பதுதான். ஆனால் இந்த மின்சார போர்டார் 4 ரூபாய் இடைக்கால நிவாரணம் அளித்தார்கள். ஆனால் இந்த நான்கு ரூபாய் இடைக்கால நிவாரணத்தை ஒரு மாதம் ஒன்றரை மாதம் என்று பலசரக்குக் கடை வியாபாரம் போல ஸேங்ஷன் செய்துகொண்டு பேசுகிறார்களே தவிர திட்டமாக அவர்களுடைய குறைகளையெல்லாம் நீக்கக்கூடிய சிபாரிசுகள் அமுலாகிற வரையில் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்படவில்லை. என்னுடைய 20 வருஷ தொழிற்சங்க அனுபவத்திலே நான் சொல்வேன், இந்த மாதிரி மாதா மாதம் இடைக்கால நிவாரணம் அளித்திருப்பதை நீட்டிக்கொண்டே

4th November 1958] [Sri M. Kalyanasundaram]

போவதை நான் பார்த்ததே இல்லே. ஆகவே ஹரிகர ஐயர் அவர்களுடைய கமிட்டியின் சிபாரிசுகளே உடனடியாக பரிசீலனே செய்து அப்படியே அமுல் நடத்துவதற்கும், அந்தச் சிபாரிசுகள் அமுலுக்கு வரும் வரை இந்த இடைக்கால நிவாரணம் தொடர்ந்து கொடுக்கப்படும் என்று உத்தரவு போடுவதும் அவசியம் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

SRI J. W. MATHA GOUNDER : On a point of personal explanation. நான் குந்தா திட்டத்தில் வேலே செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு சலுகை எதுவும் கொடுக்கவேண்டாம் என்று சொல்லவில்லே. அவர்களுக்கு வேண்டிய எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்படவேண்டும். ஆனல் தொழிலாளர்கள் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவது என்று வந்தால் அதனல் தேச நிர்மாணத் திட்டங்கள் எல்லாம் பாழ்ப் பட்டுப் போகும் என்றுதான் குறிப்பிட்டேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே இந்த மின்சார வரவு செலவுத் திட்டத்தின் பேரில் மூன்றும் நாளான இன்றைக்கு விவாதம் முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. அநேக அங்கத்தினர்கள் பல விதமான யோசனேகளேச் சொன்னர்கள். என்னேப் பொறுத்தமட்டில் நான் சுருக்கமாகச் சில விஷயங்களே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முக்கியமான இந்த மின்சார போர்டானது மத்திய சர்க்காரது சட்டத்தின் கீழ் சமீபக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டு இப்பொழுது நடைமுறையில் இருந்துவருகிறது. இந்த போர்டின் சேர்மனுக நல்ல அனுபவம் பெற்ற ஐ.சி.எஸ். உத்தியோகஸ்தர் இருக்கிருர். அவருக்கு உதவியாக சில அதிகாரிகளும் இருக்கிருர்கள். இந்த போர்டுக்கு ஆலோசனே கூறுவதற்காக ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 12½ கோடி ரூபாய் வரையில் செலவழிக்கப்படும் இந்த ஸ்தாபனத்திற்கு பூரா நாளும் வேலே செய்கின்ற புல்டைம் ஆபீஸரை நியமிப்பதுதான் உசிதம். அப்படி நியமிப்பதன் காரணமாகத்தான் இந்தத் திட்டங்கள் எல்லாம் நன்ருக, வெற்றிகரமாக மிக விரைவில் நடைபெறும் என்பதை ஒருவராலும் மறுக்கமுடியாது. தவிர இந்தக் குழுவில் சட்டசபை அங்கத்தினர்கள் சிலரையும் போடலாம் என்று ஸ்ரீ சின்னத்துரை அவர்களும் சொன்னர்கள். ஆனல் இருக்கும் சட்டத்தைத் திருத்தி அமைத்தாலொழிய சட்டசபை அங்கத்தினர்களேப் போட முடியாது என்பது தெரிந்த விஷயம். ஆகவே நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு இந்த விஷயத்தை எழுதி உத்தியோகச் சார்பதற்றவர்களே சட்டசபை அங்கத்தினர்களே, இந்தக் குழுவில் சேர்ப்பதற்குத் தக்கபடி சட்டத்தைத் திருத்தி எல்லோரும் சேர்ந்து நல்லபடியாகப் பணியாற்றும்படியான வழிவகைகளேச் செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களே முதலில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மின்சார இலாகாவானது மின்சார வேகத்தில் ரொம்பத் திருப்திகரமாக நன்ருக வேலே செய்துகொண்டு வருகிறது என்பதைப் பற்றி எல்லா அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். மற்ற மாகாணங்களேக் காட்டிலும் நம் மாகாணமானது இந்தத் துறையில் நன்ருக முன்னேறி வருகிறது. மக்களுக்கும் ஒரு விதத்தில் திருப்தியைக் கொடுத்திருக்கிறது.

ஆனல் இதில் சில முக்கியமான கஷ்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அவைகளே எல்லாம் நன்ருகப் பரிசீலனே செய்து அமைச்சர் அவர்கள் திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதன்முதலாக லேசென்ஸ்தார்களேப் பற்றிய பிரச்னே. இன்னும் சில பிரைவேட் லேசென்ஸ்தார்களில் தனியார் எட்டுப் பேரும், முனிசிபல் லேசென்ஸ்தார்களில் ஐந்து பேர்களும், ஆகப் பதின்மூன்று பேர்கள் இருந்து வருகிருர்கள். இவைகளேயெல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொள்வதற்கு இன்னும் எத்தனே காலம் ஆகவேண்டும் என்று சொல்ல வேண்டும். புதிய ஐவேஜி இல்லாத காரணத்தினல் இவைகளேயெல்லாம் விலே கொடுத்து வாங்க முடியவில்லே என்பது ஒரு காரணமாக இருக்குமோ என்று நான்

[Sri V. K. Ramaswamy Mudaliar] [4th November 1958

நினைக்கிறேன். இருந்தாலும் இந்தப் பிரைவேட் லைசென்ஸ்தார்கள் அனுமதிக்கப்பட்டிருப்பதன் காரணமாக சில பிராந்தியங்கள் நன்கு வளர்ச்சி யடைய முடியாமல் இருக்கின்றன. ரூரல் பாப்புலேஷனுக்கு அவர்கள் போதுமான வசதியை கொடுப்பதில்லை. அதிக லாபம் வருகிறது என்ற காரணத்திற்காக டவுனுக்கும் அங்குள்ள தொழிற்சாலைகளுக்குமே அதிகம் கொடுக்கிறார்கள். விவசாயிகளுக்குப் போதுமான உதவி செய்வதில்லை. இப்படியே இருந்துகொண்டு போனால் இந்த மின்சார இலாகா எவ்வளவு தான் நல்ல முறையில் நடந்தாலும் தனியார் ஸ்தாபனங்கள் உள்ள பிராந்தியங்களில் வளர்ச்சி ஏற்படாமல் போய்விடும். ஆகையால் கூடிய சீக்கிரம் இவைகள் எல்லாவற்றையும் வாங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு நமது அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காருக்கு எழுதி போதுமான பணம் பெறவேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன்.
12-30 p.m. இதிலே மத்திய சர்க்காரும் ஒரு சீலிங் போட்டிருக்கிறார்கள். இதைப் பற்றி நாம் மிகவும் வருத்தப்படவேண்டியவர்களாக இருக்கிறோம். முக்கிய மாக நாம் அதிகமாக வேகமாக முன்னேறியிருக்கிறோம் என்று நாம் சொல்லிக்கொள்கிறோம். இதற்கு இன்னும் ஸீலிங் போடுவது நல்லது அல்ல. அதில் பிரயோஜனமும் இல்லை. லைஸென்ஸ்தாரரிடமிருந்து வாங்குவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கவேண்டும். இதற்காக தனிப் பட்ட முறையில் மூன்று கோடி ரூபாயோ அல்லது நான்கு கோடி ரூபாயோ வாங்கி இவைகளை எல்லாம் அக்யூர் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்விதம் செய்தால்தான் இந்த சர்க்கார் கிராமங்களுக்கு நன்மை செய்தவர்களாக ஆவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தவிரவும் இன்னும் சில கம் பெனிகளை உடனுக்குடனேயே இப்போது சர்க்கார் எடுத்துக்கொண்டால், கம்பெனிகளும் தாங்கள் சர்க்காருக்கு கொடுத்துவிடுவதற்கு தயாராக இருப்பதாக தெரிகிறது. அதாவது the period of suspense என்கின்ற முறையில் எடுத்துக்கொள்வது என்றால் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், இல்லையென்றால் போதுமான வசதியோடு நடத்து வதற்கு போதுமான வசதிகள் கம்பெனிகட்கு செய்து தரவேண்டு மென்றும், இல்லையென்றால் வேகமாக கிராமங்களுக்கு எல்லாம் மின்சாரத்தை பரப்ப முடியாது என்றும் கம்பெனியார்கள் தெரிவிக்கி றார்கள். ஆகவே இதற்கு ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று வற் புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். பணம் இல்லாவிட்டால் அவர்களுக்கு "காரண்டட் இண்டரஸ்ட்" (Guarenteed Interest) என்கின்ற முறை யில் ஏற்பாடு செய்து ஐந்து வருடத்திலோ அல்லது பத்து வருடத்திலோ, அடைக்க வேண்டிய ரூபாயை கொடுத்து விடலாம் என்ற ஒரு ஏற்பாட்டை கொண்டுவரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக சில கிராமங்களில் "க்ரூப் ஸிஸ்டம்" (Group system) இருக்கிறது. முக்கியமாக திருநெல்வேலி ஜில்லா, ராமநாதபுரம் ஜில்லா போன்ற ஜில்லாக்களில் இந்த ஸிஸ்டத்தினால் நன்மை ஏற்படுவதாக தெரியவில்லை. அதில் ஆறு மணி முதல் 12 மணி வரையிலும் ஒரு செக்ஷனுக்கும், 12 மணி முதல் 6 மணி வரை ஒரு செக்ஷனுக்கும் மின்சாரம் கொடுக்கப்படுகின்றது. இம்மாதிரி கொடுப்பதின் காரணமாக சில கிணறுகளில் ஜலம் இருந்தால் ஒரு மணி நேரத்திற்கு தான் மறுபடியும் தண்ணீர் நிறையும்போது தண்ணீர் இறைக்க வேண்டுமென்றால் இறைக்க முடியாது. தண்ணீர் மறுபடியும் இறைக்கவேண்டுமென்றால் அடுத்த நாள் தான் இறைக்க முடிகிறது. ஆகவே இந்த முறை அவ்வளவு பிரயோஜனமாக இல்லை. அதிலும் க்ரூப் ஸிஸ்டம் சில பிராந்தியங்களில் அதாவது முக்கியமாக திருநெல்வேலி, ராமநாதபுரம் போன்ற ஜில்லாக்களில் கேரளாவிலிருந்து சப்ளை கிடைக்கும் இடங்களில் இந்த ஸிஸ்டத்தை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற இடங்களிலும் பகல் நேரங்களில் ஆறு மணி நேரம், அதாவது ஒரு நாள் விட்டு ஒரு நாள் கொடுப்பதும் விவசாயி களுக்கு பிரயோஜனமாக இல்லை. இப்போது மின்சாரம் குறைவாக இருப் பதினால் முழு நேரமும் கொடுக்க முடியவில்லை என்று சொல்லப்படு கிறது. இதனால் அனேகம் விவசாயிகள் மின்சாரத்தை உபயோகப்படுத்த முடியாமல் இருக்கிறார்கள். அதோடு வேலை ஆட்கள் இரவில் கிடைக்காத கஷ்டங்கள், அதோடு வேறு பல கஷ்டங்களும் வந்து சேருகின்றன. இதனால் அவர்களுடைய வேலைகள் எல்லாம் தடை படுகிறது. ஆகவே

4th November 1958] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

உணவு உற்பத்தியை அதிகமாக பெருக்க வேண்டுமென்றால் காலை நேரத்திலேயே எட்டு மணி நேரத்திற்கு மின்சாரம் கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி செய்யாவிட்டால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுவார்கள். அதன் காரணமாக உணவு உற்பத்தியையும் பெருக்க முடியாது என்பதை திட்ட வட்டமாக சொல்ல விரும்புகிறேன். சென்ற மாதத்திலிருந்து பெரியாறு பிராஜெக்டிலிருந்து 35-ஆயிரம் கிலோ வாட்ஸ் கிடைப்பதால் நமக்கு மின்சாரம் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. ஆகையினால் இதை வைத்துக்கொண்டாவது ஒரேயடியாக எட்டு மணி நேரம் மின்சாரம் பகல் நேரத்தில் கொடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். கைத்தொழில்களை சம்பந்தப்பட்டவரையில், சுமார் பத்தாயிரம் ரூபாய் போட்டு ஒரு சிறிய கைத்தொழிற்சாலையை ஆரம்பிப்பது என்று வைத்துக்கொண்டால், அதில் அவர்களுக்கு ஐந்து பங்கு தான் மின்சாரத்திற்கு செலவு ஆகிறது, மீதி 95 பங்கும் லாபம் கிடைக்கிறது என்று தெரிந்தால் அவர்களுக்கு இப்போது இருக்கிற டாரிப் ரேட்டை அதிகப்படுத்தலாம் என்று நான் நினைக்கிறேன். அதே போன்று 100-ல் 50 பங்கு மின்சாரத்திற்காக செலவிடப்படுகிறது என்றால் அதற்கான மின்சாரத்தை குறைவான கட்டணத்தில் கொடுக்கலாம், அவர்களுக்கு டாரிப் ரேட்டை குறைக்கலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்து வேண்டிய முடிவு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தொழிலாளர்களைப்பற்றி இங்கு சொல்லப்பட்டது. கனம் அங்கத்தினர் கல்யாண சுந்தரம் அவர்கள் இந்த இலாகாவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களைப்பற்றி விரிவாக சொன்னார்கள். நாங்கள் எல்லோரும் நெகோஷியேஷன் காரியமாகவும், அவர்களுடைய ஊதியம் விஷயமாகவும் என் எம். ஆர். தொழிலாளர்களுக்கு சலுகை கொடுப்பதைப்பற்றியும் அமைச்சர் அவர்களை சந்தித்து விவாதித்தோம். அவர்களுக்கு இந்த சலுகைகள் எல்லாம் கொடுக்காவிட்டால் நாம் மேலும் இந்த திட்டத்தில் முன்னேற்றம் காண முடியாது. நீண்ட கால உதவி கொடுத்து அவர்கள் திருப்தியாக வேலை செய்யும்படியாக ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, அவர்கள் கிளர்ச்சிகளில் ஒன்றிலும் ஈடுபடக்கூடிய அவசியமேற்படாத வகையில் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி பிராந்தியத்திலும் இம்மாதிரியான நல்ல தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் வேலைக்கு வருவதற்கு தயாராக இருப்பதாகவும், அவர்களுக்கு வேலை கொடுக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தும் அவர்களுக்கு கொடுக்காமல் இருக்கிறார்கள் என்றும் எனக்கு அனேக புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அது எவ்விதமிருந்தபோதிலும் பொதுவாக இந்த தொழிலாளர்களுடைய குறைகளை எல்லாம் உடனடியாக கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது சர்க்காரால் 70 கோடி ரூபாய் போர்டுக்கு கொடுக்கப்பட்டது. இது 25 வருடகாலத்துக்கு முன்பு கொடுக்கப்பட்டதாக தெரிகிறது. இந்த வட்டி குறைவாக கிடைத்தாலும் பரவாயில்லை, இதை உபயோகித்து விவசாயிகளுக்கு இன்னும் கூடுதல் சலுகை கொடுக்கும்படியான திட்டங்களை போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பரம்பிக்குளம், நெய்வேலி திட்டங்கள் எல்லாம் நிறைவேறப் போகின்றன. நெய்வேலி திட்டத்தைப் பொறுத்த வரையில் இரண்டொரு மாதங்களில் பலன் கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். ஒரு பக்கத்தில் இன்னும் கரி எடுக்கவேண்டுமானால் தண்ணீர் இன்னும் இறைக்கவேண்டியிருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். ஜெர்மன் பம்புகள் மூலம் வெற்றிகரமாக தண்ணீரை எல்லாம் இறைத்தும் வருவதாகத் தெரிகிறது. இருந்தபோதிலும் தெர்மல் ஸ்டேஷன் ஏற்படுவதற்கு இன்னும் காலதாமதம் ஆகும் என்ற வதந்தியும் இருக்கிறது. இதற்கு ரஷ்யன் எய்ட் எல்லாம் கோடிக்கணக்கான ரூபாய்கள் வரப் போகிறது. அதற்கு திட்டம் போட்டிருக்கிறார்கள். ஆனால் நான் விசாரித்த 12-40 p.m. அளவில் இதற்கு அவ்வளவு அன்னியச் செலாவணியும் மத்திய சர்க்கார் கொடுப்பார்களா என்பது தெரியவில்லை. உடனடியாக, சுரங்கத்திலிருந்து வெட்டியெடுக்கக் கூடிய நிலக்கரி வந்தவுடனே, தெர்மல் ஸ்டேஷன் போட்டு உடனடியாக மின்சாரத்தை விஸ்தரிக்க முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [4th November 1958

(Deputy Speaker in the Chair.)

இது ஒரு கமெர்ஷியல் கன்சேர்ன் (commercial concern). நூற்றுக்கு பத்து வீதம் வட்டி கட்டினுல்தான் இந்த மின்சாரத்தைக் கொடுக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. தவிர மினிமம் க்யாரண்டி கொடுக்க வேண்டுமென்று திட்டம் போட்டிருக்கிறார்கள். உண்மையில் நமக்கு முக்கியமாக நீர்ப்பாசன வசதி அதிகமாக இல்லாத காரணத்தினுல் தமிழ் நாட்டில் பஞ்சப்பிரதேசமாக அநேக ஜில்லாக்கள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு அதிகமான சலுகைகள் கொடுக்கவேண்டும். அப்படிச் சலுகை கொடுத்து அவர்கள் இப்போது கொடுக்கும் மினிமம் க்யாரண்டியும் சரி, அவர்கள் கொடுக்கும் ரேட்டிலும் சரி கண்டிப்பாகக் குறைக்க வேண்டும். அப்படிக் குறைத்து இன்னும் வருவாயைச் சரிக்கட்டவேண்டுமென்றால் தொழில்களுக்குக் கொடுக்கும் மின்சாரத்திற்குக் கொஞ்சம் அதிகம் போட்டு விவசாயிகளுக்கு எவ்வளவு அதிகம் குறைத்துக் கொடுக்க முடியுமோ அவ்வளவு குறைத்துக் கொடுக்க வேண்டும். அம்மாதிரிக் கொடுத்தால் உணவு உற்பத்தி அதிகமாக ஆகும் என்று சொல்லவேண்டியதில்லை. இதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது சர்க்கார் கொடுத்திருக்கக் கூடிய அறிக்கையில் அநேக சலுகைகள் கொடுத்திருப்பதாகப் போட்டிருக்கிறார்கள். எது எப்படியிருந்த போதிலும் நிர்ப்பந்தம் இருக்கிறது. மினிமம் சார்ஜ் கொடுத்து விட்டு அதிகமான பலாத்காரம் ஏற்பட்டு தொந்தரவுகள் ஏற்பட்டு வருகிறது. சில க்யாரண்டி—அக்ரிமெண்ட்—கொடுத்த பிறகு வாபஸ் வாங்கினுல் சலுகை கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. கனெக்ஷன் கொடுக்கும் முன்பே மினிமம் சார்ஜ் கொடுக்கவேண்டும். விவசாயிகளுக்குக் கொடுக்கும் மின்சாரத்திற்கு ரேட்டைக் குறைக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டு மறுமுறை இந்த மின்சார இலாகா செய்து வரும் நல்ல வேலைகளைப் பாராட்டுகிறேன். மற்றும் இந்த இலாகாவில் வேலை செய்வோர்கள் எல்லாரையும் பாராட்டுகிறேன். அவர்கள் நல்ல முறையில் வேலை செய்து வருகிறார்கள். இதைவிட இன்னும் அதிக வேகமாக மின்சார விஸ்தரிப்பானது நடைபெறவேண்டும். அதற்கு அதில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு நல்ல பல சலுகைகளைக் கொடுக்கவேண்டும், அத்தோடு மத்திய சர்க்காரிடமிருந்து இன்னும் அதிகமாகப் பணத்தைக் கேட்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதன் முதலில் தங்களுக்கு மின்சார போர்டின் சார்பாகவும், என்னுடைய சொந்த சார்பாகவும், எங்களுடைய பெரும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், தாங்கள் இந்தச் சபையில் இருக்கக் கூடிய அங்கத்தினர்களுக்கு, மின்சார போர்டின் முதல் அறிக்கையின் மீது விவாதம் செய்வதற்கு மூன்று தினங்கள் ஒதுக்கிக் கொடுத்தற்காக உண்மையில் நாங்கள் பெரு மகிழ்ச்சியடைகிறோம்—சந்தோஷப்படுகிறோம். உங்களுடைய இந்த நல்ல முடிவு தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டுகளுக்கும் இருக்கவேண்டும். அதோடு கூட வர வர 4 தினங்கள், 5 தினங்கள், 6 தினங்கள் என்று இப்படியே உயர்த்தவேண்டும். இதை விட அடுத்த ஆண்டுகளுக்கு குறைக்கக்கூடாது. (குறுக்கீடு) கனம் அங்கத்தினர் கோதண்டராமன் அவர்களுக்கு எந்த விதமான ஒரு சந்தேகமும் வேண்டாம். ஊழல்கள் அதிகமாக இருக்கும் என்று அவர்கள் நினைத்திருந்தால், 3 தினங்களாக இங்கே இருந்து இந்த விவாதங்களைக் கேட்ட அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும், எத்தனை தூரம் ஊழல்கள் இருக்கின்றன. எத்தனை தூரம் அரசாங்கமும், போர்டும் சேர்ந்து நன்றாக—சிறந்த முறையில்—நடத்தி வருகிறார்கள்—கவனித்து வருகிறார்கள்—என்பதைப் பற்றியெல்லாம் அங்கத்தினர்கள் சொல்லியதிலிருந்து. 4 தினங்கள், 5 தினங்கள், 6 தினங்கள் என்று உயர்த்தவேண்டுமென்று சொல்வதற்கு முக்கிய காரணமே, போர்டின் வேலையைப் பற்றி ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவர்களுடைய கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பு இருக்க வேண்டுமென்பதற்காகத்தான். ஆகையால் இந்த போர்டு அறிக்கையின் விவாதத்திலே எல்லா அங்கத்தினர்களும் அவரவர்களுடைய கருத்துக்

4th November 1958] [Sri V. Ramaiah]

களைச் சொல்லவேண்டும். அவரவர்களுக்கு இருக்கக் கூடிய கஷ்டங்களைச் சொல்லவேண்டும். அவரவர்களுடைய நல்ல ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும். இந்த எண்ணத்தில் தான் இந்த விவாதத்திற்கு அதிகப் படியான நாட்களை ஒதுக்க வேண்டும் என்று நான் சொல்ல விரும்புகி றேன். ஊழல்கள் அதிகமாகிவிடும், குறைகள் அதிகமாக வந்துவிடும் என்ற அச்சம் இல்லை. (குறுக்கீடு) அப்படி இருந்தால் நான் வேண்டாமென்று சொன்னாலும் மன்றம் விட்டுவிடாது. அந்த சந்தேகம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருக்கு வேண்டியதில்லை. இந்த மூன்று தினங்களாக பல அங்கத் தினர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொண்டார்கள். பல நல்ல கருத் துக்களைச் சொன்னார்கள். சொன்ன நேரத்தில் கம்யூனிஸ்ட் கட்சித் தலை வருக்கு ஒரு சந்தேகம் இருந்தது. இந்த வரவு செலவுத் திட்டம் சபையின் ஓட்டுக்கு வரவில்லையே, வர முடியாது போய் விட்டதே, ஆதலால் ஒரு சமயம் இங்கே சொல்லக்கூடிய கருத்துக்களை, கூறப்பட்ட பல குறைகளை, கவனிப்பார்களோ, அல்லது கவனிக்க மாட்டார்களோ என்ற சந்தேகம் சிலருக்கு ஏற்பட்டிருக்கலாம். அந்த விதமான சந்தேகம் ஏற்பட அவசியமே கிடையாது. அங்கத்தினர்கள் கூறிய நல்ல கருத்துக்களை நல்ல யோசனைகளை வரக்கூடிய ஓராண்டு காலத்தில் நல்ல விதமாக பரிசீலனை செய்து நல்ல முடிவு செய்வோம். குறிப்பாக இங்கு குறிப்பிடப்பட்ட பல கருத்துக்கள் மின்சார போர்டின் அதிகாரிகளுடைய வேலையை மேலும் பலப்படுத்தக் கூடிய முறையில், ஆர்வமூட்டக் கூடிய முறையில் கடந்த மூன்று தினங்களுக்கு இந்த விவாதம் அமைந்தது. அதற்காக அங்கத் தினர்கள் அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார போர்டைப் பொறுத்த வரையில் ஏதோ சில அங்கத்தினர்கள் தான் பேசினார்கள். அவர்களுக்கு மட்டும் தானே நன்றி செலுத்தினேன் என்று இந்த இலாகாவைப்பொறுத்த வரையில் எண்ணவேண்டியதில்லை. அங்கத்தினர்களுக்கும் இந்த இலாகாவிற்கும் அதிக இணைப்பு இருக்கிறது. எவ்வளவோ அக்கரையோடு, எவ்வளவோ ஆர்வத்தோடு, கடந்த ஓராண்டு காலமாக பல நல்ல கருத்துக்களைச் சொன்ன அங்கத்தினர்களுக்கு இந்த மூன்று தினங்களில் பேச சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது. அவர் களெல்லாம் ஈராண்டு காலமாக அடிக்கடி என்னைச் சந்தித்து பல நல்ல யோசனைகளைச் சொன்னார்கள். அந்த யோசனைகளின் பேரில் பல மாறு தல்கள் ஏற்பட முடிந்தது. எல்லோரும் ஒன்று சேர்ந்து மின்சார இலாகா வின் வேலையை நன்கு கவனித்து மேலும் அதிகமாக மக்களுக்குப் பயன்படக் கூடிய முறையில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

ஆரம்பத்திலே நான் சபைக்குக் கொடுத்த அறிக்கையை, விரிவாக, விளக்கமாகக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தான் மிகவும் சிரமமாக இருந்தாலும் எல்லா விவரங்களையும் சேகரம் செய்து கொடுத் தால் தான் இந்த மாகாணத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய அபிவிருத்தி களைப் பார்க்க முடியும், எல்லா மாகாணங்களிலும் இருப்பதை விட இந்த மாகாணத்தில் மின்சார இலாகா நல்ல விதமாக வேலை செய்கிறது என்ற நினைப்பில் இருக்கிறார்களே அது சரிதானா, உண்மையிலேயே நல்ல முறையில் வேலை செய்கிறதா, அல்லது குறைகள் ஏதாவது இருக்கின்றனவா, என்று எல்லோரும் தெரிந்து கொள்ளவேண்டுமென்று தான் 66 பக்கங்கள் கொண்ட, விஷயங்கள் நிறைந்த, ஒரு அறிக்கையைக் கொடுத்தேன். அதன் மீது மூன்று தினங்கள் விவாதம் நடந்திருக்கிறது. ஆரம்பத்தில் சொன்னது போல பல நல்ல கருத்துக்கள், பல நல்ல ஆலோசனைகள், தெரிவிக்கப்பட்டன. பக்கம் பக்கமாகப் படித்திருக்கிறார் கள் அங்கத்தினர்களெல்லாம். அப்படிப்படித்தால் தான் நல்ல ஆலோ சனைகளைச் சொல்லியிருக்க முடியும். ஏற்பட்டிருக்கிற முன்னேற்றத்தைப் பற்றியும், புதிய ஆலோசனைகளையும் சொல்ல முடியும். அந்த முறையில்
சொல்லப்பட்ட ஒவ்வொரு ஆலோசனைக்கும் நல்ல முறையில் பதில் சொல்ல 12.50 p.m.
வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். ஆனால் சென்ற மூன்று தினங் களாக நடந்து வரும் விவாதத்தை நாம் சற்று கவனித்துப் பார்க்க வேண்டும். இந்த விவாதத்தை இரண்டு விதமாகப் பிரித்துக்கொள் வதற்கு நான் ஆசைப்படுகிறேன். ஒன்று இந்த அறிக்கையை நன்றாகப் படித்து, அதிலே இருக்கக்கூடிய குறைகளை எடுத்துச்சொல்லி, பல

கருத்துக்களைத் தெரிவித்து, மேலும் நல்ல முறையில் நடைபெறுவதற்காகச் சொன்ன ஆலோசனை. மற்றொன்று அறிக்கை எத்தனை பக்கமாக இருந்தாலும் சரி, அதிலே என்ன பொருள் அடங்கியிருந்தாலும் சரி, என்ன நோக்கத்தோடு கொடுக்கப்பட்டிருந்தாலும் சரி, அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், நாங்கள் சொல்லுவதைத்தான் சொல்லுவோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் பலர் சொன்னதை நான் இங்கே திரும்பச் சொல்ல விரும்புகிறேன்.

(இந்த சமயத்தில் ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி எழுந்தார்.)

DEPUTY SPEAKER: The Hon. Minister is not yielding. I would request the hon. Member not to interrupt the Hon. Minister. If he wants to say anything I will allow him after the Hon. Minister finishes his reply.

THE HON. SRI V. RAMAIAH : கனம் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களை நான் தாழ்மையாகக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், அவர்களைப் போல் அடுக்கு மொழியிலே வேகமாக, விரைவாகப் பேசுவதற்கு எனக்கு அமைப்பு இல்லாவிட்டாலும், நான் சொல்லக்கூடியது அத்தனையும் கற்பனை பண்ணிச் சொல்லக் கூடியது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மறுபடியும் ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி பேசுவதற்கு எழுந்தார்.)

நான் பேசி முடிப்பதற்குள் அங்கத்தினர் ஏன் அவஸ்தைப் படவேண்டுமென்று தெரியவில்லை.

DEPUTY SPEAKER : I would request hon. Members not to interrupt the Hon. Minister.

THE HON. SRI V. RAMAIAH : ஒரு அங்கத்தினர் குறைகளை எடுத்துச் சொன்னார் என்பதற்காக அந்த அங்கத்தினர் மீது எனக்கு வருத்தம் கிடையாது. ஆனால் பேச ஆரம்பிக்கின்ற நேரத்திலேயே, இந்த அறிக்கையில் குற்றம் என்ன இருக்கிறது என்ற வகையில், கனம் ஆசைத்தம்பி அவர்கள் சொன்னது போல, அட்டைப்பக்கத்தில் ஒரு சின்னமும், முதல் பக்கத்தில் ஒரு சின்னமும் போடப்பட்டிருக்கிறது என்பதைத்தான் சொல்ல முடிகிறது.......

SRI A. GOVINDASAMY : அனுவசியமாக எங்களைப்பற்றிக் குற்றம் சொல்லுகிறார்கள்.......

THE HON. SRI V. RAMAIAH : நான் அதை எப்படி எடுத்துக்கொள்கிறேன் என்றால், 66 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையைப் படித்து, வேறு எந்தவிதமான குற்றம் குறையையும் காண முடியாத நிலையில் இந்த மாதிரிக் குறையைத்தான் சொல்ல முடிந்தது.

இன்னும் நல்ல நுணுக்கமாக அறிக்கையைப் படித்து பேச ஆரம்பிக்கிறபொழுதே எச்சரிக்கையோடு பேசினார் கனம் ப. உ. சண்முகம். எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்களே என்று நினைத்து அலட்சியம் செய்து சும்மா இருந்துவிடக் கூடாது என்ற முறையில் பிரசங்கத்தை ஆரம்பித்தார்கள். அவருக்கு இந்த மனோ நிலை ஏற்படக்கூடாது. உண்மையிலேயே எல்லாவற்றையும் நுணுக்கமாக ஆராய்ந்து கவனித்து தான் செய்து வருகிறோம். அவர்கள் இந்த அறிக்கையைக் கண்டிப்பாகப் படித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொன்னது என்ன "அப்பெண்டிக்ஸ்" பாகத்திலே முதல் வரியைப் படித்துவிட்டு அதிலே இருக்கக்கூடிய குறையை மட்டும் எடுத்துச் சொன்னார்கள். "இந்த மின்சார போர்டு வந்து அதிகமாக வேலை செய்து விட்டது, பெரும் வெற்றி அடைந்து விட்டது என்றெல்லாம் சொல்லுகிறார்களே, இந்த தேசத்திலே இருக்கக்கூடிய மாகாணங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் நமது மாகாணம் மூன்றாவது ஸ்தானத்திலே தானே இருக்கிறது" என்று சொன்னார்கள்.

4th November 1958] [Sri V. Ramaiah]

உண்மையிலேயே அது பெரிய குறை தான். ஆனால், அவரால் மேலே என்ன குறைகளைச் சொல்ல முடிந்தது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கடைசியாக ஒரு எச்சரிக்கை விடுத்தார்கள். அதாவது, தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவர்களது பிரச்னை சரியான முறையில் தீர்க்கப்படாவிட்டால், மின் சக்தி எப்படி மக்கள் மீது பாய்ந்து பெரிய நஷ்டத்தை ஏற்படுத்துகிறதோ, அதேபோல ஏற்படுத்திவிடும் என்று சொன்னார்கள். தொழிலாளர்கள் மீது அவருக்கு இருப்பதைக் காட்டிலும் எனக்கு உள்ள அக்கறை கொஞ்சம் கூட குறைவானதாக இல்லை. அவரைக் காட்டிலும் எனக்கு அதிகமாகத்தான் இருக்கிறது. அது எனக்கும், தொழிலாளர்களுக்கும் தெரியும். பின்னால் விரிவாக இதைப்பற்றிப் பேசுகிறேன்.

அடுத்து, கனம் சுப்ரமணியம் பேசினார்கள். அதே கருத்தைத்தான் அம்மையாரும் பேசினார்கள். அவர்கள் நீண்ட நாட்களாக சட்ட சபையில் இருந்த காரணத்தால் சொன்னார்கள், "நீங்கள் கிராமங்களுக்கு மின் சாரம் கொடுத்ததினால் பெருமைப்படுவதற்கு ஒன்றும் இல்லை, வெளிச்சம் போட்டு விட்டால் மட்டும் போதாது" என்று. இதைத்தான் அவர்களிட மிருந்து நாம் எதிர்பார்ப்போமேயானால், அவர்கள் எவ்வளவு தூரம் இந்த மின்சார இலாகாவைப் பற்றிப் புரிந்து கொண்டிருக்கிறார்கள், மேலும் மக்களுக்கு சேவை செய்யவேண்டுமென்ற முறையில் என்ன கருத்துக்களைச் சொன்னார்கள் என்று பார்த்தால், ஒன்றுமில்லை என்று தான் சொல்ல வேண்டும். குந்தாவைப் பார்த்து நகைக்கும்படியான சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டிருக்கலாம். குந்தாவை "அண்டா"வுடன் ஒப்பிடலாம். குந்தாவினால் என்ன மாறுதல் ஏற்பட முடியும் என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், இந்த மாகாணத்தில் இருக்கக்கூடிய அத்தனை பேரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். குந்தாத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்ற ஆசையை அவர்கள் தெரிவிக்காமல் இருக்கலாம். ஆனால் இந்த அவையில் இருக்கக் கூடிய அத்தனை பேரும் அது சீக்கிரமாக நிறைவேற்றப்படவேண்டுமென்று கருதுகிறார்கள். குந்தாத் திட்டத்திற்காக வெளி நாட்டிலிருந்து கடன் வாங்கக் கூடிய நமது அரசாங்கம் சென்டிரல் ரயில்வே நிலையத்திலிருந்து அரக்கோணம் ரெயில்வே நிலையத்திற்கு மின்சாரம் ரயில் போடக் கூடாதா என்று அவர்கள் கேட்டார்கள். இந்த ரயில் ஓடுவதற்கு மின்சார சக்தி வேண்டும். அதைத்தான் இப்பொழுது உற்பத்தி செய்து கொண்டு வருகிறோம். இந்த மாகாணத்திலே பல்வேறு தொழில்களை அமைப்பதற்கு மின்சார சக்தி தேவை. அந்தத் தேவையை உணர்ந்து தான் அரசாங்கம் அதனுடைய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சார விஸ்தரிப்புக்கு முக்கியமான இடம் கொடுத்திருக்கிறது. அவர்கள் நினைப்பது போல் ஏதோ சுலபமாக மக்கள் மனத்திலே ஒரு எண்ணத்தை ஏற்படுத்தி விடலாம், ஒரு பிரசாரத்தைச் செய்து விடலாம் என்ற கருத்தோடு மின்சார விஸ்தரிப்பைக் கிராமங்களுக்குக் கொடுத்திருந்தோமேயானால் உண்மையிலேயே அதைப்பற்றி நாம் சிந்தனை செய்து பார்க்க வேண்டும். மின்சார சக்தியை எதற்காக கிராமங்களுக்குக் கொண்டு போகிறோம்? அவர்கள் சொல்லுவதுபோல வெளிச்சம் போடுவதற்கு மட்டும்தானா? இப்பொழுது கிராமத்திலே இருக்கக்கூடிய அமைப்பை மாற்றுவதற்காக. ஆனால் இதை கனம் அங்கத்தினரால் புரிந்து கொள்ள முடியாது. கிராமத்திலுள்ள ஏழை விவசாய மக்களால் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். கிராமப் புறங்களுக்கு அடிக்கடி போகிறவர்களுக்கு இது தெரியும். தங்களுடைய கிராமங்களுக்கு மின்சார சக்தி கிடைக்காமல் தடைப்பட்டு இருப்பதனால் தங்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாக விவசாயிகள் கருதுகிறார்கள். பட்டிணத்தில் வாழக் கூடியவர்கள் மின்சார சக்தி வெளிச்சத்திற்கு மட்டும்தான் உதவும் என்று 10 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பு நினைத்துக்கொண்டிருக்கலாம். பட்டிணத்தில் வாழக்கூடிய மக்களுக்குத் தான் அது சொந்தம் என்று நினைத்திருக்கலாம். கிராமங்களில் வாழக் கூடிய விவசாய மக்கள் தங்களுடைய பொருளாதார நிலை உயருவதற்கு மின்சார சக்தி வேண்டுமென்று கேட்கிறார்கள். அம்மையார் அவர்கள் சென்ற மூன்று தினங்கள் இங்கே அமர்ந்து பார்த்திருந்தால், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும், மற்ற எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும்,

[Sri V. Ramaiah] [4th November 1958

அவர்களுக்கு பின்னுல் இருக்கக்கூடிய கனம் சுப்பையா அவர்களும், கடைசியாகப் பேசின எதிர்கட்சித் தலைவர் அவர்களும், எப்படி இந்த விஸ்தரிப்பை இன்னும் அதிகமாக்கவேண்டும் என்பதை எடுத்துச் சொன்ஞர்கள் என்பதைப் புரிந்து கொண்டிருப்பார்கள். அதே பொருள் கொடுக்கக்கூடிய முறையில் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த கனம் கோவிந்தசாமி அவர்களும் சொன்ஞர்கள். காரணம், அவர் கிராமப் பகுதியில் இருப்பதனுல், தன்னுடைய ஜில்லாவிலே இந்த விஸ்தரிப்பு அதிகமாக நடக்கவில்லையே என்பதுதான் அவர்களுடைய குறை எல்லாம். வெளிச்சம் போடுவதற்காகத்தான் இந்த மின்சார சக்தி கொடுக்கிறோம் என்று சொன்னுல், இவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்து மின்சார உற்பத்தி அதிகமாகச் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. வெளிச்சம் போடுவதோடு மட்டும் ஒப்பிட்டுவிட்டால் மின்சார சக்தியின் தன்மையே குறைந்து விடும். இந்த நிலைமைக்கு இந்த மின்சார சக்தியைக் கொண்டு வந்து விடவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY : ஸ்ரீமதி சத்தியவாணிமுத்து அவர்கள் பேசிய பேச்சில் 91 சதவிகிதம் லைன்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதிலே 19 சதவிகிதம் தான் விவசாயத்திற்காக வழங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிலே இருப்பதைத்தான் தெரிவித்தார்கள்.

DEPUTY SPEAKER: When the hon. Member herself is present here Sri Govindaswami need not raise that point. Let the Hon. Minister continue.

THE HON. SRI V. RAMAIAH: கனம் அங்கத்தினர் அம்மையார் பேசின பேச்சுக்கு இவர்களாக ஒரு அர்த்தம் கொடுக்கவேண்டிய அவசியம் கிடையாது. அம்மையார் அவர்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறோம் என்று தான் பேசினுர்கள்.

1 p.m. DR. SRIMATHI SATHIYAVANIMUTHU: ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார், அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையிலேயே விவசாய மக்களுக்கு, இர்ரிகேஷன் அண்டு அக்ரிகல்சருக்கு 19 சதவிகிதம் தான் கொடுக்கப்படுகிறது, விவசாயத்திற்குப் போதுமானதாக தரப்படவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக, பட்டண வாசிகளுக்கு மட்டுமல்ல, ஜனத்தொகையிலே பெரும்பாலான மக்கள், அதாவது மூன்றில் இரண்டு பங்கு மக்கள் வசிக்கக்கூடிய கிராமங்களுக்கு நல்ல முறையிலே மின்சார வசதி கிடைக்கவில்லை என்பது புள்ளிவிவரங்களிலிருந்து தெரியவருகிறது. அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு தான் பேசினேனே தவிர, வேறொன்றும் தவறுகப் பேசுவது என்னுடைய நோக்கமல்ல, தயவுசெய்து மந்திரி அவர்கள் என்னை தவறுதலாகப் புரிந்துகொண்டு பேசவேண்டாம் என்றுகேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: It is not a point of order. The hon. Member has given only personal explanation.

THE HON. SRI V. RAMAIAH : " பர்ஸனல் எக்ஸ்பிளனேஷன் " என்று முதலிலே பேசியதற்கு இப்பொழுது அர்த்தம் சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் பேசிய பேச்சும் இங்கு இருக்கிறது. நான் கொடுத்த புள்ளி விவரங்களும் இங்கே இருக்கின்றன. எல்லோருக்கும் தெரியும். கனம் கோவிந்தசாமி அவர்களுக்கு மனக்குழப்பம் ஏதாவது இருக்கலாம்.

SRI K. ANBAZHAGAN: On a point of order, Sir, அவையிலே இருக்கின்ற ஒரு உறுப்பினரைப்பற்றி " மனக்குழப்பம் " என்று பேசுவதற்கு அமைச்சர் அவர்களுக்கு உரிமை இருக்கிறதா ? அப்படிப்பட்ட தவறான வார்த்தையை அவர் வாபஸ் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: The Hon. Minister should not use that word.

4th November 1958]

The Hon. Sri V. RAMAIAH : யாரையும் துன்புறுத்தவேண்டுமென்ற அடிப்படையிலே நான் பேசவில்லை. அவர்களுக்கு சில சந்தேகம் தோன்றியிருக்கலாம். அந்த மாதிரி சந்தேகத்தைப்பற்றி நான் பேச்சைத் தொடர்ந்து இழுத்துச் செல்வதற்கு ஆசைப்படவில்லை. இந்த மாகாணத்தில் நடந்திருக்கக்கூடிய பல வேலைகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ளும் பொருட்டு இந்த விரிவான அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறேன்.

அதுபோல கனம் அங்கத்தினர் சுப்ரமணியம் அவர்கள் பேசும்போழுது, கிராமத்திற்கு மட்டும், மின்சாரம் கொடுத்துவிட்டோம் என்று பெறுமையோடு இருந்துவிடக்கூடாது, மேலும் அதிகமாக விவசாயத்திற்கு மின்சாரத்தைக் கொடுத்து இந்த மாகாணத்தை விவசாய மகாணமாக ஆக்கிவிடக்கூடாது என்று பொருள்பட பேசினார்கள். ஏதோ தொழில் வளர்ச்சிக்குக் குந்தகம் விளையும் அளவுக்கு விவசாயத்திற்கு மின்சாரம் கொடுத்துவிட்டதாக அவருக்கு சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. அவர்களைப்போல் ஓரிரண்டு பேர்களைத் தவிர, மற்றவர்கள் எல்லோரும் அதிகமாக கிராமத்திற்கு மின்சாரம் வேண்டும் என்ற கோரிக்கையை இந்த சபையில் சமர்ப்பித்ததை பார்த்தோம். ஆனால், கோரிக்கை அதிகமாக கிராமப் பகுதிகளுக்கு மின்சாரம் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது, அதனால் நம்முடைய கவனத்தை விவசாயத்திற்கு திருப்பி விடலாம் என்று பார்த்தோமானால், அந்த முறையில் திருப்பிவிட முடியாது. கொஞ்சம் நம் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியைப் பார்க்கவேண்டும். தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை என்று சொல்லக்கூடியவர்கள், இந்த அறிக்கையை பார்த்த பிற்பாடு எவ்வளவு தூரம் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை நன்றாகப் புரிந்துகொள்ளக்கூடிய நிலையிலே இந்த அறிக்கையை விரிவாகக் கொடுத்திருக்கிறேன். கனம் அங்கத்தினர் சுப்பிரமணியம் அவர்கள் படித்த முதல் பாராவைத் தொடர்ந்து அடுத்த பாராக்களை படித்திருந்தால், அங்கே அவர்கள் பார்க்க முடியும். அதிலே திட்டமாகச் சொல்லியிருக்கிறோம், விவசாயத்திற்கு எத்தனை பங்கு, தொழிலுக்கு எத்தனை பங்கு என்று, தொழிலுக்காக 56 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா, அல்லது தொழில் வளர்ச்சியில் ஏதேனும் தேக்கம் ஏற்பட்டிருக்கிறதா என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்தோமானால், நாம் எத்தனை தூரம் தொழில் வளர்ச்சியில் முன்னேறியிருக்கிறோம் என்பதை நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். அதற்காகத்தான் இவ்வளவு விரிவாகப் புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறேன். அதை இன்னும் விளக்கிச் சொல்லவேண்டுமென்ற முறையிலே, மேலும் சில புள்ளிவிவரங்களை எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். 56, 19, 4 அல்லது 5 சதவிகிதம் என்றால் அவர்கள் அதை விவரமாகத் தெரிந்துகொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தால், நான் இப்பொழுது தொழிலுக்காக விநியோகம் செய்யக்கூடிய கிலோவாட் சக்தியை சொல்ல விரும்புகிறேன். பொதுவாக நம்முடைய மாகாணத்திலே, பெரிய தொழில்களுக்கு, அதவாது **textiles, cement, chemicals, steel rolling mills, sugar factories, oil industry, tea estates** இதுபோன்ற தொழில்களுக்கு நாம் 1946–47-ல் மாத்திரம் 1,85,304 கிலோவாட் கொடுத்திருக்கிறோம். இப்பொழுது 1957–58-ல் இதுபோன்ற தொழில்களுக்காக விநியோகம் செய்யக்கூடிய கிலோவாட் சக்தி அளவு 8,90,153. உடனே சில அங்கத்தினர்கள் எழுந்து "உங்களுடைய உற்பத்தி $2\frac{1}{2}$, $3\frac{1}{2}$ லட்சம் கிலோவாட் தானே, எப்படி 8 லட்சம் கிலோவாட் சக்தி கொடுக்க முடியும் என்று கேள்வி கேட்கலாம். அந்தக் கேள்விக்கு பதில் சொல்லக்கூடிய முறையிலே சோஷலிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள், அவர்களுக்கு இருக்கக்கூடிய குறைகளைச் சொன்னார்கள். இன்றைக்கு தொழில் நடத்தக்கூடியவர்கள் எந்த நேரத்தில் தொழில் நடத்தவேண்டும், எந்த தினத்தில் விடுமுறை விடவேண்டும், எந்த நேரத்திற்கு தொழிலாளர்கள் வேலைக்கு வரவேண்டும் என்று நிர்ணயம் செய்யவேண்டிய பொறுப்பு கோடிக்கணக்கில் முதல் போட்டு தொழிலை நடத்தக்கூடிய முதலாளிகளுக்கு அல்ல, தொழிலாளிகளுக்குமல்ல, அந்தப் பொறுப்பு மின்சார போர்டிடம் வந்துவிட்டது. ஏனென்றால அவர் அவர்கள் விரும்பக்கூடிய நேரத்தில் தொழிலுக்கு மின்சாரம் கொடுக்க முடியாமல் போய்விட்டது. இந்த மாகாணத்தில் மின்சார உற்பத்தி அளவு மிகக்குறைவாக இருக்கிறது,

[Sri V. Ramaiah] [4th November 1958

அதேநேரத்தில் தேவை அதிகமாக இருக்கிறது. அதனுல் பங்கீடு முறையிலேதான் மின்சாரத்தை கொடுக்கமுடிகிறது. 10 ஆண்டு களுக்கு முன்பாக, பி. அண்டு ஸி. மில்காரர்கள் எந்த நேரத்திற்கு வேண்டு மானுலும் அந்த நேரத்தில் மின்சாரம் எடுத்துக்கொண்டிருந்தார்கள். இன்றைக்கு அந்தத் தொழிற்சாலையும் சரி, அதுபோன்ற மற்ற எல்லா பெரிய தொழிற்சாலைகளும் சரி நாம் நிர்ணயம் செய்து கொடுக்கக்கூடிய நேரத்தில்தான் மின்சார சக்தியை எடுத்துக்கொள்ள முடியும். காரணம், நாம் உற்பத்தி செய்யக்கூடிய மின்சார சக்தியை அதிகமான தொழிற் சாலைகளுக்கு கொடுக்கவேண்டும், விவசாயத்திற்கும் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்ற முறையில் ஒரு கட்டுப்பாடு வைத்திருக்கிரேம். அதைத் தான் " ஸ்டாகரிங் " என்று சொல்லுகிறேம். நாம் 24 மணி நேரமும் உற்பத்தி செய்யக்கூடிய மின்சார சக்தியை 24 மணி நேரமும் தொழில்களு க்கும், விவசாயத்திற்கும் கொடுக்கவேண்டுமென்ற முறையில்தான் இன்றைக்கு " ஸ்டாகரிங் " முறை அமைத்துக்கொண்டிருக்கிரேம். " ஸ்டாகரிங் " இவ்வளவு கடுமையாக இருப்பதற்குக் காரணம் நம்முடைய மாகாணத்தில் இந்த 10 ஆண்டுகளில் தொழிற்சாலைகள் பெரிய அளவிற்கு உயர்ந்திருக்கக்கூடியதுதான். ஆகையினுல், தொழிற்சாலைகள் வளர வில்லை, ஏதோ பின்தங்கிவிட்டது என்ற நினைப்பிலே இருக்கக்கூடியவர்கள் அந்த நினைப்பை ஓரளவுக்கு மாற்றிக்கொள்ளவேண்டுமென்பதற்காகத் தான் இவ்வளவு விரிவான ஒரு அறிக்கையை கொடுத்தேன். அதை அவர்கள் கண்டிப்பாக பார்த்திருப்பார்கள். அதில் எனக்கு சந்தேகமே கிடையாது. அதைப் பார்த்து பல அங்கத்தினர்கள் நல்ல பல கருத்துக் களைச் சொன்னுர்கள். திரும்பவும் அவர்கள் அதைப் பார்க்கவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1-10 p.m. அடுத்தபடியாக, இந்த அறிக்கையில் கண்டுள்ள—இந்த போர்டு அமைப் பினுல் ஏற்பட்டிருக்கக்கூடிய—போர்டு நிர்வாகத்தினுல் ஏற்பட்டிருக்கக் கூடிய—பல பிரச்னைகளைப்பற்றி நல்ல கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பல அங்கத்தினர்கள் சொன்னுர்கள். அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய முக்கியமான சில பிரச்னைகளைப்பற்றி மட்டும் இந்த சந்தர்ப்பத்தில் நான் பதில் சொல்ல ஆசைப்படுகிறேன். அதே சமயத்தில் இந்தச் சபையில் மூன்று நாட்களாக நடந்த எல்லா விவாதங்களுக்கும் தக்க மதிப்பு கொடுத்து, அங்கத்தினர்கள் எழுப்பிய எல்லாப் பிரச்னைகளிலும் கவனம் செலுத்தப் படும் என்று உறுதி சொல்லிக்கொண்டு, குறிப்பாக முக்கியமாக இருக்கக் கூடிய சில பிரச்னைகளுக்குமட்டும் இப்பொழுது பதில் சொல்லுகிறேன்.

எலெக்ட்டிரிசிட்டி போர்டு அமைப்பைப் பொறுத்தவரையில் இப்பொழுது அரசாங்கம் நிர்வகிக்கக்கூடிய ஒரு போர்டை அமைத்திருக்கிரேம் என் பதை விவரமாக என் ஆரம்ப அறிக்கையில் சொல்லியிருக்கிறேன். அவர் களுடைய பதவி காலம் மேலும் ஒரு வருஷத்திற்கு நீடிக்கப்பட்டிருக் கிறது. அந்த நீடிப்பு செய்யக்கூடிய காலத்தில் மின்சார போர்டு சம் பந்தப்பட்ட எல்லா பிரச்னைகளையும் அலசி ஆராய்ந்து பார்த்து மின்சார இலாகா நடத்தி வந்த வேலைகளை இந்த மின்சார போர்டு நீடித்து நடத்த வேண்டும் என்று அமைக்கப்பட்டது. அப்படி எடுத்து நடத்துவதால் வெற்றி கிடைத்துவிடும் என்று கருதக்கூடாது. கம்யூனிஸ்ட் கட்சி தலை வர் கூறியதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். தொடர்ந்து வரக்கூடிய ஒரு வருஷத்தில் மட்டும் ஒரு மந்திரி வந்த காரணத்தால் அதற்கு வெற்றி வந்து விட்டது என்று நினைத்துவிடக்கூடாது. அப்படி நினைப்பதற்கும் நியாயம் இல்லை. இப்படி தொடர்ந்து வரக்கூடிய ஒரு பெரும் வெற்றி யைத் தரக்கூடிய ஒரு இலாகாவின் வேலை, இப்பொழுது தொடர்ந்து வரக் கூடிய வேலை எந்த விதத்திலும் அதிகமாக ஏற்பட்டு விடக்கூடாது. அது இன்னும் விரிவாக வேகமாக நடக்கவேண்டும். இன்றைக்கு பெரிய திட் டங்களில் சம்பந்தப்பட்டிருக்கிரேம். அப்படிப்பட்ட திட்டம் இது அல்ல. காலா காலத்தில் முடிக்க வேண்டும் என்ற நிலையில் அந்த நிர்வாகத்தை வகிக்கக்கூடியவர்களுக்கு பொறுப்பும் செயலும் இருந்தால் நாம் நினைக் கக்கூடிய காலத்தில் முடித்து விடலாம். அதனுல் தான் மீண்டும் ஒரு வருஷத்திற்கு அவர்களுடைய பதவிக் காலத்தை நீடித்திருக்கிரேம்.

மின்சார இலாகாவை ஒரு போர்டாக மாறிவிட்ட உடனேயே அங்கே இருக்கக் கூடிய ஊழியர்கள் அவர்கள் திறமையுள்ளவர்களாக இருந்தாலும் அவர் எல்லோருக்கும் முன்பு டான்ஸ் ஆட வேண்டும் என்று சொல்வது சரியல்ல. அந்தக் கருத்தில் சில அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். அப்படி டான்ஸ் ஆடினால் மட்டும் எல்லா தீர்ந்து விடாது. அப்படி குறைந்து விடுமா என்ற சந்தேகமும் இருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM: அவர்களுக்கு டான்ஸ் ஆடத் தெரியுமா ?

THE HON. SRI V. RAMAIAH: ஆகவே இன்றைக்கு இருக்கும் நிலைமையில் பார்த்தால் மின்சார போர்டு வந்த பிறகு அதிலுள்ள ஊழியர்கள் அதிகாரிகள் தொடர்ந்து அவர்களுடைய கடமையைச் செய்து வருகிறார்கள். அதையும் பெருமையாகவும் செய்து வருகிறார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. சீப் இஞ்சினியரை மட்டும் குறிப்பிட்டிருக்கிறது, மற்றவர்களைப்பற்றி குறிப்பிடவில்லை என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட சந்தேகம் வரவேண்டிய அவசியமே இல்லை. இப்படி நல்ல முறையில் நடைபெறுவதற்கு சீப் இஞ்சினியர் மட்டும் அல்ல அந்த இலாகாவிலுள்ள எல்லா அதிகாரிகளும்தான் அதற்குப் பொறுப்பு. அங்குள்ள அவ்வளவு பேர்களுக்கும் அது தெரியும். அவர்கள் எல்லோர் மீதும் எனக்கு அதிகமாக பற்று இருக்கிறது. அவர்கள் எல்லோருக்கும் நல்ல அனுபவம் இருக்கிறது. அவர்களுடைய பொறுப்புகளை அவர்கள் நன்றாக உணர்ந்தவர்கள். சீப் இஞ்சினியரைப்பற்றி சொல்லும்போது எல்லோரையும் தான் எடுத்துக்கொள்ள வேண்டும். சீப் டிவிஷனல் இஞ்சினியர் இருக்கிறார், அசிஸ்டெண்ட் இஞ்சினியர் இருக்கிறார். இவர்களும் சதாரணமாக தொழிலாளர்களும் சேர்ந்து தான் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திவருகிறார்கள். தொழிலாளர்கள் முதல் சீப் இஞ்சினியர் வரையிலும், மின்சார போர்டு வரைக்கும் நல்ல விதமாக திறமையாக வேலை செய்து வருகிறார்கள். இவ்வளவு ஒற்றுமையாக, இவ்வளவு திறமையாக நம் மாகாணத்தைத் தவிர மற்ற மாகாணங்களில் அப்படி செயல்பட மாட்டார்கள். அப்படி திறமையாக வேலை செய்யக்கூடியவர்கள் இங்கே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சாதகம் நமக்கு இருக்கிறது.

பெரியாறு திட்டத்தை சிக்கனமாகக் கட்டி விட்டோம் என்று சொன்னதற்கு பல சந்தேகங்களை எழுப்பினார்கள். உண்மையாகவே சிக்கனமாகக் கட்டினார்களா அல்லது பெரும் அளவில் எஸ்டிமேட்டை போட்டுவிட்டு அதற்குக் குறைவாக செலவு செய்து திட்டத்தை முடித்து விட்டு சிக்கனமாக செலவு செய்து விட்டோம் என்று சொல்லிக்கொள்வதற்காக அப்படி செய்தோம் என்றும் சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட சந்தேகம் எப்படி வந்தது என்பது தெரியவில்லை. நல்ல கண்ணோட்டத்துடன் எல்லாப் பிரச்னைகளையும் பார்க்க வேண்டும். என்னுடைய அறிக்கையில் இதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறேன். பெரிய அளவில் எஸ்டிமேட்டு போட்டு விட்டு குறைந்த அளவில் செலவு செய்து விட்டு சிக்கனமாக செலவு செய்து விட்டோம் என்று சொல்ல வில்லை. உண்மையிலேயே தமிழ் நாட்டில் தேசிய பற்றுள்ள தமிழ் இன்சினியர்கள் இருப்பதால் திட்டத்தை நல்ல விதமாக நுணுக்கமாக ஆராய்ந்து, ஆரம்பத்தில் அமைத்த திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்த காரணத்தால், 10½ கோடி ரூபாய் திட்டம் போட்டதில் அந்தத் திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்து இந்த 10½ கோடி ரூபாயில் 70 ஆயிரம் கிலோவாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்று அறிந்து அதை நல்ல விதமாக முடித்துக் கொடுத்தார்கள். அதனால் ஒரு கோடிக்கு அதிகமாக மிச்சம் ஏற்பட்டது. அதிகமான கிலோவாட்ஸும் நமக்குக் கிடைத்தது. அதனால் குறைந்த செலவில் அந்த திட்டம் முடிக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. ஒரு குற்றத்தை கனம் ஷண்முகம் அவர்கள் குறிப்பிட்டார். இந்த மின்சார இலாகாவில் வேலையைத் தொடர்ந்து இன்றைக்கு போகக்கூடிய .வேகத்தில் அதைத் தொடர்ந்து வேலை செய்ய வேண்டுமென்று அந்த இலாகாவிற்கு என்று ஒதுக்கப்பட்ட மொத்த தொகையை போதுமான அளவுக்கு ஒதுக்காது மற்ற இலாகாவிலிருந்து

மிச்சப்படக்கூடிய பொருளை எடுத்து இந்த இலாகாவிற்கு செலவு செய்ய வேண்டுமா என்று கேட்டார். இந்த இலாகாவிற்கு என்று ஒதுக்காமல் மற்ற இலாகாவிற்கு ஒதுக்கிய தொகையை இதற்கு என்று எடுக்க வேண்டுமா என்று சொல்லுகிறார்கள். திட்டம் போடத் தெரியாமல் இப்படி எடுத்துக்கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள் போல் இருக்கிறது. திட்டம் போடத் தெரியாமல் அதிகமாக ஒதுக்கி வைத்து விட்டு அதில் மிச்சம் ஏற்பட்டவுடன் அதை எடுத்து இதற்குக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள்போலிருக்கிறது. அப்படிக் கொடுத்துவிட்டு மின்சார போர்டுக்கு கொடுத்துவிட்டோம் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்வதற்கு அப்படி கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள் போலிருக்கிறது. திட்டம் போடக்கூடிய காலத்தில் சில புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு தான் திட்டம் போடுகிறோம். திட்டம் போட்டவுடன் அந்தப் பணத்தை எப்படியாவது செலவு செய்யவேண்டும் என்பது அல்ல. அப்படிப்பட்ட கருத்துடன் இருந்தால் வாழ்க்கையை நடத்தவே முடியாது. திட்டம் போட்ட பிறகும் அதைத் தொடர்ந்து பரிசீலனை செய்யப்படும். அப்படி பரிசீலனை செய்து பார்த்து எந்த அளவில் திட்டத்தைக் குறைக்கலாம் என்று கணக்குப் பார்த்து செலவு செய்யப்படுகிறது. அந்த அளவில் தான் மிச்சம் காட்டப்படுகிறது. அந்த அளவில் தான் பெரியாறு திட்டத்தில் ஒரு கோடி ரூபாய் மிச்சம் காட்டப்பட்டிருக்கிறது. அதைப்போலவே தான் எல்லா திட்டங்களும் பரிசீலனை செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டு வருகிறது. பெரிய பெரிய திட்டங்களில் திட்டங்களைப் போட்டுவிட்டு எந்தெந்த இனங்களில் குறைக்க முடியும் என்று பரிசீலனை செய்து பார்த்து விட்டு, எந்த விதமான அளவுக்கு குறைத்து விடலாம் என்று பரிசீலனை செய்து அதன் பிறகு திட்டங்களுக்கு செலவு செய்து மிச்சம் காட்டப்படுகிறது. அந்த அளவில் மிச்சம் காண்பித்து மின்சார இலாகாவிற்குக் கொடுக்கப்படுகிறது. அந்த விதத்தில் தான் அதற்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மற்றும் போர்டில் உத்யோக பற்றற்ற அங்கத்தினர்கள் இருக்க வேண்டும் என்றும், இன்னும் முழு நேர சேர்மன் இருக்கவேண்டும் என்றும் கருத்துப்பட எதிர் கட்சி தலைவரும், கம்யூனிஸ்ட் கட்சி தலைவரும் மற்ற எல்லா அங்கத்தினர்களும் சொன்னார்கள். அதையெல்லாம் நான் முன்னால் சொன்னது போல தொடர்ந்து பரிசிலனை செய்து கொண்டே இருக்கக்கூடிய காரியம். இந்த அமைப்பு நல்லதா, இது இருக்க வேண்டியது அவசியம்தானா, அது சாத்தியமா என்றெல்லாம் பார்க்க வேண்டும். உடனடியாக ஒரு முழு சேர்மனைப் போட்டு இதை நடத்த வேண்டும் என்ற ஒரு முடிவு செய்யக்கூடாது. அப்படிப் போட்டு விட்டால் வெற்றி கண்டு விடலாம் என்பதும் அல்ல. அதைத் தொடர்ந்து பார்த்து எந்தெந்த காலத்தில் அதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய நாம் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம்.

அடுத்தப்படியாக கன்சல்டேடிவ் கமிட்டி மாகாண ரீதியில் அமைத்திருக்கிறோம். அந்தக் கமிட்டியை அமைப்பதற்கு அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய சட்டத்தில் யார் யார் பிரதிநிதிகள் இருக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த முறையில் இந்தக் கமிட்டி அமைந்திருக்கிறது. இங்கே சொல்லப்பட்ட பல கருத்துக்களைப் பரிசீலனை செய்து அந்தக் கமிட்டியினுடைய அங்கத்தினர்களுடைய எண்ணிக்கையும், அதில் அமைக்க வேண்டிய திருத்தங்களையும் ஏற்று அமைக்க முடியும். அப்படி அமைத்து எந்த விதமான சட்ட திருத்த பிரச்னைகளையும் பரிசீலனை செய்து பார்க்க தயாராக இருக்கிறார்கள். இன்றைக்கு கன்சல்டேடிவ் கமிட்டி இருப்பதால் யாருக்கும் கஷ்டம் இருக்காது. நல்ல விதமான கருத்துக்களை அவர்களிடம் சொல்லலாம். அதிகப்படியான எண்ணிக்கையைப் போட்டால் ஏற்படக்கூடிய எல்லா பிரச்னைகளையும் தீர்க்க முடியும். எல்லா பிரச்னைகளையும் பரிசீலனை செய்து பார்த்து அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்வதற்கும் நான் ஆசைப்படுகிறேன்.

1-20 p.m. அடுத்தப்படியாக, கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கும் பெரிய பிரச்னை. அதைத் தான் பெரிய குறையாக கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் கொடுத்த அறிக்கையைப் பார்த்து விட்டு, " பார்த்தீர்களா ! தென்னாற்காடு மாவட்டத்தில்

4th November 1958] [Sri V. Ramaiah]

204 கிராமங்களுக்கு மட்டுந்தான் மின்சார விஸ்தரிப்பு செய்திருக்கிறார்கள் மற்ற ஜில்லாக்களில் எல்லாம் அதிகமாக மின்சாரம் கொடுத்துவிட்டார்கள்'' என்ற ஒரு பெரிய புகார் சொன்னார்கள்.

கடந்த ஒரு ஆண்டுக் காலத்திலே, எந்த முறையில் தென்னாற்காடு ஜில்லா கவனிக்கப்பட்டு வருகிறது என்றெல்லாம் அவர்களுக்கே தெரியும். முன்பு அந்த ஜில்லா ஏன் புறக்கணிக்கப்பட்டிருந்தது, அது பின் தங்கிய நிலைமையில் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அதே பின் தங்கிய நிலைமையில் அந்த ஜில்லா இனியும் நீண்ட காலத்திற்குத் தொடர்ந்திருக்காது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கவேண்டும், இத்தகைய கோரிக்கைகள் எல்லா அங்கத்தினர்களிடமிருந்தும் வருகிறது, ஆகவே இது ஒரு பெரிய பிரச்னை என்று நான் விட்டுவிடுவதற்கு ஆசைப்படவில்லை. எல்லா ஜில்லாக்களுக்கும் மறு முறையும் சென்று, அங்கு இருக்கும் சட்டசபை அங்கத்தினர்கள், அங்கே மின்சார விஸ்தரிப்பிலே அக்கறையுள்ளவர்கள் எல்லோரையும் கூட்டிப் பேசி, எந்த எந்த கிராமங்களுக்கு மின்சார வசதி உடனடியாகச் செய்யலாம் என்ற பிரச்னையைப் பரிசீலனை செய்து, தீர்த்துவிடலாம். அதில் கஷ்டம் ஒன்றும் இருக்காது. ஆனால் பல அங்கத்தினர்களும் சரி, ஜில்லாக்களிலே இருக்கும் மற்ற பலரும் சரி, ஏதோ அமைச்சர் வந்துவிட்டார், அவரிடம் மனுக் கொடுத்தோம், ஆனாலும், மின்சாரம் வரவில்லையே என்று குறை கூறுவதைப் பார்க்கிறோம். அமைச்சரிடம் மனுக் கொடுத்துவிட்டால் உடனே மின்சாரம் கொடுத்துவிடுவதற்கு முடியுமா? இதில் இருக்கக்கூடிய கஷ்டங்கள் கனம் அங்கத்தினர் ஸ்ரீ அண்ணாமலை அவர்களுக்குத் தெரியும். ஏனென்றால், அவர்கள் இந்தப் பிரச்னையில் தீவிரமாக அவருடைய தொகுதியில் ஈடுபட்டு வேலை பார்க்கக்கூடியவர். மனுக் கொடுத்தவுடனே, மற்ற இலாக்காக்களைப் போல, மின்சார சக்தியை உடனடியாகக் கொடுத்து விட முடியுமா ? அதில் சிக்கல் நிறைய உண்டு. கேட்டவுடனே மின்சார சக்தியை எடுத்துக் கொடுத்துவிடக்கூடிய சக்தி எனக்கு இருந்தால், நான் போகக்கூடிய நேரத்தில், மின்சாரம் வேண்டுமென்று கேட்டவுடனே காரிலிருந்து எடுத்துக் கொடுத்துவிட முடியும். அந்த நிலையில் நான் இல்லை. இதற்கு வேண்டிய பல பொருள்கள் நம்முடைய தேசத்திலேயே அதிகமாக இப்பொழுது உற்பத்தியானாலும் கூட, இன்னும் முக்கியமாக வேண்டிய சில பொருள்கள் மற்ற நாடுகளிலிருந்து வரவழைக்க வேண்டிய நிலைமையில்தான் நாம் இப்பொழுது இருக்கிறோம். இதற்கு வேண்டிய புள்ளி விவரங்கள் முதலியவற்றைச் சேகரித்து, இந்தப் பிரச்னையை நன்றாகப் பரிசீலனை செய்து இதில் ஒரு தீர்வு காணவேண்டும்.

இந்தப் பிரச்னையை நாம் நன்றாக கவனித்து வருகிறோம் என்றாலும், இதில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கடினமான நிலைமையை இதற்கு முன் நாம் பார்க்கவில்லை. கிராமங்களுக்குப் போனால், உடனடியாக வரக்கூடிய முதல் மனு, மின்சாரம் வேண்டும் என்பதுதான். நான் சுற்றுப் பிரயாணம் போனால் மட்டுந்தான் அத்தகைய மனுக்கள் வருகின்றன என்பது அல்ல. கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள் தொகுதிக்குப் போனால், அவருக்கு வரக்கூடிய மனுக்களும் மின்சாரம் வேண்டும் என்பதாகத் தான் இருக்கும். அதற்கு அடுத்தபடியாகத்தான் மற்ற மற்ற பிரச்னைகள்.

நாம் இன்றைக்கு ஏழாயிரம் கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுத்திருக்கிறோம். அப்படி ஏழாயிரம் கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுத்ததன் காரணமாகவே, அடுத்துள்ள கிராமங்களிலுள்ளவர்களும் என்ன நினைக்கிறார்கள் ? தங்கள் தங்களுடைய கிராமங்களுக்கும் மின்சாரம் வந்தால்தான் தங்களுடைய கிராமமும் அண்டையில் மின்சார வசதி பெற்றுள்ள கிராமங்கள் முன்னேற்றம் அடைந்திருப்பதுபோல், முன்னேற்றம் அடையும் என்று நினைப்பு ஏற்பட்டு விட்டது. அந்த நினைப்பைத் தேக்கி வைக்க முடியாது. அந்த நினைப்பைத் தேக்கி வைக்கக் கூடாது என்றுதான் நானும் நினைக்கிறேன்.

[Sri V. Ramaiah] [4th November 1958

கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள், "7,000 கிராமங்களுக்கு மட்டுந்தானே நீங்கள் மின்சாரம் கொடுத்திருக்கிறீர்கள் ; உங்களுக்கு இருக்கும் கிராமங்கள் 20,000 அல்லவா? 7,000 கிராமங்களுக்கு மட்டும் கொடுத்திருப்பது போதாது ; இதில் பெருமைப் படக்கூடிய விஷயம் ஒன்றும் இல்லை. ஆனால், ஏழாயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்திருக்கின்ற அந்த அளவுக்கு நன்றி சொல்கிறேன்" என்று சொன்னார்கள். அந்த அளவுக்காவது அவர்கள் பாராட்டினார்களே என்று அப்போதே நான் அவர்களுக்கு நன்றி செலுத்திக்கொண்டிருந்தேன்.

ஆனால், இது கடுமையான பிரச்னை. இது ஒவ்வொருவரும் பரிசீலனை செய்து பார்க்க வேண்டிய விஷயம். கிராமத்திற்கு மின்சார விஸ்தரிப்பு கொடுக்கவேண்டுமென்றால், அதில் பல சிக்கல்கள் உண்டு. அதில் ஈடுபட்டு வேலை பார்க்கும் அதிகாரிகளுக்கு இருக்கும் கஷ்டம் மிக அதிகம். காரணம், சட்டசபை அங்கத்தினர்களோ, அமைச்சர்களோ ஆங்காங்கு போகக் கூடிய நேரத்தில் கிராமத்தவர்கள் எல்லோரும் விருப்பத்தைச் சொல்கிறார்கள். அவர்கள் மனுக்களையும் கொடுக்கிறார்கள். அவர்களுடைய மனுக்களையும், அவைகளில் அடங்கியுள்ள கோரிக்கைகளையும் கவனிக்கும்படி அது சம்பந்தப்பட்ட, கீழே வேலை பார்க்கின்ற அதிகாரிகளிடத்தில் கொடுத்து அவைகளைக் கவனித்து விடுங்கள் என்று சொன்னால், அப்பொழுது அவர்களுக்கு கிராமத்திலே உள்ளவர்களுடைய ஒத்துழைப்பு கிடைக்காமல் போய் விடுகிறது. அதனால் பெரிய தேக்கம் ஏற்படுகிறது. இதையெல்லாம் ஜில்லா வாரியாகச் சென்று, இந்தப் பிரச்னையை மறுபடியும் நல்ல விதமாகப் பரிசீலனைசெய்து தீர்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அப்படி அந்தந்தப் பிரச்னையைப் பார்த்தால், கிராமத்திற்கு மின்சார விஸ்தரிப்பு செய்வது சம்பந்தப்பட்ட மட்டில் எந்த விதமான மனக் குழப்பமும் இல்லாமல் தீர்த்துவிடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அடுத்த பெரிய பிரச்னை மினிமம் சார்ஜ் பற்றியது. கிராமத்தில் இருக்கக்கூடியவர்களுக்குத்தான் இந்தக் கஷ்டம் தெரியும். (கனம் அங்கத்தினர் ஸ்ரீ க. அன்பழகன் குறுக்கிட்டு.) உங்களுக்குத் தெரியாது. நீங்கள் நகரத்தில் இருப்பவர். ஆனால், நான் சொன்னதை கனம் அங்கத்தினர் ஸ்ரீ அண்ணாமலை போன்றவர்கள் ஒத்துக்கொள்வார்கள். இந்த மினிமம் காரண்டி, மினிமம் சார்ஜ் எல்லாவற்றையும் பரிசீலனை செய்து பார்க்கும் போது கிராமத்திலே நல்ல செல்வாக்கு உள்ளவர்களுக்கெல்லாம் ஒரு ஆசை உடனடியாக ஏற்படுவது உண்டு. மின்சாரம் வேண்டுமென்று அவர்கள் ஒரு கோரிக்கை கொடுத்துவிட்டால், அவர்களுக்கு எப்படியாவது மின்சார சக்தி அங்கு வந்துவிடவேண்டும் என்பது. அதற்காக கிராமத்தில் இருக்கும் எல்லோரிடத்திலும் கையெழுத்து வாங்குவது உண்டு. "மின்சார சக்தி வந்துவிடும். வெறுமனே ஒரு கையெழுத்து போடு" என்று அவர்களிடத்திலே கையெழுத்து வாங்குவார்களேயொழிய, அவர்களிடத்திலே விவரம் ஒன்றும் சொல்லமாட்டார்கள். அப்பாவிகளான விவசாயிகள் "தங்களுடைய ஊருக்கும் மின்சார சக்தி வரப்போகிறது என்று முக்கியஸ்தர் சொல்லுகிறார்" என்று கையெழுத்துப் போட்டு விடுகிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் கொடுத்து, பரிசீலனை செய்து பார்த்து, திட்டமும் தயாராகி பூர்த்தியாகிவிடுகிறது. பூர்த்தியாகக்கூடிய கட்டத்திலே, சாதாரணமாக ஒரு ஹார்ஸ் பவர், இரண்டு ஹார்ஸ் பவர் வைத்து இறைக்க கூடிய கிணறுதான் அந்த விவசாயிக்கு இருக்கும். அவனிடத்தில் போய், ஐந்து ஹார்ஸ் பவர் மோட்டார்தான் கண்டிப்பாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்வார்கள். "ஐந்து ஹார்ஸ் பவர் இப்பொழுது வைத்துக்கொள்ளுங்கள் ; பிறகு அமைச்சர்களையும், அதிகாரிகளையும் பார்த்து, இதிலிருந்து விதி விலக்கு வாங்கி கொடுத்துவிடுகிறேன்" என்று கிராமத்தில் இருக்கும் முக்கியஸ்தர்கள் சேர்ந்து அப்பாவிகளான விவசாயிகளைக் கேட்டுக் கொள்ளுவார்கள். அதை அவர்கள் நம்பி, ஐந்து ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்து, அந்த அளவுக்கு மின்சாரம் எடுத்துக் கொள்வதற்குச் சம்மதம் கொடுத்து கையெழுத்து இடுவார்கள். அதனால் ஏற்படக்கூடிய தொல்லை கொஞ்ச நஞ்சமல்ல. இதனால் பல கிராமங்களில் கடுமையான பிரச்னை ஏற்பட்டது. குறிப்பாக, கனம் அங்கத்தினர்கள் மூலமாக, இந்தச் சபையின் மூலமாக நான் கேட்டுக்கொள்வது, மின்சார

4th November 1958] [Sri V. Ramaiah]

சக்தி கிராமத்திற்கு அவசியமாக வேண்டும் என்று கருதக்கூடிய நேரத்தில், கிராம விவசாயிகள் மத்தியில் அவர்களுக்கு ஒரு தப்பான நம்பிக்கையை உண்டு பண்ணி அந்தத் தப்பான நம்பிக்கையின் பேரில் கிராமத்திற்கு விஸ்தரிப்புச் செய்வதற்கு முயற்சி செய்யக்கூடாது என்பதுதான். அதனால், அதிகமான விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். சிரமம் அடைகிறார்கள். அவர்களுக்கு இருந்த சொற்ப சொத்துக்கூட மறைந்துவிட்டது எனக்குத் தெரியும். அந்த நிலைமை ஏற்படுத்தாமல் மின்சார சக்தியைக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்கிறவர்கள், அப்படிக் கொண்டுவருவதனால் கிராமத்திற்கு முழுப் பயன் ஏற்பட முடியுமா, அதனால் விவசாயிகள் சிரமம் அடையாமல் இருப்பார்களா என்பதையெல்லாம் உணர்ந்து, விவசாயிகளுடைய நிலைமையை நன்கு உணர்ந்து, அதற்குத் தகுந்த முறையில் கொண்டுவருவதற்குப் பாடுபட்டால் நமக்கு இருக்கும் பல கஷ்டங்கள் போய்விடும் என்று இங்கே தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

Sri S. M. ANNAMALAI : Sir, on a point of personal explanation. . . .

DEPUTY SPEAKER : The Hon. Minister is not yielding. No personal explanation can be given now. Let the Hon. Minister continue his speech.

The Hon. Sri V. RAMAIAH : இந்த மினிமம் காரண்டியைக் குறைக்கவேண்டும் என்ற முறையிலேதான் சில மாதங்களுக்கு முன்பாக இது சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளையும் வரவழைத்து மகாநாடு போட்டு, "மினிமம் காரண்டி பத்து சத விகிதம் என்று சொல்லுகிறார்களே, இதை ஏதேனும் குறைக்க முடியுமா" என்று விசாரித்துப் பரிசீலனை செய்து பார்த்தேன். அந்த மகாநாடு போட்டதில், அதன் முடிவு இப்பொழுதை விட அதிகமாகப் பணம் கொடுக்கவேண்டும் என்ற நிலைமைக்கு வந்து விட்டது. அதிகாரிகள் கொடுத்த விவரத்தைப் பார்த்தால், இன்றைக்கு நாம் ஏற்படுத்தியிருக்கும் பத்து சத விகிதம் மினிமம் காரண்டியை, இன்றைக்கு பொருள்களுக்கு இருக்கும் விலைகளையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தொழிலாளர்களுடைய சம்பளங்களையும் கணக்கிட்டுப் பார்த்தால், $18\frac{1}{2}$ சத விகிதத்திற்கு உயர்த்தவேண்டும் என்ற நிலைமைக்கு வருகிறது. பத்து சத விகிதத்திற்குப் பதிலாக $18\frac{1}{2}$ சத விகிதமாக உயர்த்தினால்தான் கிராமங்களுக்கு விஸ்தரிப்பு செய்ய முடியும் என்று அதிகாரிகள் அந்த மகாநாட்டில் சொன்னார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொண்டதெல்லாம் "நீங்கள் குறைக்காவிட்டாலும் பரவாயில்லை; கூட்டிவிட வேண்டாம்" என்பதுதான். இப்பொழுதுள்ள 10 சத விகித மினிமம் காரண்டியை உயர்த்தவேண்டாம் என்று அவர்களிடம் சொல்லி, அவர்களைச் சமாதானப்படுத்துவதற்கே எனக்குச் சிரமமாகி விட்டது. காரணம், நாம் இதுவரையிலும் இந்த விஸ்தரிப்பு செய்துவந்த முறையிலே நல்ல வருமானம் வரக்கூடிய கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்து வந்தோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக மின்சார விஸ்தரிப்பு செய்தபோது, பொருள்களின் விலை மிகக் குறைவாக இருந்தது. பொருள்களின் விலை குறைவாக இருந்த காலத்தில் கூட அதிகமாக நல்ல வருமானம் வரக்கூடிய கிராமங்களுக்குத்தான் நாம் மின்சாரம் கொடுத்து வந்தோம். ஆனால், நாம் இப்பொழுது கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்த வகையில் 7,000 எண்ணிக்கையைத் தாண்டிக்கொண்டு இருக்கும் நிலைமையில், இனிமேல் நாம் மின்சார விஸ்தரிப்பு செய்யக்கூடிய கிராமங்கள் பெரும்பாலும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடியவையாகத்தான் இருக்கும். மிகவும் குறைந்த வருமானம்தான் தரக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய கிராமங்களாகத்தான் அவைகள் இருக்கும்.

ஆகையால் இந்த விஸ்தரிப்பு கடினமாகிக்கொண்டே வருகிறது. இருந் 1-3
தாலும் மின்சார போர்டார் இந்த விஸ்தரிப்பைக் குறைத்துவிடக்கூடாது. p.m.
இந்த விஸ்தரிப்புக்கு வேண்டிய மற்ற உதவிகளை வேறு கன்ஸ்யூமர்களிடம் இருந்து எடுத்து இந்த கிராம விஸ்தரிப்புக்குக் கொடுப்பதற்கு அவர்கள் முன் வந்திருக்கிறார்கள். இந்த முறையில் இந்த விஸ்தரிப்பை

[Sri V. Ramaiah] [4th November 1958

இன்னும் வேகமாகச் செய்யவேண்டுமென்றும், அதைத் திரும்பவும் தொடர்ந்து செய்யவேண்டும் என்றும் ஆசை நமக்கு ஏற்படத்தான் செய்கிறது. ஏழாயிரம் கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்யவேண்டிய ஒரு பெரிய நெருக்கடியான, கஷ்டமான நிலையில் இருக்கிறோம். இருந்தாலும் எவ்வளவு கஷ்டமான பிரச்னை ஏற்பட்டாலும் நாம் எடுத்திருக்கக் கூடிய இந்த கிராம விஸ்தரிப்பு வேலையை தொடர்ந்து செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அதை நிறைவேற்றுவதில் எவ்வளவு சிக்கல்கள் இருந்தாலும் அதை நல்ல விதமாகப் பரிசீலனை செய்து அந்த விஸ்தரிப்பு தடைபடவிடாமல் மேலே இழுத்துச் செல்வதற்கு நான் ஆசைப்படுகிறேன். "இவ்வளவு மெதுவாக இந்த விஸ்தரிப்பைச் செய்து கொண்டிருந்தால், இந்த விஸ்தரிப்பைப் பூர்த்தி செய்ய இன்னும் எத்தனை ஆண்டு காலம் ஆகுமோ" என்று ஸ்ரீகோவிந்தசாமி அவர்கள் சொன்னார்கள். அந்தச் சந்தேகம் அடிக்கடி என்னுடைய மனதில் கூட ஏற்படுவது உண்டு. ஆனால் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில்—இன்ஜினீர்களிடத்தில்—பேசும்பொழுது, அவர்களுக்கு இருக்கும் ஆசையின் கணக்குப்படி பார்த்தால் **1962–63**-ல் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரத்தை விஸ்தரித்து விடலாம் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படுகிறது. இந்த விஸ்தரிப்பை இன்னும் நல்ல விதமாகச் செய்வதற்காக இதில் அக்கறை உள்ள எல்லா அங்கத்தினர்களையும், கிராமத்தில் இருக்கக்கூடிய முக்கியஸ்தர்களையும், ஜில்லாவில் இருக்கக்கூடிய முக்கியஸ்தர்களையும், எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களையும் கூட்டி வைத்துப் பேச ஆசைப்படுகிறேன் என்று உறுதி கூறுகிறேன்.

அதைவிட இன்னும் ஒரு முக்கியமான காரணம், நான் ஏற்கெனவே சொன்னதுபோல், சாகுபடி செய்யக்கூடியவர்கள் இரண்டு போகம், மூன்று போகம் முதற்கொண்டு செய்ய முடியும். அப்படிச் செய்யும்போது இப்பொழுது ஏற்படுத்தும் விதியை அப்படியே வைத்துப் பார்த்தால் அதிலே முறன் அதிகமாக ஆகக்கூடும். சர்க்கார் இதை நன்றாகப் பரிசீலனை செய்து, மூன்றாவது பிரிவை அப்படியே எடுத்துவிடவேண்டும். நான்காவது பிரிவுக்கு நான் இரண்டு திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன். அவைகளை ஏற்றுக்கொண்டால், இது நல்ல முறையில் அமையும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். மூன்றாவது பிரிவைப் பொறுத்தவரைக்கும், ஏற்கெனவே நான் சொன்னதுபோல் திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஆனால், 'delete' என்று இருப்பதன் காரணத்தால், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை இந்தச் சபையினால். ஆகையால், இதை இந்த விதத்தில் மாற்றியமைத்தால்தான் நடைமுறையில், நல்ல முறையில் வேலை செய்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதை வற்புறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

அதோடு கூட இன்னொன்றும் கவனிக்கவேண்டும். ஷெட்யூலைப் பொறுத்தவரைக்கும், 'அதிலே Oneseventh of the net produce of the land' என்று இருக்கிறது.

DEPUTY SPEAKER: **The hon. Member may speak on that when we take up the Schedule.**

5th November 1958]

Sri S. LAZAR : Clause 3 goes along with the schedule. Therefore, I will have to refer to the schedule also.

இந்த ஷெட்யூலைப் பொறுத்த வரையிலும் இரண்டு பிரிவாக இருக்கிறது. 10-30 a.m. ஒவ்வொரு சாகுபடிக்கும் நான்கு மூட்டைக்குக் குறையாது அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும் அதோடு கூட நெட் ப்ராட்யூஸில் எழில் ஒரு பங்கு கொடுக்கவேண்டும் என்றும் இருக்கிறது. நெட் ப்ராட்யூஸ் என்றால் நெல், வைக்கோல் எல்லாவற்றுககும் சேரும். நெல்லில் பங்கு கொடுக்கவேண்டுமென்று இருப்பது தான் சரியானது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். மாடு யார் யார் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு வைக்கோலில் பங்கு உண்டே தவிர கையேர்வாரந்தாரருக்கு வைக்கோலிலும் பங்கு கொடுக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல என்று நான் நினைக்கிறேன். ஆகவே அதையும் இங்கே விளக்கமாகக் கூறியிருந்தால் நன்றாக இருக்கும் என்கிற கருத்தைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே "நெட் ப்ராட்யூஸ்" என்பதற்குப் பதிலாக இந்த இடத்தில் "நெட் பாடி" என்று போட்டால் —அப்படித் திருத்தம் செய்தால் இந்த ஷரத்து சரியாக அமையும். அப்படி இல்லாவிட்டால் வீணான தகராறுகள் தான் விளையும். நாம் கையேர் வாரந்தாரருக்கு கூலி நிர்ணயிக்கவேண்டுமென்று முதலில் விரும்பவில்லை. நிலத்தைவிட்டு அவர்கள் அப்புறப்படுததப்படாமல் இருப்பதற்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று தான் முதலில் சொல்லப்பட்டது. இப்போது கொண்டு வந்திருக்கிற மசோதாவிலோ பாதுகாப்பு கொடுப்பதோடு கூட அவர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்கிறபோது எனக்குத் தெரிந்த வரைக்கும் தஞ்சாவூர் பண்ணையாள் சட்டத்திலிருந்த சில பகுதிகளை அப்படியே எடுத்துப் போட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் தஞ்சாவூர் பண்ணையாட்கள் வருஷம் பூராவும் வேலை செய்துகொண்டு வருகிறார்கள். பண்ணையில் உள்ள வேலைகளைக் கவனித்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள விகிதத்தை அப்படியே இங்கே எடுத்து போட்டிருப்பதன் காரணமாக பல சங்கடமான நிலைமை எற்படுகிறது. கையேருவாரக்காரர் யார் என்பதை வரையறுக்கிறபோது நல்ல முறையிலேயே வரையறுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். உழுது போடுகிற வேலை மாத்திரம் தான் இவர்கள் செய்கிறார்கள்; இவர்களுக்கு வருஷம் பூராவும் வேலை செய்கிற பண்ணையாட்களுக்கு எவ்வாறு கூலி கொடுக்கப்படுகிறதோ அவ்வாறு கூலி கொடுக்கவேண்டுமென்று வரையறுத்திருப்பதனால் தான் பலவிதமான சங்கடங்கள் உண்டாகின்றன. ஆகவே தான் நான் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

Sri M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கொண்டு வந்திருக்கக் கூடிய திருத்தம் எந்தவகையிலும் இப்போது இருக்கக்கூடிய நிலைமையை அபிவிருத்தி செய்யவில்லை. அதிலும் நம்முடைய நண்பர் ஸ்ரீ லாசர் அவர்கள் பேசியதைப் பார்த்தால் கையேரு வாரக்காரருக்குக் கொடுக்கக்கூடிய கூலியையே குறைக்கவேண்டும் என்பதற்கு வாதாடுவதாகத் தோன்றியது. அவர் கூறிய ஆட்சேபனைகளை எல்லாம் பார்க்கிறபோது கையேருவாரக்காரர்கள் தஞ்சாவூர் பண்ணையாட்களைப் போலக் கருதக்கூடாது, அவர்களுக்குள்ள சம்பள விகிதத்தைப் போல இவர்களுக்கு நிர்ணயிக்கக்கூடாது என்று சொல்கிறார். உண்மையில் அவர்களைப் போல இவர்களும் நிலத்தில் உழைக்கிறார்கள். இவர்கள் உழைப்பது இல்லை என்று அவர்கள் சொன்னார்கள். பண்ணையாளைவிட அதிகமாக வேலை செய்கிறார்கள் இவர்கள். இந்த மசோதாவின்படி கையேருவாரக்காரர்களுக்கு ஒரு க்ராப் சீசனுக்கு நான்கு மாதங்களுக்குக் குறையாமல் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும் அறுவடையில்—எழில் ஒரு பங்கு கொடுக்கவேண்டும் என்றும் கண்டிருக்கிறது. நான்கு மாதம் என்பதை ஆறு மாதம் என்று செய்தால் நலமாக இருக்கும் என்று வற்புறுத்த விரும்புகிறேன். ஏற்கனவே இருந்த நடைமுறைக்குக் குந்தகம் இல்லாமல் ஏற்படும். அரசாங்கத்தினுடைய திருத்தம் கிடைப்பதற்கு நேரமாகிவிட்டபடியால் என்னால் தனியாக திருத்தம் கொடுக்க முடியாமல்

போய்விட்டது. இவர்கள் இப்பொது "ட்யூரிங் எ க்ராப் சீசன்" என் பதையே எடுப்பதனுல் புதிதாக தகராறு எதுவும் உண்டாகாமல் இருக்கும் படியாக திருத்தம் செய்வதைப்பற்றி அமைச்சர் அவர்கள் நன்ருகப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri S. M. ANNAMALAI: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இப்போது சர்க்கார் திடீரென்று ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக் கிறுர்கள். இந்தத் திருத்தம் கூட சரியானதாக இல்லை. பிரச்சனையைச் சிக்கலாகவே ஆக்கிவிடும். அதுவும் ஸ்ரீ லாசர் உடையார் பேசும்போது கையேர் வாரக்காரர்கள் வருஷம் பூராவும் வேலை செய்வது இல்லையென்றும், ஏதோ சில நாட்களுக்கு சில மாதத்தில் வேலை செய்பவர்களுக்கு மாதக் கணக்காக கூலியை நிர்ணயிப்பது சரியாகாது என்றும் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குச் சொல்லுகிறேன். சம்பா அறுவடைய நான்கு மாதம். குறுவை அறுவடை மூன்று மாதம். நாள் குறைவாக அறுத்துவிட்டால் மீட்டும் பயிர் வைத்து அப்போது மூன்று மாதம். ஆக இப்படிகிட்டதட்ட வருஷத்தில் 11 மாதங்களுக்கு மேல் கையேருவாரக்காரர்கள் வேலை செய்கிறுர்கள். கையேருவாரக்காரர்களுக்கு உழுது போடுவதோடு வேலை முடிந்துவிடுவதாகச் சொன்னுர்கள். அதுவும் சரியல்ல. உழுது தண்ணீர் பாய்ச்சி, இதர வேலைகளும் அவர்களிடத்தில் வாங்கப்படுகிறது. இப்படி யெல்லாம் இருக்கும்போது இன்றையதினம் ஸ்ரீ லாசர் உடையார் பேசு வதைப் பார்த்தால் சர்க்கார் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தம்கூட அதன் அடிப்படையிலேயே உருவாகியிருக்கிறதோ என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. அதைக் கைவிடவேண்டும். மேலும் நான்கு மாதங்களுக்கு சாகுபடி காலத்தில் கூலி என்று இருப்பைத—திட்டவட்டமாக இல்லாமல் இருக்கிற திருத்தத்தை வாபஸ் வாங்கிக்கொண்டு—சட்டசபை உறுப்பினர் ஸ்ரீ கல்யாணசுந்திரம் சொன்னதுபோல் ஒரு ஆண்டுக்கு என்று திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***Sri R. SRINIVASA IYER**: ஏற்கெனவே இந்த மசோதா கொண்டு வரப்பட்டபோது—செலக்ட் கமிட்டியில் பரிசீலனையில் இருந்தபோது—ஒரு பெரிய உத்தியோகஸ்தரை இந்த ஜில்லாவிற்கு அனுப்பி அங்கே நேரிலேயே கையேருவாரந்தார் செய்கிற வேலை என்ன, அவர்களுக்கும் மிராசுதார்களுக்கும் உள்ள உடன்பாடு என்ன —பழக்கவழக்கங்கள் என்ன —கையேருவாரக்காரர்கள் செய்கிற வேலை என்ன இப்போது என்ன கூலி கொடுக்கப்படுகிறது என்பதைப்பற்றியெல்லாம் விசாரித்து ஒரு ரிப்போர்ட் சமர்ப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அவரும் ஒரு ரிப்போர்ட் கொடுத்தார்கள். அந்த ரிப்போர்ட்டை செலக்ட் கமிட்டியில் வாசித்துக் காட்டப்பட்டது. அதன்பேரில் கமிட்டியில் ஒத்துமையாக எல்லோரும் ஒரு முடிவுக்கு வர முடிந்தது. மேற்படி செலக்ட் கமிட்டி ரிபோர்ட்டில்

'Kaiaeruvaramdars should be treated on a par with "Pannaiyals" and their rights protected as in the Tanjore Pannaiyal Protection Act, 1952. . .'

என்ற வாக்குறுதியே வந்தது. நெல் அறுவடையிலே நெல்லுக்கு மட்டுமே பங்கு உண்டு, புஞ்சை தானியத்திற்கும் உண்டு என்று அல்ல. முக்கியமாக அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும், நிலத்தைவிட்டு அப்புறப்படுத் தாமல் இருக்க வழி செய்யவேண்டும் என்பது தான் கோரப்பட்டது. இப்போது சம்பளத்தையும் கூட இந்த மசோதாவில் நிர்ணயிக்கிறோம். நிர்ணயிக்கலாம். ஆனுல் அவர்கள் செய்யக்கூடிய வேலை என்ன, அதற்கு எவ்வளவு சம்பளம் கொடுப்பது என்பது எல்லாம் பரிசீலனை செய்ய வேண்டாமா? அவர்களுக்கு வேலை செய்கிற நாட்களுக்கு இவ்வ ளவு கூலி கொடுக்கவேண்டும் எனத் தினக் கூலியை நிர்ணயித்தால் நாண்கைந்து நாட்களுக்குக் கூடச் சம்பளம் வாங்காமட்டார்கள். அவர் களுக்கு நான்கு மாத சம்பளம், மொத்த மகசூலில் ஏழில் ஒரு பங்கு என்றெல்லாம் கொடுக்கும்படி செய்தால் சாதாரண நிலச்சுவாந்தார் களுக்கு என்ன மிஞ்சும்? இவர்கள் தீர்வை கட்டவேண்டும். தண்ணீர்

5th November 1958] [Sri R. Srinivasa Iyer]

வாய்தா கட்டவேண்டும். இந்த செக்ஷன் மூன்றை—ஷெட்யூலில் இரண்டோடு சேர்த்தே பார்க்கவேண்டும். (Deputy Speaker in the Chair.) ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ளபடி அவர்களுக்கு சம்பளம் கொடுக்கவேண்டுமென்று சட்டமியற்றிவிட்டால் அப்புறம் ஷெட்யூல் II-ஐ மாற்றுவதென்பது நினைக்கவும் முடியாதது. "கையேர்வாரம்தார்" என்ற பதத்திற்கு, அர்த்தம் கொடுக்கும் பிரிவில் என்ன விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த விளக்கத்திற்கு ஒத்த முறையில் அவனுடைய கூலியை நிர்ணயிக்கவேண்டும். கூலி நிர்ணயிக்கும் பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது என்பது வாஸ்தவம். ஆனால் வேலைகளுக்குத் தகுந்தவாறு கூலி நிர்ணயிக்கப்படவேண்டும். வருஷத்தில் நான்கு மாதங்கள் அவன் வேலை செய்வதில்லை. அவன் வருஷம் பூராவும் வேலை செய்கிறானா? சில தினங்கள் தான் உழுகிறான். பிறகு தண்ணீர் பாய்ச்சிகிறான். வாரம்தாரை தகுந்த காரணமின்றி அப்புறப்படுத்தக்கூடாது என்பதை ஒத்துக்கொள்கிறேன். அதற்குரிய முறையில் சட்டமியற்ற வேண்டியது அவசியம் தான். ஆனால் கூலியை நியாயமான முறையில் நிர்ணயிக்கவேண்டும். தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தில் பண்ணையாளுக்கு எவ்வளவு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வளவு பாதுகாப்பு கையேர்வாரம்தாருக்கும் மாட்டுவாரம்தாருக்கும் கொடுக்கப்படவேண்டுமென்று பொறுக்குக் கமிட்டியில் முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவின்படி சட்டமியற்ற வேண்டும். இப்படியின்றி இப்போது சர்க்கார் குறிப்பிடுவதுபோல் சட்டமியற்றினால் இயற்றப்படும் சட்டம் சில மிராசுதார்களை பாதிக்கும். "கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்டில்" விவசாயி எந்த வேலைகளுக்கெல்லாம் கடமைப்பட்டிருக்கிறானோ, அந்த வேலைகளுக்கு இந்த மசோதாவில் வாரம்தார்கள் கடமைப்படவில்லை. இவைகளையெல்லாம் கவனித்து சர்க்கார் சட்டமியற்றவேண்டும். சட்டத்தின்கீழ் வாரம்தாரர்களின் கூலிகளை நிர்ணயிப்பதற்கான விதிகளை வகுப்பதற்குரிய அதிகாரத்தை இயற்றப்படும் சட்டத்தில் சர்க்கார் எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும் என்றும், அதற்குரிய முறையில் மசோதாவைத் திருத்தலாம் என்றும் நினைக்கிறேன். 10-40 p.m.

* **THE HON. SRI M. A. MANICKAVELU**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கையேர்வாரம்தார்களுக்கு மகசூலில் எவ்வளவு பங்கைக் கூலியாக கொடுக்கவேண்டும் என்பதுபற்றிய பிரிவு இது. இந்தப் பிரிவில், அதாவது க்ளாஸ் 3-ல் ' . . . . remuneration shall be payable to any Kaieruvaramdar for his work during a crop season, as specified in Schedule II' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஷெட்யூல் II-ல் during the cultivation season 45 பட்டணம் படி நெல்லும், அறுவடைக்குப் பிறகு one-seventh of the produce of the land-ம் கூலி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பதங்களுக்கு அர்த்தம் கொடுக்கும் பிரிவாகிய 2-வது பிரிவில் "கையேர்வாரம்தார்" என்ற பதத்திற்கு "Kaieruvaramdar means any person engaged by a landowner to do ploughing and watering operations or ploughing operation alone on a land for remuneration for such work by a share in the crop" என்று விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கையேர்வாரம்தார்களுக்கு என்ன வேலைகளை மசோதாவில் நிர்ணயித்திருக்கிறோமோ அவைகளைவிட அதிகமான வேலைகளை அவர்கள் இப்போது செய்துவருகிறார்கள் என்றும், அப்படியிருக்க மசோதாவில் குறைவான வேலைகளை நிர்ணயித்துவிட்டு ஷெட்யூல் II-ல் குறிப்பிட்டுள்ளபடி அவர்களுக்கு கூலிகொடுக்கவேண்டுமென்று விதிப்பது முறையல்ல என்றும் சில கனம் அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள். அது அப்படித்தான் தோன்றுகிறது.

மாட்டுவாரம்தாரைப் பொறுத்தவரையில், 7-வது பிரிவின்படி உப பிரிவு (b)-ல், "any Mattuvaramdar . . . shall be entitled to continue as a mattuvaramdar on the same terms as were applicable to him immediately before the commencement of this Act . . . " என்று சொல்லப்பட்டிருக்கிறது. கையேர்வாரம்தார் சம்பந்தமாகவும் ஏன் அதே மாதிரியாக விதிக்கக்கூடாது? அவ்வாறு விதித்தால் கனம் அங்கத்தினர்கள் இப்போது எழுப்பிய பிரச்னைகள் தீர்ந்துவிடும். அவ்வாறு

[Sri M. A. Manickavelu] [5th November 1958

விதிக்கும் முறையில் மசோதாவைத் திருத்துவதாயிருந்தால், இப்போதுள்ள 3-வது பிரிவையும் II-வது ஷெட்யூலையும் நீக்கிவிட்டு இப்போதுள்ள 4-வது பிரிவிற்கு கனம் அங்கத்தினர் ஸ்ரீ லாஸர் கொடுத்திருக்கும் திருத்தத்தை புதிய 3-வது பிரிவாகப் போடலாம் என்று நினைக்கிறேன். இப்போதுள்ள 4-வது பிரிவு **Dismissal of Kaieruvaramdar** என்ற தலைப்புடன் இருக்கிறது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ லாஸர் 4-வது பிரிவிற்குக் கொடுத்திருக்கும் திருத்தம் அந்தப் பிரிவிற்குப் பொருத்தமாக இருக்காது என்று நினைக்கிறேன். அவர் 4-வது பிரிவிற்குக் கொடுத்திருக்கும் திருத்தத்தில் **'subject to the provisions of sub-sections (2) and (3) of clause 4, a Kaieruvaramdar shall be entitled to continue as such on the same terms as were applicable to him immediately before the commencement of this Act.'** என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் முன்பு கூறியபடி 3-வது பிரிவாகப் போடலாம் என்று நினைக்கிறேன்.

DEPUTY SPEAKER : Is the Hon. Minister withdrawing the Government amendment?

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, discussion on clause 3 may be postponed and clause 4 may be taken up now.

DEPUTY SPEAKER : Yes, discussion on clause 3 is postponed and now we shall take up clause 4.

Clause 4.

DEPUTY SPEAKER : The motion is—

'That clause 4 do stand part of the Bill.'

SRI S. LAZAR : Sir, I move—

'In sub-clause (3), *for* the words "not less than twelve months", *substitute* the words "not less than six months".'

'In sub-clause (3), *add* the following proviso :—

"Provided further that where the six months period expires by a date after the commencement of the agricultural operations in a crop season, the engagement shall not be terminated before the harvest of the crops on land".'

The amendments were duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

'*Add* the following at the end of sub-clause (1) :—

"unless he absents himself from work continuously for more than a month".'

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I second the amendment.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

'*Omit* sub-clause (2).'

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

5th November 1958]

SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மிராசுதார்கள் கையேர் வாரம்தார்களை எளிதில் வெளியேற்றுவதற்கு உதவக்கூடிய முறையில்தான் இந்தப் பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது. காரணம், (2)-வது உப பிரிவில் 'Any landowner may dismiss a kaieruvaramdar for misconduct or for neglect of duty' என்று சொல்லப் பட்டிருக்கிறது ; கையேர்வாரம்தாரை நிலச்சுவாந்தார் எதற்காக 'டிஸ்மிஸ்' செய்யலாம் என்பது vague-ஆக இருக்கிறது. அவரை எந்த காரணங்களுக்காக வேலையிலிருந்து நீக்கலாம் என்பது திட்டவட்டமாகக் கூறப்படவில்லை. அவரை எப்படியாவது தமது நிலத்திலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று இஷ்டப்படும் நிலச்சுவாந்தார், 'அவர் ஒழுங்கீனமாக நடந்து கொண்டார்' என்று கூறி அவரை நிலத்திலிருந்து நீக்கிவிட எளிதில் முடியும். 'Misconduct or neglect of duty' என்பது என்ன என்று மசோதாவில் திட்டவட்டமாக வரையறுத்தால் நன்றாக இருக்கும். இந்தப் பிரிவு இப்போதுள்ள நிலையில், 'கைஏர்வாரம்தார் சரியாக உழவில்லை' என்று சொல்லிக்கூட அவரை நீக்கமுடியும். மேலும், கைஏர் வாரம்தாருக்கு நஷ்டஈடு கொடுத்து அவரை நிலத்திலிருந்து வெளியேற்றுவதாயிருந்தால் கூட, கோர்ட் மூலமாகவே—ஒரு கோர்ட் தீர்ப்பின் பேரிலேயே—அவரை மிராசுதார் வெளியேற்றவேண்டுமே தவிர, மிராசுதார் தானாகவே அவரை வெளியேற்றக் கூடாது என்பது என் கருத்து. ஒரு கோர்ட் உத்தரவின் பேரிலேயே கையேர் வாரம்தாரை மிராசுதார் தம் நிலத்திலிருந்து வெளி யேற்றவேண்டுமென்பதுதான் என் திருத்தத்தின் நோக்கம். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 4-வது பிரிவிலுள்ள (2)-வது உப பிரிவை நீக்க வேண்டுமென்று என் திருத்தம் கூறுகிறது. கனம் அங்கத்தினர் திரு. பழனிசாமி சொன்னதுபோல், இந்தப் பிரிவு இப்போதிருக்கும் நிலையில் மிராசுதார்கள் கையேர் வாரம் தார்களை எளிதில் நீக்கிவிட முடியும். அதற்குத் துணைபுரிவது இந்த (2)-வது உப பிரிவுதான். 'வேண்டாத பெண்சாதியின் கைப்பட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம்' என்பதுபோல், தனக்கு வேண்டாத கைஏர்வாரம்தார் எதைச் செய்தாலும் அது 'மிஸ்காண்டக்ட்' என்று சொல்லி, அவரை மிராசுதார் எளிதில் தன் நிலத்திலிருந்து வெளியேற்றி விட முடியும். அப்பேர்ப்பட்ட (2)-வது உப பிரிவை நீக்கிவிட வேண்டு மென்று சொல்லிக் கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 4-வது பிரிவில் (1)-வது உப பிரிவில், பயிர் பருவகாலத்தில் கைஏர் வாரம்தாரை நிலச்சுவாந்தார் தம் நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இதே பிரிவின் (2)-வது உப பிரிவில், நிலச் சொந்தக்காரர் கைஏர் வாரம்தாரை, அவர் ஒழுங்கீனமாக நடந்து கொண்டார் என்றோ கடமையைச் செய்யத் தவறினார் என்றோ சொல்லி தம் நிலத்திலிருந்து வெளியேற்றலாம் என்று சொல்லப்பட் டிருக்கிறது. இது, வலது கரத்தால் கொடுத்துவிட்டு இடது கரத்தால் பறிப் பது போல் இருக்கிறது. இது, 'நான் நோகாமல் அடிக்கிறேன், நீ ஓயாமல் அழு' என்பதைப் போல் இருக்கிறது.

ஏதோ அவர் தவறு செய்து விட்டார் என்று கை ஏர் வாரந்தாரை வெளியேற்ற மிராசுதாருக்கு பரிபூர்ண அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நமக்குத் தெரியும், இன்றையதினம் தொழிலாளர்களின் நிலை எப்படி யிருக்கிறது என்று.

DEPUTY SPEAKER : I want Hon. Member to be brief.

SRI V. K. KOTHANDARAMAN : பல சட்டங்களின் அடிப்படை யில் பல காரணங்களைக் காட்டி பல தொல்லைகள் கொடுத்து வருகிறார் கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவேதான் இரண்டாவது

சப்கிளாஸை எடுத்துவிட வேண்டுமென்று சொல்கிறேன். அல்லது நினைத்த போது அவர்களை வெளியேற்றக் கூடாது என்று அதற்காக குறிப்பிட்ட அதிகாரிகளிடம் தெரியப்படுத்தி விசாரணை செய்து உண்மையில் அவர் தவறு செய்திருக்கிறாரா என்று நன்கு தெரிந்த பிறகுதான் அவரை வெளியேற்றுவது அல்லது அவர் மேல் தண்டனை விதிப்பது என்று இருக்க வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னால் இந்த சட்டத்தை உருவாக்கினாலும் அது விவசாயிகளுக்கு நல்லது செய்யக்கூடிய நிலையில் இருக்காது. மேலும் நூற்றுக் நூறு பேர் ஹரிஜனமக்கள்தான் இந்த விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஹரிஜன முன்னேற்றத்திற்காக நாங்கள் பாடுபடுகிறோம் என்று சொல்கிற சர்க்கார், அவர்களின் முன்னேற்றத்திற்காக நாங்கள் பணம் ஒதுக்குகிறோம் என்று சொல்லும்போது ஹரிஜன முன்னேற்றத்திற்கு தீங்கு விளைவிக்கும் முறையில் அமைந்துள்ள இந்த இரண்டாவது சப் கிளாசை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Sri S. LAZAR : என்னுடைய திருத்தங்கள், கையேர் வாரந்தார்களை வெளியேற்றுவது என்ற முடிவிற்கு வரும்போது அவர்களுக்கு எந்தளவு முன் அறிக்கை கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றியதாகும். இப்பொழுதுள்ள முறையில் 12 மாதங்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று அமைந்திருக்கிறது. என்னுடைய திருத்தத்தின் நோக்கம், இந்த அளவை அதிகமாக வைத்திருப்பதால் இந்த சட்டம் கொண்டு வருவதின் நோக்கமே கெட்டுப்போய்விடுமோ என்று பயப்படவேண்டியிருக்கிறது. இந்த சட்டத்தின் நோக்கம், மிராசுதார்களுக்கும், சாகுபடியாளர்களுக்கும் இடையே ஒரு சுமுகமான உறவு நிலவ வேண்டுமென்பதுதான். இவ்வளவு காலத்திற்கு நோட்டீஸ் கொடுத்து விட்டு நீக்கி விடலாம் என்றிருந்தால் அதனால் ஒரு வருட சாகுபடியும் பாழடைந்து போகும். நிலக்காரர் குத்தகை செய்பவர்மேல் குற்றம் காண வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இருப்பார். குத்தகை செய்பவரும், நம்மைத்தான் நீக்கப் போகிறாரே, நாம் என் பாடுபட வேண்டும் என்று நினைத்துக் கொள்வார். இதனால் சாகுபடிதான் குறையும். ஆகவே காலவரையை குறைக்கவேண்டுமென்று தான் ஆறு மாதம் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இரண்டாவது திருத்தம் மிக முக்கியமானது. பன்னிரண்டு மாதங்களாக இருந்தாலும் சரி, அல்லது ஆறு மாதங்களாக இருந்தாலும் சரி அதை இந்த சபைதான் நிறைவேற்றப் போகிறது. அந்த முறையில் வைத்துப் பார்த்தால் இது மிக முக்கியமானது என்பதை உணரமுடியும். ஆறு மாதம் அல்லது 12 மாதம் நோட்டீஸ் கொடுத்து விட்டு வெளியேற்றலாம் என்று இருப்பதை பார்க்கிறபோது 6 அல்லது 12 மாத காலம் முடிகிறபோது, அறுவடையாவதற்கு முன்னர் அவரை வெளியேற்றி விடலாம் என்று இருந்தால் அதனால் கையேர் வாரந்தாருக்கு கிடைக்க வேண்டிய கூலி கிடைக்காமல் போய்விடும். ஆகவே, இரண்டாவது திருத்தத்தின் நோக்கம் என்னவென்றால், வெளியேற்ற வேண்டுமென்று முடிவு செய்தால், 6 அல்லது 12 மாதம் முடியும் போது, அந்த நிலத்தில் பயிர் இருந்தால் அந்த சமயத்தில் அந்த கையேர் வாரந்தாரை நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்பதுதான் இதன் நோக்கம். அவர் அறுவடை முடியும் வரை தொடர்ந்து இருக்க வேண்டும். அந்த அறுவடையின் பலன் அவருக்கு கிடைத்தபின்தான் அவர் வெளியேற்றப்படலாம் என்ற நோக்கத்தில்தான் இரண்டாவது திருத்தம் அமைந்திருக்கிறது. இதை கண்டிப்பாக அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என்று நினைக்கிறேன்.

***Sri R. SRINIVASA IYER :** இந்த 4-வது கிளாசில் உள்ள இரண்டாவது பிரிவை எடுத்து விட வேண்டுமென்று வாதிக்கப்படுகிறது. ஒரு மிராசுதார் ஒரு வேலைக்காரனை வேண்டுமென்றே நீக்கினால் அவன் மிராசுதாரராக இருக்க லாயக்கேயில்லை. வேண்டுமென்று ஒரு வேலைக்காரனையும் ஒரு மிராசுதார் நீக்க மாட்டார், ஒரு மிராசுதாரரை ஒரு வேலைக்காரன் அடிக்கிறான் என்றால் அவனை வேலையில் இருந்து நீக்காமல் வைத்துக் கொண்டிருப்பதா ? "மிஸ் காண்டக்ட் ஆர் நெகிளக்ட் ஆப் ட்யூட்டி" என்று சொல்லப்பட்டிருக்கிறது. நல்லபடி உழைக்கவேண்டுமென்று பண்ணைக்காரனுக்கு

5th November 1958] [Sri R. Srinivasa Iyer]

அக்கரை இருக்க வேண்டும். வெள்ளாமையை நன்கு பெருக்கவேண்டுமென்ற உத்தேசம் இருவருக்கும் இருக்க வேண்டும். இந்த சட்டத்தின் நோக்கமே, மிராசுதாரும் பண்ணையாளும் ஒற்றுமையாக இருந்து வெள்ளாமையைப் பெருக்கவேண்டுமென்பதுதான். அப்படி ஒருவனை நீக்கிவிட்டால், ஆருவது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது, அவன் தாசில்தாரிடம் முறையிடலாம், அதற்குமேல் ஆர். டி. ஓ. யிடம் அப்பீல் செய்யலாம் என்று. டெப்டி கலெக்டர் முடிவுதான் தீர்மானமானது. ஆக, ஒருவனை வேண்டுமென்றே ஒரு மிராசுதாரும் நீக்கமாட்டார். அப்படி நீக்கினாலும் அப்பீல் செய்வதற்கு பவர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இரண்டாவது செக்ஷனை எடுத்து விடுவதற்கு அவசியமில்லை. பன்னிரண்டு மாதம் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. இந்த பீரியேட்டில்தான் அவர்களிடையே பாந்தவ்யம் இருக்கிறது. அப்படி நோட்டீஸ் கொடுக்கப்படும்போது இந்த வேலைக்காரன் நினைக்கலாம், நம்மைத்தான் நீக்கப் போகிறாரே, நாம் ஏன் நன்கு வேலை செய்து வெள்ளாமையைப் பெருக்க வேண்டுமென்று. அப்படி நினைத்து அவன் நன்கு வேலை செய்யமாலேயே இருந்து விடுவான். அதே போல் மிராசுதாரும், இவன்தான் போகப் போகிறானே, என்று அவன் மேல் கோபம் வரலாம். அறுவடைக்கு முன்னர் அப்புறப்படுத்தக் கூடாது என்று இந்த சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆறு மாத நோட்டீஸ் என்று சொல்வது சரியல்ல. அவனை வேலையில் இருந்து நீக்கி விட்டால் அவன் வேறு இடம் பார்க்க வேண்டும். நோட்டீஸ் கொடுக்கும்போது மறு சாகுபடி கெட்டுப் போகாமல் இருக்கும் விதத்தில் எவ்வளவு காலம் நோட்டீஸ் கொடுக்கலாம் என்று ஆலோசித்துச் செய்ய வேண்டும். விலக்கினால் காம்பன்சேஷன் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது.

' . . . . he shall be liable to pay to the Kaiaeruvaramdar such compensation as may be prescribed . . .' என்றிருக்கிறது. அது ரூல்ஸ்-ல் கொடுக்கப்படும். பன்னிரண்டு மாதம் நோட்டீஸ் என்பது கூடுதல். Tanjore Pannayals Act-ல் எப்படி provisions இருக்கிறது என்று பார்த்து, நியாயமாகச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : உழைக்கக் கூடியவர்களுக்கு சலுகை கொடுத்தால் உற்பத்திக்கு ஆபத்து வரும் என்று கூக்குரல் போடுவோர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இந்த சட்டம் கொண்டு வருவதின் நோக்கம் என்ன ? கையேர் வாரந்தார்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பதுதான் இதன் நோக்கம். அவர்களை நிலத்தில் இருந்து வெளியேற்றாமல் இருப்பதற்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பதுதான் இதன் நோக்கம். ஆனால் 4-வது பிரிவு அந்த நோக்கத்தின் அடிப்படையையே தகர்த்து விடுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். கொடுத்திருக்கக் கூடிய பாதுகாப்பு எல்லாம், ஒரு க்ராப் ஸீஸனில் மட்டுந்தான் அவர்களை வெளியேற்றக் கூடாது என்ற உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. தவிர, சாகுபடி கால முடிவில் அவர்களை வெளியேற்றலாம் என்ற அர்த்தம்தான் இதில் இருக்கிறது. ஒரு வருட கால தவணை கொடுக்கலாம் என்பதைத் தவிர வேறு எந்தவிதமான உரிமையும் அவனுக்கு கொடுக்கப்படவில்லை. ஒரு வருட தவணைகொடுத்து விட்டு காரணமின்றியே அவனை வெளியேற்றலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே வெளியேற்றப் பட்டவர்களை மறுபடியும் வேலைக்கு அமர்த்தினாலும் கூட ஒரு வருடத்திற்குத்தான் இருக்க முடியும். ஒரு வருடம் முடிந்த பிறகு சட்டபூர்வமாக எல்லா கையேர்வாரந்தாரையும் வெளியேற்றி விடுவதற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது பிரிவில், any land-owner may dismiss Kaiaeruvaramdar for misconduct or neglect of duty என்றிருக்கிறது. அது, வேலை சரியாக செய்யவில்லை என்ற காரணம் காட்டி எந்த சமயத்திலும் அவனை டிஸ்மிஸ் செய்வதற்குள்ள உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த செக்ஷனால் நாம் இச்சட்டம் கொண்டு வருவதின் நோக்கமே நிறைவேறவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் கேட்க வேண்டும். ஆகவே, பழனிசுவாமி

அவர்களின் திருத்தத்தை ஏற்றுக் கொண்டால் அது ஓரளவு கையேர் வாரந்தார்களுக்கு பலனளிக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***THE HON. SRI M. A. MANICKAVELU :** இந்தப் பிரிவு, எந்த சந்தர்ப்பத்தில் கையேர்வாரந்தார்களை நீக்கலாம் என்று சொல்லும் பிரிவு. நோட்டீஸ் கொடுத்து விட்டு நீக்குவதாக இருந்தால் ஒரு வருடம் என்று சொல்லியிருக்கிறது மூன்றாவது பிரிவில். அது கூடாது, அதை ஆறு மாதமாக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. மூன்று மாதமா, ஆறு மாதமா, பன்னிரண்டு மாதமா என்று சொல்லி அதை நன்கு யோசனை செய்த பிற்பாடுதான் கடைசியில் அதை பன்னிரண்டு மாதமாக ஆக்க வேண்டுமென்ற முடிவிற்கு வந்தோம். சில விஷயங்களில், ஒரு வாரம், ஒரு மாதம், மூன்று மாதம், ஆறு மாதம், ஒரு வருடம் என்று இப்படியெல்லாம் இருக்கிறது. பன்னிரண்டு மாதம் என்று ஏன் வைக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டால், ஒரு இடத்தில் இருந்து நீக்கி விட்டால் உடனேயே இன்னொரு யிடத்தில் வேலை கிடைப்பது என்றால் கஷ்டம். ஒரு உத்தியோகம் கிடைக்க வேண்டுமென்றால் பல வருடங்கள் காத்து நிற்க வேண்டியிருக்கிறது. ஆஸ்பத்திரிக்கு போனால் கூட அங்கும் காத்து
11 a.m. நிற்க வேண்டியிருக்கிறது. ஆகவே இவைகளை நீக்கி, இப்போது இருக்கிறபடி பன்னிரண்டு மாதங்கள் என்றிருந்தால் முன் ஜாக்கிரதையாக வேறு எங்கேயாவது வேலைகிடைக்க வழி செய்து கொள்ள முடியும். இதையெல்லாம் யோசனை செய்துதான் பன்னிரண்டு மாதங்கள் என்று இருக்கலாம் என்று ஒத்துக் கொண்டார்கள். அதன் பிரகாரம் இவ்விதம் போடப்பட்டிருக்கிறது. அடுத்ததாக **'Any landowner may dismiss a Kaiaeruvaramdar for misconduct or for neglect of duty'—** இதை முற்றிலும் மாற்றிவிட வேண்டும் என்று கனம் அங்கத்தினர் ஒருவர் சொன்னார், கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர்கள். **'Unless he absents himself from work continuously for more than a month'** என்று ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். இது ஆபத்தான ஒரு அமெண்ட்மெண்ட் என்று சொல்லலாம். தொடர்பாக அவர்களாகவே வராமல் இருந்தால் டிஸ்மிஸ் செய்துவிடலாம் என்று சொல்லுவதாகத் தெரிகிறது. இது அவர்களுடைய கொள்கைக்கு எப்படிப் பொருந்துகிறது என்று எனக்குத் தெரியவில்லை. இது இல்லாமல் இருந்தால் கையேர் வாரம்தார்களுக்கும், மாட்டேர் வாரம்தார்களுக்கும் நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன். **'Any landowner may dismiss a Kaiaeruvaramdar for misconduct or for neglect of duty'** என்று ஏற்கெனவே சட்டத்தில் சொல்லிவைத்திருக்கிறோம். டெனண்டை விட ஸ்டாட்டஸ் குறைவு என்கின்ற காரணத்தில் இவ்விதம் கூறப்பட்டிருக்கிறது. இதில் வேறு ஏதாவது மாற்றம் செய்ய முடியுமா என்பதைப் பற்றி பார்க்கலாம் . . .

SRI S. LAZAR : Sir, I rise on a point of order.

இந்த நான்காவது பிரிவு இரண்டாவது உட் பிரிவில் . . .

DEPUTY SPEAKER : It is not a point of order.

SRI S. LAZAR : I am coming to that. It was stated that there were similar provisions in the other Acts. It was also pointed out by some of the Members . . .

DEPUTY SPEAKER : The hon. Member cannot expect a reply from the Chair to this point.

SRI S. LAZAR : Then I will put it as a point of elucidation.

5th November 1958]

SRI S. LAZAR : இந்த நான்காவது பிரிவு இரண்டாவது உட்பிரிவில் இது சம்பந்தமாக **restriction** செய்யப்பட்டிருப்பதை எடுத்துவிட்டால் இது சம்பந்தமாக வேறு எந்த பிரிவிலும் சொல்லப்படவில்லை. இச்சட்டத்தில் இதற்கு ஒரு ப்ரொவிஷன் இல்லாமல் இருக்கும். ஆகவே, இதை மாற்றக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள். மாற்றினால் இப்போது கையேர் வாரந்தார்களும், மாட்டேர் வாரம்தார்களும் எவ்விதம் இருக்கிறார்களோ அதே நிலையில்தான் இன்னும் இருந்து கொண்டிருப்பார்கள்.

THE HON. SRI M. A. MANICKAVELU : In any contract there should be provision by which the contract could be put an end to. The Contract Act will not apply here. As such, the provision in sub-clause (2) is absolutely necessary in this case. The idea is not to omit the entire sub-clause (2). We are just examining whether this clause could be improved.

We can now take up clause 3, Sir.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

'*For* clause 3, *substitute* the following clause, namely :—

"3. *Remuneration payable to kaiaeruvaramdar.*—Notwithstanding anything to the contrary contained in any pre-existing law, custom, usage, agreement or decree or order of a Court, the remuneration payable to any kaiaeruvaramdar shall be on the same terms as were applicable to him immediately before the commencement of this Act ".'

The other Government amendment was, by leave, withdrawn.

Clause 3, as amended, was put and carried.

DEPUTY SPEAKER : Clause 4 will be taken up afterwards. We will now take up clause 5.

Clause 5.

DEPUTY SPEAKER : The motion is

'That clause 5 do stand part of the Bill.'

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

'In line 30, *for* the figures and word "1st January 1957", *substitute* the figures and word "1st January 1956".'

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

'*For* the words "having jurisdiction . . . situated", *substitute* the words "appointed for the purpose by the Government".'

The amendment was duly seconded.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

'In clause 5, *after* the words "on application", *insert* the words "made within thirty days after the commencement of this Act".'

'To clause 5, *add* the following provisos, namely :—

"Provided that the application may be received after the period of thirty days aforesaid if the applicant satisfies the Tahsildar that he had sufficient cause for not making the application within that period :

Provided further that any order for re-engaging any kaiaeruvaramdar under this section shall, in respect of any land where there are standing crops on the date of such order, take effect immediately after the harvest of such crops." '

SRI S. LAZAR : Sir, I move—

'*Add* the following as proviso to the clause :—

"Provided that no kaiaeruvaramdar shall be entitled to apply in cases where—

(*a*) the land has been cultivated during 1368 fasli with a crop other than paddy,

(*b*) where the landowner had employed *bona fide* other kaiaeruvaramdars and such kaiaeruvaramdars work on the land on the date of commencement of this Act,

(*c*) or where the landowner has *bona fide* leased the land since 1st January 1957 and such lessee is in possession thereof, or

(*d*) where the kaiaeruvaramdar has been convicted by a Criminal Court for offences relating to the person or property of the landowner".'

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I have not received copies of the Government amendment.

DEPUTY SPEAKER : Last night they were circulated. I have seen them myself.

The clause and the amendments are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : Sir, in my amendment I have stated that for the words 'having jurisdiction . . . situated', the words 'appointed for the purpose by the Government', be substituted.

11·10 a.m. SRI S. LAZAR : இப்போது ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் இருக்கும் தாசீல்தார்களுக்கு ஏற்கனவே அதிகமான வேலைகள் எல்லாம் இருக்கின்றன. அந்த வேலைகளோடுகூட இந்த வழக்குகளையும் விசாரணை செய்ய வேண்டுமென்றால் சீக்கிரமாக வழக்குகள் முடிவு அடையா. ஆகவே, இதற்கு என்று தனியாக ஒரு தாசீல்தார் அவர்களை நியமிக்க வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள். இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே நான் கொடுத்திருக்கும் திருத்தத்தின் நோக்கம், இப்போது 5-வது பிரிவை அப்படியே அமுலுக்குக்

5th November 1958] [Sri S. Lazar]

கொண்டு வரும்போது பல சங்கடங்கள் ஏற்படும். அதை எப்படி சமாளிப்பது என்று பார்க்கும்போது என்னுடைய திருத்தத்தை ஒத்துக் கொண்டால் அதைச் சமாளிக்க முடியும் என்பது எனது தாழ்மையான கருத்து.

காரணம், 5-வது பிரிவின்படி 1957-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதியில் க்ருஷியல் டேட். அந்தத் தேதியில் வெளியேற்றப்பட்டிருந்தாலும், அல்லது அதற்குப் பிறகு வெளியேற்றப்பட்டிருந்தாலும், அத்தகைய கை ஏர் வாரம்தாரருக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டுமென்று மசோதாவிலே இருக்கிறது. 1957-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதிக்குப் பிறகு வெளியேற்றப் பட்டவர்களைத் திரும்ப எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதிலே அபிப்பிராய பேதம் கிடையாது. அது செலக்ட் கமிட்டியிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு அம்சம். அதற்கடுத்தாற்போல வேலைக்கு வைத்துக் கொள்ளவேண்டும் என்று வரும்போது சில சங்கடங்கள் வருகின்றன. அவைகளைச் சமாளிக்க வேண்டும்.

முதலாவது சங்கடம் 1957-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதிக்கும் பிறகு ஒரு சில இடங்களில் கை ஏர் வாரம்தாரர்களை வெளியேற்ற விட்டு கை ஏர் வாரம்தாரருக்குப் பிறகு குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். அந்த மாதிரி குத்தகைக்கு விடப்பட்டிருந்தால், இன்றைய தினம் குத்தகைக்கு உழுது கொண்டிருப்பவர்களின் நிலைமை என்ன ? ஏற்கெனவே இருந்தவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளும்போது புதிதாக குத்தகைக்கு உழுது வந்தவர்களின் நிலைமை என்ன என்பதைப் பற்றி வரையறுக்க வேண்டும்.

அடுத்த கஷ்டம் என்ன என்று பார்க்கும்போது, நெல் சாகுபடி செய்பவர்களுக்குத் தான் இது அமுலாகும், கரும்பு, மஞ்சள் சாகுபடி செய்பவர்களுக்கு அமுலாகாது என்று வரையறை மசோதாவிலே இருக்கிறது. கை ஏர் வாரம்தாரராக இருக்க உழவேண்டும், உழுது தண்ணீர் பாய்ச்சவேண்டும். கரும்பு, மஞ்சள் தோட்டங்களில் வேலை செய்பவர்கள் கை ஏர் வாரம்தாரர் முறையில் வர மாட்டார்கள் ஆனால் அவைகளிலே வேலை செய்யக் கூடியவர்களில் கை ஏர் வாரம்தாரர்கள் இருக்கிறார்கள் என்று நான் மட்டும் சொல்லவில்லை. எதிர்கட்சியிலுள்ள அத்தனை பேரும் செலக்ட் கமிட்டியில் ஒத்துக் கொண்ட அம்சமாகும். ஒரு இடத்திலே ஒரு சர்க்கரைத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் நெல் சாகுபடிக்குப் பதிலாக கரும்பு சாகுபடி நடக்கிறது. சில இடங்களில் மஞ்சள் சாகுபடி செய்கிறார்கள். சாகுபடி மாறியிருக்கும் இடத்தைப் பொறுத்த வரையில் கை ஏர் வாரம்தாரருடைய நிலைமை என்ன என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

மூன்றாவதாக, ஒரு சில இடங்களில் கை ஏர் வாரம்தாரர் வெளியேற்றப் பட்ட பிறகு வேறு ஒரு கை ஏர் வாரம்தாரர் நியமிக்கப்பட்டிருக்கிறார். பாஸ் செய்யப்படுகிற 4-வது பிரிவின்படி வெளியேற்றப்பட்டிருக்கக் கூடிய கை ஏர் வாரம்தாரருக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும், அவர்களுக்குத் திரும்ப வேலை கொடுக்கவேண்டும் என்பதாகும். அப்படி இருக்கும்போது பழைய கை ஏர் வாரம்தாரரைத் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால், புதியதாக வேலைக்கு வந்து வேலை செய்து கொண்டிருக்கிற கை ஏர் வாரம்தாரருடைய நிலைமை என்ன ? அவருக்கு இந்தப் பாதுகாப்புக் கிடைக்குமா ? ஆகையால் இரண்டுக்கும் முரண்பாடு இருக்கிறது. அவர்களுக்கும் ஒரு நல்ல பாதுகாப்புக் கொடுக்க புரொவிஷன் செய்தாக வேண்டியிருக்கிறது.

நான்காவதாக, இந்த வட்டாரத்தில் கிரிமினல் குற்றங்கள்—தகராறுகள்—நடந்து ஒரு சில குற்றங்கள் ஹைக்கோர்ட் வரை சென்று தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு சிலர் தண்டிக்கப்பட்டுமிருக்கிறார்கள். அப்படி தண்டிக்கப்பட்டவர்களைத் திருப்பி வேலைக்கு வைத்துக்கொண்டால் சாகுபடி சரியாக நடக்குமா என்று பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

இந்த நான்குவித கஷ்டங்களை மனதில் கொண்டுதான் நான் எனது திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தத்தில் " அப்ளை " என்று போட்டிருக்கிறேன், அதை " ரீ என்கேஜ் " என்று போட்டால்

சரியாக இருக்கும். எல்லாக் குற்றங்களுக்கும் அல்ல. நிலத்தைப்பொறு பொறுத்த வரையில், நிலச் சொந்தக்காரரைப் பொறுத்த வரையில், குற்றம் அடைந்து தண்டிக்கப்பட்டவர்கள் விஷயத்தில் இந்தப் பாதுகாப்பு வேண்டாம் என்று கொடுத்திருக்கிறேன். இதை அரசாங்கம் பரிசீலனை செய்து அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தால், வெளியேற்றப்பட்டவர்களில் 1957-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதியில் இருந்தவர்கள் தான் உரிமை பெற்றவர்கள் என்று மாற்றியமைத்தாலும் சரி அல்லது என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொண்டாலும் சரி, இதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஸார், முதல் திருத்தம் ஜனவரி மாதம் 1-ம் தேதி, 1957-ம் வருஷம் என்றிருப்பதை 1956-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதி என்று மாற்ற வேண்டும் என்று கனம் அங்கத்தினர் கொண்டு வந்திருக்கிறார். இதையே 1957-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1 -ம் தேதி என்று மாற்ற வேண்டும் என்று ஒரு திருத்தமே வந்தது, ஆனால் ஆபீஸுக்கு அனுப்பவில்லை. ரொம்ப நாளுக்குப் பின்னால் போய் விசாரித்தால் குழப்பம் தான் ஏற்படும். ஒரு வருஷத்திற்குள்ளாக இருந்தால் பரவாயில்லை. இதுவே இரண்டு வருஷமாக ஆகிறது. இருப்பதையே ஒத்துக் கொள்வது நல்லது என்று திருத்தம் கொடுக்கவில்லை. 1956-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதி என்று போட வேண்டுமென்பது ஒத்துக் கொள்ள முடியாத காரியம். ஆகையால் நான் அதை ஒத்துக் கொள்ளவில்லை.

பிற்பாடு கை ஏர் வாரம்தாரர் நீக்கப்பட்டிருந்தால், அவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுவார்கள், ஆகையால் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கரும்பு சாகுபடி, மற்றப்படி வேறு சாகுபடி செய்யும் நிலங்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை யோசனை செய்து பார்த்தோம். கொஞ்சம் அசம்பாவிதம் இருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. வேலையில் இருந்தவனை வேலை யில்லாதவனாக ஆக்கி விடக்கூடாது என்று தான் இந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். ஆகையால் நான் அந்தத் திருத்தத்தை ஒத்துக்கொள்வதற்கில்லை.

இன்னொன்று அதாவது நீக்கப்பட்ட கை ஏர் வாரம்தார் ஏதாவது ஒரு குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டிருந்தால், அவரை எடுத்துக்கொள்வது சரியா என்பது. அந்த மாதிரி ஏதாவது ஒன்றிரண்டுதான் இருக்கும் அந்த மாதிரி நீக்கப்பட்டவன் வரவும் மாட்டான். பல காரணங்களால் திருத்தம் வேண்டாம் என்று முடிவு செய்து வேண்டாமென்று விட்டிருக்கிறோம். கொண்டு வந்திருக்கிற திருத்தத்தையும் ஒத்துகொள்வதற்கில்லை.

The amendments of Sri M. Kalyanasundaram and Sri S. M. Annamalai were put and lost.

The amendment of Sri S. Lazar was, by leave, withdrawn

The Government amendments was put and carried.

Clause 5 as amended, was put and carried.

Clause 4—cont.

11-20 a.m. THE HON. SRI M. A. MANICKAVELU : I beg to move the following amendment :—

'To sub-clause (2), the following shall be added at the end, namely :—

"but shall within a week of the dismissal report the fact of such dismissal to the Tahsildar having jurisdiction".'

5th November 1958]

The amendments of Sri N. K. Palanisami and Sri S. M. Annamalai were put and lost.

The amendments of Sri S. Lazar were, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 4, as amended, was put and carried.

Clause 6.

DEPUTY SPEAKER: The motion is—

"That clause 6 do stand part of the Bill."

THE HON. SRI M. A. MANICKAVELU: I move—

"In sub-clause (1), after the words 'party aggrieved', the words and figures 'or on receipt of the report made under section 4 (2)' shall be inserted." '

SRI S. M. ANNAMALAI: I move—

'In sub-clause (1), *for* the words "having jurisdiction. situated", *substitute* the words "appointed for the purpose by the Government", and *omit* the explanation·

SRI A. V. P. ASAITHAMBI: I second the amendment.

SRI S. M. ANNAMALAI: நான் ஐந்தாவது பிரிவுக்குக் கொடுத்த திருத்தத்தைப் போலவே தான் இந்த திருத்தமும் இருக்கிறது. இதற்கென்று ஒரு தாசில்தாரை நியமித்தால்தான் அந்த வழக்குகளை விசாரித்து தக்க சமயத்தில் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரமுடியும். ஆகவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU: இது கனம் அங்கத்தினர் கொடுத்திருக்கும் "consequential amendment" முன்பு கொடுத்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு இல்லையாததால், இதையும் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை.

(Mr. Speaker in the Chair.)

The Government amendment was put and carried.

The amendment of Sri S. M. Annamalai was put and lost.

Clause 6, as amended, was put and carried.

Clause 7.

MR. SPEAKER: The motion is—

"That clause 7 do stand part of the Bill".

SRI N. K. PALANISAMI: I move:

"In clause 7 (*a*), in line 25, *after* the word 'Mattuvaramdar' *add* the words 'or a kaiaeruvaramdar'."

SRI A. R. MARIMUTHU: I second the amendment.

SRI M. KALYANASUNDARAM: I move:

"In sub-clause (*a*), *for* the word 'ten' in line 25, *substitute* the word 'seven'."

SRI N. K. PALANISAMI : I second the amendment.

SRI S. M. ANNAMALAI : I move :

"In sub-clause (*a*), *for* the word 'ten' *substitute* the word 'five'."

SRI A. V. P. ASAITHAMBI : I second the amendment.

SRI N. K. PALANISAMI : I move :

"In clause 7 (*b*), in line 29, *after* the word 'Mattuvaramdar', *add* the words 'or a kaiaeruvaramdar'."

SRI A. R. MARIMUTHU : I second the amendment.

SRI S. LAZAR : I move :

"In sub-clause (*b*), *for* the words 'referred to in sub-section (2) of section 9 whose engagement has not been terminated under that sub-section', *substitute* the words 'who owns not more than ten acres of wet land'."

The amendment was duly seconded.

* THE HON. SRI M. A. MANICKAVELU : I move the following amendment :

"In sub-clause (*b*), *for* the words 'shall apply', *substitute* the words 'shall, so far as may be, apply'."

SRI S. LAZAR : I move the following amendment :

"In sub-clause (*b*), *after* the words 'Madras Cultivating Tenants' Protection Act (Madras Act XXV of 1955) shall apply to him' and before the words 'as if he were a cultivating tenant' *add* the words 'so far as may be'."

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : 10 ஏக்கருக்கு மேற்பட்டவர்களுக்குத் தான் இந்த சட்டம் பொருந்தும் என்று சொன்னால், இன்றையதினம் ஆயிரக்கணக்கானவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். 10 ஏக்கருக்கு குறைவாக வைத்திருக்கிறவர்கள் அதிகப்படியாக இருக்கிறார்கள். ஏராளமாக வெளியேற்றப்பட்டவர்கள் இந்த சட்டத்தின் காரணமாக உள்ளே வருவதற்கு வழியில்லை. 10 ஏக்கருக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் பொருந்தும் என்று சொல்லும்போது, 15 ஏக்கர் ஒருவர் வைத்திருந்தால் 5 அல்லது 6 ஏக்கரை வேறு யாராவது பேரில் வைத்து மறுபடியும் வெளியேற்றம் செய்வதற்கு வழிவகை இருக்கும். ஆகவே, 10 ஏக்கர் என்று இல்லாமல், 5 ஏக்கர்களுக்கு மேற்பட்டவர்களுக்கும் பொருந்தும் என்று இருந்தால்தான், வெளியேற்றப்பட்டவர்களுக்கும், மாட்டுவாரம்தார்களுக்கும் பிரயோசனமாக இருக்கும் . பாக்கி இருக்கும் திருத்தத்தை நான் வற்புறுத்தவில்லை.

SRI S. M. ANNAMALAI : நான் கொடுத்திருக்கும் திருத்தமானது இந்த 10 ஏக்கர் என்று இருப்பதை 5 ஏக்கர் ஆக்கவேண்டுமென்பதற்காகத் தான். 10 ஏக்கர் என்று வைத்தால், 100-க்கு இரண்டு

பேர்கள்கூட இருக்கமாட்டார்கள். அந்த 10 ஏக்கரிலும் 3 ஏக்கர் சொந்தத்தில் வைத்துககொள்ளலாம். ஆகையால் 10 ஏக்கரா, 7 ஏக்கரா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே, 5 ஏக்கர் என்று வைத்தால் நலமாக இருக்கும். அப்படியிருந்தால் பெரும்பான்மையான மாட்டுவாரம்தார்கள் வெளியேற்றப்படாமல் இருப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

* SRI R. SRINIVASA IYER : Sir, I have got to say something about the wording of clause 7. The heading is : ' Application of Madras Act XXV of 1955 and Madras Act XXIV of 1956 to mattuvaramdars '. That is all right. The clause actually says that notwithstanding anything contained in the two Acts mentioned in the heading, the provisions of those Acts will apply to mattuvaramdars. I have found provisions saying ' notwithstanding anything to the contrary ' or ' notwithstanding any law for the time being in force ', certain Acts will apply. So, this does not seem to be proper wording. The Government have moved an amendment as regards sub-clause (*b*) which introduces the words ' so far as may be '. That is all right. But regarding sub-clause (*a*) there is no such qualification and it merely says ' the provisions of those Acts shall apply to any mattuvaramdar under a land owner who owns more than ten acres of wet land and such a mattuvaramdar shall be deemed to be a cultivating tenant within the meaning of those Acts '. So, sub-clause (*a*) will conflict with sub-clause (*b*), unless the words ' so far as may be ' are introduced in sub-clause (*a*) also. The matter requires clarification. I cannot understand a provision which reads ' notwithstanding the provisions of a particular Act, the Act will apply '. As it is it seems to be incongruous and I would request the Hon. Minister to clarify the position.

MR. SPEAKER : Let us hear what the other lawyer says.

SRI S. LAZAR : கனம் சீனுவாசய்யர் சொன்னதை முற்றிலும் ஆதரிக்கிறேன். அவர் சொன்னதிலே பூராவும் நல்ல, 'லீகல் இம்ப்ளிகேஷன்ஸ்' நிறைய இருக்கின்றன. எந்த ஒரு சட்டத்தினுடைய பிரிவுகளை புகுத்தவேண்டுமென்று சொல்லுகிறோமோ அந்த சட்டத்தைக்கொண்டு 11-30 a.m.
வந்து, அந்த சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும்கூட, அந்த சட்டம் இங்கே அமுல் செய்யப்போகிறோம் என்று சொல்லப்படுகிறது. சர்க்கார் இதை அப்படியே வைத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னால், அது சரியாகாது. " ஏ "என்று இருப்பதிலே ' **You can name the two Acts, namely. the Madras Cultivating Tenants Protection Act, 1955 and the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 and then say these shall apply to any mattuvaramdar under a land owner who owns more than ten acres, etc.** அதைக்கொண்டு வந்து புகுத்திவிட்டால் சரியாகப் போய்விடும்.

இரண்டாவது பிரிவைப் பொறுத்தவரையில் " பி " பிரிவை பொறுத்த வரையில், ஏற்கனவே இருக்கிற சட்டத்தில் கொடுத்திருக்கிறபடி என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் பொது விவாதத்தில் எடுத்துச்சொன்னது போல, " கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்டில், இருக்கிற பிரிவுகள் அனைத்தையும் மாட்டுவாரம்தாரர்களுக்கு பொருத்த முடியாத காரணத்தினாலே, சமீபத்தில் வந்த உயர்நீதி மன்ற தீர்ப்பின் காரணமாக, அந்தத் தீர்ப்பைக் காட்டி ஒரு மாட்டுவாரம்தாரர் "டெனண்ட்" இல்லை

என்று சொல்லப்படலாம். அதுவும் குறிப்பாக "கல்டிவேடிங் டெனண்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்டில்" ஒவ்வொரு பிரிவில் பார்க்கும்பொழுதும், அது மாட்டுவாரம்தாரர்களுக்கு பொருத்தமுடியாத நிலைமையில் அமைந்திருக்கிறது. உதாரணமாக, "கல்டிவேடிங் டெனண்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்டில்" 3-வது பிரிவிலே எந்த எந்த அடிப்படையிலே வெளியேற்றப்படலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை இந்த இடத்திலே பொருத்த முடியாது. எந்தெந்த சந்தர்ப்பத்தில் டெபாஸிட் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் இந்த இடத்தில் பொருத்த முடியாது. "ப்ரொவிஜர் ஆப் எவிக்டிங் எ டெனண்ட்" இருக்கிறது. அதில் "ப்ரொவிஜர்" மட்டும் தான் பொருந்தும். மற்ற பிரிவுகள் செக்ஷன் 4, 5, 6, 7 இவைகள் அனைத்தும் இதில் அமுலுக்குக் கொண்டு வர முடியாது. அதற்குத் தான் நான் திருத்தம் கொடுத்தேன். எந்த அளவுக்கு இதிலே மாட்டுவாரம்தாரர்களைப் பொறுத்தவரைக்கும் நாம் அதை அமுல் செய்யமுடியுமோ, அது வரைக்கும் இந்த சட்டத்திலே பொருந்தும் முறையிலே நான் எனது திருத்தத்தைக் கொடுத்தேன். அதையும் இப்பொழுது சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னதுபோல், கனம் சீனிவாசய்யரே முற்றிலும் ஆதரித்து முதலாவது பகுதியை எடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளுகிறேன். "பி" பிரிவைப் பொறுத்தவரைக்கும், சர்க்காரே திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

Mr. SPEAKER: மூன்றாவது லாயர் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம்.

* **Sri T. SAMPATH**: Sir, I am in entire agreement with the views expressed by the hon. Member Sri Srinivasa Iyer. I am glad that there is unanimity of opinion amongst lawyers at least with reference to this clause. (Interruption.) Sir, the hon. Member Sri Srinivasa Iyer pointed out that the clause should not have been worded in that fashion. I do agree with him because the clause as proposed will lead to so much of confusion. The clause is not so very clear. It will be more clear if the clause is worded this way, namely: 'The Madras Cultivating Tenants Protection Act, 1955 (Madras Act XXV of 1955), and the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Madras Act XXIV of 1956) shall apply to any mattuvaramdar under a landowner who owns more than ten acres etc.'.

Mr. SPEAKER: Let us hear the views of another lawyer Srimathi Anandanayaki.

Srimathi T. N. ANANDANAYAKI: Mr. Speaker, Sir, as the Learned Members of this House have already expressed, I am in entire agreement with the views expressed by the hon. and learned Member Sri Srinivasa Iyer. So far as the first thing is concerned, if I may use a strong expression, it is not an appreciable drafting. Rather it sounds bad. I would like the Legal Department to take this into consideration and not repeat such things in future. Pointing out such minor defects will take away much of the valuable time of the legislators to a very great extent. We may sometimes even overlook such small things and defects and then the High Court will point out that defect to this Legislature. I would request the Department to note this and not repeat such things in the future.

5th November 1958] [Srimathi T. N. Anandanayaki]

Coming to the clause itself, hon. Members have already pointed out that the provisions of the Cultivating Tenants Protection Act and Payment of Fair Rent Act may not apply to these mattuvaramdars entirely because certain provisions of those Acts such as eviction of tenants may not be wholly applicable to these mattuvaramdars. For instance under the Cultivating Tenants Protection Act, cultivating tenants could be evicted for some reasons like arrears of rent, causing injury to crop, negligence in the performance of the duties and so on. In the case of mattuvaramdars these reasons will not apply because they are engaged by the landlords on payment of certain wages and they have to be continued under the provisions of this Bill. Therefore eviction for arrears of rent cannot apply in the case of mattuvaramdars. Then regarding eviction for causing injury to the crop, here the mattuvaramdar is engaged by the landlord as a servant and the entire cultivation, supervision such as finding the seedlings, manuring the land and bearing the charges for cultivation of the crop are entirely under the control of the landlord, unlike the tenant in the Cultivating Tenants Protection Act of 1955. For these reasons, the entire Cultivating Tenants Protection Act will not be applicable to these mattuvaramdars. I am glad that the Government have taken into consideration these facts and brought amendment. While welcoming that, I would once again request the Government to amend the first paragraph of the clause.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, quite a number of Advocates took part in this discussion. It happens that a budding lawyer generally agrees with the senior lawyer. (Laughter.) I may however point out that this clause has two parts (*a*) and (*b*). In sub-clause (*a*) the provisions of those Acts will apply to mattuvaramdars and as such shall be deemed to be a cultivating tenant. The mattuvaramdars get all the rights of the cultivating tenants. But under sub-clause (*b*) the mattuvaramdars shall continue as mattuvaramdars on the same terms as are applicable to them immediately before the commencement of this Act. That means that they do not get all the rights of the Cultivating Tenants Protection Act. Therefore these are these two divisions one sub-clause providing that all the rights and privileges derived from the Cultivating Tenants Protection Act will apply to them and the other which does not, give that privilege to them. Therefore it is necessary to say : 'Notwithstanding anything contained in the Madras Cultivating Tenants Protection Act, and the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act shall apply to these mattuvaramdars'. The provisions of those Acts will not apply to sub-clause (*b*). In order to make the position clear I am told, the clause as it stands is all right and that there is nothing wrong about it. Therefore I oppose the amendment.

The other question raised is : 'Why not reduce the limit to five instead of fixing it at 10'. It may also be said, 'Why not reduce it to 3', if it is fixed at 5. Therefore after considering all

these aspects we have come to the conclusion that 10 acres will be the reasonable limit. That is why 10 acres has been fixed. I am unable to accept the amendment in respect of that matter also.

The amendments of Sri N. K. Palanisami and the amendment of Sri S. M. Annamalai were put and lost.

The amendment of Sri M. Kalyanasundaram and the amendments of Sri S. Lazar were, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 7 as amended was put and carried.

Clause 8.

MR. SPEAKER : The motion is—

'That clause 8 do stand part of the Bill.'

SRI M. KALYANASUNDARAM : Sir, I move :

'In sub-clause (1), in line 2, *for* the figure "1957", *substitute* the figure "1956", and in sub-clause (2) *for* the figure "1957", *substitute* the figure "1956".'

The amendment was duly seconded.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move :

'In sub-clause (2) after the word and figure "section 7" in line 15 *add* the following words and figures "and in sub-section 2 of section 9".'

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move :

'In sub-clause (1), *for* the word "thirty" wherever it occurs, *substitute* the word "ninety".'

'*After* the figure and word in sub-clause (1) "section 7", *add* the words "or otherwise".'

'In sub-clause (2), *after* the words "relevant time" *insert* the words "or otherwise".'

The amendments were duly seconded.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move :

'*After* sub-clause (3) of clause 8, *add* the following sub-clause, namely :—

"(4) Notwithstanding anything contained in this section, any order for re-engagaing any mattuvaramdar under this section shall, in respect of any land where there are standing crops on the date of such order, take effect immediately after the harvest of such crops".'

Sir, I want to make one submission. The hon. Member, Sri Kalyanasundaram has moved an amendment, which is similar to the amendment which was already turned down by the House. May I know whether he is right in moving it?

5th November 1958]

MR. SPEAKER : Is the hon. Member, Sri Kalyanasundaram, pressing his amendment?

SRI M. KALYANASUNDARAM : Sir, I am not pressing it.

MR. SPEAKER : Now the clause 1 and the amendments are before the House for discussion.

மூன்றுவது லாயர் என்ன சொல்லுகிறுர் என்று பார்ப்போம். இந்த திருத்தங்களின் பேரில் கனம் அங்கத்தினர்கள் பேசலாம்.

SRI S. M. ANNAMALAI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மாட்டுவாரம்தார்கள் இந்தச் சட்டத்தின் பயனை அடைய வேண்டி அவர் கள் ஒரு மாதத்திற்குள் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும் என்று இருக்கிறது : உண்மையில் பார்த்தால் இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த ஒரு மாதத்திற்குள் நாட்டுப்புறங்களில் இருக்கும் விவசாயிகளுக்கும், அங்கே வேலை செய்து வரும் விவசாயிகளுக்கும் இது விஷயம் தெரியா மல் இருக்கும். இப்படிப்பட்ட ஒரு சட்டம் வந்திருக்கிறது என்று அவர்களுக் குத் தெரியாமல் இருக்கும். ஆகையால் இப்படி முப்பது நாட்கள் என்று இருப்பதை 90 நாட்கள் என்று இருக்கவேண்டும் என்று நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அப்படி அதிகப்படியான அவகாசம் கொடுத்தால் அப்படி நாட்டுப்புறங்களில் வேலை செய்யும் விவசாயிகளுக்கு இதைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டு அதன் பிறகு அவர்கள் விண்ணப்பித்துக்கொள்ள முடியும். அந்த அளவில் இந்த திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய திருத்தமானது :—

'Any mattuvaramdar referred to in clause (a) of section 7 whose engagement has been terminated on or after the 1st January 1957 and before the commencement of this Act on the footing that the said Act did not apply to him at the relevant time or otherwise. . . .'

என்று கொடுத்திருக்கிறேன். இந்தச் சட்டமானது சென்னை மாகாண கவர்னரால் அவசரச் சட்டமாகக் கொண்டு வந்து அதன் பின் இந்த சட்ட மன்றத்தின் முன்னுல் ஒரு மசோதாவாக வந்தது. அப்படி வந்த பிறகு அது ஒரு ஜாயின்ட் செலெக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பப் பட்டது. அதன் பின் அது கைவிடப்பட்டது. அதன் பின் இப்பொழுது இந்த மசோதா மூலமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது வருவதற்கு முன் எவ்வளவோ நிலச் சுவாந்தார்கள் மாட்டு வாரம்தார்களின் மீது பல வழக்குகளைத் தொடர்ந்து 447-வது பிரிவின் கீழ் அவர்கள் மீது ட்ரெஸ்பாஸ் என்ற கிரிமினல் வழக்குகளையும், அத்து மீறி நிலத்தில் பிரவேசித்து நெல்லை அறுத்துக்கொண்டு விட்டார்கள் என்று சிவில் கோர்ட்டுகளிலும் வழக்குகள் தொடர்ந்தும் அவர்களை பயமுறுத்தி இனி மேல் நிலத்தில் பிரவேசிக்க வில்லை என்று எழுதி வாங்கியும் இருக்கிறுர் கள். இனி மேல் பயிரிடாமல் வெளியேறி விடுகிறேம் என்றும் எழுதி வாங்கியிருக்கிறுர்கள். மற்றும் மாட்டு வாரம்தார்களின் மீது சென்னை உயர் நீதி மன்றங்களில் நிலச் சுவாந்தார்கள் தங்கள் சார்பாக தீர்ப்புகள் வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறுர்கள். "சர்ரண்டர்" செய்தவர்களை வழக்கில் ஈடுபடுத்தி இந்தச் சட்டம் வந்தாலும் அவர்களுக்கு இந்தச் சட்டம் செல்லாது என்ற முறையில் எழுதி வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறுர் கள். அப்படிப்பட்ட வழக்குகள் உண்மையாக இருந்தபோதிலும் அவர் களுக்கு இந்தச் சட்டத்தின் பயன் கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே இந்தச் சட்டத்தின் உண்மையான பலன் அவர்களுக்குக் கிடைக்க வேண்டு மென்ற அடிப்படையில் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே இந்த திருத்தத்தை ஏற்றுக்கொண்டு பல மாட்டு வாரம்தார் களுக்கு நல்ல பலன் அடைய இதை ஏற்றுக்கொள்ளவேண்டும். மாட்டு வாரம்தார்கள் இந்தச் சட்டத்தினுல் பலன் அடைவார்களா இல்லையா என்பது

தெரியவில்லை. இதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தும் அவர்களுக்குப் பிரயோசனம் இல்லாமல் போய் விடும் என்ற காரணத்தால் இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுதுள்ள முப்பது நாட்கள் என்பதை 90 நாட்கள் என்று மாற்றவேண்டுமென்ற திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு திருத்தத்தை கொடுத்து மாட்டு வாரம்தார்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படி 90 நாட்கள் என்று மாற்ற வேண்டியது அவசியம் தானு என்பதை கனம் அங்கத்தினர் அவர்களே பார்த்துக்கொள்ளவேண்டும். அப்படி மாற்றுவதனுல் மாட்டு வாரம்தார்களுக்கு உண்மையிலேயே பலன் கிடைக்குமா என்பதை அவர்களே சிந்தித்துப் பார்க்கவேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு காலத்தை கடத்திக்கொண்டு போகிறேமோ அவ்வளவு கவ்வளவு அவர்களுக்கு கெடுதல் என்பதை அவர் உணரவேண்டும். ஆங்கிலத்தில் சொல்லுவார்கள் "டிலே" கால தாமதம் என்று. கால தாமதம் செய்தால் அதன் பலன் கிடைக்காமல் போய்விடும். எவ்வளவு சீக்கிரமாக விறு விறுப்பாக எந்தக் காரியத்தைச் செய்கிறேமோ அப்பொழுதுதான் நல்ல பலன் கிடைக்கும். காலத்தைக் கடத்திக்கொண்டுபோய் ஆறப் போட்டு விட்டால் அதன் பலன் கிடைக்காமல் போய்விடும். அதனுல் முப்பது நாட்கள் என்று இருப்பதை 90 நாட்கள் என்று மாற்ற வேண்டிய அவசியமே இல்லை. உண்மையிலேயே மாட்டு வாரம் தாரர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று கருதினுல் எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமாக விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவுக்கு அவ்வளவு சீக்கிரமாக விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். அப்படிச் செய்து கொண்டால் தான் அவர்களுக்கு நன்மை ஏற்படும். ஆர அமரச் செய்தால் பிரயோசனம் இல்லை. 90 நாட்கள் என்று இருந்தால், இந்த 90 நாட்கள் கழிந்த பிறகு வழக்குத் தொடர்ந்து அது முடிவு பெறுவதற்கு இன்னும் அதிகப்படியான கால தாமதம் ஏற்படும். அதனுல் உண்மையிலேயே மாட்டு வாரம்தார்களுக்கு எத்த விதமான நன்மையும் ஏற்படாது.

முப்பது நாட்களுக்கு அவர்களுக்கு தெரியாவிட்டால் என்ன செய்வது என்று சொல்லுகிறார்கள். அதற்கு என்று ஒரு சரத்தும் கொடுக்கப்பட்டிருக்கிறது. முப்பது நாட்களுக்குள் விண்ணப்பம் செய்து கொள்ளத் தவறிவிட்டால் அதற்கு தகுந்த காரணம் காட்டினுல் அதை ஏற்றுக்கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதனுல் தகுந்த காரணம் இருந்தால் அதை ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆகவே முப்பது நாட்களுக்குள் விண்ணப்பம் செய்து கொள்ளாவிட்டால் தகுந்த காரணம் காட்டி அதற்குப் பிறகு விண்ணப்பம் செய்து கொள்ளலாம் என்று இருக்கும்போது முப்பது நாட்கள் என்று இருப்பதை 90 நாட்கள் என்று மாற்றுவதற்கு அவசியமே இல்லை. அப்படி அமைத்தால் மாட்டு வாரம் தார்களுக்கு அவர் நன்மை செய்கிறரா என்பதை சற்று சிந்தித்துப் பார்க்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே கனம் அங்கத்தினர் அவர்கள் இதை சற்று அமைதியாக ஆராய்ந்து பார்த்து விட்டு தன்னுடைய திருத்தத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி வாங்கிக் கொண்டால் நலமாக இருக்கும் என்றும் நினைக்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஸார், இந்த காலத்தை முப்பது என்று இருப்பதை 90 என்று மாற்றவேண்டும் என்பதற்கா திருத்தம் கொடுத்ததைப்பற்றி கனம் அம்மையார் அவர்கள், ஒரு வழக்கு அறிஞர், நல்ல முறையில் பதில் சொல்லிவிட்டார். ஆகையால் அதை மீண்டும் நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. நியாயமான அளவுக்கு ஒரு காலத்தைக் அமைக்கவேண்டும் என்பதற்காகத்தான் அப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் விண்ணப்பம் செய்துகொள்ளாவிட்டால், அதற்கு தகுந்த காரணம் காட்டினுல் அதை ஏற்றுக்கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதனுல் இந்த திருத்தம் தேவையில்லை. இன்

5th November 1958] [Sri M. A. Manickavelu]

னும் மற்ற திருத்தங்களையும் ஒத்துக்கொள்வதற்கு இல்லை. ஏனென்றால் பொறுக்குக் கமிட்டியில் இதையெல்லாம் தீர்க்க ஆலோசனை செய்து கடைசியில் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதையொட்டித்தான் இதையெல்லாம் இம்மாதிரியாக வகுத்திருக்கிறோம். ஆகையினால் இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று சொல்லுகிறேன்.

The amendment of Sri M. Kalyanasundaram to sub-clauses (1) and (2) was, by leave, withdrawn.

The amendment of Sri M. Kalyanasundaram to sub-clause (2) and the amendments of Sri S. M. Annamalai were put and lost.

The Government amendment was put and carried.

Clause 8, as amended, was put and carried.

Clause 9.

MR. SPEAKER : The motion is—

'That clause 9 do stand part of the Bill.'

SRI S. M. ANNAMALAI : Sir, I move :

'In sub-clause (1), *for* the word "three" *substitute* the word "two".'

'In sub-clause (2) *for* the word "ten" *substitute* the word "five".'

'*Add* the following as proviso to sub-clause (2) :

"Provided that termination of engagement shall be done once in five years".'

The amendments were duly seconded.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move :

'In sub-clause (2), in line 2 *for* the words "tenacres", *substitute* the words "seven acres".'

The amendment was duly seconded.

SRI S. LAZAR : Sir, I move :

'In sub-clause 1 *after* the words "sales tax" *omit* the words "profession tax".'

'In sub-clause 3 *add* the following as proviso :

"provided that a landowner may also dismiss or terminate the engagement of a mattuvaramdar for misconduct or neglect of duty".'

The amendments were duly seconded.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : மன்றத் தலைவர் அவர்களே, மூன்று 11-50 a.m.
ஏக்கருக்கு அதிகப்படாமல் வைத்திருக்கும் நிலச் சொந்தக்காரர், விற்பனை வரியோ, தொழில் வரியோ, வருமான வரியோ செலுத்தாமலிருந்தால், அவர் தன்னுடைய நிலத்தை சொந்த சாகுபடிக்கு வைத்துக்கொள்ளலாம் என்று இந்த மசோதாவில் இருக்கிறது. சாதாரணமாக ஒன்று இரண்டு

எக்கர்களில் தான் சொந்த பயிர் வைத்துக் கொள்வார்கள். ஆகவே, முதல் உட்பிரிவில் "மூன்று எக்கர்கள்" என்று இருப்பதை "இரண்டு எக்கர்கள்" என்று இருந்தால் போதும் என்று மாற்றும்படி நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப்போலவே, இதற்கு முன்னால் சொல்லிய காரணத்தையே வைத்துக்கொண்டு, "பத்து எக்கர்கள்" என்று இருப்பதையும் "ஐந்து எக்கர்கள்" என்று ஆக்கவேண்டுமென்றும் இண்டாவது உட்பிரிவுக்கு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது உட்பிரிவின் கீழ் கீழ்க்கண்ட ப்ரொவைஸோ ஒன்றைச் சேர்க்கவேண்டும் என்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன் :

'*Add* the following as proviso to sub-clause (2) :

"Provided that termination of engagement shall be done once in five years".'

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் வேலையிலிருந்து நீக்கவேண்டுமானால் நீக்கவேண்டும் என்ற முறையில் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். காரணம் என்னவென்றால், ஒரு நிலத்தில் வேலை செய்வதென்றால், அதில் ஏறத்தாழ ஐந்து ஆண்டுகள் தொடர்சியாக இருந்தால் தான் அதிலிருந்து பலன் அடையமுடியும். ஆகையால், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் நீக்கக்கூடிய முறையில் அமைந்திருக்கவேண்டுமென்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, மூன்று எக்கர் சொந்தமாக விவசாயத்திற்கு எடுத்துக்கொண்டால் அதில் இருக்கும் மாட்டுவாரக்காரர்களை வெளியேற்றலாம் என்று இருக்கிறது. நான் கேட்டுக் கொள்வதென்னவென்றால், 1956-ம் வருஷத்திய கல்ட்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்‌ஷன் சட்டப் பிரகாரம் அதுவே இதற்கும் அப்ளை ஆகிற மாதிரி செய்தால் பொருந்துகிறமாதிரி இருக்கும். அதில் சொல்லியிருக்கிறது. தான் சொந்தமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் பாதி எடுத்துக்கொள்ளலாம், குத்தகைதாரர் இஷ்டப்பட்டால் பழைய குத்தகையைக் கொடுத்து அதில் இருக்கலாம் என்று இருக்கிறது. அதே சட்டம் இதற்கும் பொருந்துகிற மாதிரி கொண்டு வரவேண்டும்.

அந்த மிராசுதார்கள் எந்த பூமியை எடுத்துக்கொள்வது என்பதை அந்த மிராசுதார் தான் தீர்மானிக்க வேண்டும் என்று இருப்பது, அதில் இருக்கக்கூடிய சலுகை கிடைக்காமல் இருப்பதற்கான ஒரு வழி தான் என்று நான் சொல்கிறேன். காரணம் என்னவென்றால், இரண்டு மூன்று மாட்டுவாரக்காரர்கள் இருந்தால் நான் இவ்வளவு தான் கொடுப்பேன் இல்லையென்றால் பூமியிலிருந்து வெளியேறு என்று சொல்வதற்கு வழி இன்று இருக்கிறது. இதிலும் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும். இந்த இரண்டையும் திருத்தி சரியான முறையில் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*SRI R. SRINIVASA IYER : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 9-வது செக்‌ஷனிலே "ஸேல்ஸ் டாக்ஸ், ப்ரொபஷன் டாக்ஸ் அல்லது இன்கம் டாக்ஸ்" என்று போட்டிருக்கிறது. செலக்ட் கமிட்டியிலே ஏக மனதாக தீர்மானம் பண்ணும்போது, மூன்று எக்கர், மூன்று எக்கருக்கு குறைச்சலாக இருக்கும் மிராசுதாரருக்கு இந்தச் சட்டம் வரக்கூடாது ; ஆனால், அவன் ஸேல்ஸ் டாக்ஸ், இன்கம் டாக்ஸ் செலுத்தினால் அந்தச் சட்டம் அவனுக்கும் வரலாம் என்று போட்டோம். இப்பொழுது ப்ரொபஷன் டாக்ஸும் சேர்ந்திருக்கிறது. மாதம் 50 ரூபாய் சம்பாதித்தால் பஞ்சாயத்து இருக்கும் இடங்களில் ப்ரொபஷன் டாக்ஸ் போடப்படுகிறது. வருஷம் 600 ரூபாய் வருகிறவர்கள் ப்ரொபஷன் டாக்ஸ் கட்ட வேண்டியிருக்கிறது. சாதாரண சிறு தொழில் செய்கிறவர்களும், டீ கடை வைத்

5th November 1958] [Sri R. Srinivasa Iyer.]

பவர்களும் கூட இந்த ப்ரொபஷன் டாக்ஸ் கட்டுபவர்களாவார்கள். அவர்கள் ஏதோ 3 ஏக்கர் நிலம் வைத்திருந்தால் அவர்களெல்லாம் இந்த சட்டத்தினால் பாதிக்கப்படுவார்கள். ஆகவேதான் அவர்களையெல்லாம் பாதிக்காத வகையில் சட்டம் கொண்டுவரவேண்டுமென்று, " இன்கம் டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ் செலுத்தினால்தான் " என்று ஏகமனதாக செலக்ட் கமிட்டியில் தீர்மானம் செய்யப்பட்டது. " சேல்ஸ் டாக்ஸ், இன்கம் டாக்ஸ் " இந்த இரண்டு இனத்தையும் சேர்த்திருப்பது சரி. ஆனால், ப்ரொபஷன் டாக்சும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அது சரியல்ல.

'An income of over Rs. 2,000 per annum, என்று வேண்டு மானால் போட்டுக்கொள்ளலாம். மூன்று ஏக்கர் வைத்துக்கொண்டிருந் தால் சொந்த சாகுபடி பண்ணக்கூடாது என்று சொல்வது செலக்ட் கமிட்டியில் முடிவு பண்ணியதற்கு விரோதமாக இருக்கிறது. மாதம் ஐம்பது ரூபாய் சம்பாதித்தால், பஞ்சாயத்து போர்டு ப்ரொபஷன் டாக்ஸ் வசூலித்துவிடும். முனிசிபாலிடியில் மட்டும் இல்லை. எல்லாப் பஞ் சாயத்து போர்டுகளிலும் வந்துவிட்டது. 43 கிராமங்களுக்கும் கண்டிப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன். " சேல்ஸ் டாக்ஸ் அல்லது இன்கம் டாக்ஸ் " என்று செலக்ட் கமிட்டி செய்திருந்தபடியே இருந்தால் நல்லது என்பது என் யோசனை. அப்படிச் செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய இரண்டு திருத்தங்களில் முதல் திருத்தத்தை பற்றி கனம் ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதில் சொல்லியிருக்கிற பிரகாரம், செலக்ட் கமிட்டி உட்கார்ந்து நிர்ணயித்து கொடுத்திருக்கும் ரிப்போர்ட்டிலே வருமான வரி, விற்பனை வரி செலுத்தக் கூடியவர் களுக்கு சொந்த சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு அளிக்கக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த முடிவுக்கு விரோதமாக, இந்த இடத்திலே தொழில் வரி செலுத்துபவர்கள் இது போல் சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று சேர்த் திருப்பது சரியல்ல என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

எனக்குத் தெரிந்த வரைக்கும், இந்த ஒரு பிரிவை இப்பொழுதிருக் கும் ரெண்ட் கண்ட்ரோல் சட்டத்திலிருந்து அப்படியே எடுத்து இதில் புகுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுதிருக்கும் ரெண்ட் கண்ட் ரோல் சட்டத்திலே, சொந்தத்திற்கு ஒருவன் குடியிருப்பதற்கு வீடு எடுத் துக்கொள்ள வேண்டுமென்றால், இதுபோல் விற்பனை வரி, தொழில் வரி, வருமான வரி கொடுப்பவராய் இருந்தால், அப்படி அந்த வீட்டை சொந்த உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று இருக்கிறது. ஆனால், நிலத்தைப் பொறுத்த வரைக்கும் அது போன்ற கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தால், யாருக்கு நாம் இப்பொழுது இந்த வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வருகிறோமோ அந்தப் பலன் அவர் களுக்குக் கிடைக்காமல் போய்விடும். உதாரணமாக, கிராமத்தில் இருக்கும் ஆசிரியர் அல்லது ஒரு ப்யூன் போன்ற சதாரண ஆசாமி முதற்கொண்டு இன்றைக்கு இருக்கும் விதிகளின்படி, மாதம் சராசரி 50 ரூபாய் சம்பளம் வந்தால் அவன் தொழில் வரி செலுத்துகிறான். ஒவ்வொரு இடத்திலும் பஞ்சாயத்து போர்டு இருக்கும் என்ற காரணத்தால். அப்படி ஐம்பது ரூபாய் வருமானம் வரக்கூடிய ஒருவருக்கு இந்தப் பலன் கிடைக்காமல் போய்விடும். சிறுநில மிராசுதார்களாக இருக்கும் காரணத்தால், அவர் களுக்கு இந்தச்சட்டம் குறுக்கே நின்று அவர்களுக்குக் கிடைக்கும் பலன் கிடைக்காமல் போய் விடக்கூடாதென்று நோக்கத்துடன் 9-வது பிரிவை நாம் கொண்டுவந்திருக்கிறோம், சிறிய மிராசுதார் சொந்த சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற காரணத்தோடு, இந்த ப்ரொபஷன் டாக்ஸ் என்பதைச் சேர்ப்பதால் நம்முடைய நோக்கம் உள்ள படியே பாழ்படுகிறது. ப்ரொபஷன் டாக்ஸ் என்று இருப்பதை எடுத்துவிட வேண்டியது மிக மிக அவசியம்.

[Sri S. Lazar] [5th November 1958

அடுத்தபடியாக, இப்பொழுது மாட்டுவாரக்காரர்களைப் பொறுத்து பார்க்கும்போது, சரியானபடி நடக்கவில்லை என்று சொன்னால், அல்லது அவர்கள் குற்றம் புரியக் கூடியவர்களாக இருந்தால், வேலை செய்வதற்கு ஒத்துழைப்பு கொடுக்கக் கூடாதவர்களாக இருந்தால் அவர்களைப் பொறுத்த வரைக்கும் இந்தச் சட்டத்திலே முதலிலிருந்து கடைசி வரையில் துருவிப் பார்த்தால் இப்பொழுது கிடைக்கவே கிடைக்காது. நான் இப்பொழுது சொல்வதற்குக் காரணம், அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும், கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் சட்டத்தின் 7 (பி) பிரிவிப்படி எந்த அளவு இவர்களுக்கு அமுல் செய்ய முடியும் என்று பார்த்தால், வெளியேற்றுவதற்கான வாய்ப்பாவது மூன்றுவது செக்ஷனிலே இருக்கிறது. ஆகவே, தனியாக நான் கொடுத்திருக்கும் இரண்டாவது திருத்தம் தேவை இல்லை என்று எண்ணக்கூடும். கல்டிவேடிங் டெனன்ட்ஸ் சட்டத்தின் மூன்றுவது செக்ஷனைப் பற்றி கனம் அனந்தநாயகி அவர்கள் விவரமாக எடுத்துச் சொன்னார்கள். அதில் இருக்கும் எந்த எந்த காரணத்திற்காக ஒரு டெனன்டை வெளியேற்ற முடியுமோ அந்தக் காரணம் எதுவுமே மாட்டுவாரம்தாரரைப் பொறுத்த வரைக்கும் பொருந்தாது. அந்த சட்டத்திலே ஐந்து காரணங்கள் காணப்படுகின்றன. முதலாவது குத்தகை பாக்கி (arrears of rent) இருந்தால் மாட்டு வாரந்தாரர்களை வெளியேற்றலாம் என்ற பிரச்னை எழுவதற்கில்லை. குத்தகை பாக்கி என்ற நிலைமை அதில் வராது.

அடுத்தபடியாக, அவர் நிலத்திற்குக் கெடுதல் செய்யக்கூடிய முறையிலே ஏதாவது செய்தால், அப்பொழுதும் வெளியேற்றலாம் என்று இருக்கிறது. அதே சந்தர்ப்பத்திலே நிலத்தினுடைய கண்ட்ரோல் நிலக்காரனிடத்தில் இருக்கிறது என்று ஹைகோர்ட் முடிவு செய்திருப்பதால் அதைப் பொறுத்தும், மாட்டுவாரம்தாரர்களைப் பொறுத்து அனுவசியமாக குற்றஞ்சாட்டி வெளியேற்றுவதற்கான வாய்ப்பு ஏற்படுமே தவிர, நியாயப் பிரகாரம் அவர்களை வெளியேற்றுவதற்கான வாய்ப்பு அதில் கிடையாது.

நிலத்தைச் சாகுபடி செய்யாமல் விட்டால் அப்பொழுது வெளியேற்றலாம் என்று அந்தச் சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ஒரு வேளை இதிலே பொருந்த முடியும். தனக்கு வேலை வேண்டாம் என்று விலகிவிடலாம். மற்றப்படி அவன் ஒரு தவறு செய்தால், விவசாயிக்கு ஒத்து வேலை செய்யாமல் இருப்பவர்களுக்கு இதுபோன்ற காரியங்களை எப்படி வைத்து வேலை வாங்குவது, நிலத்தின் நிலைமை என்ன ஆவது, சாகுபடி என்ன ஆவது என்பதுபற்றி எந்த விதமான விதிகளும் அமைக்கப்படவில்லை. ஆகையால், கடைசியாக ஒரு ப்ரொவைசோ வேண்டுமென்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

In sub-clause 3 *add* the following as proviso :

" Provided that a land owner may also dismiss or terminate the enagement of a mattuvaramdar for misconduct or neglect of duty ".

மாட்டுவாரம்தாரரை எப்படி வெளியேற்றவேண்டுமென்றால், நான்காவது பிரிவில் 2-வது உப பிரிவில் எப்படிச் சொல்லியிருக்கிறதோ, அதுபோன்று ஒரு விதியை இந்த இடத்தில் கொண்டுவந்து சேர்த்து, இப்பொழுது நாம் திருத்தியிருப்பது போல், அப்படி அவர்களை வெளியேற்றினால், ஒரு வார காலத்திற்குள்ளாக சம்பந்தப்பட்ட தாசில்தாருக்கு அறிவிக்கவேண்டும் என்று விதியிலே சேர்த்துக் கொள்வதில் ஆட்சேபனை இல்லை. இதுபோன்ற ஒரு விதி இருக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து, இதைச் சேர்க்கவில்லையென்றால் கண்டிப்பாக இருவருக்கும் இடையே இருக்கும் நிலைமை சற்று முரண்பட்டு, இருவருக்கு நல்ல பரஸ்பரம் இல்லையென்றால் நிலம் பாழ்படக்கூடிய நிலைமை இருக்கும். இதை நன்றாக அரசாங்கம் கவனித்து, இந்தத் திருத்தத்தை எற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

5th November 1958]

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் சபாநாயகர் அவர்களே , இந்த 9-வது ஷரத்தை நாம் பொறுக்குக் கமிட்டியில் நன்ருக ஆராய்ந்து பார்க்கும்போதே 3 எக்கருக்கு விலக்கு என்று இருப்பதை 5 எக்கருக்கு என்று திருத்த வேண்டும் என்று அங்கத்தினர்கள் சொன்ஞர்கள். மூன்று எக்கர் என்ருலும், 5 எக்கர் என்ருலும் சிறிய விவசாயிகளுக்கு இந்தச் சட்டத்திஞல் பாதகம் ஏற்படக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டே 3 எக்கர் என்று போட்டால் போதும். அவர்களுக் காவது இந்தப் பாதுகாப்பு அவசியம் இருக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. 12' noon.

ஆஞல் இன்றைய தினம் 3 எக்கர் உடையவர்களாக இருந்தாலும் வருமான வரி கட்டுபவர்களுக்கு, இந்த விலக்குச் செல்லாது என்று திருத் தப்படுகிறது. இது மிகவும் அநீதியாவதாகும். ஒரு கையால் கொடுத்ததை மறு கையால் பரித்துவிடுவதைப் போலத்தான் இருக்கிறது. ஏனென்று கேட்டால் ஒரு சாதாரண பஞ்சாயத்து ஏரியாவில் கூட வருஷத்திற்கு 600 ரூபாய்க்கு மேல் வருமானம் இருக்கிறவர்களுக்கு வருமான வரி விதிக்கப் படுகிறது. மூன்று எக்கர் வைத்துக் கொண்டு கிராமத்தில் பாடுபடுகிற எந்தச் சிறிய விவசாயிக்கும்கூட வருஷத்திற்கு 600 ரூபாய் வருமானம் இடைக்காமல் போகாது. அதுவும் திருச்சி ஜில்லாவில் ஒருவன் நெல்லைப் பிடித்து லாரியில் ஏற்றி வேறு இடத்திற்கு அனுப்பிஞல்கூட ஒருவருக்கு 600 ரூபாய் வருமானம் வந்துவிடும். அப்பட்டமான திண்ணைத்தூங்கியாக இருக்கக் கூடியவர்களுக்கு வேண்டுமாஞல் வருஷத்தில் 600 ரூபாய்கூட வருமானம் வராது என்று சொல்லலாமே தவிர மற்றவர்களுக்கு வரு மானம் வந்துவிடும். பஞ்சாயத்துக்களுக்கு அவர்கள் வருமான வரி செலுத்தும்படியாக நேரிடலாம். அதன் காரணமாக மேலும் அவர்களுக்கு இந்த விலக்குச் செல்லாது என்று சொல்வதானது நம்முடைய நோக்கத் திற்கே முரணுக இருக்கிறது. ஆகவே ஸ்ரீ லாசர் கூறியது போல ப்ரொபஷ ஞல் டாக்ஸ் என்று போட்டிருப்பதை நீக்கிவிட்டு மூன்று எக்கர் என்று இருப்பதை இந்தச் சமயத்தில் 5 எக்கர் என்று போட முடியுமா என்பதை யும்கூட கனம் அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்தால் நன்ருக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கையேர் வாரக்காரர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண் டால் வேலையை விட்டு நீக்கப்படலாம் என்று இருப்பதைப்போல மாட்டு வாரக்காரர்களுக்கும் இந்த மாதிரியான ஒரு கட்டுப்பாடு இருக்கவேண்டும். ஒழுக்கக் குறைவாக யாருமே நடந்துகொள்ள மாட்டார்கள் என்று கருத முடியாது. மாட்டு வாரக்காரர்களுக்கு கையேர்வாரக்காரர்களுக்கு **'Any land owner may dismiss—for misconduct or for neglect of duty.'** என்று இருப்பதைப் போல ஏன் போடவில்லை என்பது எனக்குப் புரிய வில்லை.

ஆகவே கனம் ஸ்ரீ எஸ். லாசர் அவர்கள் குறிப்பிட்டதுபோல அந்தத் திருத்தங்களையெல்லாம் ஏற்றுக் கொண்டு நல்ல முறையில் இந்த ஷரத் தைத் திருத்தி அமைக்கவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

***SRI T. SAMPATH** : தலைவர் அவர்களே, எனக்கு முன்ஞல் பேசிய அங்கத்தினர்கள் இந்த ஷரத்தை அதாவது ப்ரொபஷன் டாக்ஸ் என்று சேர்த்து இருக்கக்கூடிய வார்த்தை சிறு நிலச்சுவான்தார்களுக்கு மிகவும் பாதகத்தை விளைவிக்கும் என்று குறிப்பிட்டார்கள். உண்மையி லேயே இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டியில் பரிசீலனைக்கு எடுத் துக்கொண்டபோது சிறு மிராசுதார்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும், அவர்களுக்குச் சலுகை கொடுக்கவேண்டும் என்று விஷயம் செலக்ட் கமிட்டி கூட்டத்தில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

Small land owners owning three acres and without any other means of livelihood and who do not pay any sales tax or income tax are to be completely exempted from the provisions of this Act.

என்பதாகும். இப்போது இந்த ப்ரொபஷனல் டாக்ஸ் என்று வார்த்தையைச் சேர்த்திருப்பதனால் அவர்கள் எப்படிப் பாதிக்கப்படுவார்கள் என்பதை கனம் ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள். ஒரு சாதாரண விவசாயின் வருமானம்கூட வருஷத்திற்கு 600 ரூபாய்க்கு மேல் போய் அவர் பஞ்சாயத்துக்கு வருமான வரி கட்டக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே ஒரு பக்கத்தில் சிறு நிலச் சுவான்தார்களுக்கு நிவாரணம் அளிப்பது போல செய்துவிட்டு இந்தத் திருத்தத்தின் மூலம் அதைப் பதிப்பது என்பது உசிதமாக இல்லை. ஆகவே ஸ்ரீ லாசர் அவர்கள் குறிப்பிட்டது போல ப்ரொபஷனல் டாக்ஸ் என்று இருப்பதை எடுத்துவிடவேண்டும் என நானும் வலியுறுத்துகிறேன்.

இரண்டாவதாக மாட்டு வாரக்காரர்களை தக்க காரணங்களைக் கொண்டு நீக்குவதுபோல் கையேறு வாரக்காரர்களை நீக்குவதற்கு வகையிருக்க வேண்டும். ஒழுங்கீனராக நடந்து கொண்டால் நீக்குவதற்கும் வழி இருக்க வேண்டும். ஆகவே லாசர் அவர்களுடைய திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த ஷரத்தில் வருமான வரி கட்டுகிறவர்களுக்கு விதி விலக்கு கிடையாது என்பது பொறுக்குக் கமிட்டியில் சேர்க்கப்படவில்லை. புதிதாக சர்க்கார் சேர்த்துவிட்டார்கள். இதனால் சிறு விவசாயிகள் பாதிக்கப் படுவார்கள். ஆகவே இதை விலக்கிவிட வேண்டுமென்று எனக்கு முன் பலர் பேசினார்கள். அவர்களுடைய கருத்தை நான் ஆதரிக்கிறேன் என்றாலும் முழுக்கவும் அதை எடுக்கவேண்டாம். இத்தனை ரூபாய்க்கு மேல் வருமான வரி கட்டுகிறவர்களுக்கு விதி விலக்கு செல்லாது என்றாவது போடலாம். ஏனென்றால் சிறிய மிராசுதார்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமே தவிர அதிகமான வருமான வரி செலுத்தக்கூடியவர்களுக்கு இந்த நிவாரணம் அளிக்கவேண்டும் என்பது சரியல்ல.

அடுத்தபடியாக ஸ்ரீ லாசர் குறிப்பிட்ட திருத்தத்திலும்கூட சர்க்காருடைய வாசகத்திலும் " டிஸ்மிஸல் " என்ற வார்த்தை வருகிறது. " டிஸ்மிஸ் " என்பது வார்த்தை அளவில்கூட சரியாக இல்லாத காரணமாக அந்த வார்த்தைக்குப் பதிலாக dispense with or remove என்றாவது போடலாமா என்று யோசிக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த ஷரா சின்ன விவசாயிகளை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்பது தான் நமது நோக்கம். அதிலே விற்பனை வரி, வருமான வரி, உத்யோக வரி இவை எல்லாம் கொடுக்கிறவர்கள் கொஞ்சம் பணவசதி உள்ளவர்கள்தாம். அவர்களை சின்ன மிராசுதார்கள் என்று சொல்வதற்கில்லை. அப்படி எண்ணித்தான் இந்த ப்ரொபஷனல் டாக்ஸ் என்பதைச் சேர்த்தோம். ஆனால் கனம் அங்கத்தினர்கள் பேசியதிலிருந்து பார்த்தால் சிறு பஞ்சாயத்துகளில்கூட 600 ரூபாய்க்கு மேல் வருமானம் என்றால் வரி போட்டுவிடுவார்கள். இதனால் சிறு விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படுமோ என்றுகூடத் தோன்றுகிறது. ஆகவே எனக்கு " ப்ரொபஷனல் டாக்ஸ் " என்பதை நீக்குவதில் ஆட்சேபனை இல்லை. அதை ஒத்துக் கொள்கிறேன்.

Sir, I am accepting the amendment of Sri S. Lazar. I think the expression ' profession tax ' occurs in sub-clause (1) and also in another place. In regard to the other amendment of Sri S. Lazar, I may say that it is not necessary, because the tenant will be governed by the Cultivating Tenants Protection Act. There is provision for taking action if the man acts in a negligent

5th November 1958] [Sri M. A. Manickavelu]

way or in a manner destructive of, or injurious to, the land or any crop thereon. So, I think the other amendment of Sri S. Lazar is not necessary. I accept the amendment seeking to delete the words ' profession tax ' wherever they occur. I do not accept the other amendments.

MR. SPEAKER : The words ' profession tax ' occur in sub-clauses (1) and (2). That means both these sub-clauses have to be amended.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

" In sub-clauses (1) and (2), *omit* the words ' profession tax ' occurring after the words ' sales tax '."

The amendments of Sri S. M. Annamalai were put and lost.

MR. SPEAKER : As hon. Member Sri M. Kalyanasundaram is absent, his amendment is deemed to have been withdrawn.

The amendments of Sri S. Lazar were, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 9, as amended, was put and carried.

Clauses 10 and 11 were put and carried.

Clause 12.

MR. SPEAKER : The motion is :—

" That clause 12 do stand part of the Bill."

SRI S. M. ANNAMALAI : Sir, I move :

" *Add* at the end the following :

' the decision with regard to the scope and applicability of this Act rests mainly witn the Tahsildar or the Revenue Divisional Officer as the case may be.' "

என்று நான் திருத்தம் பிரேரேபித்திருக்கிறேன். காரணம், சில வழக்குகள் சிவில் கோர்ட்டுக்குப் போகின்றன. அதாவது 440-வது பிரிவுப்படி " ட்ரெஸ் பாஸ் " செய்ததாக துராக்ரதமாக வயலுக்கும் சென்று அங்கே இருந்ததை எடுத்துச் சென்று விட்டார்கள் என்று யார் பேரிலாவது மிராசுதார் வழக்குத் தொடரலாம். அப்படிப்பட்ட வழக்குகள் சிவில் கோர்ட்டுக்குப் போகின்றன. அப்படிப்பட்ட வழக்குகளை விசாரிக்கும் உரிமைகூட தாசில்தாருக்கும் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கும் இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்தத் திருத்தத்தைப் பிரேரேபித்திருக்கிறேன். இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

The amendment was duly seconded.

* THE HON. SRI M. A. MANICKAVELU : There is no need for this amendment because this is only barring the jurisdiction of Civil Courts. In the clause itself, the position is made clear and it

is stated therein, " No civil court shall entertain any suit or other proceeding to set aside or modify any order, decision or award passed by any Tahsildar, Revenue Divisional Officer or other authority. . . ." It is quite understandable. So, I oppose the amendment.

The amendment was put and lost.

Clause 12 was put and carried.

Clause 13 was put and carried.

Clause 14.

MR. SPEAKER :—The motion is :—

" That clause 14 do stand part of the Bill."

SRI S. LAZAR : Sir, I move—

" At the end of clause 14 *add* the following words :—

' as soon as possible after they are made and shall be subject to such modifications whether by way of repeal or amendment as the Legislature may make within thirty days on which the Houses actually sit either in the same session or in more than one session.' "

SRI M. KALYANASUNDARAM : I second the amendment, Sir.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்திலுள்ள அம்சம் இந்தச் சட்டசபையில் இயற்றப்படும் ஒவ்வொரு சட்டத்திலும் இருக்கிறது. இயற்றப்படும் சட்டம் அமல் நடத்தப்படும்போது ஏதாவது சங்கடங்கள் இருந்தால் அவைகளை நீக்குவதற்கான உத்தரவுகளைப் போடுவதற்கான அதிகாரத்தை அரசாங்கத்தார் 14-வது பிரிவில் எடுத்துக் கொள்கிறார்கள். அந்த அதிகாரம் அரசாங்கத்தாருக்குக் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால், அரசாங்கம் அவ்வாறு போடக்கூடிய உத்திரவுகளில் நகலை சட்டசபையில் வைக்க வேண்டுமென்று இந்தப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, சட்டசபை அங்கத்தினர்கள் அந்த உத்தரவுகள் சம்பந்தமாகத் தெரிவிக்கும் அவர்களுடைய கருத்துக்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு இந்தப் பிரிவில் வகை செய்யப்படவில்லை. அதாவது, அந்த உத்தரவை எந்த முறையிலாவது திருத்த வேண்டுமென்று சட்டசபை கருதினால் அந்த முறையில் அதைத் திருத்துவதற்கோ அல்லது அந்த உத்தரவு வேண்டாம் என்று சட்டசபை அபிப்பிராயப்பட்டால் அதை ரத்துசெய்வதற்கோ இந்த மசோதாவில் வகை செய்யப் படவில்லை. இந்தக் குறையை என் திருத்தம் நீக்குகிறது. இந்த அம்சம் சட்டசபை இயற்றும் ஒவ்வொரு சட்டத்திலும் இருக்கிறது. பஞ்சாயத்துச் சட்டத்தை எடுத்துக் கொண்டால் அதிலே ஒரு பிரிவில் இந்த அம்சம் இருக்கிறது. அந்தச் சட்டத்திலுள்ள பிரிவை வாசிக்கிறேன்.

" Clause 198 (2) : " All orders made under sub-section (1) shall as soon as possible after they are made, be placed on the table of both Houses of the Legislature and shall be subject to such modifications by way of amendments or repeal as the Legislative Assembly may make within fourteen days on which the House actually sits either in the same session or in more than one session."

5th November 1958] [Sri S. Lazar]

இந்த அம்சம் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் சட்டத்திலும் இருக்கிறது. இந்த மாதிரி எந்தச் சட்டங்களிலெல்லாம் இந்த அம்சம் இருக்கிறதென்று நான் வரிசைக்கிரமமாகச் சட்டங்களை குறிப்பிட்டுக்கொண்டே போகமுடியும். நாம் இயற்றும் ஒவ்வொரு சட்டத்திலும் இந்த அம்சத்தைப் புகுத்திக் கொண்டே போகிறோம். எனவே இந்த மசோதாவிலும் இந்த அம்சத்தைப் புகுத்துவதற்காக என் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டு மென்று கனம் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒரு திருத்தத்தைப் பொறுத்தவரையிலாவது, கனம் அங்கத்தினர் ஸ்ரீ லாசர் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை ஆதரிக்கும் நிலையில் நான் இருப்பது குறித்து மகிழ்சியடைகிறேன். இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருவதில் அவருடைய நோக்கமும் என்னுடைய நோக்கமும் வேறுபடலாம். சட்டம் சம்பந்தமாக சர்க்கார் பிறப்பிக்கும் உத்தரவுகள் சட்டசபையில் திருத்தங்களுக்கு உட்பட வேண்டுமென்பதுதான் இந்தத் திருந்தத்தின் நோக்கம். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டு மென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I am not in a position to accept the amendment, because we have to make a distinction between clauses 13 and 14. Clause 13 deals with "Power to make rules" and Clause 14 deals with "Power to remove difficulties". They are intended for different purposes. That being the case, it may not be desirable to bring this clause on a par with clause 13. So, I oppose the amendment.

SRI S. LAZAR : I would like to draw the attention of the Hon. Minister to clause 198 of the Madras Panchayats Bill which we have passed. An exactly similar provision is found there. If necessary, I shall pass on a copy of this Bill for reference by the Hon. Minister.

MR. SPEAKER : The Hon. Minister has said that he was not accepting it.

The amendment was put and declared lost.

SRI M. KALYANASUNDARAM : I demand a poll, Sir.

(The Division Bell was rung.)

MR. SPEAKER : Shall I put Mr. Lazar's amendment to vote again?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I would like to suggest a small change in it and accept the amendment in a modified form. We are not having the provision in the form suggested by Mr. Lazar. That is the real difficulty. In the Madras Panchayats Bill which we have passed, we are having it in the form I am going to suggest now. So, I would respectfully submit that the amendment that I am proposing may be accepted and that Sri Lazar may withdraw his amendment. I move— 12–20 p.m.

"At the end of clause 14 *add* the following words :—

'as soon as possible after they are made and shall be subject to such modifications whether by way of repeal or amendment as the Legislature may make in the same session or in the next session'."

[Sri C. Subramaniam] [5th November 1958

My amendment proposes the omission of the words ' within thirty days on which the Houses actually sit either ' from Mr. Lazar's amendment and the substitution of the words ' the next ' for the words ' more than one ' therein.

The amendment of Sri S. Lazar was, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 14, as amended, was put and carried.

Clause 1 and the Preamble

• THE HON. SRI M. A. MANICKAVELU : I move—

" In clause 1—

(i) in the heading, *for* the words ' and extent ', *substitute* the words ' extent and commencement '.

(ii) *After* sub-clause (2), *add* the following sub-clause, namely :—

' (3) It shall come into force on the 1st day of April 1959 '."

SRI S. M. ANNAMALAI : I move—

" In sub-clause (1) *omit* the word ' Tiruchirappalli '."

" In sub-clause (2) *for* the words ' villages . . . Schedule I ', *substitute* the words ' whole of the State of Madras '."

SRI M. SELVARAJ : I second the amendments.

SRI M. KALYANASUNDARAM : I move—

" In sub-clause (2) *omit* the words and figure ' specified in Schedule I ' in line 21."

" *After* the word and figure ' Schedule I ', in line 21, *add* the following ' and any other village which may be notified by the Government '."

SRI N. K. PALANISAMI : I second the amendments.

SRI S. LAZAR : I move the following amendment—

" *Add* the following as sub-clause (3).

' (3) It shall come into force on the 1st April 1959 '."

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

" *After* the word ' mattuvaram ' in line 6 of the Preamble, *add* the following in Tirunelveli district called ' pethuvaram '."

The amendment was duly seconded.

MR. SPEAKER : Clause 1, the Preamble and the amendments are before the House for discussion.

5th November 1958]

Sri S. M. ANNAMALAI : சட்டமன்ற தலைவர் அவர்களே, இந்த மாட்டு வாரந்தார்களும், கையேர் வாரந்தார்களும் திருச்சி மாவட்டத்தில் மட்டுந்தான் இருக்கிறார்கள் என்பது சர்க்காரின் கொள்கை. ஆனால் இவர்கள் இந்த மாநிலம் பூராவிலும் இருக்கிறார்கள் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மாட்டு வாரந்தார், கையேர் வாரந்தார் என்ற பெயர்களானது, நியாயவாரச் சட்டம் அமுலுக்கு வந்த பின்னர்தான், அந்த சட்டத்திலிருந்து நிலச் சொந்தக்காரர்கள் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் மாட்டுவாரந்தார், கையேர் வாரந்தார் என்ற புதுப் பெயர்களை கொடுத்திருக்கிறார்கள். மாட்டு வாரந்தார் என்பவர் மாட்டோடு வாரம் பயிரிடுகிறவர் என்று சொல்லப்படுகிறது. இது, திருச்சி மாவட்டத்தில் மட்டுமல்ல இருப்பது. இவர்களுக்கு உண்மையிலேயே நன்மை செய்ய வேண்டுமென்ற கருத்து இந்த சர்க்காருக்கு இருக்குமானால், ஒரு தனிக் குழுவை நியமிக்கவேண்டும். இ கிருந்து ரெவன்யூ போர்ட் மெம்பர் ஒருவரை அனுப்பி இரண்டு மணி நேரத்தில் கையேர் வாரந்தார், மாட்டுவாரந்தார் இவர்களின் கஷ்ட நஷ்டங்கள் என்ன ? எந்த எந்த கிராமங்களில் இவர்கள் இருக்கிறார்கள் என்று இரண்டு மணி நேரத்திற்குள் ஒன்றும் விசாரித்து அறிந்துவிட முடியாது. இந்தளவில் இரண்டு மணி நேரம் விசாரித்து விட்டு 43 கிராமங்களில்தான் இவர்கள் இருக்கிறார்கள் என்று அதற்கு ஒரு சட்டம் கொண்டு வந்து, அந்தச் சட்டத்திலும் பலவித ஓட்டைகளை புகுத்தி அதன் மூலம் விவசாயிகளை வேண்டுமென்றே அமுக்குகிறார்கள். உண்மையிலேயே அவர்களுக்கு நன்மையை செய்யவேண்டுமென்ற நோக்கம் இந்த சர்க்காருக்கு கிடையாது. அதேபோல் கையேர் வாரந்தார்கள் இந்த மாநிலம் பூராவும் இருக்கிறார்கள். கையேர் வாரந்தார் என்றால், புருஷன் நிலத்தில் உழுவான், அதோடு தண்ணீர் பாய்ச்சுவதும் அவன் வேலை, மனைவியானவள் களை பறிப்பது, நடவு நடுவது போன்ற காரியங்களைச் செய்வாள். இப்பொழுது பல மாவட்டங்களிலும் மின்சாரம் பரவிக் கொண்டு வரும் காரணத்தினால் நிலச் சொந்தக்காரர்கள் பம்ப் செட்கள் வைத்து சொந்த சாகுபடி வைத்துக்கொண்டு, கையேர் வாரந்தார்களை வைத்துக் கொண்டு எட்டில் ஒரு பாகம், பத்தில் ஒரு பாகம், பனிரெண்டில் ஒரு பாகம் என்று கொடுக்கக் கூடியதொரு முறை பிற மாவட்டங்களிலும் இருக்கின்றன. எல்லா மாவட்டங்களிலும் இந்த கையேர் வாரந்தார்களும், மாட்டு வாரந்தார்களும் இருக்கிறார்கள் என்று சொல்லித்தான் என் திருத்தத்தை கொடுத்திருக்கிறேன். நான் இந்த அரசாங்கத்திற்கு சவால் விடுகிறேன். வேண்டுமானால் ஒரு குழுவை நியமிக்கட்டும். அந்தக் குழு விசாரித்து இந்த மாட்டு வாரந்தார்களும், கையேர் வாரந்தார்களும் பிற மாவட்டங்களில் இல்லை என்று சொன்னால் நான் ராஜிநாமா செய்கிறேன். அல்லது அப்படி பிற மாவட்டங்களில் இருக்கிறார்கள் என்று அந்தக் குழு உண்மையில் நினைக்குமானால் இந்த மந்திரி சபை ராஜிநாமா செய்யுமா என்று நான் சவால் விட்டு கேட்க ஆசைப்படுகிறேன்.

Mr. SPEAKER : சட்டசபையில் சவால் விடக்கூடாது.

Sri S. M. ANNAMALAI : அடுத்தபடியாக, 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு பிறகுதான் இந்த சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். சர்க்கார் மூலம் இந்த திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். ஏன் இப்படி கொண்டு வர வேண்டும் ? சில நில சொந்தக்காரர்கள் இந்த நாலைந்து நாட்களில் சர்க்காரை அணுகி இதை எப்படியாவது ஒத்திப் போட வேண்டுமென்று கேட்டுக் கொண்ட காரணத்தினால்தான், அப்படி ஒரு சதி செய்துதான் 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு பின்னர்தான் இது அமுலுக்கு கொண்டு வரவேண்டுமென்ற திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அவசரச் சட்டம் கவர்னர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டு அது பின்னர் செலக்ட் கமிட்டிக்குப் போய் அது கைவிடப்பட்டது. இதற்குள் நிலச் சொந்தக்காரர்கள் எவ்வளவு கையேர் வாரந்தார்களையும், மாட்டு வாரந்தார்களையும் நிலத்தை விட்டு வெளியேற்ற வேண்டுமோ அவர்களையெல்லாம் வெளியேற்றி விட்டார்கள். அப்படி வெளியேற்றப்

பட்ட பிறகுதான் இந்தச் சட்டம் இந்த சட்ட மன்றத்தில் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இதற்கும், குளித்தலையில் உள்ள சில நிலச் சொந்தக் காரர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் "ரிட்" போட்டிருக்கிறார்கள். கையேர் வாரம், மாட்டுவாரச்சட்டம் செல்லாது, நியாயவாரச்சட்டம் செல் லாது என்று சொல்லி "ரிட்" போட்டிருக்கிறார்கள். இந்த சட்டத்தை 1959-ம் வருஷம் வரை தள்ளிப் போட்டால் எப்படியாவது "ஸ்டே ஆர்டர்" வாங்கி விடலாம் என்று நினைக்கிறார்கள். அப்படி "ஸ்டே" வாங்கி இந்த சட்டத்தை அமுல் செய்ய முடியாமல் இதை நிறுத்தி விடலாம் என்ற நோக்கத்தோடுதான் "ரிட்" தாக்கல் செய்து விட்டு இந்த சர்க்காரை அணுகி எப்ரல் 1959-ம் வருஷம் வரையில் ஒத்தி வையுங்கள் என்று சொல்லி, மறைமுகமாக ஒரு சதி செய்துகொண்டு வந்த திருத்தந்தான், இந்த திருத்தம். ஆகவே எனது திருத்தத்தை ஏற்றுக் கொண்டு சர்க் காரின் திருத்தத்தை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

12-30 p.m. **SRI M. KALYANASUNDARAM**: ஸார், என்னுடைய திருத்தங் கள் இரண்டு. ஒன்று சட்டத்தில் ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கிற கிரா மங்களுக்கு இந்த சட்டம் அமலாகும் என்று இருப்பதை மாற்றி ஜில்லா பூராவுக்கும் இந்த சட்டம் அமுலாகும் என்று கொண்டு வரவேண்டு மென்று ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். இதை சர்க்கார் ஒப்புக் கொள்ளாவிட்டால் இப்போது ஷெட்யூலில் இருக்கும் கிராமங்களை தவிர இன்னும் இதர கிராமங்களிலும் இந்தமாதிரி நிலைமை இருந்தால் அந்த கிராமங்களுக்கும் இந்த சட்டத்தை அமுலாக்கும் அதிகாரம் சர்க்காருக்கு இருக்க வேண்டும் என்று எனது இரண்டாவது திட்டத்தில் குறிப்பிட்டிருக் கிறேன். இந்த திருத்தத்தையே ஏற்றுக்கொண்டால் பிரச்னையை சுலப மாக தீர்த்துவிடலாம். இப்போது இருக்கின்ற சட்டத்தின் மூலமாக கையேர் வாரம்தார்களுக்கோ அல்லது மாட்டேர்வாரம்தார்களுக்கோ பிரமாதமான சலுகை ஒன்றும் கிடைக்கப்போவதில்லை. அப்படி இருக்கையில் இந்த சட்டம் சில கிராமங்களுக்குத்தான் செல்லுபடியாகுமென்று கிராமங்களை கட்டுப்படுத்த வேண்டியதின் அவசியம் என்ன என்பதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏதோ ரெவன்யூ போர்டு மெம்பர் போய் பார்வை யிட்டு வந்தார்கள் என்று சொல்லுகிறார்கள். ரெவின்யூ போர்டு மெம்பர் இரண்டு கிராமங்களுக்குப் போய், இரண்டு மணி நேரம் விசாரித்துவிட்டு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார் என்றால் அது ஜில்லா பூராவும் இருக்கும் நிலைமையை தெரிவிப்பதாக இருக்காது என்பதை நாம் திட்டவட்டமாக கூற முடியும். ஆகவே இதன் அடிப்படையில் இந்த கருத்து திட்டவட்ட மான முடிவு என்று எடுத்துக்கொள்வது நியாயமல்ல. திருச்சி ஜில்லா வில் பல கிராமங்கள் இருக்கின்றன. இந்த கிராமங்களைப்பற்றி பல கன் ஸிலியேஷன் ரிப்போர்டுகளிலும் கூறப்பட்டிருக்கின்றன. இந்த கிராமங் களுடைய பெயர்களையெல்லாம் என்னுடைய திருத்தத்தில் ஷெட்யூலில் சேர்க்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். அல்லது இதை இப் போது குறிப்பிட்டிருக்கும் ஜில்லா பூராவுக்கும் அமுல் நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். இதை ஏற்றுக்கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **SRI R. SRINIVASA IYER**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை திருச்சி ஜில்லாவில் பூராவும் அமுல் நடத்தப்படவேண்டும் என்றுள்ள ஒரு திருத்தமும், இப்போது ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கும் 43 கிராமங்கள் தவிர கூடுதல் கிராமங்களையும் சேர்த்துக்கொள்ள சர்க்காருக்கு அதிகாரம் இருக்கவேண்டும் என்றுள்ள இன்னொரு திருத்தமும் இப்போது சபை முன் இருக்கின்றன. இதைப்பற்றி ஒரு அதிகாரி இரண்டு மணி நேரம் தான்போய் விசாரித்தார் என்று ஒரு குற்றச்சாட்டையும் சொல்லப் பட்டது. இந்த மசோதா சம்பந்தமாக ஆர்டினன்ஸ் வருவதற்கு முன்பு இதைப்பற்றி செலக்ட் கமிட்டியில் விவாதிக்கிற சமயத்தில் இந்த ஜாபி தாவை வைத்துக்கொண்டு இன்னின்ன கிராமங்கள் சேர்க்கவேண்டும், இன்னின்ன கிராமங்களை நீக்கவேண்டும் என்று விவாதித்து இரு தரப்

பினரும் ஒத்துக்கொண்டு ஒரு ஜாபிதா தயாரிக்கப்பட்டது. அப்போது அதில் 28 கிராமங்கள்தான் இருந்தன. அதை அங்கிருந்த அங்கத்தினர் கள் அனைவரும் ஒப்புக்கொண்டார் கள். . . .

Sri S. M. ANNAMALAI : On a point of order, Sir. அப்போது நடந்த ஜாயிண்ட் செலக்ட் கமிட்டியில் நான் minutes of dissent கொடுத் திருக்கிறேன். அதைப்பார்க்காமல் அங்கிருந்த அங்கத்தினர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் false allegation செய்கிறார்கள் . . .

* Sri R. SRINIVASA IYER : The expression ' false allegation ' is absolutely unparliamentary, Sir. His dissenting minute does not refer to the number of villages at all. What I say is absolutely correct. Let him look at the dissenting minutes again and withdraw the expression ' false allegation '.

Mr. SPEAKER : Why there should be so much heat over this, I do not understand. Why should the hon. Member Sri Annamalai use words such as ' false allegations ', when his dissenting minute does not refer to the number of villages? I think it is not decorous to use words like ' false ', and ' lie ' in the discussion here. I would appeal to the hon. Member not to use such words. He should withdraw the word ' false '. He may use some other word to express his idea. I suggest to him that he may use the word ' incorrect ' instead.

Sri S. M. ANNAMALAI : On a point of order, Sir. என்னுடைய minute of dissent-ல் மாகாணம் பூராவும் இது வேறு வேறு பெயரில் இருக்கின்றன. ஆகவே இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் குறிப்பிட் டிருக்கிறேன். அதை ஸ்ரீவர கனம் அங்கத்தினர் அவர்கள் பார்க்காமல் நான் என் minute of dissent-ல் இதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை என்று சொல்லுவது முறையாகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : I am not here to read the dissenting minutes of the hon. Member. If the hon. Member Sri Srinivasa Iyer says that what he says is correct, the hon. Member Sri Annamalai may say on a point of personal explanation that it is incorrect. Anyway I strongly deprecate the use of the word ' false ' and similar words. The hon. Member will please withdraw that word. He may say it is incorrect.

Sri S. M. ANNAMALAI : I withdraw it, Sir.

* Sri R. SRINIVASA IYER : Let me refer to the dissenting minutes. The hon. Member Sri Kalyanasundaram has said that it should be made applicable to the 28 villages only where such peculiar set up is enforced. The view that it should be extended to the entire district or that Government should take power to extend it to other places now expressed through these amendments, is not expressed there. So far as the dissenting minute of my hon. Friend on my right is concernd, he did not append a list of villages to his minute of dissent. What I am at is this. I have no objection to the Government extending the provisions of this Act to other places. But let them extend it by passing a fresh legislation. If anything has got to be added to the schedule, let it be

done by the Legislature. Let it not be done by an order of the Government. If it is brought before the Legislature the public of the villages to be affected will know what is going to be done and they may have a say in the matter as to whether such a set up is prevalent there or not. At the time the Bill was thought of, we contemplated applying the provisions of the Bill only to 28 villages but now we have made it applicable to 43 villages. If the Government want to extend the provisions of the Act let it be done through legislation and not by an order of the Government. That is my submission.

Regarding the amendment to enforce the Act from 1st January 1959, it is only intended for the purpose of getting over the existing crops on the land. We need not give retrospective effect since it will deprive people to whom protection is sought to be given. Sufficient protection is already there. It is not necessary to go back from 1st January 1959.

Sri V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடையபேரில் இதில் இருக்கின்ற திருத்தம் திருநெல்வேலி ஜில்லாவிலும் இதேபோன்றுபேத்து வாரம் என்று இருப்பதை இதோடு சேர்த்துக்கொள்ள வேண்டு மென்பது. கழிந்த சட்டசபை பட்ஜெட் கூட்டத்தின்போது எல்லா ஜில்லாக்களிலிருந்து பல விவசாயிகள் இங்கு வந்து தங்களுடைய குறைகளை தெரிவித்தார்கள். திருநெல்வேலி ஜில்லாவிலிருந்தும் சுமார் 300 பேர்கள் இங்கு வந்திருந்தார்கள். அவர்களுடைய குறைகளைப்பற்றி அப்போது தெரிவித்தார்கள். இந்த பேத்துவாரம்தார்கள் தங்களுடைய குறைகளைப்பற்றி இதற்கு முன் பல தடவை சொல்லியிருக்கிறார்கள். இது மாத்திரமல்ல, மற்ற ஜில்லாக்களிலும் வெவ்வேறு பெயரில் பலவிதமான வாரம்தார்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் இதே போன்று சட்டம் கொண்டு வரவேண்டும். இப்போது இருக்கின்ற சட்டத்திலே நாம் ஒட்டுப் பிளாஸ்திரி போடுவது போல் பல திருத்தங்களை கொண்டு வந்து நிறைவேற்றினாலும் கூட இந்தமாதிரியான சட்டங்கள் எல்லாம்கொண்டு வரவேண்டியதின் காரணம் என்ன வென்றால், இந்த நாட்டில் நிலச் சீர்திருத்தத்தை சீக்கிரமாக கொண்டு வராததின் காரணமாகத்தான் இது போன்ற பல சட்டங்கள் அடிக்கடி கொண்டு வரவேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆகவே இந்த நிலைமை மற்ற ஜில்லாக்களிலும் இருந்து கொண்டிருப்பதால் அவர்களுக்கும் இப்போதே இந்த சட்டம் அமுலாகும் விதத்தில் கொண்டுவரவேண்டும். அதல்லாமல் அவர்கள் போராடி சிறைக்குச்சென்று ஒன்றிரண்டு உயிர்களை பலியிட்ட பிறகு தான் சட்டத்தை கொண்டு வருவோம் என்ற நிலைமை இருக்கக்கூடாது. காளி, மாரியாத்தாள் போன்ற தெய்வங்கள் பலி கொடுத்தால் வரத்தை கொடுப்பார்கள் என்று சொல்லுவது போல் விவசாயிகள் போராடி ஒன்றிரண்டு பேர்களின் உயிர்களை பலிகொடுத்த பின்புதான் சட்டத்தைக்கொண்டு வருவோம் என்ற நிலைமையில் சர்க்கார் இருக்கிறதா என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஆகவே நிலசீர்திருத்த சட்டத்தை சீக்கிரமேகொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இதில்பேத்துவாரம்தார்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்கிற திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Sri S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய பெயரில் இருக்கும் 9-வது திருத்தம் இந்த சட்டம் 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ந்தேதியிலிருந்து அமுலுக்கு கொண்டு வரவேண்டுமென்பது. ஏற்கெனவே இதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது மிகவும் வரவேற்கத்தக்கது. 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ந்தேதியிலிருந்து இதை அமுலுக்கு கொண்டுவரவேண்டும் என்று சொல்லுவது ஏதோ சில ஆட்களுக்கு இதை தாமதப்படுத்தவேண்டும் என்கின்ற காரணத்திற்காக

5th November 1958] [Sri S. Lazar]

வும், இதனால் சிலர் லாபம் அடைவதற்கு ஏதுவாக இருக்கும் என்றும் இம்மாதிரிப்பட்ட கெட்ட எண்ணத்தோடு தான் இது கொண்டு வரப்படுகிறது என்றும் தவறான எண்ணங்களை கற்பிக்க முற்படுவது உள்ளபடியே இந்த சபைக்கு உகந்தது ஆகாது என்பது தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம், இருக்கக்கூடிய நடைமுறையிலே இந்தச் சட்டம் அமுலுக்கு வருகிற நேரத்திலே என்ன கஷ்டம் இருக்கிறது என்று எடுத்துக் காட்டியதால் தான் இப்பேர்ப்பட்ட ஒரு திருத்தம் வரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. 12 40 p.m. இப்போது அங்குள்ள நிலத்திலே சாகுபடி இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் ஒத்துக்கொள்வார்கள். இப்போது இருக்கும் சாகுபடி எத்தனை மாதங்களுக்கு இருக்கும் என்று அந்த வட்டாரத்தில் போய்ப் பார்த்தவர்களுக்கு தெரிந்திருக்கும். பிப்ரவரி கடைசியிலே, அல்லது பிப்ரவரி பாதியிலே அறுவடைக்கு வரும். அப்படி இருக்கும்போது இந்தச் சட்டத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னால், உள்ளபடியே நாட்டிலே சுமுகமான நிலையையும், சமாதான நிலையையும் இருக்கவேண்டும் என்று கனம் அங்கத்தினருக்கும், அவருடைய கட்சிக்கும் உள்ள கொள்கையா ? அல்லது இந்த இடங்களிலெல்லாம் தகராறுகளும், புரட்சிகளும், அடிதடிகளும் ஏற்படவேண்டும் என்பது அங்கத்தினருடைய கொள்கையா என்று புரிந்துகொள்ள முடியவில்லை. நிலத்திலே சாகுபடி இருக்கிறது. நிலம் ஒப்பந்தத்தின் பேரில் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. யார் நிலத்தைப் பண்படுத்த வேண்டும், யார் உரம் போடவேண்டும், யார் மற்ற வேலைகளைச் செய்ய வேண்டும் எப்படி மகசூலைப் பிரித்துக் கொள்ளவேண்டுமென்றெல்லாம் ஒப்பந்தம் ஏற்பட்டு இப்போது நிலமானது சாகுபடியில் இருக்கிறது. இந்தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டுவருவதன் காரணமாக 10 ஏக்கருக்கு அதிகமாக உள்ள நிலச்சுவான்தார்களைப் பொறுத்த வரையில் சங்கடம் ஏற்படுகிறது. 60, 40 வீதத்திற்கு உரியவர்கள் என்று இப்போது சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அப்படிக் கொண்டு வந்திருப்பதன் காரணத்தினால் நிலத்தை அறுவடை செய்யும்போது, மாட்டுவாரம் தாரர் 60 பாகம் வரையில் தான் எடுத்துக்கொண்டு 40 பாகத்தை நிலக் காரருக்குக் கொடுக்கலாம். இப்போது இருக்கும் முறையிலே, எந்த அண்டர்ஸ்டாண்டிங் ஏற்பட்டிருக்கிறதோ, எந்த ஒப்பந்தத்தோடு சாகுபடி செய்யப்பட்டிருக்கிறதோ அந்த வகையிலே மாட்டு வாரதார் சில வேலைகளைச் செய்திருந்தால், மற்ற எல்லாச் செலவுகளையும் நிலக்காரர் ஏற்றுக் கொண்டிருக்கலாம். இதை கொஞ்சம் யோசித்துப் பார்த்திருந்தால் புரிந்து கொண்டிருக்க முடியும்.

அங்கத்தினர் பேசும்போது, ஏற்கெனவே சொன்னபடி திருத்தம் கொண்டு வந்தவர் பேரிலும், சர்க்கார் பேரிலும் கூறியது நல்லதல்ல. அமுலுக்கு வந்தால் ஏற்படக்கூடிய கஷ்டங்களை எடுத்துச் சொல்வதையும், அதன் பேரில் திருத்தம் கொண்டுவரப்படுவதையும் ஒரு குறைபாடாக நினைப்பது கண்டிக்கத் தக்க ஒரு அம்சமாக இருக்கிறது என்று மீண்டும் சொல்லிக்கொண்டு, 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ந்தேதி முதல் இந்தச் சட்டம் அமுலுக்கு வரவேண்டுமென்ற திருத்தத்தை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : Sir, the hon. Member Sri Srinivasa Iyer tried to make it appear that the Report of the Select Committee was unanimous and that it was not challenged. At several stages, I challenged the facts furnished by the Member of the Board of Revenue who went there for investigation. If he goes through the Minute of Dissent given by me, he will find it. This is what I have stated :—

'This mode of tenancy is prevalent in a large number of villages in the taluks of Kulithalai, Musiri, Tiruchirappalli, Lalgudi

and to some extent in Karur in the district of Tiruchirappalli. It is not correct to state that this mode of tenancy is confined to some 28 villages in the district.'

*SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஸார் இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தங்களிலே, கனம் அண்ணாமலை அவர்களும், கனம் கல்யாணசுந்தரம் அவர்களும் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தங்களை நான் ஆட்சேபிக்கிறேன். ஒரு கதை சொல்லுவார்கள், அதாவது "சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் தாசன்" என்று அந்த முறையில், இந்த முறையானது மாகாணம் பூராவிலும் இருக்கிறது என்று சொல்லுவது பைத்தியக்காரத்தனம் என்று சொல்லுகிறேன்.

MR. SPEAKER : பைத்தியக்காரத்தனம் என்று சொல்வது நல்லதல்ல. இந்த மாதிரியான வார்த்தைகளை உபயோகிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : பைத்தியக்காரத்தனம் என்று சொல்வது பார்லிமெண்டரியா ?

MR. SPEAKER : இந்த மாதிரியான வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது என்று தான் சொன்னேன். அதை விட்டு விட்டு மேலே பேசுங்கள். (ஸ்ரீ எஸ். எம். அண்ணாமலையும், ஸ்ரீ ஸி. நடராஜ உடையாரும் எழுந்து நின்றார்கள்.) இரண்டு அங்கத்தினர்கள் சேர்ந்து நிற்கக் கூடாது. ஒவ்வொருவராகக் கேளுங்கள். ஸ்ரீ நடராஜ உடையார் முதலில் கேட்கட்டும்.

SRI C. NATARAJA ODAYAR : தலைவர் அவர்களே, அந்த வார்த்தையை அங்கத்தினர் வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்கிறேன்.

MR. SPEAKER : பைத்தியக்காரன் என்று சொல்லக்கூடாது.

THE HON. SRI C. SUBRAMANIAM : பைத்தியக்காரன் என்று சொல்லவில்லை, பைத்தியக்காரத்தனம் என்று தான் சொன்னார்.

SRI A. GOVINDASAMY : இது பார்லிமெண்டரியா என்று கனம் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டும்.

MR. SPEAKER : பைத்தியக்காரன் என்று சொல்வதிலுள்ள seriousness இதிலே இல்லை. கொஞ்சம் கம்மி. மொத்தத்திலே இந்த மாதிரியான வார்த்தைகளை உபயோகப்படுத்தவேண்டாமென்று சொல்லுகிறேன். தகராறு வேண்டாம், விட்டுவிடுங்கள். ஸ்ரீ எம். ஆர். கந்தசுவாமி முதலியார் மேலே பேசலாம்.

*SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இப்போது உள்ள திருத்தம் எந்த இடங்களிலே

SRI V. K. KOTHANDARAMAN : பைத்தியக்காரத்தனம் போல என்று பேசலாமா ? இனிமேல் போல, போல என்று என்ன வேண்டுமானாலும் பேசலாமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Hon. Speaker has ruled that the hon. Member should not use that word again. That is the end of the matter.

MR. SPEAKER : உபயோகப்படுத்தவேண்டாமென்று சொல்லியாகிவிட்டது. திரும்பவும் கேட்கிறீர்களே ?

5th November 1958]

* **Sri M. R. KANDASWAMI MUDALIAR** : இப்போது எந்த இடங்களில் சிக்கல்கள் ஏற்பட்டு, அதனால் விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்களோ, அவர்களுடைய கஷ்டங்களுக்குப் பரிகாரம் தேடுவதற்காக வரப்பட்ட மசோதா, மாகாணம் பூரா கொண்டுவரவேண்டாமென்று சொன்னால், கனம் அங்கத்தினர் சில நிலச்சுவாந்தார்களுக்காகப் பரிந்து பேசி, அவர்களுக்குச் சலுகை கொடுப்பதற்காக அரசாங்கம் ஒத்திப் போடுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த முறை மாகாணத்திலே எல்லா இடங்களிலும் இருக்கிறது என்று காண்பித்தால் மந்திரிசபை ராஜிநாமா செய்யுமா என்று சொன்னார்கள். மாகாணம் பூராவிலும் கைஎர்வாரம், மாட்டு வாரம் என்ற முறை இல்லை. கனம் அங்கத்தினர் சொன்னதைப் போல் இல்லை என்று சொல்லுகிறேன். அப்படி இருக்கிறது என்று காண்பித்தால் நான் ராஜிநாமா செய்கிறேன். அப்படி இல்லை யென்றால் அவர் ராஜிநாமா செய்வாரா என்று நான் சவால் விடுகிறேன். சேலம் ஜில்லா போன்ற ஜில்லாக்களிலே மாட்டு வாரம், கைஎர்வாரம் என்ற பிரச்னை இல்லை. சிக்கலான தகராறு இல்லை. மாகாணம் பூராவுக்கும் இந்தச் சட்டத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று சொல்லி, ஆங்காங்கு வேலை செய்கிற தொழிலாளர்களைத் தூண்டி விட்டு, கிளர்ச்சியை உண்டுபண்ணி, விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் கட்சி நல்லது செய்வதாகச் சொல்லிக் கொண்டு, விவசாயிகளிடத்திலே அமைதியின்மையை உண்டு பண்ணுவதற்குத்தான் பிரயோசனப்படும். அதனால் எந்த இடத்திலே கை ஏர் வாரம்தாரர் முறை, மாட்டுவாரம் தாரர் முறை பழக்க வழக்கத்தில் இருந்ததோ அந்த இடத்திற்குத் தான் இந்தச் சட்டம் பொருந்துவதாக இருக்கவேண்டுமே தவிர மற்ற இடங்களில் விவசாயம் செய்யக் கூடியவர்களுக்கு இதை விஸ்தரிக்கக் கூடாது. மற்ற இடங்களிலே ஏர் ஓட்டு கிறார்கள், அன்றாடம் 2½ ரூபாய் அல்லது 3 ரூபாய் கூலி வாங்கிக் கொண்டு போகிறார்கள். அதே மாதிரி களை பிடுங்குதல், உரம் போடுதல், நாற்று நடுதல் என்றெல்லாம் நடக்கிறது. அவைகளுக்கு அவ்வப்போது கூலியை வாங்கிக்கொண்டு போகிறார்கள். திருச்சியில் இருக்கக்கூடிய கை ஏர் வாரம், மாட்டு வாரம் முறை மிக சிக்கலான முறையில் இருப்பதால் நல்ல முறையில் தீர்க்க முடியாதபடி இந்த சட்டசபையிலே கூட இரண்டு மூன்று கூட்டங்களுக்குத் தள்ளிப்போடும்போது, இதை எல்லா ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்காமல் எந்தெந்த இடங்களிலே இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டியிருக்கிறதோ அந்த இடங்களுக்கு மட்டும் விஸ்தரிக்கவேண்டும். மாகாணம் பூராவுக்கும் விஸ்தரிக்கக்கூடாது என்று சொல்லிக்கொண்டு இந்தத் திருத்தங்களை எதிர்க்கிறேன்.

12–50 p.m.

Sri A. GOVINDASAMY : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கை ஏர் மாட்டு வாரச் சட்டம் உடனடியாக அமுலுக்கு வரும் என்று, விவசாயத் தொழிலாளர்கள் எதிர்பார்த்திருக்கின்ற நேரத்திலே, இந்தச் சட்டத்தை அவர்களுடைய பாதுகாப்புக்காகக் கொண்டுவருகிறோம் என்று சொல்லிக்கொண்டு, காலம் கடத்தி இந்தச் சட்டத்தை விவாதித்து, 4, 5 மாதங்களுக்குப் பிறகு ஏப்ரல் 1-ம் தேதி இது அமுலுக்கு வரும் என்று சொன்னால், மிராசுதார்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்செயலாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது. மிராசுதார்கள் தரப்பிலே மிகத் திறமையாக வாதாடுவதைப் பார்க்கும்பொழுது, சர்க்கார் தரப்பில் நண்பர் லாசர் அவர்கள் கொண்டுவந்த திருத்தத்தை, அப்படியே நாங்களும் ஒத்துக்கொள்ளத் தயாராயிருக்கிறோம் என்பதற்கு அத்தாட்சியாக, அரசாங்கமே அதே திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறது என்று சொன்னால், ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்களுக்கும், அமைச்சர் அவையும் மிராசுதார்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதிலே அக்கறை காட்டுகிறார்கள் என்றுதான் தோன்றுகிறது. இந்த சர்க்கார் திருத்தத்தினால் அங்கேயுள்ள மிராசுதார்களுக்குத்தான் பலன் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்த சட்டத்தை நிறைவேற்றி, கவர்னர், அனுமதி பெற்றதும் உடனடியாக இதை அமலுக்குக் கொண்டுவந்தால் தான், அங்கேயுள்ள கை ஏர், மாட்டுவாரம்தார்களுக்கு இந்த கிராப் ஸீசனிலேயே ஏதாவது நன்மை கிடைக்கும். அதைக் காலம் கடத்த வேண்டிய அவசியம் கிடையாது. இந்த ராஜ்யம் பூராவிலுமுள்ள பகுதி

களுக்கு இந்த சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று நண்பர் அண்ணாமலை அவர்கள் சொன்னபொழுது, கை ஏர் வாரம்தார், மாட்டுவாரம்தார் என்ற முறை அங்கெல்லாம் இருப்பதாக நினைத்து அவர் சொல்லவில்லை. பல இடங்களிலே, வேறு பெயரில் இருந்தாலும், இம்மாதிரியான நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதிகளுக்கும் பொருந்தும் படி, பொதுவாக ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்றுதான் அவர் வலியுறுத்தினர். அந்தக் கருத்தை அரசாங்கம் இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும், எங்கு எல்லாம் அந்த மாதிரி நிலைமை யிருக்கிறதோ—கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் திருச்சி மாவட்டத்திலே இன்னும் சில கிராமங்களைச் சேர்க்கவேண்டுமென்று திருத்தம் கொடுத் திருக்கிறார்கள்—அங்கு எல்லாம் இந்த சட்டத்தைக் கொண்டுவருவதற்கு நமது அமைச்சர் அவை முன்வரவேண்டுமென்று வலியுறுத்துகிறேன். மிராசுதார்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது குறிக்கோளாக இல்லாமல், விவசாயத் தொழிலாளிகளுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* SRI M. P. SUBRAMANIAM : நான் பேசவேண்டியதை சுருக்கமாக முடித்துவிடுகிறேன். இப்பொழுது இந்த மசோதாவில் குறிப்பிட்டுள்ள கிராமங்களில் இந்த கை ஏர், மாட்டு வாரம்தார் பிரச்னை இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. மற்ற பகுதிகளிலும் இந்தப் பிரச்னை இருக்கிறது என்ற அபிப்பிராயம் இருக்கிறது. நண்பர் கல்யாணசுந்தரம் கொடுத்திருக்கும் திருத்தமானது, இந்தமாதிரிப் பிரச்னை வேறு எந்த கிராமத்திலேயாவது ஏற்பட்டால், அதையும் "நோட்டிபை" செய்வ வதற்கு சர்க்காருக்கு அதிகாரம் இருக்கவேண்டுமென்பதுதான். எந்தெந்த இடங்களில் இந்தப் பிரச்னை எழுகிறதோ அதை சமாளிப்பதற்கு அரசாங்கத் திற்கு அதிகாரம் கோரப்படுகிறது. இதிலே ஆட்சேபணை செய்வதற்கு ஒன்றும் இல்லை. இப்பொழுது கொண்டுவந்திருக்கும் சட்டமே அந்த மாதிரிப் பிரச்னையை சமாளிப்பதற்காகத்தான் கொண்டுவரப்பட்டி ருக்கிறது. பல சந்தர்ப்பங்களிலே, "அரசாங்கத்திற்கு அதிகாரம் வேண்டும், அவசியமானபோது பயன்படுத்த அதிகாரம் வேண்டும்" என்று சொல்லுகிற அரசாங்கக்கட்சி உறுப்பினர்கள் இந்த விஷயத்தில் ஏன் அரசாங்கத்தை நம்பாமல் இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இது விஷயத்திலே கருத்து மாறுபாடுக்கு இடமில்லை. நிலைமையைப் பரிசீலித்து, அவசியப்பட்டால் சட்டத்தின் மூலமாகச் செய்வதற்கு அமைச்சரவைக்கு அதிகாரம் கேட்கப்படுகிறது. அதை துஷ்பிரயோகம் செய்யவேண்டுமென்றால், அவர்களுடைய கட்சியைச் சார்ந்த அமைச்சர் அவைதான் செய்ய முடியுமே தவிர, எதிர்க்கட்சிக்கு வாய்ப்பு இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, with your permission, I move the following amendment :—

"In sub-clause (2) of clause 1, *for* the word and figure 'Schedule I' *substitute* the words 'the Schedule'."

சபாநாயகர் அவர்களே, "சவால்" விடுவதைப்பற்றி இங்கே சொல்லப் பட்டது. நான் தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்வது என்ன வென்றால், இந்த மன்றத்திலே அந்த வேலை வேண்டாம் என்பதுதான். அதற்கெல்லாம் வேறு இடம் இருக்கிறது. (சிரிப்பு.) இங்கே என்ன விவாதத்திற்கு வருகிறதோ அதைப்பற்றிமட்டும் பேசினால் போதும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த விவசாய முறை திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலே நாம் குறிப்பிட்டு இருக்கக்கூடிய கிராமங்களிலேமட்டுமில்லை, இன்னும் மற்ற கிராமங் களிலேயும் இருக்கிறது, அந்த ஜில்லாவிலேமட்டுமில்லை, இன்னும் பல இடங்களிலேயும் இருக்கிறது. ஆகையால் இந்த மசோதாவை மற்ற இடங் களுக்கும் பொருந்தும்படியாக திருத்தவேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதோடு, இது விஷயமாக விசாரிக்கப்போன

5th November 1958] [Sri M. A. Manickavelu]

போர்டு மெம்பர் இரண்டு மணி நேரம்தான் அங்கே இருந்தார் என்றும் சொல்லப்பட்டது. அதற்கு ஒரு திருத்தம். இரண்டு மணி நேரம் இல்லை, ஒரு நாள் பூராவும் இருந்து பார்த்தார். (சிரிப்பு.) ஏற்கெனவே சேகரித்த விவரங்களையும் வைத்துக்கொண்டு, தீர்க்காலோசனை செய்த பிறகு தான் இந்த முடிவுக்கு வரப்பட்டது.

இந்த மசோதா ஒரு விசேஷமான மசோதா. எப்படியென்றால், ஒரு சின்ன பகுதிக்கு மசோதா கொண்டுவருவது சாதாரணமாகக் கிடையாது. ஆனால் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம். அந்தப் பகுதியிலே இந்த விவசாயமுறை அதிகமாக கையாளப்படுகிறது. ஒரு குழப்பமான சூழ்நிலையை நிவர்த்தி செய்வதற்காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, "அத்தி பூத்தாப்போல்" இன்னும் ஒன்றிரண்டு இடங்கள் இருக்கின்றன, அதற்கெல்லாம் இம்மாதிரி சட்டம் கொண்டுவரவேண்டும் என்று சொன்னால், அது சரியாக இருக்காது. நன்றாகப் பரிசீலனை செய்ததில் இது அநேகமாக இங்கே குறிப்பிட்ட இடங்களில்தான் இருக்கிறது என்று தெரிகிறது.

இன்னொரு திருத்தத்தின் மூலமாக, மற்ற கிராமங்களுக்கும் இதை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் உரிமை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்படுகிறது. உரிமை எடுத்துக்கொள்ளலாம். அதிலே கஷ்டம் என்னவென்று சொன்னால், இம்மாதிரி ஒரு உரிமை இருக்கிறதே, ஆகையால் "ஒரு சான்ஸ்" பார்க்கலாம் என்று நினைத்து, குழப்பமும் கிளர்ச்சியும் ஏற்பட்டு ஒரு முடிவு இல்லாமல் போய்விடும். உண்மையிலே இம்மாதிரி நிலைமையிருந்தது என்றால், சட்டபூர்வமாகச் செய்யலாம். அதற்கு ஆட்சேபணை இல்லை. ஒரு அதிகாரம் இருக்கிறது என்றால், அனாவசியமான ஒரு நம்பிக்கை ஜனங்களுக்கு ஏற்படுகிறது. ஜனங்களுக்கு ஏற்படாவிட்டாலும், மற்றவர்கள் போய் ஏற்படுத்துவார்கள். அந்த மாதிரி சூழ்நிலையை உண்டுபண்ணுவது நல்லதல்ல. பிரத்தியட்சமாக நான் பார்த்திருக்கிறேன். **Tenants protection Act**-ஐ பெரிய நகரங்களிலே உள்ள சுற்றுப்புறங்களுக்கும் விஸ்தரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். அதற்காக வேண்டி நிறைய விண்ணப்பங்களும், மகசர்களும் வருகின்றன. இங்கேயும் அம்மாதிரி ஒரு விதி இருந்தால், இதை மற்ற இடங்களுக்கு விஸ்தரிக்கவேண்டுமென்று அநேகர் சொல்லலாம். அதனால் குழப்பம் ஏற்படும். உண்மையிலேயே இதை இன்னும் விஸ்தரிக்கக்கூடுமென்று நான் நினைக்கவில்லை. தீர விசாரித்துத்தான் செய்திருக்கிறோம். ஏதோ ஒரு கிராமம் அல்லது இரண்டு கிராமம் இருந்தாலும் இருக்கலாம். அப்படியிருந்தாலும், சட்டபூர்வமாகச் செய்வது தான் சரியே தவிர, இந்த மாதிரி ஒரு உரிமை எடுத்துக்கொண்டால், அதனால் பாதகம்தான் ஏற்படும். ஆகையால் வேண்டாமென்று சொல்ல விரும்புகிறேன்.

இந்த சட்டம் **1—4—1959**-லிருந்து அமலுக்கு வரவேண்டுமென்று ஒரு அங்கத்தினர் திருத்தம் கொடுத்திருக்கிறார். அரசாங்கமும் ஒரு திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தக் கட்சியிலே இருக்கிறவர்கள் திருத்தம் கொடுத்தால் அது ஒத்துக்கொள்ளப்படுகிறது என்ற வகையிலே ஒரு அங்கத்தினர் சொன்னார்கள். அவர்களே எத்தனையோ திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஒத்துக்கொண்டிருக்கிறோம். எது நியாயமாக இருக்கிறதோ அதை ஒத்துக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது நடுவிலே திடீரென்று கொண்டுவந்தால், குழப்பங்கள், கஷ்டங்கள் ஏற்படும். மிராசுதார்கள் விதைக்காக எல்லாம் பணம் போட்டிருப்பார்கள், அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னாலும்கூட எந்த வகையில் எடுத்துக்கொள்வது என்பதைப்பற்றி எல்லாம் தகராறு வரும். அந்தத் தகராறின் காரணமாக மகசூலை நிலத்திலே வைத்துக்கொண்டால், மழை பெய்தால் கெட்டுப்போய்விடும். **clean s'ate** என்று சொல்வதுபோல, "**cultivating season**" ஆரம்பத்திலிருந்து இந்த சட்டம் அமலுக்கு வருவதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். திருச்சி ஜில்லாவைப் பொறுத்தவரையில் அது ஏப்ரல் மாதம் என்று சொன்னார்கள். அப்பொழுது நிலம் தரிசாகத்தான் இருக்கும்.

[Sri M. A. Manickavelu] [5th November 1958

பதிதாக விவசாயம் ஆரம்பம் செய்யக்கூடிய காலமாக இருக்கும். இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள்தான் இருக்கின்றன. அதனால் ஒன்றும் ஆய்விடாது. ஆகவே இந்தத் திருத்தங்களை ஒத்துக் கொள்வதற்கு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். நியாயமான திருத்தங்கள் எல்லாம் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எல்லா வற்றையும் நன்ருக யோசித்து, பொறுக்கு கமிட்டி பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வந்த பிற்பாடுதான் இந்த மசோதா இங்கே கொண்டு வரப்பட்டது என்று சொல்லிக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

The amendment of Sri V. K. Kothandaraman, the amendments of Sri S. M. Annamalai and the amendments of Sri M. Kalyanasundaram were put and lost.

The amendment of Sri S. Lazar was, by leave, withdrawn.

The Government amendments were put and carried.

Clause 1, as amended, was put and carried.

The Preamble was put and carried.

MR. SPEAKER : The Government have to move an amendment consequent on the amendments made to clause 1. The Hon. Minister will move it.

Schedule I.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"*After* clause 14, *for* the words 'Schedule I' *substitute* the words 'The Schedule'."

The amendment was put and carried.

MR. SPEAKER : In the new clause 3 substituted by the Government, there is no reference to Schedule II. Therefore an amendment to delete 'Schedule II' must be moved by Government.

* THE HON. SRI M. A. MANICKAVELU : The amendment will be moved after the Schedule is passed.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

Add at the end the following items :

(6) *Musiri taluk.*

1. Seeplaputtur.
2. Karaikadu.
3. Srinivasanallur.
4. Musiri.
5. Kolakudi.
6. Evur.
7. Kottur.
8. Thinnakonam.
9. Nachampatti.
10. Veeranampatti.

5th November 1958] [Sri M. Kalyanasundaram]

(7) *Tiruchirappalli taluk.*

1. Keelamullakudi.
2. Kollakudi.
3. Ottakudi.

The amendment was duly seconded.

SRI M. KALYANASUNDARAM : இனி விவாதித்து அமைச்சர் அவர்களுடைய கருத்தை மாற்ற முடியும் என்று நான் நம்பவில்லை. ஆகையினால், நான பேச விரும்பவில்லை.

The amendment was put and lost.

The Schedule as amended was put and carried.

Schedule II.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

' *Omit* Schedule II and the entries thereunder '.

The amendment was put and carried.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

' That the Tiruchirappalli, Kaiæruvaram and Mettuvaram Bill, 1958 (L.A. Bill No. 25 of 1958), as amended, be passed '.

The motion was put and carried and the Bill as amended was passed.

MR. SPEAKER : We may now adjourn and meet again at 3 p.m.

SRI M. KALYANASUNDARAM : We may adjourn now and meet again at 3 p.m. and go on till 5 p.m.

MR. SPEAKER : We may sit in the afternoon till we finish our business.

The House will now adjourn and meet again at 3 p.m.

The House then adjourned.

(After lunch—3 p.m.)

MR. SPEAKER : We have now three Bills to be discussed. The Hon. the Leader of the House has told me that the Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958) may be taken up for consideration first. So, let the Hon. Minister in charge of the Bill move a motion for changing the order of business.

VII.—GOVERNMENT MOTIONS.

(1) CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Sir, under Rule 21 (3) of the Assembly Rules, I move—

" That item (5) in the agenda, viz., ' The Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958) ' be taken up now."

The motion was put and carried.

VI.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS (TRANSFERRED TERRITORY) EXTENSION OF TERM OF OFFICE OF MUNICIPAL COUNCILLORS BILL, 1958 (L.C. BILL NO. 9 OF 1958)

* THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Mr. Speaker, Sir, I beg to move—

'That the Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958) as passed by the Legislative Council be taken into consideration'.

Sir, the municipal councils in the transferred territory are governed by the Travancore District Municipalities Act, 1116 (Travancore Act XXIII of 1116). The term of office of the councillors of these municipal councils expires on the forenoon of the 1st January 1959. According to the present position, elections for these municipalities will have to be conducted before that date. The provisions of the Madras District Municipalities Act, 1920, have not yet been extended to the transferred territory. Such extension has to be done by legislation and it will take some time before it is finalized. It is not therefore possible to conduct the elections under the Election Rules of this State before the said date, namely, the 1st January 1959. It is therefore proposed to take power for the Government to continue the existing councils for six months more, i.e., up to the 30th June 1959 so that elections of councillors to these municipalities may be conducted before the expiry of this period. It is therefore necessary that we should proceed with the proposed legislation. I therefore move that the Bill be taken into consideration.

MR. SPEAKER : Motion moved—

'That the Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958) as passed by the Legislative Council be taken into consideration.'

* SRI M. S. SELVARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, பழைய கேரள ராஜ்யத்திலிருந்த தமிழ் பகுதிகளில் பெரும் பாலானவை நமது ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. நம் ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அந்தப் பகுதிகளிலுள்ள பல சட்டங்களும் நடைமுறைகளும் இந்த ராஜ்யத்தில் இதர பகுதிகளிலுள்ள சட்டங்களினின்றும் நடைமுறைகளி னின்றும் வேறுபட்டவையாக இருப்பதை நாம் காண்கிறோம். இதைப் பார்க்கும்போது, அந்தப் பகுதிகள் சென்னை ராஜ்யத்துடன் இணைந்து பல மாதங்களாகியும்கூட என் இன்னும் ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளிலும் சட்டதிட்டங்கள் ஒருப்போலவே அமல் நடத்தப்படுவதில்லை என்ற கேள்வி எல்லோருடைய மனதிலும் எழலாம். ஒரு ராஜ்யத்தைச் சேர்ந்த சில பகுதிகள் வேறு ராஜ்யத்துடன் இணைக்கப் பட்டாலும், ஒரு நிர்வாகப் பிரதேசத்தைச் சேர்ந்த சில பகுதிகள் வேறு நிர்வாகப் பிரதேசத்துடன் சேர்க்கப்பட்டாலும், அதற்குப் பிறகு அதன் விளைவாக சில சிக்கல்கள் அந்தப் பகுதிகள் இருக்கும் புதிய ராஜ்யத்திலும் புதிய பிரதேசத்திலும் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். திருவிதாங்கூர் ராஜ்யத்துடன் கொச்சிப் பகுதி இணைந்த பிறகும் இதே நிலைமை ஏற்பட்டது. அந்த இணைப்பு ஏற்பட்டு சுமார் 15 வருஷங்கள் ஆகிவிட்டன. 15

5th November 1958] [Sri M. S. Selvarajan]

வருஷங்கள் ஆகியிருந்தாலும், அந்த இரு பகுதிகளிலும் எல்லா நடைமுறைகளும் சட்டதிட்டங்களும் இன்றுவரையில் ஒரே மாதிரியாக ஆகிவிடவில்லை. இதைப் பார்க்கும்போது, பழைய கேரள ராஜ்யத்திலிருந்து ஓரிரு வருஷங்களுக்கு முன்பே நம் ராஜ்யத்துடன் இணைந்த பகுதிகளிலுள்ள சட்டதிட்டங்கள் இந்த ராஜ்யத்தின் இதர பகுதிகளிலுள்ள சட்டதிட்டங்களினின்றும் வேறுபட்டவையாக இருப்பதில் வியப்பில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். சென்னை ராஜ்யத்தின் இதர பகுதிகளில் எத்தகைய பிரதேசங்கள் மேஜர் பஞ்சாயத்துக்கள் என்று அழைக்கப்படுகின்றனவோ அவை கன்னியாகுமரி போன்ற பிரதேசங்களில் முனிசிபாலிடிகள் என்று அழைக்கப்படுகின்றன. அவை திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலிருந்தபோது அந்தப் பெயராலேயே அழைக்கப்பட்டுவந்தன. எனவே அதே பெயருடன் இங்கேயும் அழைக்கப் பட்டு வருகின்றன. இதர பகுதிகளிலுள்ள பஞ்சாயத்துக்களின் வருமான வரையறையும் கன்னியாகுமரி முதலிய பகுதிகளிலுள்ள முனிசிபாலிடிகளின் வருமான வரையறையும் வேறுபடுகின்றன. நமது ராஜ்யத்தில் எல்லா நடைமுறைகளையும் சட்டதிட்டங்களையும் கூடியசீக்கிரம் எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியாக அமல் நடத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஒரேமாதிரியான பகுதியை கன்னியாகுமரி முதலிய பிரதேசங்களில் முனிசிபாலிடி என்றும், இதர பிரதேசங்களில் மேஜர் பஞ்சாயத்து என்றும் அழைப்பதால் பெரிய கஷ்டங்கள் ஏற்படும் என்று நான் கருதவில்லை. இதர பகுதிகளிலுள்ள பஞ்சாயத்துக்கள் நிர்வாக அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன; பஞ்சாயத்துத் தலைவர்களும் பஞ்சாயத்து மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அதேமாதிரி கன்னியாகுமரி போன்ற பகுதிகளிலுள்ள இந்தப் பஞ்சாயத்துக்களிலும் தலைவர்களும் மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்தான்; அந்தப் பஞ்சாயத்துக்களும் நிர்வாக அதிகாரிகளால் தான் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி முதலிய பகுதிகளில் இந்த முனிசிபாலிடிகளை நடத்தும் நிர்வாக அதிகாரிகள் அதற்கென்றே பயிற்சியளிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

. இங்கு நிர்வாக அதிகாரிகளை பயிற்றுவிக்கும் முறை அல்லது நடை 3-10 p.m.
முறைகள் அதேபோல் அங்கு பின்பற்றப்படாமல் வேறு விதமாக பயிற்றுவிக்கப்படலாம். ஆகவே அங்குள்ள அதிகாரிகள் இங்கு பணியாற்றவும், இங்குள்ள அதிகாரிகள் அங்கு சென்று பணியாற்றவும் அவர்கள் தாங்களே இஷ்டப்பட்டாலும், அரசாங்கம் இஷ்டப்பட்டாலும் நம் ராஜ்யத்தில் உள்ளவர்கள் இந்த ராஜ்யத்தில் உள்ள எல்லா பாகங்களுக்கும் சென்று பணியாற்றுவதற்கு கஷ்டங்கள் பலதும் வரலாம். ஆகவே அவசரத்தைக் கருதி முனிஸபல் தேர்தல்களை ஓரளவு காலதாமதமாக நடத்த சட்ட ரீதியாக உரிமையை அரசாங்கம் கேட்டாலும்கூட எவ்வளவு சீக்கிரமாக அவைகளை நடத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் கேட்ட பிரகாரம் கூடுதல் சிறிது காலம் பெற்றுக்கொண்டாலும்கூட அதற்குள்ளாக இருக்கக் கூடிய எல்லா சிக்கல்களையும் தீர்த்துவிட்டு திருவிதாங்கூர்-கொச்சி, இரண்டு பிரதேசங்களின் இணைப்பும்கூட இன்னும் பூரணமாகத் தீரவில்லை என்ற காரணத்தை காட்டாது, அக்காரணத்தைக் கவசமாகக் கொள்ளாது இந்த ராஜ்யம் முழுமைக்கும் ஒரேவிதமாக எல்லாக் காரியங்களையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ராஜ்யம் பூராவிற்கும் ஒரே நிர்வாக அமைப்பு இருக்கவேண்டும். இந்த ராஜ்யம் முழுமையிலுமுள்ள சிப்பந்திகளின் நலபுலன்கள் ஒரேவிதமாக கவனிக்கப்படவேண்டும். ஆகவே, தேர்தல் நடத்துவதற்கு, சிறிது தாமதமாக நடத்துவதற்கு அனுமதி பெற்றாலும் அந்தக் காலத்திற்குள்ளாகவாவது எல்லாவிதமான சிக்கல்களையும் தீர்த்து ராஜ்யம் முழுமைக்கும் ஒன்றுபோல் வசதி செய்து கொடுக்கவேண்டும். ஆகவே அரசாங்கம் முனிசிபல் தேர்தல்களை சிறிது காலம் தாமதித்து நடத்துவதற்கு அனுமதி கேட்டிருப்பது சந்தர்ப்பத்திற்கு உகந்ததும், அங்குள்ள நிலைமைக்கு ஏற்றதுமாகும் என்று சொல்லிக்கொண்டு இதை ஆதரிக்கிறேன்.

SRI T. T. DANIEL : Mr. Speaker, Sir, while supporting this Bill, I would like to point out some facts for the consideration of the Government. Nearly two years ago, the transferred territory was added to the Madras State. The Government are very careful to consider and to study the peculiar conditions that are prevailing in that district before extending any of the existing Madras State laws to that district. Some of the laws that are prevalent in the Madras State have already been extended. But so far as the Municipal Acts are concerned, it is really proper for the Government to consider the peculiar difficulties which are experienced by the people in that district, because of the continuance of the existing law there. So far as that district is concerned, there is no Surcharge Act. The municipality is not collecting any tax from registration fees. This is one of the peculiarities prevalent there. So far as water tax is concerned, it is being collected by the municipality. There must be difference between the rates that are prevailing in that district and the rates that are prevailing in the other districts. In regard to the powers of the Commissioner also, I think there are some differences between the powers of the Commissioner there under the present law and the powers of the Commissioner under the District Municipalities Act here. Before extending this Act, it is proper for the Government to ascertain from the local representatives the particular difficulties that are being experienced at present by the continuance of that law there and also ascertain from them the nature of the difficulties that people will have to endure if the Madras District Municipalities Act, as it is, is extended to that place. It is really proper on the part of the Government to postpone the election till the time that is asked for in the Bill. But I would like to point out to the Government that further extension on no ground should be sought by the Government. It is better that elections are conducted as early as possible in that district, after studying all the difficulties in that district and after extending the Act to that district, if necessary, with some modification to suit the conditions prevailing there.

SRI A. GOVINDASAMY : சட்டமன்ற தலைவர் அவர்களே, புதிதாக நம் தாயகத்தோடு சேர்ந்திருக்கிற பகுதிகளில் நகரசபை தேர்தல்களை தள்ளிப்போடுவதற்காக கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன். அதற்கு காரணம், அப்பகுதிகள் நமது தாயகத்தோடு சேர்ந்து இரண்டு வருடங்களாகியும், திருவிதாங்கூர் முனிஸிபல் சட்டப் பிரகாரம் முனிசிபல் தேர்தல்கள் ஜனவரி முதல் தேதியோடு முடிகிறது, என்பது அவர்களுக்கு எற்கெனவே தெரிந்திருந்தும்கூட அப் பகுதிகள் இங்கு சேர்ந்தது முதல் இன்றுவரை யாதொரு நடவடிக்கைகளும் எடுக்காமல் தேர்தல்கள் நெருங்குகிறது என்ற சமயம் வரும்போது அந்த நெருக்கடியான கட்டத்தில் இந்த மசோதாவை இங்கு கொண்டுவந்து ஆறு மாத காலம் வேண்டுமென்று கேட்பது என்றால் அவர்கள் இதுவரை அவர்களின் பொறுப்பை உணராது இருந்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொல்லாமல் இருக்க முடியாது. குறிப்பாக நான்கு முனிஸிப்பாலிட்டிகள்தான் அங்கு இருக்கின்றன என்ற தகவல் எனக்கு கிடைத்திருக்கிறது. ஒன்று, செங்கோட்டை, மற்றொன்று நாகர்கோவில், மூன்றாவது அம்மையார் அவர்களின் தொகுதியாகிய குளச்சல், அடுத்தது விளவங்கோடு என்று நினைக்கிறேன்.

5th November 1958] [Sri A. Govindasamy]

இந்த நான்கு முனிஸிப்பாலிட்டிகளில் வோட்டர் லிஸ்ட் தயார் செய்யவோ அல்லது டிவிஷன்கள் பிரிப்பதற்கோ என்ன சங்கடங்கள் இருந்தது, இந்த இரண்டு வருடங்களில் என்று கேட்க விரும்புகிறேன். சாதாரணமாக கவனித்திருக்கக்கூடிய விஷயந்தான். அதை கவனித்திருந்தால், நமது தாயகத்தில் தேர்தல்கள் நடக்கும்போது, ஜனவரி அல்லது பிப்ரவரி மாதம் வரும் என்று நினைக்கிறேன், அந்தப் பகுதிகளிலும் தேர்தல் நடத்துவதற்கு வாய்ப்பு இருந்து இருக்க முடியும். அந்தப் பகுதிகளில்மட்டும் தேர்தல்களை ஆறு மாதம் ஒத்திப்போடவேண்டுமென்று கேட்பது என்று சொன்னால், நான் அமைச்சரவையை குற்றம் சாட்டாமல் இருப்பதற்கில்லை. தேர்தல் நெருங்கும்போது இந்த மசோதாவைச் கொண்டு வருவானேன் ? திருவிதாங்கூர் பகுதியோடு அவைகள் ஏதாவது தொடர்பு கொண்டு அதன் பேரில் ஒரு முடிவு காணுமல் இருந்திருந்தால் வேண்டுமானால் இப்படி காலதாமதம் கேட்க அவசியம் இருந்திருக்கக்கூடும். எப்பொழுது அந்தப் பகுதிகள் தாயகத்தோடு இரண்டறக்கலந்துவிட்டனவோ அப்பொழுதே இதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவேண்டும். அப்படி செய்ய தவறிய குற்றத்திற்காக அரசாங்கத்தின்மீது நான் பழி சுமத்த விரும்புகிறேன். அதற்கு அமைச்சர் அவர்களின் சமாதானத்தை அறிய விரும்புகிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Speaker, Sir, this is only a Bill for extending the life of the Municipal Councillors of the transferred territory of Shencottah and other taluks in the Kanyakumari district. I know the practical difficulties involved in having elections immediately. We are now completely revising the Municipal Act, and a committee is going into this question. We have finally decided to have the elections of the municipal councils in our State, including the Kanyakumari district, before the 30th April 1959. The present term of the municipal councillors of the Kanyakumari district expires by the 1st January 1959. Before the election dates, I am sure we will be finalising the Municipal Amendment Act, and the elections also will be completed some time before March 1959. So, I would request the Hon. Minister to see that election are held even in the Kanyakumari district in the month of March instead of postponing them by two months. The Hon. Minister says that there will be some difficulty in making provision for extending the Act. I have nothing to say except to request Government to see that elections are held at least before April and that there is no further postponement of the elections to the municipal councils.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: கனம் சபாநாயகர் அவர்களே, இன்று இங்கு கொண்டுவந்திருக்கின்ற மசோதா தேர்தல் நடத்துவதில் கால தாமதம் ஆக்கவேண்டுமென்றோ அல்லது வோட்டர்கள் லிஸ்டு தயாரிப்பதில் கால தாமதம் செய்யவேண்டுமென்றோ அல்லது வேறு விதமான தகராறுகள் இருக்கிறது என்பதற்காகவோ இந்த நீடிப்பு வேண்டும் என்று கோரப்படவில்லை. பொதுவாக சட்ட இணைப்புகள் எல்லாம் இதுவரை முடிவடையவில்லை. பாதிச் சட்டங்கள் தான் அங்கு இயங்குகின்றதே தவிர பூராவும் இதுவரை முற்றுப்பெறவில்லை. ஆகவே இந்த தேர்தலை நடத்துவதற்கு இன்னும் ஆறு மாதம் நீடித்து தரவேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. இந்த ஆறு மாதம் என்பது ஜூன் மாத கடைசிவரை இருக்கலாம். இருந்தாலும் அதற்கு முன்னதாகவே இந்த இணைப்புகள் எல்லாம் முற்றுபெற்றுவிட்டால் ஜூன் மாதத்திற்கு முன்னதாகவே தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சி

எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இப்போது ஆறு மாதகாலம் நீடித்து தர வேண்டும் என்றுள்ள மசோதாவை நிறைவேற்றி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958) as passed by the Legislative Council, be taken into consideration'.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

* THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Sir, I move—

'That the Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958), as passed by the Legislative Council, be passed'.

SRI A. GOVINDASAMY : இணைப்பு பூர்த்திபெறுததினுல்தான் இப்போது தேர்தல் நடத்துவதற்கில்லை என்றும் அதற்காக ஆறு மாத காலம் நீடித்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அங்கே வோட்டர் லிஸ்டு தயார் செய்வதிலும், வார்டுகள் பிரிப்பதிலும் ஏற்படுகின்ற காலதாமதத்தினுல்தான் இவ்விதம் நீடிக்கவேண்டியிருக்கிறது என்று சொன்னேன். அதற்கு கனம் அமைச்சர் அவர்களின் பதில் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : சட்டங்களை இணைப்பதில் ஏற்படுகின்ற காலதாமதமே தவிர, வோட்டர் லிஸ்டு தயாரிப்பதிலோ, அல்லது வார்டுகள் பிரிப்பதிலோ, அல்லது வேறு எந்த விதமான தகராறுகளினுலோ இந்த காலதாமதம் ஏற்படுவதில்லை என்று நான் என்னுடைய பதிலிலே கூறியிருக்கிறேன்.

The motion was put and carried and the Bill was passed.

(4) THE MADRAS PANCHAYATS BILL, 1958 (L.A. BILL NO. 33 OF 1958).

MR. SPEAKER : We will take up the next item of business, viz., the Madras Panchayats Bill, 1958 (L.A. Bill No. 33 of 1958).

SRI M. P. SUBRAMANIAM : Sir, I rise on a point of order. I wish to draw the attention of the Hon. Speaker to Rule 71 of the Assembly Rules which says—

'A motion must not raise a question substantially identical with one on which the Assembly has given a decision in the same session'.

We have discussed this Panchayats Bill at the last sitting of this same session, and we have taken decisions. The same thing cannot be reopened now in the same session itself. I think it is out of order to bring in the Panchayats Bill for consideration of the amendments passed by the Council.

5th November 1958]

MR. SPEAKER : I would draw the attention of the hon. Member to Rule 235, which says, ' Any member may, with the consent of the Speaker, move that any rule may be suspended in its application to a particular motion before the House . . .'

The Hon. Minister has my consent to move the motion.

SRI M. P. SUBRAMANIAM : But the question is not put to the vote of the House.

MR. SPEAKER : If the hon. Member raises this technical objection, I will ask the Hon. Minister to move a motion, under Rule 235.

VII.—GOVERNMENT MOTIONS—*cont.*

(2) MOTION UNDER RULE 235 OF THE ASSEMBLY RULES

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, under Rule 235 of the Assembly Rules, I move—

' That Rule 71 of the Assembly Rules be suspended and the House do proceed to consider the amendments made by the Legislative Council to the Madras Panchayats Bill, 1958 (L.A. Bill No. 33 of 1958), as passed by the Legislative Assembly '.

I thought I could move this motion when the amendments were actually taken up.

The motion was put and carried.

*SRI M. P. SUBRAMANIAM : I want to make one more submission, Sir. இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்து மசோதாவில் 39 திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உண்மையிலேயே இந்த 39 திருத்தங்களின்மீதும் நல்ல முறையில் விவாதம் நடத்த முடியாது. போதிய காலம் இல்லை. இங்கே இந்த மசோதா நிறைவேற்றின சமயத்தில் அவசர அவசரமாக நிறைவேற்றியதின் காரணமாகத்தான் இப்போது இந்த 39 திருத்தங்களை திரும்பியும் கொண்டுவரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதோடு இந்த திருத்தங்கள் எல்லாம் நேற்று இரவுதான் ஸர்க்குலேட் செய்யப்பட்டன. இதற்குள், அங்கத்தினர்கள் ஒருவரும் இதை சரியாக படித்து தெரிந்துகொண்டிருக்க முடியாது என்று நம்புகிறேன். இதில் கொண்டுவரப்பட்டிருக்கின்ற திருத்தங்களில் பல இங்கேயே இதற்கு முன்பு கொண்டுவரப்பட்டது. அப்போது மிக அவசரமாக நிறைவேற்றிய காரணத்தால் அதை ஒப்புக்கொள்வதற்கு அரசாங்கம் தயாரில்லாமல் இருந்தது. இப்போது சாவகாசமாக பார்த்ததின் பின்னால் அமைச்சர் அவர்கள் இப்போது சில திருத்தங்களை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இங்கும் அவசரமில்லாமல் நிறைவேற்றப்பட்டிருந்தால் இந்த திருத்தங்களில் பல இங்கேயே ஒப்புக்கொண்டிருக்கலாம். இப்பொழுதும் இது அவசரமாக கொண்டுவரப்படவேண்டிய சட்டம் ஒன்றுமில்லை. ஆகவே இதை பின்னால் கூடுகின்ற சபையில் வைத்து விவாதிக்கலாம் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

VI.—GOVERNMENT BILL—*cont.*

(4) THE MADRAS PANCHAYATS BILL, 1958 (L.A. BILL NO. 33 OF 1958)—*cont.*

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the House has already given permission to move it.

Sir, I move—

" That the amendments specified in the annexure being the amendments made by the Legislative Council to the Madras Panchayats Bill, 1958 (L.A. Bill No. 33 of 1958) as passed by the Legislative Assembly be taken into consideration ".

ANNEXURE

Clause 1

In clause 1, *for* sub-clause (3), *substitute* the following :—

" (3) It shall come into force on such date, not being later than the 2nd day of October 1961, as the Government may, by notification, appoint; and different dates may be appointed for different provisions of this Act or for different areas ".

Clause 2

In clause 2—

(i) *Renumber* sub-clauses (3) to (36) as sub-clauses (4) to (37) respectively and *insert* the following as sub-clause (3) :

" (3) 'Chairman' means the Chairman of a panchayat union council ".

(ii) in existing sub-clause (12), *omit* the words " or but ".

Clause 6

In the heading of clause 6, *for* the words " or of rules thereunder " *substitute* the words " or of any rules made thereunder ".

Clause 12

In clause 12, sub-clause (2), *after* the words " panchayat development block " *insert* " and any member of the State Legislative Council residing in a panchayat development block."

Clause 13

For the existing item (vi) (*c*) *substitute* the following :

" (*c*) all secondary, vocational and industrial schools maintained by any district board together with the assets and liabilities appertaining to such schools, as and when notified by the Government, shall stand transferred to and be vested in such authority as may be specified by the Government by general or special order ".

Clause 14

In the heading to clause 14, *for* the words " Elected members " *substitute* the words " Election of members ".

Clause 15

In clause 15, sub-clause (4), *for* the words " if no woman has been elected to that panchayat " *substitute* " if there is no elected woman member in that panchayat ".

5th November 1958] [Sri C. Subramaniam]

Clause 17

In clause 17—

(i) in the heading, *omit* the word " elected ".

(ii) *after* sub-clause (4), *add* the following sub-clause :

" (5) The person co-opted under sub-section (4) of section 15, shall hold office only for such period for which she would have been entitled to hold office if she had been elected at an ordinary election or at a casual election as the case may be ".

Clause 18

In clause 18, sub-clause (1), *for* the words " the vacancy or one or more of the vacancies, as the case may be " *substitute* " any vacancy ".

Clause 19

In clause 19, in sub-clause (8) *after* the words and figures " under sub-section (6) or (7) " *insert* the words " or co-opted under section 12 ".

Clause 23

In sub-clause (1), *for* the words " for holding office as an elected member " *substitute* the words " for holding office as a member ".

Clause 25

In clause 25, sub-clause (1), *omit* the words " for a period of more than six months " and " or the offence pardoned ".

In sub-clause (2) (*c*), *omit* the words " or except as permitted by rules made under this Act."

Clause 32

In clause 32, *re-number*, sub-clauses (2), (3) and (1) as sub-clauses (1), (2) and (3) respectively.

Clause 34

In paragraph 1 of sub-clause (3), *for* the words " by such person " *substitute* the words, " on such person ".

Clause 35

In clause 35, *add* the following proviso—

" Provided that he shall not delegate any functions which the panchayat expressly prohibits him to delegate ".

[4th November 1958

Appendix XIV.

[*Vide* answer to Unstarred Question No. 20 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 4th November 1958, page 523 *supra*.]

I. *Statement showing the number of Primary Health Centres opened during 1957–58 in each district.*

Name of the district.	*Number of Centres.*	*Name of the Primary Health Centres.*
(1)	(2)	(3)
North Arcot	3	1 Kalambur.
		2 Mandakolathur.
		3 Lalapet.
South Arcot	2	1 Satyamangalam.
		2 Tirunavalur.
Chingleput	5	1 Tirukalikundram.
		2 Uthiramerur.
		3 Z. Endathur.
		4 Valliyoor.
		5 Perambakkam.
Coimbatore	5	1 Avanashi.
		2 Thayampalayam.
		3 Talavadi.
		4 Perianaickenpalayam.
		5 Chandrapuram.
Kanyakumari	2	1 Arudesam Panchayat.
		2 Rajakkamangalam Thurai.
Madurai	6	1 Dhadi Combu.
		2 Natham.
		3 Tirupparankundram.
		4 Dombucherry.
		5 Vadipatti.
		6 Elumalai.
Ramanathapuram	4	1 Parthibanoor.
		2 Uppathur.
		3 Pandugudi.
		4 Kunnur.
Salem	4	1 Kolathur.
		2 Bargur.
		3 Begalur.
		4 Tirunjipatti.
Tiruchirappalli	6	1 Thiruman.
		2 Thottiam.
		3 Innungur.
		4 Pudur Uthamanur.
		5 Valikandapuram,
		6 Chinnadharapuram.
Tirunelveli	5	1 Pattamadai.
		2 Tisainvillai.
		3 Vasudevanallur.
		4 Pudukkottai village.
		5 Kuruvikulam.

4th November 1958]

Name of the district.	Number of Centres.	Name of the Primary Health Centres.
(1)	(2)	(3)
Nilgiris	2	1 Pandalur. 2 Nedugula.
Tanjore	7	1 Thiruvizhimizhalai. 2 Sengandi Idaiyur. 3 Nallur. 4 Thiruvengadu. 5 Kali. 6 Alathambadi. 7 Vedaranyam.

II. *Statement showing the names of Primary Health Centres which are vacant for want of Medical Officers as on 22nd August* 1958.

1 Primary Health Centre, Thirunavalur, South Arcot district.

2 Primary Health Centre, Perambakkam, Chingleput district (Medical Officer posted).

3 Primary Health Centre, Talavadi, Coimbatore district (Medical Officer posted).

4 Primary Health Centre, Chandrapuram, Coimbatore district.

5 Primary Health Centre, Perianaickenpalayam, Coimbatore district.

6 Primary Health Centre, Nedugula, the Nilgiris district.

7 Primary Health Centre, Kunnur, Ramanathapuram district.

8 Primary Health Centre, Uppathur, Ramanathapuram district.

9 Primary Health Centre, Pandugudy, Ramanathapuram district.

10 Primary Health Centre, Thurunjipatti, Salem district.

11 Primary Health Centre, Alathambadi, Tanjore district (Medical Officer posted).

12 Primary Health Centre, Sengandhi Idaiyur, Tanjore district (Medical Officer posted).

13 Primary Health Centre, Pudur Uthamanur, Tiruchirappalli district.

14 Primary Health Centre, Inugur, Tiruchirappalli district.

15 Primary Health Centre, Pudukkottai village, Tirunelveli district.

16 Primary Health Centre, Arudesam Panchayat, Kanyakumari district (Medical Officer posted).

APPENDIX XV.

[Vide answer to unstarred question No. 22 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 4th November 1958, page 525 supra.]

Statement showing the number of taxis plying in the districts and Headquarters of the districts in this State as on 1st September 1958.

	Number in the district.			*Number in District Headquarters.*		
	Big taxis.	*Baby taxis.*	*Auto-rick-shaws.*	*Big taxis.*	*Baby taxis.*	*Auto-rick-shaws.*
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
Chingleput	3	21	..	..	..	..
Coimbatore	42	35	161	21	30	156
Kanyakumari	95	..	..	47	..	..
North Arcot	29	8	..	17	5	..
Madurai	38	..	2	29	..	..
The Nilgiris	67	24	..	47	10	..
Ramanathapuram	15	..	..	15	..	..
Salem..	66	2	14	24	2	14
South Arcot	..	..	..	..	..	..
Tanjore	5	..	..	..	..	..
Tiiruchirappalli	33	6	1	31	6	1
Tirunelveli	16	18	..	16	18	..
Madras City	92	636	293	..	..	..

As regards Chingleput district, the Headquarter is at Madras. Hence separate figures are not furnished under the column "Number in District Headquarters".



THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Wednesday, 5th November 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Hospital for chronic patients

* *S.N.Q.* 35.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state the present stage of the proposal to construct a hospital for chronic patients in the City of Madras?

THE HON. SRI M. A. MANICKAVELU: The proposal is under the consideration of Government.

SRI A. A. RASHEED: Sir, is the Hon. Minister aware that more than 25 per cent of the patients in the Government hospitals are suffering from chronic and incurable diseases? If so, will the Government expedite the proposal to establish a hospital for these incurables?

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I cannot subscribe to the exact percentage mentioned by the hon. Member. No doubt it is true that if many patients who are suffering from chronic diseases are shifted to other places, it will be good. In fact we tried to get buildings at the Arkonam aerodrome and also at Avadi. It was stated that they were not suitable. Now we are exploring whether the buildings available at Red Hills could be made use of. Also the Government have acquired some land near Kottur. The proposal is to put up buildings and take the patients there.

SRI K. VINAYAKAM: Sir, what are the chronic diseases that these patients are suffering from? Will the Government assure this House that, in view of the existence of the water-supply scheme at Red Hills lake, that building at Red Hills will not be utilised for the construction of this hospital?

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, we are exploring the possibility of making use of the building at Red Hills. Further, we are also proposing to put up new buildings near Kottur. Whatever may be the nature of the disease, we are concerned only with the chronic nature of the patients who have to be house for a long time.

SRI M. JAGANNATHAN: Sir, the Hon. Minister has stated that there is a proposal for putting up a building for the purpose of locating a hospital for incurables. May I know the estimated cost of this building and whether the Government of India is giving us any financial aid for this purpose?

[5th November 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : For this purpose, Government poramboke land of about 26 acres in Kottur village near Guindy has been acquired recently. The proposal is to construct buildings for the hospital at an estimated cost of Rs. 7·80 lakhs. This is being considered as Part II Scheme for 1959–60. As regards aid from the Central Government, I have no idea at present.

Express group of Newspapers

* *S.N.Q.* 36.—SRI K. SATTANATHA KARAYALAR, SRI S. PAKKIRISAMI PILLAI AND SRI K. ANBAZHAGAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that the Express Newspapers (Private), Limited, have given notice that they intend to close their publications in Madras from 1st December 1958;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) what steps the Government intend to take in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Management of Express Newspapers, Private, Limited, Madras, has given notice that it intends to close down the undertaking of its publications with effect from 1st December 1958 in view of the indiscipline prevailing among the staff and the workers;

(*c*) Government are asking the Commissioner of Labour to take up conciliation immediately.

SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த எக்ஸ்பிரஸ் க்ரூப்பில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்குக் கொடுக்க கூடிய அடிப்படைச் சம்பளம் என்ன ? சென்னையிலே இருக்கக் கூடிய ஸ்தாபனங்களிலே இவர்கள் தான் மிகக் குறைந்த சம்பளம் கொடுக்கிறார்கள் என்பது உண்மைதானா ? அப்படியானால் குறைந்தபட்ச சம்பளமாவது தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தார் அந்த நிர்வாகிகளை வற்புறுத்துவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால் இரு சாராரிடமும் தசராவின் போது நான் கலந்து பேசி ஒரு சமரச முடிவை ஏற்படுத்த முயன்றேன். அதைத் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் ஒப்புக்கொள்ள வில்லை. இந்தத் தகராறு நீடிக்கிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்தத் தொழிலாளர்கள் அவர்களுடைய குறைகளைக் கோர்ட்டுக்கு முன்னால் வைத்திருக்கும்போது அல்லது அவர்களுடைய பிரச்சனை ஹைகோர்ட்டில் இருக்கும்போது இந்தமாதிரியான நோட்டீஸ் கொடுத்து நிர்வாகத்தை மூடுவது என்பது ஒழுங்குதானா ? அப்படி ஒழுங்கு இல்லையென்றால் தொழிலாளர்களை வீணாகப் பழி வாங்கவேண்டுமென்ற காரணத்தினால் இப்படிச் செய்கிறார்கள் என்று அன்பேர் லேபர் ப்ராக்டீஸ் மூலம் முதலாளிக்குத் தண்டனை கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஹைகோர்ட்டில் பல தீர்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. தொழிலை நடத்துவதற்கு முடியவில்லை என்றால் அந்த ஸ்தாபனத்தை மூடிக்கொள்ளலாம் என்று தீர்ப்பு இருக்கிறது. அதைப்பற்றி ஒரு ஜி. ஓ. விடுவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படி மூடும்போது தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய எல்லாத் தொகையும் கொடுக்கப்பட்டாக வேண்டும். அது தான் சர்க்காரால் கவனித்துக் கொள்ளப்படவேண்டிய விஷயம்.

5th November 1958]

SRI K. ANBAZHAGAN : இந்தக் கேள்வியின் துணைக் கேள்விக்கு விடை அளிக்கும்போது கனம் அமைச்சர் அவர்கள் தொழிலாளர்கள், முதலாளி இருவருக்குமிடையே சமரசம் செய்து வைக்க முயன்றதாகவும், அமைச்சர் சொன்னதை தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் ஒப்புக் கொள்ளாததால் தகராறு நீடிக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். அமைச்சர் கூறிய சமரச ஏற்பாடு என்ன என்பது தெரிந்தால் தான் அப்படித் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் மறுத்தது சரிதானா இல்லை தவறானதா என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். ஆகவே சமாதான உடன்படிக்கைக்கு அமைச்சர் தெரிவித்த கருத்துக்கள் யாவை என்று அமைச்சர் தெரிவிப்பாரா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கத்தைப் பற்றிக் குற்றம் சாட்ட வேண்டுமென்றால் அதைச் சொல்லத்தான் வேண்டும். நேற்று இரவும் கூடச் சமரசம் செய்து வைப்பதற்காகப் பேசியிருக்கிறேன். எனக்கு இனியும் சமரசம் ஏற்படலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்தச் சமயத்தில் அந்த விவரங்களை எல்லாம் சொன்னால் அவை தகராறை வளர்க்கத் தான் பயன்படும் என்று கருதுவதால் சொல்ல முடியாமல் இருக்கிறேன்.

SRI S. LAZAR : இது போன்ற நோட்டீஸ் மற்ற இடங்களிலும் இருக்கிற அவ்வளவு ஸ்தாபனங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது சென்னை ஸ்தாபனத்தை மட்டும் மூடுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? சென்னையில் இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளத்திற்கும் இதர ஸ்தாபனங்களில் வெளி மாகாணத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்திற்கும் வித்தியாசம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் தகராறு சென்னையில் இருக்கக் கூடிய ஸ்தாபனங்களைப் பற்றியது. இந்த நோட்டீசும் சென்னையில் இருக்கக் கூடிய ஸ்தாபனங்களுக்கு மட்டும் தான்.

SRI N. K. PALANISAMI : தொழிலாளர்களுடைய கோரிக்கை 7½ ரூபாய் போனஸ் 4½ ரூபாய் பஞ்சப்படி ஆகிய இந்தக் கோரிக்கையை கம்பல்சரி ஆர்ப்பிட்ரேஷனுக்கு விடுவதற்கு ஏன் சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கக் கூடாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தொழிலாளர்களுடைய தலைவர்களை தொழிலாளர்களுக்குப் பல சங்கடங்களை உண்டாக்கி விடுவது சரியல்ல. நான் முதலிலேயே மத்தியஸ்த்திற்கு விடலாம் என்று சொன்னதை தொழிலாளர்கள் ஒப்புக்கொண்டிருந்தால் முன்பே விடப்பட்டிருக்கும்.

SRI M. KALYANASUNDARAM : தொழிலாளர்களுடைய கோரிக்கை என்ன என்ன என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் பல இருந்தன. கோர்ட்டுகளில் இருந்தன. ஒன்று சம்பளம் பற்றியது. இரண்டாவது 69 பேரை ரெட்டிரன்ச்மெண்டு செய்துவிட்டார்கள். அவர்களையே மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது. சம்பளமும் இதுவும் தான் முக்கியமானது. இன்னும் வேறு சில பிரச்சனைகளும் இருக்கின்றன.

SRI T. T. DANIEL : Sir, may I know from the Hon. Minister whether any demands of the workers have been agreed to by the management and what are the demands which the management did not agree to?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have just stated in Tamil that it is not in the interests of a settlement which I expect to be made that I should give details of the points in dispute.

[5th November 1958

SRI A. A. RASHEED : Sir, what is the number of labourers and staff who will be affected by the closure of the publication?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I am sorry I do not have the exact figures with me now.

SRI K. VINAYAKAM : Sir, in view of the long service which this Press has been doing towards the national cause, will the Government assure this House that they will effect a reapproachment between the management and the workers; failing this, will the Government step in and take over the management of this Press in the interests of the country?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I may at once tell the hon. Member that this is not an industry which the Government can take over. Then, Sir, whether it is a national newspaper which has been doing immense service or any other industry, Government have always been doing their best to effect a fair settlement between the workers and the management.

SRI K. SATTANATHA KARAYALAR : பிரித்துவிடப்பட்ட தொழிலாளர்களைப் பற்றி டிரிப்யூனலுக்கு ரெபர் செய்யும் உத்தேசம் சர்க்காருக்கு ஏதாவது இருக்கிறதா ? அதன் முடிவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றியும் டிரிப்யூனலில் இருக்கிறது. ஹைக்கோர்ட்டிலும் இருக்கிறது.

9-10 a.m. SRI M. KALYANASUNDARAM : Are the Government aware that the threat of closure of this enterprise is only to coerce the workers to accept the humiliating terms of the management?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the hon. Member quotes from the statement that has been issued by the representative of the Union. But, I believe that it is not mere-threat and they mean closing it down. That is what I learn now.

SRI T. SAMPATH : What are the difficulties experienced by the management?

MR. SPEAKER : The Hon. Minister has already stated that it is not advisable and it is not in the interests of a settlement to go into all these details. If, however, the Hon. Minister is willing to answer the question, I have no objection.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : As I have already pointed out in my answer, the point which has provoked the management to decide to close down the concern, as stated by them, is that indiscipline is prevailing among the workers.

Salem iron ore

* 861 *Q*.—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Home be pleased to state with reference to the answer furnished to question No. 301 on 12th March 1958—

(*a*) whether the Government have received the final reports from the Metallurgical Laboratory, Jamshedpur, on the examination of the samples of Salem iron ore; and

(*b*) if so, whether a copy of it will be placed on the Table of the House?

5th November 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The reports in 3 parts received from the National Metallurgical Laboratory are highly technical and they contain only experimental details with a lot of diagrams and graphs. The labour and cost involved in printing and placing them on the table of the House will not be commensurate with the benefits that may be derived from it. However spare copies of the reports will be obtained from the Laboratory if available and placed in the Library.

SRI M. P. SUBRAMANIAM : இந்த அறிக்கை சர்க்காருக்கு எப்போது வந்தது ? அறிக்கை வந்த பிறகு, சேலத்தில் பெரிய அளவில் தொழிற்சாலை துவக்குவதற்கு வேண்டிய வாய்ப்பு சம்பந்தமாக அரசாங்கத்தார் பரிசிலனைகள் செய்திருக்கிறார்களா ? தொழிற்சாலை துவக்கப்படுவதாயிருந்தால், துவக்கப்படுவதற்கு எவ்வளவு காலம் ஆகும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அறிக்கை எந்தத் தேதியில் வந்தது என்று நான் இப்போது சொல்வதற்கில்லை. அறிக்கை வந்ததிலிருந்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அந்தப் பரிசீலனை நாஷனல் லாபரட்டரியில் செய்யப்பட்டு வருகிறது. ஒரு தனி நபர் தொழில் ஆரம்பித்திருக்கிறார். "லோ ஷாப்ட் பர்னேஸ்"-ஐ "பப்ளிக் ஸெக்டார்" இலும் அமைப்பதற்கு இப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

SRI M. P. SUBRAMANIAM : கோவையிலுள்ள ஒரு தனி நபர் சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனிப் பொருள்களைக் கொண்டு சிறிய அளவில் ஒரு தொழிலைத் துவங்க முன்வந்திருக்கிறார். அவருக்கு அதற்கு அனுமதி கொடுத்துள்ள அரசாங்கம், அவர் எந்த முறையில் அந்த இரும்புக் கனிப் பொருள்களை தொழில் நடத்தப் பயன் படுத்துகிறாரோ அதே முறையில் அவைகளைப் பயன்படுத்தி பெரிய அளவில் ஒரு தொழிற்சாலையை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த மாநிலத்திலே துவங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது தனியார் துறையில் (ப்ரைவேட் ஸெக்டாரில்) "லோ ஷாப்ட் பர்னேஸ்" அமைக்கப்பட்டிருக்கிறது. பப்ளிக் ஸெக்டாரில் இரண்டு லோ ஷாப்ட் பர்னேஸ் அமைப்பதற்கு, மத்திய சர்க்காருடன் கலந்துபேசி வருகிறோம்.

District Teachers' Guild, Tiruchirappalli

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister, Sir, whether this scheme is run on a profit?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the scheme is yet to be finalised and then taken up. There is no question of profit and loss at this stage.

Certain works given on contract without calling for tenders

* 893 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that in order to make improvements in the Old Vennar Road, Tiruchirappalli district, for about two furlongs, a retaining wall was constructed and repairs for a bridge at mile 23/2 Tiruchirappalli-Tanjore Road was given on contract without calling tenders;

(*b*) whether complaints were received against this execution; and

(*c*) if so, what action has been taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Tenders were dispensed with for the work of constructing the retaining wall which had to be executed urgently. But for the bridge at mile 23/2 of the

5th November 1958]

Tiruchirappalli-Tanjore road tenders invited thrice proved infructuous and the work was entrusted to a contractor at negotiated rates.

(b) No. Sir.

(c) Does not arise.

MR. SPEAKER : It is now 10 o'clock. I shall allow one supplementary question on every question and dispose of the remaining ten questions in ten minutes. 10-00 a.m.

SRI K. SATTANATHA KARAYALAR : இதுமாதிரி எஸ்டிமேட் தயாரிக்காமலும், டெண்டர் அழைக்காமலும் அவசரமாகச் செய்யப்பட வேண்டிய காரணம் என்ன ? அப்படி ஏதாவது அவசரமாக ஒரு வேலை செய்யப்பட வேண்டுமானால், முதலிலே டிபார்ட்மெண்டு மூலமாக செய்ய முடியுமா என்பதைப் பார்த்து, அதற்குப் பிறகு ஒரு முடிவுக்கு வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : நான் என் பதிலில் சொன்னேன். மூன்று முறை டெண்டர்கள் அழைக்கப்பட்ட போதிலும், ஒருவரும் முன் வரவில்லை. பிற்பாடு நெகோஷியேஷன் செய்து வேலை அவசரமாக இருந்ததால், எடுத்துக்கொள்ளப்பட்டது,என்று.

Rubber cultivation in Kanyakumari district

MR. SPEAKER : As the hon. Member Sri M. William is absent, the question and answer will be printed in the official proceedings.

SRI T. T. DANIEL : Sir, I put the question on his behalf.

MR. SPEAKER : Sri William sits in one corner of the House and Sri T. T. Daniel is sitting in another corner. Surely, I cannot be expected to notice Sri Daniel rising in his seat to put the question on behalf of Sri William when I did not find him in his seat when I called this question. In future, I hope that hon. Members will give me previous intimation when they want to put a question on behalf of another Member who may not be present in the House.

* 894 *Q.*—SRI T. T. DANIEL (on behalf of Sri M. William) : Will the hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to take over 1,500 acres in Arukani, Pathukani and other places in Kaliel village for rubber cultivation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The question of earmarking 1,500 acres of land in Kanyakumari district for rubber cultivation is under examination. The suitability of the lands in Kaliel village is also being examined in that connection. No final decision has been reached in the matter.

SRI T. T. DANIEL : May I know whether it is the policy of the Government to give them to private individuals or those who come forward to undertake the work on a co-operative basis if and when the area is brought under rubber cultivation?

[5th November 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The present proposal is that if any of the reserve forest areas under the Government are found suitable for rubber cultivation, Government themselves will undertake rubber cultivation through the Forest department.

Stud Bulls

* 895 *Q*.—SRI V. SUBBIAH (on behalf of Sri D. Subramania Rajakumar) : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government propose to introduce the Key Village Scheme of bringing the cows of compact areas of contiguous villages under the service of approved bulls in Ramanathapuram, Parayur, Rajasingamangalam and Singapunari villages?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no proposal to start at present Key Village Extension Centres in any of the villages referred to.

SRI V. SUBBIAH : இந்த பொலிக் காளைகள் கொடுக்கும் முறையில் பரவலாக இல்லாமல் குவியலான முறையில் கொடுக்கப்படுகிறது என்ற நிலை இருக்கிறது. கிராம அடிப்படையில் கொடுக்கப்படுகிறதா, அல்லது கால்நடை "சென்ஸஸ்" அடிப்படையில் கொடுக்கப்படுகிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

Compulsory service in village hospitals by Medical Graduates

* 896 *Q*.—SRI N. R. THIAGARAJAN AND SRIMATHI A. S. PONNAMMAL : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

வைத்தியக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் 5 ஆண்டுகளாவது கட்டாயமாக கிராம ஆஸ்பத்திரி டாக்டராக இருக்க வேண்டுமென அக்ரிமெண்ட் எழுதி வாங்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No Sir.

SRI N. R. THIAGARAJAN : மற்ற எல்லா விதமான சாதனைகளைப் பார்த்தும் நாம் பெருமை கொள்ளலாம். வைத்திய இலாகாவின் சாதனைகளைப் பார்த்து இந்த அளவில் பெருமை கொள்ள முடியாது. கிராமங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களை நியமிக்க வேண்டுமென்று 200 பேர்களும் பேசியாகிவிட்டது. கிராமங்களுக்கு டாக்டர்கள் போகும் வகையிலே சட்டத்தை திருத்தி அமைத்து, அல்லது மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்தாவது, டாக்டர்களை கிராமங்களுக்கு அனுப்புவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ளுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த மெடிகல் டிபார்ட்மெண்டில் உத்தியோகம் செய்கிற முறையை திருத்தி வைத்தியர்கள் உற்சாகமாக கிராமங்களுக்கு போகக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுத்த வேண்டுமென்பது இப்பொழுது ஆராய்ச்சியில் இருக்கிறது. கட்டிட வசதி செய்து கொடுப்பது. சம்பள விகிதத்தை கொஞ்சம் அதிகப்படுத்துவது இவைகளெல்லாம் இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது.

5th November 1958]

Scholarships to Backward Class students

* 897 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the amount paid by the Union Government as scholarship (Educational) for the year 1957–58 to Backward Class students studying in Colleges in the State;

(*b*) the month when the amount was received; and

(*c*) the action taken by the State Government to expedite the said payment so as to make the same available during first term of the academic year?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Rs. 5·50 lakhs. This represents on half grant.

(*b*) A sum of Rs. 2·09 lakhs was received in November 1957 and the balance of Rs. 3·40 lakhs was received in March and April 1958.

(*c*) The State Government in anticipation of the receipt of grant from the Government of India sanctioned a sum of rupees 5,30,000 in July 1957 to meet the demands of the Backward Class students from the beginning in December 1957 and February 1958.

SRI S. LAZAR: மத்திய சர்க்கார் கொடுக்கும் பணத்தை முன் கூட்டியே எதிர்பார்த்து மாகாண சர்க்கார் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. மகாண சர்க்காரின் விகிதத்தையும் முன்கூட்டியே கொடுப்பதற்கான ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா?

THE HON. SRI P. KAKKAN: மத்திய சர்க்கார் கொடுப்பார்கள் என்று நினைத்தால் அதை நாங்கள் கொடுக்கமாட்டோம். மத்திய சர்க்கார் கொடுக்காது என்று சொன்னால், "ரென்யூ" பண்ண வேண்டிய கேஸ்களில் மட்டும், மத்திய சர்க்கார் கொடுக்ககாவிட்டாலும் நாங்கள் இங்கே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

Appointments of Sub-Postmasters as Stamp Vendors

* 898 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri K. R. Viswanathan). Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to the answer given to question No. 123, on 9th November 1957—

(*a*) whether the High Court have offered its opinion in the matter; and

(*b*) if so, the decision taken by the Government thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes.

(*b*) The Government have ordered that the system of allowing commission to Postmasters and Sub-Postmasters on sales of non-judicial and court-fee stamps be discontinued. The question of amending the relevant Standing Order in this regard is under the consideration of the Government.

Mukkulathore

* 899 *Q*—SRI V. K. KOTHANDARAMAN: SRI T. VELUCHAMI AND SRIMATHI T. N. ANANDANAYAKI: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா:—

(அ) அகில முக்குலத்தார் சங்கத்தாரிடமிருந்து, மிகவும் பின் தங்கிய பட்டியலில் சேர்க்கும்படி மனு வந்துள்ளதா?

பட்டிய

(ஆ) ஆம் என்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) The Government have defferred for the present the question of inclusion of Mukkulathore Communities in the list of Most Backward Classes.

SRI T. VELUCHAMI : மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தாலும், அதற்கு அங்கீகாரம் எப்பொழுது கிடைக்கும் ? அந்தச் சலுகைகள் எந்த ஆண்டுக்கு உபயோகப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : சிபார்சு செய்து, அங்கிருந்து உதவி கிடைப்பதற்கு முன்பாக இனிமேல் ஜாதிப் பிரிவினையின் பேரில் ஸ்காலர்ஷிப் கொடுக்கக் கூடாது, பொருளாதார அடிப்படையில்தான் செய்யவேண்டும் என்று இருப்பதினால் இனிமேல் எழுதுவதற்கும் இல்லை. எதிர்பார்பதற்கும் இல்லை.

Drinking Water-Supp'y Scheme, Tranquebar.

* 900 *Q.*—SRI K. B. S. MANI (on behalf of Sri C Muthiah) : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி குடி தண்ணீர் சப்ளை திட்டம் பரிசீலிக்கப்பட்டதா ?

(ஆ) அப்படியானால் எவ்வளவு செலவில் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No. Sir.

(b) Does not arise.

SRI K. B. S. MANI : தரங்கம்பாடியில் மீனவர்கள் அதிகமாக இருப்பதன் காரணமாக, அது அந்த மக்கள் வாழும் பகுதியாக இருப்பதிலே, வருகிறது மழை காலமாக இருப்பதினால் குடி தண்ணீர் தஞ்சை ஜில்லாவில் காலரா ஏற்படுவதற்கு காரணமாகமாக இருக்கும் என்பதினாலும், மீனவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையைக் கொண்டாவது அவர்களுக்கென்று ஒரு தனிப்பட்ட குடி தண்ணீர் திட்டத்தை தீட்டுவதற்கு அரசாங்கம் முன் வருமா ? அதற்கான நடவடிக்கை எடுத்து, இதை ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து, வருகிற ஆண்டிலாவது முடிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தத் தரங்கம்பாடி ஊரில் "National Water-supply Scheme" எடுக்க முடியாது. ஏனென்றால், 5 000 ஜனத்தொகைக்கு உள்பட்ட ஊரில் தான் இதை அமுலுக்குக் கொண்டு வரலாம். ஆகையினால், பஞ்சாயத்திலே இதைச் செய்வதற்கு எந்த வகையிலாவது முன்னைக்கு வந்தால், இதை நிர்வகிப்பதற்கு அவர்களுக்கு பொருளாதார நிலைமை இருந்தால், இதையும் கவனிக்கலாம்.

UNSTARRED QUESTIONS.

Offences under the Untouchability (Offences) Act

24 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the number of cases of offences committed under the Untouchability (Offences) Act of 1955 during the year 1956–57 under the following heads :—

(i) number of cases registered;

(ii) number of cases challenged;

(iii) number of cases ending in discharge;

5th November 1958]

(iv) number of cases ending in compromise;

(v) number of cases ending in conviction;

(vi) number of cases ending in acquittal; and

(vii) number of cases pending disposal; and

(*b*) the number of cases registered against—

(i) the tea-shop keepers;

(ii) barbers;

(iii) hotel keepers; and

(iv) dhobies?

A.—

(*a*) (i) 161.

(ii) 147.

(iii) 6.

(iv) 5.

(v) 100.

(vi) 32.

(vii) 4.

(*b*) (i) 65.

(ii) 3.

(iii) 33.

(iv) 1.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENT *RE* BILLS PASSED BY THE COUNCIL

MR. SPEAKER : I have to announce to the House that the Madras Panchayats Bill, 1958 (L.A. Bill No. 33 of 1958) has been passed by the Legislative Council on the 4th November 1958 with amendments. I hope these amendments have already been circulated to the hon. Members.

III.—CALLING ATTENTION TO THE FAILURE TO REGULATE THE SUPPLY OF WATER TO TAIL-END PORTIONS OF LOWER BHAVANI PROJECT AREA.

MR. SPEAKER : I have received notice under rule 40 from hon. Members Sri V. S. Manickasundaram and Sri G. G. Gurumurthy. Sri Gurumurthy may now speak.

SRI G. G. GURUMURTHI : கனம் சபாநாயகர் அவர்களே, கீழ் பவானி ஆயக்கட்டு பிரதேசத்தில் இருக்கக்கூடிய கடைகோடி நிலத்து விவயிகளுக்கு தண்ணீர் சரியாக விநியோகிக்கப்படுவது இல்லை.

SRI M. KALYANASUNDARAM : Sir, on a point of order. I think Sri V. S. Manickasundaram has given notice under rule 40. He is not here now. That being the case, is it permissible under the rules for another Member to raise the matter on his behalf?

MR. SPEAKER : Both Sri V. S. Manickasundaram and Sri G. G. Gurumurthy have signed the notice under rule 40. Since Sri Manickasundaram is not present here, I have allowed Sri Gurumurthy to speak.

SRI G. G. GURUMURTHI : கனம் சபாநாயகர் அவர்களே கீழ் பவானி ஆயக்கட்டுப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய கடைகோடி நிலத்திலுள்ள விவசாயிகளுக்கு தண்ணீர் சரிவர விநியோகிக்கப்படுவது இல்லை. ஆனாலும் அவர் அவர்களாக கட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. "Tail end" என்று சொல்லக்கூடிய பிரதேசங்களில் சுமார் 240, 400 ஏக்கர் வரையிலும் அரசாங்கம் எந்த விதமான பொறுப்பும் எடுத்துக் கொள்ளவில்லை. "Tail endல்" "Dam"-லிருந்து தண்ணீர் விட்டு விட்டால், கீழே இருக்கக்கூடிய 200, 400 ஏக்கர் வரையிலும் விவசாயிகள் தண்ணீர் எடுத்து பாகுபாடு செய்துகொள்ளுவதிலே கஷ்டங்களும், தகராறுகளும் ஏற்படுகின்றன. இதுபற்றி ரெவின்யூ அதிகாரிகளிடம் சொன்னால், "எங்களுக்குத் தெரியாது, வரி வசூல் செய்வதோடு எங்களுடைய கடமை தீர்ந்துபோய்விடுகிறது" என்று சொல்லுகிறார்கள். அதே சமயத்தில் பி.டபிள்யூ.டி. இலாகாவில் சொன்னால் "நாங்கள் எந்த அளவு தண்ணீர் விட வேண்டுமோ, அந்த அளவு தண்ணீர் விட்டு விட்டோம், உங்களுக்குள்ளாக பாகுபாடு செய்துகொள்ள வேண்டும்" என்று சொல்லிவிடுகிறார்கள். இதனால் 200, 400 ஏக்கரா பிரதேசத்தில் தண்ணீர் பாகுபாடு பற்றி பல கஷ்டங்கள், சச்சரவுகள் ஏற்படுகின்றன. கடை வாய்க்கால்களில் "பீல்டு போதீஸ்" கொப்புகள், மதகுகள் 150, 200 ஏக்கருக்கு மேலே தண்ணீர் பிரிவினை செய்யப்படுகிறது. மற்ற ஆயக்கட்டுப் பிரதேசங்களிலும் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பிரதேச விஸ்தீரணம் பூராவும் தண்ணீர் சரியாகப் பாயவில்லை. அதைச் சேர்ந்த பீல்ட் போதிஸ்களில் இருக்கக்கூடியவர்களுக்கு தண்ணீர் சரிவர பாயவில்லை. அதனால் அந்த பிரதேசங்களை
10–10 a.m. அபிவிருத்தி அடையச் செய்ய முடியவில்லை. அதனால் அந்தப் பிரதேசத்தை அக்விசிஷன் செய்து கொள்வதற்கு பணத்தைக் கட்டினாலும் அதைச் செய்வதற்கு நீண்ட கால தாமதம் ஏற்படுகிறது. அதனாலும் அங்கு அபிவிருத்தி செய்ய முடியவில்லை. டிஸ்ட்ரிபூட்டரிகளில் தண்ணீர் விட்டால் அது கடைசி வரையில் போய்ச் சேருவதாக இல்லை. கடைசி வரையில் விநியோகம் செய்யப்படவில்லை. அபிவிருத்தி அடையாவிட்டாலும் அவர்கள் வரியைக் கட்ட வேண்டியதாக இருக்கிறது. அதனால் அவர்களுக்கு தண்ணீர் விட வேண்டியது அவசியமாக இருக்கிறது. சரியான கணக்கும் எடுத்துக்கொள்வது இல்லை. அதனால் ஒவ்வொரு விவசாயியும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் அதனால் அபிவிருத்தி அடைவதற்கு இடம் இல்லாவிட்டாலும் வரியும் கட்ட வேண்டியதாக இருக்கிறது. அதைப் பார்த்து அவர்களுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டும் என்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI P. KAKKAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரேரணையானது (1) கீழ் பவானித் திட்டப்பகுதியில் கால்வாய் நுனிப் பகுதிகளுக்குத் தண்ணீர் சப்ளை செய்யத் தவறியது பற்றியும், (2) வயல் மூலமாக கிளைக் கால்வாய்கள் தோண்டி ஒவ்வொரு பட்டாதாருக்கும் தண்ணீர் கிடைக்கச் செய்யத் தவறியது பற்றியும், (3) ஆயக்கட்டுதார்களுக்கு நியாயமான முறையில் தண்ணீர் விடத் தவறியது பற்றியும் குறிப்பிடுகிறது.

(1) கீழ் பவானித் திட்டம் பகுதியில் கால்வாய் நுனியிலுள்ள பாசனப் பகுதிகளுக்குத் தண்ணீர் சப்ளை செய்யத் தவறியது. கீழ் பவானித் திட்டம் 207,000 ஏக்கருக்குப் பாசனமளிப்பதற்காக நிறுவப்பட்டது. அதில்

5th November 1958] [Sri P. Kakkan]

சுமார் 10,000 எக்கர் நெல் பயிரிடுவதற்கும், பாக்கி 1,97,000 எக்கர் பன்செய்ப் பயிர்களைப் பயிரிடுவதற்கும் ஆகும். கால்வாய் நுனியிலுள்ள இரு கிளைக் கால்வாய்களைத் தவிர மற்ற எல்லா கிளை கால்வாய்களிலும் தண்ணீர் விடும் அளவு திருப்திகரமாக இருக்கிறது. மொத்த ஆயக்கட்டுப்பரப்பில் சுமார் 5 சத விகிதத்தில் மட்டுமே நெல் பயிரிட உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதை மீறி ஆயக்கட்டுப் பரப்பில் சுமார் 25 சத விகிதம் வரை அனுமதியின்றி நெல் பயிர் செய்ததும், அதையொட்டி மேல் மட்டப்பகுதிகளில் மிகுதியான தண்ணீர் செலவுமே, கால்வாய் நுனிப்பகுதிகளுக்கு, சப்ளை குறையக் காரணம் எனக் கூறப்படுகிறது. இதுபற்றி அரசாங்கத்திற்கு முறையிடப்பட்டது. அதன் பேரில், கால்வாய் நுனிப்பகுதியில் போதிய தண்ணீர் சப்ளை இருக்கும்படி பார்த்துக்கொள்ளுமாறு, அப்பகுதி அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. மேல் பகுதிகளில் அனுமதியின்றி நெல் பயிரிடுவதைத் தடுப்பதற்காக, கூடுமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன. அனுமதியின்றி நெல் பயிரிடுபவர்களுக்கு அபராதமும் விதிக்கப்படுகிறது. குடியானவர்கள் சமூகத்தின்பால் தங்களுக்குள்ள கடமையை உணருவார்கள் என்றும், அனுமதியின்றி நெல் பயிரிடுவதைக் கைவிட்டு கால்வாய் நுனிப்பகுதிகளில் போதுமான நீர் கிடைக்கச் செய்வதில் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பார்கள் என்றும் நம்பப்படுகிறது.

(2) வயல் வழியான கிளைக் கால்வாய்கள் வெட்டி ஒவ்வொரு பட்டாதாருக்கும் நீர் கிடைக்கச் செய்யத் தவறிய விஷயம்.—வயல் வழி வாய்க்கால்கள் தோண்டுவதென்பது, சம்பந்தப்பட்ட குடியானவர்களைப்பொறுத்த விஷயம். வயல் வழி கால்வாய்கள் அனைத்தையும் அரசாங்கச் செலவில் தோண்டுவதென்பது இயலாத காரியம். அது நடைமுறையில் நடக்கக் கூடியதுமல்ல. செலவும் லட்சக்கணக்கில் ஆகும். ஆயினும் கீழ் பவானித் திட்டப் பகுதியில் ஆயக்கட்டை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதற்காக 50 எக்கர் வட்டாரம் வரைக்குமான வயல் வழிக் கால்வாய்கள் தோண்டவும் அதற்கான நிலங்களைக் கைவசமாக்கவும் அத்துடன் 25 எக்கர் பகுதி அளவுக்கான வயல் வழி வாய்க்கால்கள் அமைப்பதற்கு வேண்டிய நில உரிமையை மேற்கொள்ளவும், திட்ட நிறைவேற்றத்தின் போது உத்தேசிக்கப்பட்டது. பின்னர், குடியானவர்கள் முறையீட்டிற்கு இணங்க மேலே கூறப்பட்ட அளவுக்கும் குறைந்த, வயல் வழிக்கால்வாய்கள் தோண்டவும் அதற்கான நில உரிமையை மேற்கொள்ளும் பணியையும் அரசாங்கமே மேற்கொள்ளலாம் என்று உத்தரவிடப்பட்டது. ஆனால் நிலத்தை வசப்படுத்துவதற்கு வேண்டுமான தொகையையும் வயல் வழிக் கால்வாய்கள் தோண்டுவதற்கான தொகையையும் குடியானவர்கள், முன் கூட்டித்தந்தால் மட்டுமே இந்த வேலைகள் மேற்கொள்ளப்படும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. குடியானவர்கள் தர வேண்டிய முன் பணத்தை வசூலிப்பதில் சுணக்கம் ஏற்படுவதாகவும் அதையொட்டி வயல் வழிக் கால்வாய்கள் தோண்டும் வேலையில் தாமதம் ஏற்பட்டதாகவும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அத்தகைய தாமதங்களைத் தவிர்ப்பதற்காக, முதல் கட்டத்தில் குடியானவர்களுக்கு, வாய்க்கால்களை அரசாங்கச் செலவிலேயே வெட்டிக் கொடுக்கலாம் என்றும் பின்னர் அச்செலவுத் தொகையை சம்பந்தப்பட்ட குடியானவர்களிடமிருந்து வசூலித்துக்கொள்ள சட்டம் இயற்றலாம் என்றும் ஆலோசனை கூறப்பட்டது. இப்பிரச்னை அரசாங்கத்தின் தீவிர பரிசீலனையிலிருந்து வருகிறது.

வயல் வழி வாய்க்கால்களைத் தோண்டுவது முற்றிலும் குடியானவர்கள் சம்பந்தப்பட்ட விஷயம் என்றாலும், திட்டத்தின் ஆயக்கட்டுப் பிரதேசத்தில் எல்லா குடியானவர்களுக்கும் தண்ணீர் கிடைக்கச் செய்வதற்காக வயல் வழி கால்வாய்களைத் தோண்டும் வேலையை துரிதப்படுத்த அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை இதிலிருந்து அறியலாம்.

(3) தண்ணீரை ஆயக்கட்டுக்காரர்களிடையே நியாயமாகப் பகிர்ந்தளிக்கத் தவறியது.—தனிப்பட்டவர்களின் வயல்களுக்கு வேண்டிய நீரை வழங்குவது ரெவினியூ இலாகாவின் பொறுப்பு. அனுமதியின்றி கால்வாய்களின் இடையே குறுக்குக் கரையமைத்தல், ஒழுங்கற்ற முறையில் நீரைத் திருப்பிக் கொள்ளுதல் முதலியன இருக்குமானல் அவைகளை நீக்கி சரியான முறையில் தண்ணீர் வழங்க அந்தத்துறை எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. குடியானவர்களும் தங்களைப் பொறுத்தவரை "முறைக்கட்டு" ஏற்பாட்டை சரிவரப் பின்பற்றி ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டும். அதன் மூலமாக எல்லாக் குடியானவர்களுக்கும் நியாமான முறையில் தண்ணீர் கிடைக்கும் வண்ணம் அரசாங்கத்திற்கு உதவ வேண்டும்.

இத்தகைய சூழ்நிலையில் பிரேரணையில் குறிப்பிடப்பட்ட தவறுகள் அரசாங்கத்தால் ஏற்பட்டவை அல்ல. தடையை மீறி அனுமதியின்றி குடியானவர்கள் நெல் பயிர் செய்ததும், புன்செய்ப் பயிர்களுக்கு வேண்டுமான அளவுக்கு மேல், தண்ணீர் பாய்ச்சிக் கொண்டதும், குறித்த காலத்தில் வயல் வழி வாய்க்கால்களைத் தோண்டிக் கொள்ளாது அவர்கள் தவறியதுமே பிரேரணையில் கூறப்பட்ட தவறுகளுக்குக் காரணம் என்பதை நன்கு அறியலாம்.

IV.—CORRECTION TO AN ANSWER.

THE HON. SRI C. SUBRAMANIAM: While answering on 17th September 1958 the Legislative Assembly Question No. 151 relating to the number of candidates selected by the Madras Public Service Commission as Gramasevaks, Grade II, in 1957, I had stated in reply to a supplementary that candidates who apply for the posts of Gramasevaks, Grade II, should have passed the S.S.L.C. examination. But on verification I understand that the candidates who apply for the posts of Gramasevaks, Grade II, must have obtained a completed Secondary School-Leaving Certificate (i.e., must have appeared for the S.S.L.C. Public Examination in full), and should have secured not less than 40 per cent of marks in Tamil in the said examination.

V.—PRESENTATION OF COMMITTEE REPORTS.

(1) SECOND AND THIRD REPORTS OF THE COMMITTEE ON ESTIMATES.

SRI K. S. SUBRAMANIA GOUNDER: Sir, I, the Chairman of the Committee on Estimates having been authorised by the Committee to submit the Reports [a] on its behalf present:

(1) the Report of the Committee on Printing and Stationery; and (2) the Report of the Committee on the action taken (second Assembly) by the Government on the recommendation of the Committee in its report on the Sanitary Engineering Department.

(2) THIRD REPORT OF THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

SRI M. P. SUBRAMANIAM: உறுதி மொழிக் குழுவின் மூன்ருவது அறிக்கையை [a] நான் இங்கே சமர்ப்பிக்கிறேன்.

[a] Laid on the table of the House.

5th November 1958]

Sri S. PAKKIRISAMI PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மாதிரியான ரிப்போர்டுகள், கமிட்டிகள் சிபாரிசு செய்யப்பட்ட அறிக்கைகள் இந்த சபையின் முன் வைக்கப்பட்டு வருகின்றன. அவைகளில் சில சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதனை சரிவர டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் பரிசீலனை செய்து பார்க்கிறார்களா ? இப்படிப்பட்ட குழுக்கள் செய்த சிபாரிசுகளை அந்த அதிகாரிகள் பரிசீலனை பண்ணுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதன் முழு விவரத்தைத் தெரிவிக்கும்படியாகவும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

VI.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS OPEN PLACES (PREVENTION OF DISFIGUREMENT) BILL, 1958 (L.C. BILL NO. 8 OF 1958).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move :

"That this House concurs in setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 Members (16 Members of the Assembly and 8 Members of the Council) to consider the Madras Open Places (Prevention of Disfigurement) Bill, 1958 (L.C. Bill No. 8 of 1958), and that the following Members of the Assembly be selected to serve on such a Joint Select Committee :—

1. The Hon. Sri M. Bhaktavatsalam.
2. ,, C. Subramaniam.
3. Sri P. G. Karuthiruman.
4. ,, V. Govindaswami Naidu.
5. ,, M. Mayandi Nadar.
6. ,, M. P. Periasami.
7. Srimathi Rajathi Kunchithapatham.
8. Sri M. Alagirisamy.
9. Srimathi A. Suares.
10. Sri N. K. Palanisami.
11. ,, S. Pakkirisami Pillai.
12. ,, S. B. Adityan.
13. Dr. (Srimathi) Sathiavanimuthu.
14. Sri A. Govindasamy.
15. ,, A. Perumal.
16. ,, S. Ramasami Thevar."

Of late, disfigurement of facades of buildings, monuments, and other places open to public view, by affixture, or exhibition, of advertisements, bills, etc., and by the inscribing of slogans and objectionable matter, has reached very undesirable proportions in this State. Such advertisements, slogans and objectionable matter not only spoil the beauty of the city or town concerned but also offend public decency. It has therefore become necessary to check this evil. This Bill seeks to achieve this object.

I shall briefly explain the main provisions of the Bill. Clauses 3 and 4 of the Bill deal with penalties for disfigurement by advertisements. Whoever disfigures any place open to public view by objectionable advertisement shall be punished with imprisonment for a term which may extend to one year or with fine which may extend to one thousand rupees or with both. Whoever disfigures any place open to public view by any advertisement without the written consent of the owner or occupier or person in management of the property in which such place is situated shall be punished with imprisonment for a term which may extend to three months or with fine which may extend to two hundred rupees or with both. There is provision in the Bill for punishing the abettors.

Provision is also made in the Bill to the effect that any offence punishable under the Bill shall be deemed to be cognizable offence within the meaning of the Code of Criminal Procedure. No Court inferior to that of a Presidency Magistrate or a magistrate of the first-class shall take cognizance of, or try, any offence punishable under this Bill. The Local Authorities are also empowered to set up hoardings or erections in suitable places for the exhibition of advertisements and they may charge and levy such fees as may be prescribed for the use of any such hoardings or erections.

Clause 13 empowers the State Government to make rule for the purpose of carrying out the provisions of this Bill.

As the Bill is an important one, it is essential that it should be referred to a Joint Select Committee of both the Houses. I now request the House to accept the motion.

10-20 a.m.

MR. SPEAKER: Motion moved:

'That this House concurs in setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 Members (16 Members of the Assembly and 8 Members of the Council) to consider the Madras Open Places (Prevention of Disfigurement) Bill, 1958 (L.C. Bill No. 8 of 1958).'

(No hon. Member rose to speak on the motion.)

MR. SPEAKER: Is it the desire of the House that I should put the motion straightway to the vote of the House?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir, after all the Bill is being referred to a Joint Select Committee.

MR. SPEAKER: Even before referring it to a Joint Select Committee, if hon. Members want to speak on the motion they can do so.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: It has been agreed that the Bill may be referred to the Joint Select Committee and the Bill as reported by the Joint Select Committee may be taken up for discussion at the next sitting of the House.

5th November 1958]

MR. SPEAKER : I have no objection, if that is the desire of the House.

The motion was put and carried.

(2) THE TIRUCHIRAPPALLI KAIAERUVARAM AND MATTUVARAM BILL, 1958 (L.A. BILL NO. 25 OF 1958)—*cont.*

MR. SPEAKER : I think we have finished clauses 2 and 3 of the Bill; we will take up clause 4.

Clause 3—cont.

* THE HON. SRI M. A. MANICKAVELU : We were in clause 3, Sir. I think hon. Member Sri Lazar was speaking on that clause. I have got an amendment to this clause. I will move it with your permission. The amendment is :

' In clause 3, *omit* the words " during a crop season ".'

As the remuneration to be paid to these kaiaeruvaramdars is mentioned in the schedule, these words are considered unnecessary. I therefore move the amendment for deleting these words.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, மூன்றாவது பிரிவைப் பொறுத்து எற்கெனவே 29-ந்தேதி விவாதம் நடந்த போது எனது கருத்துக்களை தெரிவித்துக்கொண்டிருந்தேன். மூன்றாவது பிரிவைப் பொறுத்தவரைக்கும் இது இருக்கக்கூடிய நிலைமைக்குச் சற்று புறம்பாகவே இருக்கிறது. நான் திருத்தம் கொடுத்திருந்தது, மூன்றாவது பிரிவு தேவையில்லை, நாலாவது பிரிவிலே ஒரு ப்ரொவைஸோ சேர்த்துக்கொண்டால் நல்லது என்பது. நாலாவது பிரிவுக்கு நான் கொடுத்திருக்கும் ப்ரொவைஸோவாவது :

' *For* sub-clause (1), *substitute* the following :—

" (2) Subject to the provisions of sub-sections (2) and (3), a Kaiaeruvaramdar shall be entitled to continue as such on the same terms as were applicable to him immediately before the commencement of this Act." '

நாலாவது பிரிவுக்கு நான் மேற்படி ப்ரொவைஸோ கொடுத்திருப்பது போலவே, இதிலும் நாம் திருத்தம் செய்துகொண்டால் நாம் எதிர்பார்க்கும் அளவுக்கு நல்லமுறையில் இந்தப் பிரிவு அமையும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து

(Deputy Speaker in the Chair.)

ஆனால், சட்டசபை விதிகளின்படி, ஒரு பிரிவைப் பூராவிலும் " டெலீட் " செய்யக்கூடாது என்ற முறையிலே அதை ஒரு திருத்தமாக எற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இப்பொழுது நன்றாக கவனித்துப் பார்த்தால், மாட்டுவாரம்தாரரைப் பொறுத்தவரைக்கும், எழாவது பிரிவின்படி, பத்து எக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருக்கும் மாட்டுவாரம் தாரர்களைப் பொறுத்தவரைக்கும், இப்பொழுது என்ன டர்ம்ஸ் அண்டு கண்டிஷன்கள்படி, எந்த எந்த அடிப்படையிலே இன்றையதினம் அவர்கள் மாட்டுவாரம்காரர்களாக இருந்து தொடர்ந்து வருகிறார்களோ அந்த முறையிலே இனிமேற்பட்டும் அவர்கள் இருப்பார்கள் என்ற முறையிலே, அதே சம்பளம் அவர்களுக்கு வினியோகிக்கப்படும் என்ற முறையிலே 7-வது பிரிவு (பி) உட்பிரிவிலே நன்றாக வரையறுக்கப்பட்டிருக்கிறது. இது

போன்று ஏற்படுத்தியிருக்கும்போது, கையேர்வாரம்தாரர்களைப் பொறுத்த வரைக்கும் ஒரு மாறுதல் செய்யவேண்டிய அவசியம் இல்லை; அவர் களுக்குக் கூலி நிர்ணயம் என்ற முறையில் கொடுக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை என்பதும் என்னுடைய தாழ்மையான கருத்தாகும், முக்கியமான காரணம், இப்பொழுது கையேர்வாரம்தாரரைப் பொறுத்து ஒவ்வொரு இடத்திற்கும் ஒவ்வொரு மாதிரியாக இருந்துகொண்டிருக்கிறது. ஒரு இடத்தில் ஏழில் ஒரு பங்கு வாங்குகிறார்கள்; இன்னொரு இடத்தில் ஆறிலொரு பங்குகூட வாங்குகிறார்கள். இன்னும் சில இடங்களில் சற்று குறைவான விகிதத்தில் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி குறை வான ஒரு அளவை நிர்ணயிக்கும்போது, இடத்திற்கு இடம் மாறுபடுகின்ற காரணத்தால், இதிலே ஒரு பெரிய குழப்பம் ஏற்பட காரணம் இருக்கிறது. அதைவிட முக்கியமான காரணம், இப்பொழுது கையேர்வாரம்தாரர்களை நாம் வரையறுக்கும்போது, நிலத்தை உழுபவராக இருந்தாலும் சரி, உழுது தண்ணீர் இறைக்கக்கூடிய ஆசாமியாக இருந்தாலும் சரி, அவர் கையேர்வாரம்தார் என்று முடிவு செய்திருக்கிறோம். நிலத்தை உழுது மட்டும் கொடுக்கும் வேலையோடு ஒருவன் நிறுத்திக்கொள்ளக்கூடும். அப்படி நிறுத்திக் கொண்டால்கூட அவன் கையேர்வாரக்காரன் ஆகிறான், இப்பொழுது நாம் ஏற்படுத்தியிருக்கும் வரையறைப்படி. அப்படிப்பார்க்கும் போது, ஒரு நிலத்தை உழுது கொடுத்து, 5 ஏக்கர், 10 ஏக்கர் என்று வைத்துக்கொண்டாலுங்கூட இருபது ரூபாய் கூலியாக இருக்கலாம். ஆனால், அதற்குப் பதிலாக, இப்பொழுது நாம் கொடுக்க நினைப்பது நான்கு மாதங்களுக்குக் கூலி. அதோடுகூட, ஒவ்வொரு அறுவடையின்போதும் ஏழிலொரு பங்கு என்று சொல்லும்போது நிலைமை மிக மோசமாக ஏற்படக்கூடும். அதைப்பற்றி நான் சொல்லும்போதே, வேலை செய்கின்ற ஆட்களுக்குக் கூலி அதிகமாகிவிடுமே என்ற காரணத்தால் நான் சொல்ல வில்லை. இதுபோன்ற கடுமையான சட்டதிட்டங்களைக் கொண்டுவருவோ மானால், நாம் இப்பொழுது இருக்கும் சாதாரண நிலச் சொந்தக்காரர்களைத் தட்டி எழுப்பி அவர்களுக்குச் செய்கிறோம் என்று சொல்லி, இவர்களை வெளியேற்றுவதற்கான ஒரு வாய்ப்பு செய்து கொடுப்பதாகத்தான் அது வந்து முடியும். ஆகவே, இதுபோன்ற மிகவும் சங்கடமான, கடுமை யான நிலைமையை உண்டுபண்ணக்கூடாது இப்பொழுது இருக்கும் முறை யிலே, எந்த எந்த கண்டிஷன்களுக்குக் கட்டுப்பட்டு இன்றையதினம் கையேர்தாரர்கள் செய்துகொண்டு வருகிறார்களோ அதே முறையிலே தொடர்ந்து இருந்தால் உள்ளபடியே நல்ல முறையில் அமைவதாக இருக்கும்.

அதைவிட இன்னும் ஒரு முக்கியமான காரணம், நான் ஏற்கெனவே சொன்னதுபோல், சாகுபடி செய்யக்கூடியவர்கள் இரண்டு போகம், மூன்று போகம் முதற்கொண்டு செய்ய முடியும். அப்படிச் செய்யும்போது இப்பொழுது ஏற்படுத்தும் விதியை அப்படியே வைத்துப் பார்த்தால் அதிலே முறன் அதிகமாக ஆகக்கூடும். சர்க்கார் இதை நன்றாகப் பரிசீலனை செய்து, மூன்றாவது பிரிவை அப்படியே எடுத்துவிடவேண்டும். நான்கா வது பிரிவுக்கு நான் இரண்டு திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன். அவ்வை களை ஏற்றுக்கொண்டால், இது நல்ல முறையில் அமையும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். மூன்றாவது பிரிவைப் பொறுத்தவரைக்கும், ஏற்கெனவே நான் சொன்னதுபோல் திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஆனால், 'delete' என்று இருப்பதன் காரணத் தால், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை இந்தச் சபையினால். ஆகையால், இதை இந்த விதத்தில் மாற்றியமைத்தால்தான் நடைமுறையில், நல்ல முறையில் வேலை செய்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதை வற்புறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

அதோடு கூட இன்னொன்றும் கவனிக்கவேண்டும். ஷெட்யூலைப் பொறுத்தவரைக்கும், 'அதிலே Oneseventh of the net produce of the land' என்று இருக்கிறது.

DEPUTY SPEAKER: The hon. Member may speak on that when we take up the Schedule.

5th November 1958]

SRI S. LAZAR : Clause 3 goes along with the schedule. Therefore, I will have to refer to the schedule also.

இந்த ஷெட்யூலைப் பொறுத்த வரையிலும் இரண்டு பிரிவாக இருக்கிறது. ஒவ்வொரு சாகுபடிக்கும் நான்கு மூட்டைக்குக் குறையாது அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும் அதோடு கூட நெட் ப்ராட்யூஸில் எழில் ஒரு பங்கு கொடுக்கவேண்டும் என்றும் இருக்கிறது. நெட் ப்ராட்யூஸ் என்றால் நெல், வைக்கோல் எல்லாவற்றுக்கும் சேரும். நெல்லில் பங்கு கொடுக்கவேண்டுமென்று இருப்பது தான் சரியானது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். மாடு யார் யார் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு வைக்கோலில் பங்கு உண்டே தவிர கையேர்வாரந்தாரருக்கு வைக்கோலிலும் பங்கு கொடுக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல என்று நான் நினைக்கிறேன். ஆகவே அதையும் இங்கே விளக்கமாகக் கூறியிருந்தால் நன்றாக இருக்கும் என்கிற கருத்தைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே "நெட் ப்ராட்யூஸ்" என்பதற்குப் பதிலாக இந்த இடத்தில் "நெட் பாடி" என்று போட்டால் —அப்படித் திருத்தம் செய்தால் இந்த ஷரத்து சரியாக அமையும். அப்படி இல்லாவிட்டால் வீணை தகராறுகள் தான் விளையும். நாம் கையேர் வாரந்தாரருக்கு கூலி நிர்ணயிக்கவேண்டுமென்று முதலில் விரும்ப வில்லை. நிலத்தைவிட்டு அவர்கள் அப்புறப்படுத்தப்படாமல் இருப்பதற்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று தான் முதலில் சொல்லப்பட்டது. இப்போது கொண்டு வந்திருக்கிற மசோதாவிலோ பாதுகாப்பு கொடுப்பதோடு கூட அவர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்கிறபோது எனக்குத் தெரிந்த வரைக்கும் தஞ்சாவூர் பண்ணையாள் சட்டத்திலிருந்த சில பகுதிகளை அப்படியே எடுத்துப் போட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் தஞ்சாவூர் பண்ணையாட்கள் வருஷம் பூராவும் வேலை செய்துகொண்டு வருகிறார்கள். பண்ணையில் உள்ள வேலைகளைக் கவனித்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள விகிதத்தை அப்படியே இங்கே எடுத்து போட்டிருப்பதன் காரணமாக பல சங்கடமான நிலைமை ஏற்படுகிறது. கையேருவாரக்காரர் யார் என்பதை வரையறுக்கிறபோது நல்ல முறையிலேயே வரையறுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். உழுது போடுகிற வேலை மாத்திரம் தான் இவர்கள் செய்கிறார்கள்; இவர்களுக்கு வருஷம் பூராவும் வேலை செய்கிற பண்ணையாட்களுக்கு எவ்வாறு கூலி கொடுக்கப்படுகிறதோ அவ்வாறு கூலி கொடுக்கவேண்டுமென்று வரையறுத்திருப்பதனால் தான் பலவிதமான சங்கடங்கள் உண்டாகின்றன. ஆகவே தான் நான் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். 10-30 a.m.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கொண்டு வந்திருக்கக் கூடிய திருத்தம் எந்தவகையிலும் இப்போது இருக்கக்கூடிய நிலைமையை அபிவிருத்தி செய்யவில்லை. அதிலும் நம்முடைய நண்பர் ஸ்ரீ லாசர் அவர்கள் பேசியதைப் பார்த்தால் கையேருவாரக்காரருக்குக் கொடுக்கக்கூடிய கூலியையே குறைக்கவேண்டும் என்பதற்கு வாதாடுவதாகத் தோன்றியது. அவர் கூறிய ஆட்சேபனைகளை எல்லாம் பார்க்கிறபோது கையேருவாரக்காரர்கள் தஞ்சாவூர் பண்ணையாட்களைப் போலக் கருதக்கூடாது, அவர்களுக்குள்ள சம்பள விகிதத்தைப் போல இவர்களுக்கு நிர்ணயிக்கக்கூடாது என்று சொல்கிறார். உண்மையில் அவர்களைப் போல இவர்களும் நிலத்தில் உழைக்கிறார்கள். இவர்கள் உழைப்பது இல்லை என்று அவர்கள் சொன்னார்கள். பண்ணையாளைவிட அதிகமாக வேலை செய்கிறார்கள் இவர்கள். இந்த மசோதாவின்படி கையேருவாரக்காரர்களுக்கு ஒரு க்ராப் சீசனுக்கு நான்கு மாதங்களுக்குக் குறையாமல் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும் அறுவடையில்—எழில் ஒரு பங்கு கொடுக்கவேண்டும் என்றும் கண்டிருக்கிறது. நான்கு மாதம் என்பதை ஆறு மாதம் என்று செய்தால் நலமாக இருக்கும் என்று வற்புறுத்த விரும்புகிறேன். ஏற்கனவே இருந்த நடைமுறைக்குக் குந்தகம் இல்லாமல் ஏற்படும். அரசாங்கத்தினுடைய திருத்தம் கிடைப்பதற்கு நேரமாகிவிட்டபடியால் என்னால் தனியாக திருத்தம் கொடுக்க முடியாமல்

போய்விட்டது. இவர்கள் இப்பொது "ட்யூரிங் எ க்ராப் சீசன்" என்பதையே எடுப்பதனுல் புதிதாக தகராறு எதுவும் உண்டாகாமல் இருக்கும்படியாக திருத்தம் செய்வதைப்பற்றி அமைச்சர் அவர்கள் நன்ருகப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri S. M. ANNAMALAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இப்போது சர்க்கார் திடீரென்று ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிருர்கள். இந்தத் திருத்தம் கூட சரியானதாக இல்லை. பிரச்சனையைச் சிக்கலாகவே ஆக்கிவிடும். அதுவும் ஸ்ரீ லாசர் உடையார் பேசும்போது கையேர் வாரக்காரர்கள் வருஷம் பூராவும் வேலை செய்வது இல்லையென்றும், ஏதோ சில நாட்களுக்கு சில மாதத்தில் வேலை செய்பவர்களுக்கு மாதக் கணக்காக கூலியை நிர்ணயிப்பது சரியாகாது என்றும் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குச் சொல்லுகிறேன். சம்பா அறுவடைய நான்கு மாதம். குறுவை அறுவடை மூன்று மாதம். நாள் குறைவாக அறுத்துவிட்டால் மீட்டும் பயிர் வைத்து அப்போது மூன்று மாதம். ஆக இப்படிகிட்டதட்ட வருஷத்தில் 11 மாதங்களுக்கு மேல் கையேருவாரக்காரர்கள் வேலை செய்கிருர்கள். கையேருவாரக்காரர்களுக்கு உழுது போடுவதோடு வேலை முடிந்துவிடுவதாகச் சொன்னுர்கள். அதுவும் சரியல்ல. உழுது தண்ணீர் பாய்ச்சி, இதர வேலைகளும் அவர்களிடத்தில் வாங்கப்படுகிறது. இப்படியெல்லாம் இருக்கும்போது இன்றையதினம் ஸ்ரீ லாசர் உடையார் பேசுவதைப் பார்த்தால் சர்க்கார் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தம்கூட அதன் அடிப்படையிலேயே உருவாகியிருக்கிறதோ என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. அதைக் கைவிடவேண்டும். மேலும் நான்கு மாதங்களுக்கு சாகுபடி காலத்தில் கூலி என்று இருப்பைத—திட்டவட்டமாக இல்லாமல் இருக்கிற திருத்தத்தை வாபஸ் வாங்கிக்கொண்டு—சட்டசபை உறுப்பினர் ஸ்ரீ கல்யாணசுந்திரம் சொன்னதுபோல் ஒரு ஆண்டுக்கு என்று திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***Sri R. SRINIVASA IYER :** ஏற்கெனவே இந்த மசோதா கொண்டு வரப்பட்டபோது—செலக்ட் கமிட்டியில் பரிசீலனையில் இருந்தபோது—ஒரு பெரிய உத்தியோகஸ்தரை இந்த ஜில்லாவிற்கு அனுப்பி அங்கே நேரிலேயே கையேருவாரந்தார் செய்கிற வேலை என்ன, அவர்களுக்கும் மிராசுதார்களுக்கும் உள்ள உடன்பாடு என்ன —பழக்கவழக்கங்கள் என்ன —கையேருவாரக்காரர்கள் செய்கிற வேலை என்ன இப்போது என்ன கூலி கொடுக்கப்படுகிறது என்பதைப்பற்றியெல்லாம் விசாரித்து ஒரு ரிப்போர்ட் சமர்ப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அவரும் ஒரு ரிப்போர்ட் கொடுத்தார்கள். அந்த ரிப்போர்ட்டை செலக்ட் கமிட்டியில் வாசித்துக் காட்டப்பட்டது. அதன்பேரில் கமிட்டியில் ஒத்துமையாக எல்லோரும் ஒரு முடிவுக்கு வர முடிந்தது. மேற்படி செலக்ட் கமிட்டி ரிபோர்ட்டில்

'Kaiaeruvaramdars should be treated on a par with "Pannaiyals" and their rights protected as in the Tanjore Pannaiyal Protection Act, 1952. . .'

என்ற வாக்குறுதியே வந்தது. நெல் அறுவடையிலே நெல்லுக்கு மட்டுமே பங்கு உண்டு, புஞ்சை தானியத்திற்கும் உண்டு என்று அல்ல. முக்கியமாக அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும், நிலத்தைவிட்டு அப்புறப்படுத்தாமல் இருக்க வழி செய்யவேண்டும் என்பது தான் கோரப்பட்டது. இப்போது சம்பளத்தையும் கூட இந்த மசோதாவில் நிர்ணயிக்கிறோம். நிர்ணயிக்கலாம். ஆனுல் அவர்கள் செய்யக்கூடிய வேலை என்ன, அதற்கு எவ்வளவு சம்பளம் கொடுப்பது என்பது எல்லாம் பரீசீலனை செய்ய வேண்டாமா ? அவர்களுக்கு வேலை செய்கிற நாட்களுக்கு இவ்வளவு கூலி கொடுக்கவேண்டும் எனத் தினக் கூலியை நிர்ணயித்தால் நான்கைந்து நாட்களுக்குக் கூடச் சம்பளம் வாங்காமட்டார்கள். அவர்களுக்கு நான்கு மாத சம்பளம், மொத்த மகசூலில் ஏழில் ஒரு பங்கு என்றெல்லாம் கொடுக்கும்படி செய்தால் சாதாரண நிலச்சுவாந்தார்களுக்கு என்ன மிஞ்சும் ? இவர்கள் தீர்வை கட்டவேண்டும். தண்ணீர்

5th November 1958] [Sri R. Srinivasa Iyer]

வாய்தா கட்டவேண்டும். இந்த செக்ஷன் மூன்றை—ஷெட்யூலில் இரண்டோடு சேர்த்தே பார்க்கவேண்டும். **(Deputy Speaker in the Chair.)** ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ளபடி அவர்களுக்கு சம்பளம் கொடுக்கவேண்டுமென்று சட்டமியற்றிவிட்டால் அப்புறம் ஷெட்யூல் II-ஐ மாற்றுவதென்பது நினைக்கவும் முடியாதது. "கையேர்வாரம்தார்" என்ற பதத்திற்கு, அர்த்தம் கொடுக்கும் பிரிவில் என்ன விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த விளக்கத்திற்கு ஒத்த முறையில் அவனுடைய கூலியை நிர்ணயிக்கவேண்டும். கூலி நிர்ண யிக்கும் பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது என்பது வாஸ்தவம். ஆனால் வேலைகளுக்குத் தகுந்தவாறு கூலி நிர்ணயிக்கப்படவேண்டும். வருஷத் தில் நான்கு மாதங்கள் அவன் வேலை செய்வதில்லை. அவன் வருஷம் பூராவும் வேலை செய்கிறானா? சில தினங்கள் தான் உழுகிறான். பிறகு தண்ணீர் பாய்ச்சிகிறான். வாரம்தாரை தகுந்த காரணமின்றி அப்புறப் படுத்தக்கூடாது என்பதை ஒத்துக்கொள்கிறேன். அதற்குரிய முறையில் சட்டமியற்ற வேண்டியது அவசியம் தான். ஆனால் கூலியை நியாயமான முறையில் நிர்ணயிக்கவேண்டும். தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தில் பண்ணையாளுக்கு எவ்வளவு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வளவு பாதுகாப்பு கையேர்வாரம்தாருக்கும் மாட்டுவாரம்தாருக்கும் கொடுக்கப்படவேண்டுமென்று பொறுக்குக் கமிட்டியில் முடிவு செய்யப் பட்டது. அந்த முடிவின்படி சட்டமியற்ற வேண்டும். இப்படியின்றி இப்போது சர்க்கார் குறிப்பிடுவதுபோல் சட்டமியற்றினால் இயற்றப்படும் சட்டம் சில மிராசுதார்களை பாதிக்கும். "கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக் ஷன் ஆக்டில்" விவசாயி எந்த வேலைகளுக்கெல்லாம் கடமைப்பட்டிருக் கிறானே, அந்த வேலைகளுக்கு இந்த மசோதாவில் வாரம்தார்கள் கடமைப் படவில்லை. இவைகளையெல்லாம் கவனித்து சர்க்கார் சட்டமியற்றவேண்டும். சட்டத்தின்கீழ் வாரம்தாரர்களின் கூலிகளை நிர்ணயிப்பதற்கான விதிகளை வகுப்பதற்குரிய அதிகாரத்தை இயற்றப்படும் சட்டத்தில் சர்க்கார் எடுத்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என்றும், அதற்குரிய முறையில் மசோதாவைத் திருத்தலாம் என்றும் நினைக்கிறேன். 10-40 p.m.

* **THE HON. SRI M. A. MANICKAVELU**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கையேர்வாரம்தார்களுக்கு மகசூலில் எவ்வளவு பங்கைக் கூலியாக கொடுக்கவேண்டும் என்பதுபற்றிய பிரிவு இது. இந்தப் பிரிவில், அதாவது க்ளாஸ் 3-ல் '. . . . **remuneration shall be payable to any Kaieruvaramdar for his work during a crop season, as specified in Schedule II**' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஷெட்யூல் II-ல் **during the cultivation season 45** பட்டணம் படி நெல்லும், அறுவடைக்குப் பிறகு **one-seventh of the produce of the land**-ம் கூலி என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. பதங்களுக்கு அர்த்தம் கொடுக்கும் பிரிவாகிய 2-வது பிரிவில் "கையேர்வாரம்தார்" என்ற பதத்திற்கு "**Kaieruvaramdar means any person engaged by a landowner to do ploughing and watering operations or ploughing operation alone on a land for remuneration for such work by a share in the crop**" என்று விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கையேர்வாரம்தார்களுக்கு என்ன வேலைகளை மசோதாவில் நிர்ணயித்திருக்கிறோமோ அவைகளைவிட அதிகமான வேலைகளை அவர்கள் இப்போது செய்துவருகிறார்கள் என்றும், அப்படி யிருக்க மசோதாவில் குறைவான வேலைகளை நிர்ணயித்துவிட்டு ஷெட்யூல் II-ல் குறிப்பிட்டுள்ளபடி அவர்களுக்கு கூலிகொடுக்கவேண்டுமென்று விதிப் பது முறையல்ல என்றும் சில கனம் அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள். அது அப்படித்தான் தோன்றுகிறது.

மாட்டுவாரம்தாரைப் பொறுத்தவரையில், 7-வது பிரிவின்படி உப பிரிவு (b)-ல், "**any Mattuvaramdar . . . shall be entitled to continue as a mattuvaramdar on the same terms as were applicable to him immediately before the commencement of this Act . . .**" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கையேர்வாரம்தார் சம்பந்தமாகவும் ஏன் அதே மாதிரியாக விதிக்கக்கூடாது? அவ்வாறு விதித்தால் கனம் அங்கத்தினர்கள் இப்போது எழுப்பிய பிரச்னைகள் தீர்ந்துவிடும். அவ்வாறு

[Sri M. A. Manickavelu] [5th November 1958

விதிக்கும் முறையில் மசோதாவைத் திருத்துவதாயிருந்தால், இப்போதுள்ள 3-வது பிரிவையும் II-வது ஷெட்யூலையும் நீக்கிவிட்டு இப்போதுள்ள 4-வது பிரிவிற்கு கனம் அங்கத்தினர் ஸ்ரீ லாஸர் கொடுத்திருக்கும் திருத்தத்தை புதிய 3-வது பிரிவாகப் போடலாம் என்று நினைக்கிறேன். இப்போதுள்ள 4-வது பிரிவு **Dismissal of Kaieruvaramdar** என்ற தலைப்புடன் இருக்கிறது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ லாஸர் 4-வது பிரிவிற்குக் கொடுத்திருக்கும் திருத்தம் அந்தப் பிரிவிற்குப் பொருத்தமாக இருக்காது என்று நினைக்கிறேன். அவர் 4-வது பிரிவிற்குக் கொடுத்திருக்கும் திருத்தத்தில் **'subject to the provisions of sub-sections (2) and (3) of clause 4, a Kaieruvaramdar shall be entitled to continue as such on the same terms as were applicable to him immediately before the commencement of this Act.'** என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் முன்பு கூறியபடி 3-வது பிரிவாகப் போடலாம் என்று நினைக்கிறேன்.

DEPUTY SPEAKER: Is the Hon. Minister withdrawing the Government amendment?

* THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, discussion on clause 3 may be postponed and clause 4 may be taken up now.

DEPUTY SPEAKER: Yes, discussion on clause 3 is postponed and now we shall take up clause 4.

Clause 4.

DEPUTY SPEAKER: The motion is—

'That clause 4 do stand part of the Bill.'

SRI S. LAZAR: Sir, I move—

'In sub-clause (3), *for* the words "not less than twelve months", *substitute* the words "not less than six months".'

'In sub-clause (3), *add* the following proviso:—

"Provided further that where the six months period expires by a date after the commencement of the agricultural operations in a crop season, the engagement shall not be terminated before the harvest of the crops on land".'

The amendments were duly seconded.

SRI N. K. PALANISAMI: Sir, I move—

'*Add* the following at the end of sub-clause (1):—

"unless he absents himself from work continuously for more than a month".'

SRI V. K. KOTHANDARAMAN: Sir, I second the amendment.

SRI S. M. ANNAMALAI: Sir, I move—

'*Omit* sub-clause (2).'

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER: The clause and the amendments are before the House for discussion.

5th November 1958]

SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மிராசுதார்கள் கையேர் வாரம்தார்களை எளிதில் வெளியேற்றுவதற்கு உதவக்கூடிய முறையில்தான் இந்தப் பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது. காரணம், (2)-வது உப பிரிவில் '**Any landowner may dismiss a kaieruvaramdar for misconduct or for neglect of duty**' என்று சொல்லப் பட்டிருக்கிறது ; கையேர்வாரம்தாரை நிலச்சுவாந்தார் எதற்காக 'டிஸ்மிஸ்' செய்யலாம் என்பது **vague**-ஆக இருக்கிறது. அவரை எந்த காரணங்களுக்காக வேலையிலிருந்து நீக்கலாம் என்பது திட்டவட்டமாகக் கூறப்படவில்லை. அவரை எப்படியாவது தமது நிலத்திலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று இஷ்டப்படும் நிலச்சுவாந்தார், 'அவர் ஒழுங்கீனமாக நடந்து கொண்டார்' என்று கூறி அவரை நிலத்திலிருந்து நீக்கிவிட எளிதில் முடியும். '**Misconduct or neglect of duty**' என்பது என்ன என்று மசோதாவில் திட்டவட்டமாக வரையறுத்தால் நன்றாக இருக்கும். இந்தப் பிரிவு இப்போதுள்ள நிலையில், 'கைஏர்வாரம்தார் சரியாக உழவில்லை' என்று சொல்லிக்கூட அவரை நீக்கமுடியும். மேலும், கைஏர் வாரம்தாருக்கு நஷ்டஈடு கொடுத்து அவரை நிலத்திலிருந்து வெளியேற்றுவதாயிருந்தால் கூட, கோர்ட் மூலமாகவே—ஒரு கோர்ட் தீர்ப்பின் பேரிலேயே—அவரை மிராசுதார் வெளியேற்றவேண்டுமே தவிர, மிராசுதார் தானாகவே அவரை வெளியேற்றக் கூடாது என்பது என் கருத்து. ஒரு கோர்ட் உத்தரவின் பேரிலேயே கையேர் வாரம்தாரை மிராசுதார் தம் நிலத்திலிருந்து வெளி யேற்றவேண்டுமென்பதுதான் என் திருத்தத்தின் நோக்கம். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 4-வது பிரிவிலுள்ள (2)-வது உப பிரிவை நீக்க வேண்டுமென்று என் திருத்தம் கூறுகிறது. கனம் அங்கத்தினர் திரு. பழனிசாமி சொன்னதுபோல், இந்தப் பிரிவு இப்போதிருக்கும் நிலையில் மிராசுதார்கள் கையேர் வாரம் தார்களை எளிதில் நீக்கிவிட முடியும். அதற்குத் துணைபுரிவது இந்த (2)-வது உப பிரிவுதான். 'வேண்டாத பெண்சாதியின் கைப்பட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம்' என்பதுபோல், தனக்கு வேண்டாத கைஏர்வாரம்தார் எதைச் செய்தாலும் அது 'மிஸ்காண்டக்ட்' என்று சொல்லி, அவரை மிராசுதார் எளிதில் தன் நிலத்திலிருந்து வெளியேற்றி விட முடியும். அப்பேர்ப்பட்ட (2)-வது உப பிரிவை நீக்கிவிட வேண்டு மென்று சொல்லிக் கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 4-வது பிரிவில் (1)-வது உப பிரிவில், பயிர் பருவகாலத்தில் கைஏர் வாரம்தாரை நிலச்சுவாந்தார் தம் நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இதே பிரிவின் (2)-வது உப பிரிவில், நிலச் சொந்தக்காரர் கைஏர் வாரம்தாரை, அவர் ஒழுங்கீனமாக நடந்து கொண்டார் என்றோ கடமையைச் செய்யத் தவறினார் என்றோ சொல்லி தம் நிலத்திலிருந்து வெளியேற்றலாம் என்று சொல்லப்பட் டிருக்கிறது. இது, வலது கரத்தால் கொடுத்துவிட்டு இடது கரத்தால் பறிப் பது போல் இருக்கிறது. இது, 'நான் நோகாமல் அடிக்கிறேன், நீ ஓயாமல் அழு' என்பதைப் போல் இருக்கிறது.

ஏதோ அவர் தவறு செய்து விட்டார் என்று கை ஏர் வாரந்தாரை வெளியேற்ற மிராசுதாருக்கு பரிபூர்ண அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நமக்குத் தெரியும், இன்றையதினம் தொழிலாளர்களின் நிலை எப்படி யிருக்கிறது என்று.

DEPUTY SPEAKER : I want Hon. Member to be brief.

SRI V. K. KOTHANDARAMAN : பல சட்டங்களின் அடிப்படை யில் பல காரணங்களைக் காட்டி பல தொல்லைகள் கொடுத்து வருகிறார் கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவேதான் இரண்டாவது

சப்கிளாஸை எடுத்துவிட வேண்டுமென்று சொல்கிறேன். அல்லது நினைத்த போது அவர்களை வெளியேற்றக் கூடாது என்று அதற்காக குறிப்பிட்ட அதிகாரிகளிடம் தெரியப்படுத்தி விசாரணை செய்து உண்மையில் அவர் தவறு செய்திருக்கிறாரா என்று நன்கு தெரிந்த பிறகுதான் அவரை வெளியேற்றுவது அல்லது அவர் மேல் தண்டனை விதிப்பது என்று இருக்க வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னால் இந்த சட்டத்தை உருவாக்கினாலும் அது விவசாயிகளுக்கு நல்லது செய்யக்கூடிய நிலையில் இருக்காது. மேலும் நூற்றுக் நூறு பேர் ஹரிஜனமக்கள்தான் இந்த விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஹரிஜன முன்னேற்றத்திற்காக நாங்கள் பாடுபடுகிறோம் என்று சொல்கிற சர்க்கார், அவர்களின் முன்னேற்றத்திற்காக நாங்கள் பணம் ஒதுக்குகிறோம் என்று சொல்லும்போது ஹரிஜன முன்னேற்றத்திற்கு தீங்கு விளைவிக்கும் முறையில் அமைந்துள்ள இந்த இரண்டாவது சப் கிளாசை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI S. LAZAR : என்னுடைய திருத்தங்கள், கையேர் வாரந்தார்களை வெளியேற்றுவது என்ற முடிவிற்கு வரும்போது அவர்களுக்கு எந்தளவு முன் அறிக்கை கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றியதாகும். இப்பொழுதுள்ள முறையில் 12 மாதங்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று அமைந்திருக்கிறது. என்னுடைய திருத்தத்தின் நோக்கம், இந்த அளவை அதிகமாக வைத்திருப்பதால் இந்த சட்டம் கொண்டு வருவதின் நோக்கமே கெட்டுப்போய்விடுமோ என்று பயப்படவேண்டியிருக்கிறது. இந்த சட்டத்தின் நோக்கம், மிராசுதார்களுக்கும், சாகுபடியாளர்களுக்கும் இடையே ஒரு சுமுகமான உறவு நிலவ வேண்டுமென்பதுதான். இவ்வளவு காலத்திற்கு நோட்டீஸ் கொடுத்து விட்டு நீக்கி விடலாம் என்றிருந்தால் அதனால் ஒரு வருட சாகுபடியும் பாழடைந்து போகும். நிலக்காரர் குத்தகை செய்பவர்மேல் குற்றம் காண வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இருப்பார். குத்தகை செய்பவரும், நம்மைத்தான் நீக்கப் போகிறாரே, நாம் ஏன் பாடுபட வேண்டும் என்று நினைத்துக் கொள்வார். இதனால் சாகுபடிதான் குறையும். ஆகவே காலவரையை குறைக்கவேண்டுமென்றுதான் ஆறு மாதம் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இரண்டாவது திருத்தம் மிக முக்கியமானது. பன்னிரண்டு மாதங்களாக இருந்தாலும் சரி, அல்லது ஆறு மாதங்களாக இருந்தாலும் சரி அதை இந்த சபைதான் நிறைவேற்றப் போகிறது. அந்த முறையில் வைத்துப் பார்த்தால் இது மிக முக்கியமானது என்பதை உணரமுடியும். ஆறு மாதம் அல்லது 12 மாதம் நோட்டீஸ் கொடுத்து விட்டு வெளியேற்றலாம் என்று இருப்பதை பார்க்கிறபோது 6 அல்லது 12 மாத காலம் முடிகிறபோது, அறுவடையாவதற்கு முன்னர் அவரை வெளியேற்றி விடலாம் என்று இருந்தால் அதனால் கையேர் வாரந்தாருக்கு கிடைக்க வேண்டிய கூலி கிடைக்காமல் போய்விடும். ஆகவே, இரண்டாவது திருத்தத்தின் நோக்கம் என்னவென்றால், வெளியேற்ற வேண்டுமென்று முடிவு செய்தால், 6 அல்லது 12 மாதம் முடியும் போது, அந்த நிலத்தில் பயிர் இருந்தால் அந்த சமயத்தில் அந்த கையேர் வாரந்தாரை நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்பதுதான் இதன் நோக்கம். அவர் அறுவடை முடியும் வரை தொடர்ந்து இருக்க வேண்டும். அந்த அறுவடையின் பலன் அவருக்கு கிடைத்தபின்தான் அவர் வெளியேற்றப்படலாம் என்ற நோக்கத்தில்தான் இரண்டாவது திருத்தம் அமைந்திருக்கிறது. இதை கண்டிப்பாக அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என்று நினைக்கிறேன்.

*SRI R. SRINIVASA IYER : இந்த 4-வது கிளாசில் உள்ள இரண்டாவது பிரிவை எடுத்து விட வேண்டுமென்று வாதிக்கப்படுகிறது. ஒரு மிராசுதார் ஒரு வேலைக்காரனை வேண்டுமென்றே நீக்கினால் அவன் மிராசுதாராராக இருக்க லாயக்கேயில்லை. வேண்டுமென்று ஒரு வேலைக்காரனையும் ஒரு மிராசுதார் நீக்க மாட்டார், ஒரு மிராசுதாரை ஒரு வேலைக்காரன் அடிக்கிறான் என்றால் அவனை வேலையில் இருந்து நீக்காமல் வைத்துக் கொண்டிருப்பதா ? "மிஸ் காண்டக்ட் ஆர் நெக்ளக்ட் ஆப் ட்யூட்டி" என்று சொல்லப்பட்டிருக்கிறது. நல்லபடி உழைக்கவேண்டுமென்று பண்ணைக்காரனுக்கு

5th November 1958] [Sri R. Srinivasa Iyer]

அக்கரை இருக்க வேண்டும். வெள்ளாமையை நன்கு பெருக்கவேண்டுமென்ற உத்தேசம் இருவருக்கும் இருக்க வேண்டும். இந்த சட்டத்தின் நோக்கமே, மிராசுதாரும் பண்ணையாளும் ஒற்றுமையாக இருந்து வெள்ளாமையைப் பெருக்கவேண்டுமென்பதுதான். அப்படி ஒருவனை நீக்கி விட்டால், ஆறாவது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது, அவன் தாசில்தாரிடம் முறையிடலாம், அதற்குமேல் ஆர். டி. ஓ. யிடம் அப்பீல் செய்யலாம் என்று. டெப்டி கலெக்டர் முடிவுதான் தீர்மானமானது. ஆக, ஒருவனை வேண்டுமென்றே ஒரு மிராசுதாரும் நீக்கமாட்டார். அப்படி நீக்கினாலும் அப்பீல் செய்வதற்கு பவர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இரண்டாவது செக்ஷனை எடுத்து விடுவதற்கு அவசியமில்லை. பன்னிரண்டு மாதம் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. இந்த பீரியேட்டில்தான் அவர்களிடையே பாந்தவ்யம் இருக்கிறது. அப்படி நோட்டீஸ் கொடுக்கப்படும்போது இந்த வேலைக்காரன் நினைக்கலாம், நம்மைத்தான் நீக்கப் போகிறாரே, நாம் ஏன் நன்கு வேலை செய்து வெள்ளாமையைப் பெருக்க வேண்டுமென்று. அப்படி நினைத்து அவன் நன்கு வேலை செய்யமாலேயே இருந்து விடுவான். அதே போல் மிராசுதாரும், இவன்தான் போகப் போகிறானே, என்று அவன் மேல் கோபம் வரலாம். அறுவடைக்கு முன்னர் அப்புறப்படுத்தக் கூடாது என்று இந்த சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆறு மாத நோட்டீஸ் என்று சொல்வது சரியல்ல. அவனை வேலையில் இருந்து நீக்கி விட்டால் அவன் வேறு இடம் பார்க்க வேண்டும். நோட்டீஸ் கொடுக்கும்போது மறு சாகுபடி கெட்டுப் போகாமல் இருக்கும் விதத்தில் எவ்வளவு காலம் நோட்டீஸ் கொடுக்கலாம் என்று ஆலோசித்துச் செய்ய வேண்டும். விலக்கினால் காம்பன்சேஷன் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது.

'. . . . he shall be liable to pay to the Kaiaeruvaramdar such compensation as may be prescribed . . .' என்றிருக்கிறது. அது ரூல்ஸ்-ல் கொடுக்கப்படும். பன்னிரண்டு மாதம் நோட்டீஸ் என்பது கூடுதல். Tanjore Pannayals Act-ல் எப்படி provisions இருக்கிறது என்று பார்த்து, நியாயமாகச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : உழைக்கக் கூடியவர்களுக்கு சலுகை கொடுத்தால் உற்பத்திக்கு ஆபத்து வரும் என்று கூக்குரல் போடுவோர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இந்த சட்டம் கொண்டு வருவதின் நோக்கம் என்ன ? கையேர் வாரந்தார்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பதுதான் இதன் நோக்கம். அவர்களை நிலத்தில் இருந்து வெளியேற்றாமல் இருப்பதற்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பது தான் இதன் நோக்கம். ஆனால் 4-வது பிரிவு அந்த நோக்கத்தின் அடிப்படையையே தகர்த்து விடுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். கொடுத்திருக்கக் கூடிய பாதுகாப்பு எல்லாம், ஒரு க்ராப் ஸீஸனில் மட்டுந்தான் அவர்களை வெளியேற்றக் கூடாது என்ற உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. தவிர, சாகுபடி கால முடிவில் அவர்களை வெளியேற்றலாம் என்ற அர்த்தம்தான் இதில் இருக்கிறது. ஒரு வருட கால தவணை கொடுக்கலாம் என்பதைத் தவிர வேறு எந்தவிதமான உரிமையும் அவனுக்கு கொடுக்கப்படவில்லை. ஒரு வருட தவணைகொடுத்து விட்டு காரணமின்றியே அவனை வெளியேற்றலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே வெளியேற்றப் பட்டவர்களை மறுபடியும் வேலைக்கு அமர்த்தினாலும் கூட ஒரு வருடத்திற்குத்தான் இருக்க முடியும். ஒரு வருடம் முடிந்த பிறகு சட்டபூர்வமாக எல்லா கையேர்வாரந்தாரையும் வெளியேற்றி விடுவதற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது பிரிவில், any land-owner may dismiss Kaiaeruvaramdar for misconduct or neglect of duty என்றிருக்கிறது. அது, வேலை சரியாக செய்யவில்லை என்ற காரணம் காட்டி எந்த சமயத்திலும் அவனை டிஸ்மிஸ் செய்வதற்குள்ள உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த செக்ஷனால் நாம் இச்சட்டம் கொண்டு வருவதின் நோக்கமே நிறைவேறவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் கேட்க வேண்டும். ஆகவே, பழனிசுவாமி

[Sri M. Kalyanasundaram] [5th November 1958

அவர்களின் திருத்தத்தை ஏற்றுக் கொண்டால் அது ஓரளவு கையேர் வாரந்தார்களுக்கு பலனளிக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தப் பிரிவு, எந்த சந்தர்ப்பத்தில் கையேர்வாரந்தார்களை நீக்கலாம் என்று சொல்லும் பிரிவு. நோட்டீஸ் கொடுத்து விட்டு நீக்குவதாக இருந்தால் ஒரு வருடம் என்று சொல்லியிருக்கிறது மூன்றாவது பிரிவில். அது கூடாது, அதை ஆறு மாதமாக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. மூன்று மாதமா, ஆறு மாதமா, பன்னிரண்டு மாதமா என்று சொல்லி அதை நன்கு யோசனை செய்த பிற்பாடுதான் கடைசியில் அதை பன்னிரண்டு மாதமாக ஆக்க வேண்டுமென்ற முடிவிற்கு வந்தோம். சில விஷயங்களில், ஒரு வாரம், ஒரு மாதம், மூன்று மாதம், ஆறு மாதம், ஒரு வருடம் என்று இப்படியெல்லாம் இருக்கிறது. பன்னிரண்டு மாதம் என்று ஏன் வைக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டால், ஒரு இடத்தில் இருந்து நீக்கி விட்டால் உடனேயே இன்னொரு யிடத்தில் வேலை கிடைப்பது என்றால் கஷ்டம். ஒரு உத்தியோகம் கிடைக்க வேண்டுமென்றால் பல வருடங்கள் காத்து நிற்க வேண்டியிருக்கிறது. ஆஸ்பத்திரிக்கு போனால் கூட அங்கும் காத்து
11 a.m. நிற்க வேண்டியிருக்கிறது. ஆகவே இவைகளை நீக்கி, இப்போது இருக்கிறபடி பன்னிரண்டு மாதங்கள் என்றிருந்தால் முன் ஜாக்கிரதையாக வேறு எங்கேயாவது வேலைகிடைக்க வழி செய்து கொள்ள முடியும். இதையெல்லாம் யோசனை செய்துதான் பன்னிரண்டு மாதங்கள் என்று இருக்கலாம் என்று ஒத்துக் கொண்டார்கள். அதன் பிரகாரம் இவ்விதம் போடப்பட்டிருக்கிறது. அடுத்ததாக **'Any landowner may dismiss a Kaiaeruvaramdar for misconduct or for neglect of duty'**— இதை முற்றிலும் மாற்றிவிட வேண்டும் என்று கனம் அங்கத்தினர் ஒருவர் சொன்னார், கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர்கள். **'Unless he absents himself from work continuously for more than a month'** என்று ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். இது ஆபத்தான ஒரு அமெண்ட்மெண்ட் என்று சொல்லலாம். தொடர்பாக அவர்களாகவே வராமல் இருந்தால் டிஸ்மிஸ் செய்துவிடலாம் என்று சொல்லுவதாகத் தெரிகிறது. இது அவர்களுடைய கொள்கைக்கு எப்படிப் பொருந்துகிறது என்று எனக்குத் தெரியவில்லை. இது இல்லாமல் இருந்தால் கையேர் வாரம்தார்களுக்கும், மாட்டேர் வாரம்தார்களுக்கும் நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன். **'Any landowner may dismiss a Kaiaeruvaramdar for misconduct or for neglect of duty'** என்று ஏற்கெனவே சட்டத்தில் சொல்லிவைத்திருக்கிறோம். டெனண்டைவிட ஸ்டாட்டஸ் குறைவு என்கின்ற காரணத்தில் இவ்விதம் கூறப்பட்டிருக்கிறது. இதில் வேறு ஏதாவது மாற்றம் செய்ய முடியுமா என்பதைப் பற்றி பார்க்கலாம் . . .

SRI S. LAZAR : Sir, I rise on a point of order.

இந்த நான்காவது பிரிவு இரண்டாவது உட் பிரிவில் . . .

DEPUTY SPEAKER : It is not a point of order.

SRI S. LAZAR : I am coming to that. It was stated that there were similar provisions in the other Acts. It was also pointed out by some of the Members . . .

DEPUTY SPEAKER : The hon. Member cannot expect a reply from the Chair to this point.

SRI S. LAZAR : Then I will put it as a point of elucidation.

5th November 1958]

SRI S. LAZAR : இந்த நான்காவது பிரிவு இரண்டாவது உட்பிரிவில் இது சம்பந்தமாக **restriction** செய்யப்பட்டிருப்பதை எடுத்துவிட்டால் இது சம்பந்தமாக வேறு எந்த பிரிவிலும் சொல்லப்படவில்லை. இச்சட்டத்தில் இதற்கு ஒரு ப்ரொவிஷன் இல்லாமல் இருக்கும். ஆகவே, இதை மாற்றக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள். மாற்றினால் இப்போது கையேர் வாரந்தார்களும், மாட்டேர் வாரம்தார்களும் எவ்விதம் இருக்கிறார்களோ அதே நிலையில்தான் இன்னும் இருந்து கொண்டிருப்பார்கள்.

THE HON. SRI M. A. MANICKAVELU : In any contract there should be provision by which the contract could be put an end to. The Contract Act will not apply here. As such, the provision in sub-clause (2) is absolutely necessary in this case. The idea is not to omit the entire sub-clause (2). We are just examining whether this clause could be improved.

We can now take up clause 3, Sir.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

'*For* clause 3, *substitute* the following clause, namely :—

"3. *Remuneration payable to kaiaeruvaramdar.*—Notwithstanding anything to the contrary contained in any pre-existing law, custom, usage, agreement or decree or order of a Court, the remuneration payable to any kaiaeruvaramdar shall be on the same terms as were applicable to him immediately before the commencement of this Act".'

The other Government amendment was, by leave, withdrawn.

Clause 3, as amended, was put and carried.

DEPUTY SPEAKER : Clause 4 will be taken up afterwards. We will now take up clause 5.

Clause 5.

DEPUTY SPEAKER : The motion is

'That clause 5 do stand part of the Bill.'

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

'In line 30, *for* the figures and word "1st January 1957", *substitute* the figures and word "1st January 1956".'

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

'*For* the words "having jurisdiction . . . situated", *substitute* the words "appointed for the purpose by the Government".'

The amendment was duly seconded.

[5th November 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

'In clause 5, *after* the words "on application", *insert* the words "made within thirty days after the commencement of this Act".'

'To clause 5, *add* the following provisos, namely :—

"Provided that the application may be received after the period of thirty days aforesaid if the applicant satisfies the Tahsildar that he had sufficient cause for not making the application within that period :

Provided further that any order for re-engaging any kaiaeruvaramdar under this section shall, in respect of any land where there are standing crops on the date of such order, take effect immediately after the harvest of such crops."'

SRI S. LAZAR : Sir, I move—

'*Add* the following as proviso to the clause :—

"Provided that no kaiaeruvaramdar shall be entitled to apply in cases where—

(*a*) the land has been cultivated during 1368 fasli with a crop other than paddy,

(*b*) where the landowner had employed *bona fide* other kaiaeruvaramdars and such kaiaeruvaramdars work on the land on the date of commencement of this Act,

(*c*) or where the landowner has *bona fide* leased the land since 1st January 1957 and such lessee is in possession thereof, or

(*d*) where the kaiaeruvaramdar has been convicted by a Criminal Court for offences relating to the person or property of the landowner".'

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I have not received copies of the Government amendment.

DEPUTY SPEAKER : Last night they were circulated. I have seen them myself.

The clause and the amendments are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : Sir, in my amendment I have stated that for the words 'having jurisdiction . . . situated', the words 'appointed for the purpose by the Government', be substituted.

11·10 a.m. SRI S. LAZAR : இப்போது ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் இருக்கும் தாசில்தார்களுக்கு ஏற்கனவே அதிகமான வேலைகள் எல்லாம் இருக்கின்றன. அந்த வேலைகளோடுகூட இந்த வழக்குகளையும் விசாரணை செய்ய வேண்டுமென்றால் சீக்கிரமாக வழக்குகள் முடிவு அடையா. ஆகவே, இதற்கு என்று தனியாக ஒரு தாசில்தார் அவர்களை நியமிக்க வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள். இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே நான் கொடுத்திருக்கும் திருத்தத்தின் நோக்கம், இப்போது 5-வது பிரிவை அப்படியே அமுலுக்குக்

5th November 1958] [Sri S. Lazar]

கொண்டு வரும்போது பல சங்கடங்கள் ஏற்படும். அதை எப்படி சமாளிப்பது என்று பார்க்கும்போது என்னுடைய திருத்தத்தை ஒத்துக் கொண்டால் அதைச் சமாளிக்க முடியும் என்பது எனது தாழ்மையான கருத்து.

காரணம், 5-வது பிரிவின்படி 1957-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதியில் க்ருஷியல் டேட். அந்தத் தேதியில் வெளியேற்றப்பட்டிருந்தாலும், அல்லது அதற்குப் பிறகு வெளியேற்றப்பட்டிருந்தாலும், அத்தகைய கை ஏர் வாரம்தாரருக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டுமென்று மசோதாவிலே இருக்கிறது. 1957-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதிக்குப் பிறகு வெளியேற்றப் பட்டவர்களைத் திரும்ப எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதிலே அபிப்பிராய பேதம் கிடையாது. அது செலக்ட் கமிட்டியிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு அம்சம். அதற்கடுத்தாற்போல வேலைக்கு வைத்துக் கொள்ளவேண்டும் என்று வரும்போது சில சங்கடங்கள் வருகின்றன. அவைகளைச் சமாளிக்க வேண்டும்.

முதலாவது சங்கடம் 1957-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதிக்கும் பிறகு ஒரு சில இடங்களில் கை ஏர் வாரம்தாரர்களை வெளியேற்ற விட்டு கை ஏர் வாரம்தாரருக்குப் பிறகு குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். அந்த மாதிரி குத்தகைக்கு விடப்பட்டிருந்தால், இன்றைய தினம் குத்தகைக்கு உழுது கொண்டிருப்பவர்களின் நிலைமை என்ன ? ஏற்கெனவே இருந்தவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளும்போது புதிதாக குத்தகைக்கு உழுது வந்தவர்களின் நிலைமை என்ன என்பதைப் பற்றி வரையறுக்க வேண்டும்.

அடுத்த கஷ்டம் என்ன என்று பார்க்கும்போது, நெல் சாகுபடி செய்பவர்களுக்குத் தான் இது அமுலாகும், கரும்பு, மஞ்சள் சாகுபடி செய்பவர்களுக்கு அமுலாகாது என்று வரையறை மசோதாவிலே இருக்கிறது. கை ஏர் வாரம்தாரராக இருக்க உழவேண்டும், உழுது தண்ணீர் பாய்ச்சவேண்டும். கரும்பு, மஞ்சள் தோட்டங்களில் வேலை செய்பவர்கள் கை ஏர் வாரம் தாரர் முறையில் வர மாட்டார்கள் ஆனால் அவைகளிலே வேலை செய்யக் கூடியவர்களில் கை ஏர் வாரம்தாரர்கள் இருக்கிறார்கள் என்று நான் மட்டும் சொல்லவில்லை. எதிர்கட்சியிலுள்ள அத்தனை பேரும் செலக்ட் கமிட்டியில் ஒத்துக் கொண்ட அம்சமாகும். ஒரு இடத்திலே ஒரு சர்க்கரைத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் நெல் சாகுபடிக்குப் பதிலாக கரும்பு சாகுபடி நடக்கிறது. சில இடங்களில் மஞ்சள் சாகுபடி செய்கிறார்கள். சாகுபடி மாறியிருக்கும் இடத்தைப் பொறுத்த வரையில் கை ஏர் வாரம்தாரருடைய நிலைமை என்ன என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

மூன்றாவதாக, ஒரு சில இடங்களில் கை ஏர் வாரம்தாரர் வெளியேற்றப் பட்ட பிறகு வேறு ஒரு கை ஏர் வாரம்தாரர் நியமிக்கப்பட்டிருக்கிறார். பாஸ் செய்யப்படுகிற 4-வது பிரிவின்படி வெளியேற்றப்பட்டிருக்கக் கூடிய கை ஏர் வாரம்தாரருக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும், அவர்களுக்குத் திரும்ப வேலை கொடுக்கவேண்டும் என்பதாகும். அப்படி இருக்கும்போது பழைய கை ஏர் வாரம்தாரரைத் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால், புதியதாக வேலைக்கு வந்து வேலை செய்து கொண்டிருக்கிற கை ஏர் வாரம்தாரருடைய நிலைமை என்ன ? அவருக்கு இந்தப் பாதுகாப்புக் கிடைக்குமா ? ஆகையால் இரண்டுக்கும் முரண்பாடு இருக்கிறது. அவர்களுக்கும் ஒரு நல்ல பாதுகாப்புக் கொடுக்க புரொவிஷன் செய்தாக வேண்டியிருக்கிறது.

நான்காவதாக, இந்த வட்டாரத்தில் கிரிமினல் குற்றங்கள்—தகராறுகள்—நடந்து ஒரு சில குற்றங்கள் ஹைக்கோர்ட் வரை சென்று தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு சிலர் தண்டிக்கப்பட்டுமிருக்கிறார்கள். அப்படி தண்டிக்கப்பட்டவர்களைத் திருப்பி வேலைக்கு வைத்துக்கொண்டால் சாகுபடி சரியாக நடக்குமா என்று பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

இந்த நான்குவித கஷ்டங்களை மனதில் கொண்டுதான் நான் எனது திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தத்தில் "அப்ளை" என்று போட்டிருக்கிறேன், அதை "ரீ என்கேஜ்" என்று போட்டால்

சரியாக இருக்கும். எல்லாக் குற்றங்களுக்கும் அல்ல. நிலத்தைப்பொறு பொறுத்த வரையில், நிலச் சொந்தக்காரரைப் பொறுத்த வரையில், குற்றம் அடைந்து தண்டிக்கப்பட்டவர்கள் விஷயத்தில் இந்தப் பாதுகாப்பு வேண்டாம் என்று கொடுத்திருக்கிறேன். இதை அரசாங்கம் பரிசீலனை செய்து அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தால், வெளியேற்றப்பட்டவர்களில் 1957-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதியில் இருந்தவர்கள் தான் உரிமை பெற்றவர்கள் என்று மாற்றியமைத்தாலும் சரி அல்லது என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொண்டாலும் சரி, இதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : ஸார், முதல் திருத்தம் ஜனவரி மாதம் 1-ம் தேதி, 1957-ம் வருஷம் என்றிருப்பதை 1956-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதி என்று மாற்ற வேண்டும் என்று கனம் அங்கத்தினர் கொண்டு வந்திருக்கிறார். இதையே 1957-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1 -ம் தேதி என்று மாற்ற வேண்டும் என்று ஒரு திருத்தமே வந்தது, ஆனால் ஆபீஸுக்கு அனுப்பவில்லை. ரொம்ப நாளுக்குப் பின்னால் போய் விசாரித்தால் குழப்பம் தான் ஏற்படும். ஒரு வருஷத்திற்குள்ளாக இருந்தால் பரவாயில்லை. இதுவே இரண்டு வருஷமாக ஆகிறது. இருப்பதையே ஒத்துக் கொள்வது நல்லது என்று திருத்தம் கொடுக்கவில்லை. 1956-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதி என்று போட வேண்டுமென்பது ஒத்துக் கொள்ள முடியாத காரியம். ஆகையால் நான் அதை ஒத்துக் கொள்ளவில்லை.

பிற்பாடு கை ஏர் வாரம்தாரர் நீக்கப்பட்டிருந்தால், அவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுவார்கள், ஆகையால் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கரும்பு சாகுபடி, மற்றப்படி வேறு சாகுபடி செய்யும் நிலங்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை யோசனை செய்து பார்த்தோம். கொஞ்சம் அசம்பாவிதம் இருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. வேலையில் இருந்தவனை வேலை யில்லாதவனாக ஆக்கி விடக்கூடாது என்று தான் இந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். ஆகையால் நான் அந்தத் திருத்தத்தை ஒத்துக்கொள்வதற்கில்லை.

இன்னொன்று அதாவது நீக்கப்பட்ட கை ஏர் வாரம்தார் ஏதாவது ஒரு குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டிருந்தால், அவரை எடுத்துக்கொள்வது சரியா என்பது. அந்த மாதிரி ஏதாவது ஒன்றிரண்டுதான் இருக்கும் அந்த மாதிரி நீக்கப்பட்டவன் வரவும் மாட்டான். பல காரணங்களால் திருத்தம் வேண்டாம் என்று முடிவு செய்து வேண்டாமென்று விட்டிருக்கிறோம். கொண்டு வந்திருக்கிற திருத்தத்தையும் ஒத்துகொள்வதற்கில்லை.

The amendments of Sri M. Kalyanasundaram and Sri S. M. Annamalai were put and lost.

The amendment of Sri S. Lazar was, by leave, withdrawn

The Government amendments was put and carried.

Clause 5 as amended, was put and carried.

Clause 4—cont.

11-20 a.m. **The Hon. Sri M. A. MANICKAVELU** : I beg to move the following amendment :—

' To sub-clause (2), the following shall be added at the end, namely :—

" but shall within a week of the dismissal report the fact of such dismissal to the Tahsildar having jurisdiction ".'

5th November 1958]

The amendments of Sri N. K. Palanisami and Sri S. M. Annamalai were put and lost.

The amendments of Sri S. Lazar were, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 4, as amended, was put and carried.

Clause 6.

DEPUTY SPEAKER : The motion is—

" That clause 6 do stand part of the Bill."

THE HON. SRI M. A. MANICKAVELU : I move—

" In sub-clause (1), after the words ' party aggrieved ', the words and figures ' or on receipt of the report made under section 4 (2) ' shall be inserted." '

SRI S. M. ANNAMALAI : I move—

' In sub-clause (1), *for* the words " having jurisdiction. situated ", *substitute* the words " appointed for the purpose by the Government ", and *omit* the explanation·

SRI A. V. P. ASAITHAMBI : I second the amendment.

SRI S. M. ANNAMALAI : நான் ஐந்தாவது பிரிவுக்குக் கொடுத்த திருத்தத்தைப் போலவே தான் இந்த திருத்தமும் இருக்கிறது. இதற்கென்று ஒரு தாசில்தாரை நியமித்தால்தான் அந்த வழக்குகளை விசாரித்து தக்க சமயத்தில் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரமுடியும். ஆகவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : இது கனம் அங்கத்தினர் கொடுத்திருக்கும் "consequential amendment" முன்பு கொடுத்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு இல்லையாததால், இதையும் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை.

(Mr. Speaker in the Chair.)

The Government amendment was put and carried.

The amendment of Sri S. M. Annamalai was put and lost.

Clause 6, as amended, was put and carried.

Clause 7.

MR. SPEAKER : The motion is—

" That clause 7 do stand part of the Bill ".

SRI N. K. PALANISAMI : I move :

" In clause 7 (*a*), in line 25, *after* the word ' Mattuvaramdar ' *add* the words ' or a kaiaeruvaramdar '."

SRI A. R. MARIMUTHU : I second the amendment.

SRI M. KALYANASUNDARAM : I move :

" In sub-clause (*a*), *for* the word ' ten ' in line 25, *substitute* the word ' seven '."

SRI N. K. PALANISAMI : I second the amendment.

SRI S. M. ANNAMALAI : I move :

"In sub-clause (*a*), *for* the word 'ten' *substitute* the word 'five'."

SRI A. V. P. ASAITHAMBI : I second the amendment.

SRI N. K. PALANISAMI : I move :

"In clause 7 (*b*), in line 29, *after* the word 'Mattuvaramdar', *add* the words 'or a kaiaeruvaramdar'."

SRI A. R. MARIMUTHU : I second the amendment.

SRI S. LAZAR : I move :

"In sub-clause (*b*), *for* the words 'referred to in sub-section (2) of section 9 whose engagement has not been terminated under that sub-section', *substitute* the words 'who owns not more than ten acres of wet land'."

The amendment was duly seconded.

* THE HON. SRI M. A. MANICKAVELU : I move the following amendment :

"In sub-clause (*b*), *for* the words 'shall apply', *substitute* the words 'shall, so far as may be, apply'."

SRI S. LAZAR : I move the following amendment :

"In sub-clause (*b*), *after* the words 'Madras Cultivating Tenants' Protection Act (Madras Act XXV of 1955) shall apply to him' and before the words 'as if he were a cultivating tenant' *add* the words 'so far as may be'."

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : 10 எக்கருக்கு மேற்பட்டவர்களுக்குத் தான் இந்த சட்டம் பொருந்தும் என்று சொன்னால், இன்றையதினம் ஆயிரக்கணக்கானவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். 10 எக்கருக்கு குறைவாக வைத்திருக்கிறவர்கள் அதிகப்படியாக இருக்கிறார்கள். ஏராளமாக வெளியேற்றப்பட்டவர்கள் இந்த சட்டத்தின் காரணமாக உள்ளே வருவதற்கு வழியில்லை. 10 எக்கருக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் பொருந்தும் என்று சொல்லும்போது, 15 எக்கர் ஒருவர் வைத்திருந்தால் 5 அல்லது 6 எக்கரை வேறு யாராவது பேரில் வைத்து மறுபடியும் வெளியேற்றம் செய்வதற்கு வழிவகை இருக்கும். ஆகவே, 10 எக்கர் என்று இல்லாமல், 5 எக்கர்களுக்கு மேற்பட்டவர்களுக்கும் பொருந்தும் என்று இருந்தால்தான், வெளியேற்றப்பட்டவர்களுக்கும், மாட்டுவாரம்தார்களுக்கும் பிரயோசனமாக இருக்கும் . பாக்கி இருக்கும் திருத்தத்தை நான் வற்புறுத்தவில்லை.

SRI S. M. ANNAMALAI : நான் கொடுத்திருக்கும் திருத்தமானது இந்த 10 எக்கர் என்று இருப்பதை 5 எக்கர் ஆக்கவேண்டுமென்பதற்காகத் தான். 10 எக்கர் என்று வைத்தால், 100-க்கு இரண்டு

5th November 1958] [Sri S. M. Annamalai]

பேர்கள்கூட இருக்கமாட்டார்கள். அந்த 10 ஏக்கரிலும் 3 ஏக்கர் சொந்தத்தில் வைத்துக்கொள்ளலாம். ஆகையால் 10 ஏக்கரா, 7 ஏக்கரா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே, 5 ஏக்கர் என்று வைத்தால் நலமாக இருக்கும். அப்படியிருந்தால் பெரும்பான்மையான மாட்டுவாரம்தார்கள் வெளியேற்றப்படாமல் இருப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

* SRI R. SRINIVASA IYER : Sir, I have got to say something about the wording of clause 7. The heading is : ' Application of Madras Act XXV of 1955 and Madras Act XXIV of 1956 to mattuvaramdars '. That is all right. The clause actually says that notwithstanding anything contained in the two Acts mentioned in the heading, the provisions of those Acts will apply to mattuvaramdars. I have found provisions saying ' notwithstanding anything to the contrary ' or ' notwithstanding any law for the time being in force ', certain Acts will apply. So, this does not seem to be proper wording. The Government have moved an amendment as regards sub-clause (*b*) which introduces the words ' so far as may be '. That is all right. But regarding sub-clause (*a*) there is no such qualification and it merely says ' the provisions of those Acts shall apply to any mattuvaramdar under a land owner who owns more than ten acres of wet land and such a mattuvaramdar shall be deemed to be a cultivating tenant within the meaning of those Acts '. So, sub-clause (*a*) will conflict with sub-clause (*b*), unless the words ' so far as may be ' are introduced in sub-clause (*a*) also. The matter requires clarification. I cannot understand a provision which reads ' notwithstanding the provisions of a particular Act, the Act will apply '. As it is it seems to be incongruous and I would request the Hon. Minister to clarify the position.

MR. SPEAKER : Let us hear what the other lawyer says.

SRI S. LAZAR : கனம் சீனுவாசய்யர் சொன்னதை முற்றிலும் ஆதரிக்கிறேன். அவர் சொன்னதிலே பூராவும் நல்ல, 'லீகல் இம்ப்ளிகேஷன்ஸ்' நிறைய இருக்கின்றன. எந்த ஒரு சட்டத்தினுடைய பிரிவுகளை புகுத்தவேண்டுமென்று சொல்லுகிறோமோ அந்த சட்டத்தைக்கொண்டு வந்து, அந்த சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும்கூட, அந்த சட்டம் இங்கே அமுல் செய்யப்போகிறோம் என்று சொல்லப்படுகிறது. சர்க்கார் இதை அப்படியே வைத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னால், அது சரியாகாது. " ஏ " என்று இருப்பதிலே ' You can name the two Acts, namely. the Madras Cultivating Tenants Protection Act, 1955 and the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 and then say these shall apply to any mattuvaramdar under a land owner who owns more than ten acres, etc. அதைக்கொண்டு வந்து புகுத்திவிட்டால் சரியாகப் போய்விடும். 11-30 a.m.

இரண்டாவது பிரிவைப் பொறுத்தவரையில் " பி " பிரிவை பொறுத்த வரையில், ஏற்கனவே இருக்கிற சட்டத்தில் கொடுத்திருக்கிறபடி என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் பொது விவாதத்தில் எடுத்துச்சொன்னது போல, " கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்டில், இருக்கிற பிரிவுகள் அனைத்தையும் மாட்டுவாரம்தாரர்களுக்கு பொருத்த முடியாத காரணத்தினாலே, சமீபத்தில் வந்த உயர்நீதி மன்ற தீர்ப்பின் காரணமாக, அந்தத் தீர்ப்பைக் காட்டி ஒரு மாட்டுவாரம்தாரர் " டெனண்ட் " இல்லை

என்று சொல்லப்படலாம். அதுவும் குறிப்பாக "கல்டிவேடிங் டெனண்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்டில்" ஒவ்வொரு பிரிவில் பார்க்கும்பொழுதும், அது மாட்டுவாரம்தாரர்களுக்கு பொருத்தமுடியாத நிலைமையில் அமைந்திருக்கிறது. உதாரணமாக, "கல்டிவேடிங் டெனண்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்டில்" 3-வது பிரிவிலே எந்த எந்த அடிப்படையிலே வெளியேற்றப்படலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை இந்த இடத்திலே பொருத்த முடியாது. எந்தெந்த சந்தர்ப்பத்தில் டெபாஸிட் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் இந்த இடத்தில் பொருத்த முடியாது. "ப்ரொவிஜர் ஆப் எவிக்டிங் எ டெனன்ட்" இருக்கிறது. அதில் "ப்ரொவிஜர்" மட்டும் தான் பொருந்தும். மற்ற பிரிவுகள் செக்ஷன் 4, 5, 6, 7 இவைகள் அனைத்தும் இதில் அமுலுக்குக் கொண்டு வர முடியாது. அதற்குத் தான் நான் திருத்தம் கொடுத்தேன். எந்த அளவுக்கு இதிலே மாட்டுவாரம்தாரர்களைப் பொறுத்தவரைக்கும் நாம் அதை அமுல் செய்யமுடியுமோ, அது வரைக்கும் இந்த சட்டத்திலே பொருந்தும் முறையிலே நான் எனது திருத்தத்தைக் கொடுத்தேன். அதையும் இப்பொழுது சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னதுபோல், கனம் சீனிவாசய்யரே முற்றிலும் ஆதரித்து முதலாவது பகுதியை எடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளுகிறேன். "பி" பிரிவைப் பொறுத்தவரைக்கும், சர்க்காரே திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

MR. SPEAKER: மூன்றாவது லாயர் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம்.

* SRI T. SAMPATH: Sir, I am in entire agreement with the views expressed by the hon. Member Sri Srinivasa Iyer. I am glad that there is unanimity of opinion amongst lawyers at least with reference to this clause. (Interruption.) Sir, the hon. Member Sri Srinivasa Iyer pointed out that the clause should not have been worded in that fashion. I do agree with him because the clause as proposed will lead to so much of confusion. The clause is not so very clear. It will be more clear if the clause is worded this way, namely: 'The Madras Cultivating Tenants Protection Act, 1955 (Madras Act XXV of 1955), and the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Madras Act XXIV of 1956) shall apply to any mattuvaramdar under a landowner who owns more than ten acres etc.'.

MR. SPEAKER: Let us hear the views of another lawyer Srimathi Anandanayaki.

SRIMATHI T. N. ANANDANAYAKI: Mr. Speaker, Sir, as the Learned Members of this House have already expressed, I am in entire agreement with the views expressed by the hon. and learned Member Sri Srinivasa Iyer. So far as the first thing is concerned, if I may use a strong expression, it is not an appreciable drafting. Rather it sounds bad. I would like the Legal Department to take this into consideration and not repeat such things in future. Pointing out such minor defects will take away much of the valuable time of the legislators to a very great extent. We may sometimes even overlook such small things and defects and then the High Court will point out that defect to this Legislature. I would request the Department to note this and not repeat such things in the future.

5th November 1958] [Srimathi T. N. Anandanayaki]

Coming to the clause itself, hon. Members have already pointed out that the provisions of the Cultivating Tenants Protection Act and Payment of Fair Rent Act may not apply to these mattuvaramdars entirely because certain provisions of those Acts such as eviction of tenants may not be wholly applicable to these mattuvaramdars. For instance under the Cultivating Tenants Protection Act, cultivating tenants could be evicted for some reasons like arrears of rent, causing injury to crop, negligence in the performance of the duties and so on. In the case of mattuvaramdars these reasons will not apply because they are engaged by the landlords on payment of certain wages and they have to be continued under the provisions of this Bill. Therefore eviction for arrears of rent cannot apply in the case of mattuvaramdars. Then regarding eviction for causing injury to the crop, here the mattuvaramdar is engaged by the landlord as a servant and the entire cultivation, supervision such as finding the seedlings, manuring the land and bearing the charges for cultivation of the crop are entirely under the control of the landlord, unlike the tenant in the Cultivating Tenants Protection Act of 1955. For these reasons, the entire Cultivating Tenants Protection Act will not be applicable to these mattuvaramdars. I am glad that the Government have taken into consideration these facts and brought amendment. While welcoming that, I would once again request the Government to amend the first paragraph of the clause.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, quite a number of Advocates took part in this discussion. It happens that a budding lawyer generally agrees with the senior lawyer. (Laughter.) I may however point out that this clause has two parts (*a*) and (*b*). In sub-clause (*a*) the provisions of those Acts will apply to mattuvaramdars and as such shall be deemed to be a cultivating tenant. The mattuvaramdars get all the rights of the cultivating tenants. But under sub-clause (*b*) the mattuvaramdars shall continue as mattuvaramdars on the same terms as are applicable to them immediately before the commencement of this Act. That means that they do not get all the rights of the Cultivating Tenants Protection Act. Therefore these are these two divisions one sub-clause providing that all the rights and privileges derived from the Cultivating Tenants Protection Act will apply to them and the other which does not, give that privilege to them. Therefore it is necessary to say : 'Notwithstanding anything contained in the Madras Cultivating Tenants Protection Act, and the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act shall apply to these mattuvaramdars'. The provisions of those Acts will not apply to sub-clause (*b*). In order to make the position clear I am told, the clause as it stands is all right and that there is nothing wrong about it. Therefore I oppose the amendment.

The other question raised is : 'Why not reduce the limit to five instead of fixing it at 10'. It may also be said, 'Why not reduce it to 3', if it is fixed at 5. Therefore after considering all

these aspects we have come to the conclusion that 10 acres will be the reasonable limit. That is why 10 acres has been fixed. I am unable to accept the amendment in respect of that matter also.

The amendments of Sri N. K. Palanisami and the amendment of Sri S. M. Annamalai were put and lost.

The amendment of Sri M. Kalyanasundaram and the amendments of Sri S. Lazar were, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 7 as amended was put and carried.

Clause 8.

MR. SPEAKER : The motion is—

'That clause 8 do stand part of the Bill.'

SRI M. KALYANASUNDARAM : Sir, I move :

'In sub-clause (1), in line 2, *for* the figure "1957", *substitute* the figure "1956", and in sub-clause (2) *for* the figure "1957", *substitute* the figure "1956".'

The amendment was duly seconded.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move :

'In sub-clause (2) after the word and figure "section 7" in line 15 *add* the following words and figures "and in sub-section 2 of section 9".'

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move :

'In sub-clause (1), *for* the word "thirty" wherever it occurs, *substitute* the word "ninety".'

'*After* the figure and word in sub-clause (1) "section 7", *add* the words "or otherwise".'

'In sub-clause (2), *after* the words "relevant time" *insert* the words "or otherwise".'

The amendments were duly seconded.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move :

'*After* sub-clause (3) of clause 8, *add* the following sub-clause, namely :—

"(4) Notwithstanding anything contained in this section, any order for re-engagaing any mattuvaramdar under this section shall, in respect of any land where there are standing crops on the date of such order, take effect immediately after the harvest of such crops".'

Sir, I want to make one submission. The hon. Member, Sri Kalyanasundaram has moved an amendment, which is similar to the amendment which was already turned down by the House. May I know whether he is right in moving it?

5th November 1958]

MR. SPEAKER : Is the hon. Member, Sri Kalyanasundaram, pressing his amendment?

SRI M. KALYANASUNDARAM : Sir, I am not pressing it.

MR. SPEAKER : Now the clause 1 and the amendments are before the House for discussion.

மூன்றுவது லாயர் என்ன சொல்லுகிறுர் என்று பார்ப்போம். இந்த திருத்தங்களின் பேரில் கனம் அங்கத்தினர்கள் பேசலாம்.

SRI S. M. ANNAMALAI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மாட்டுவாரம்தார்கள் இந்தச் சட்டத்தின் பயனை அடைய வேண்டி அவர் கள் ஒரு மாதத்திற்குள் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும் என்று இருக்கிறது : உண்மையில் பார்த்தால் இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த ஒரு மாதத்திற்குள் நாட்டுப்புறங்களில் இருக்கும் விவசாயிகளுக்கும், அங்கே வேலை செய்து வரும் விவசாயிகளுக்கும் இது விஷயம் தெரியா மல் இருக்கும். இப்படிப்பட்ட ஒரு சட்டம் வந்திருக்கிறது என்று அவர்களுக் குத் தெரியாமல் இருக்கும். ஆகையால் இப்படி முப்பது நாட்கள் என்று இருப்பதை 90 நாட்கள் என்று இருக்கவேண்டும் என்று நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அப்படி அதிகப்படியான அவகாசம் கொடுத்தால் அப்படி நாட்டுப்புறங்களில் வேலை செய்யும் விவசாயிகளுக்கு இதைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டு அதன் பிறகு அவர்கள் விண்ணப்பித்துக்கொள்ள முடியும். அந்த அளவில் இந்த திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய திருத்தமானது :—

'Any mattuvaramdar referred to in clause (a) of section 7 whose engagement has been terminated on or after the 1st January 1957 and before the commencement of this Act on the footing that the said Act did not apply to him at the relevant time or otherwise. . . .'

என்று கொடுத்திருக்கிறேன். இந்தச் சட்டமானது சென்னை மாகாண கவர்னரால் அவசரச் சட்டமாகக் கொண்டு வந்து அதன் பின் இந்த சட்ட மன்றத்தின் முன்னுல் ஒரு மசோதாவாக வந்தது. அப்படி வந்த பிறகு அது ஒரு ஜாயின்ட் செலெக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பப் பட்டது. அதன் பின் அது கைவிடப்பட்டது. அதன் பின் இப்பொழுது இந்த மசோதா மூலமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது வருவதற்கு முன் எவ்வளவோ நிலச் சுவாந்தார்கள் மாட்டு வாரம்தார்களின் மீது பல வழக்குகளைத் தொடர்ந்து 447-வது பிரிவின் கீழ் அவர்கள் மீது ட்ரெஸ்பாஸ் என்ற கிரிமினல் வழக்குகளையும், அத்து மீறி நிலத்தில் பிரவேசித்து நெல்லை அறுத்துக்கொண்டு விட்டார்கள் என்று சிவில் கோர்ட்டுகளிலும் வழக்குகள் தொடர்ந்தும் அவர்களை பயமுறுத்தி இனி மேல் நிலத்தில் பிரவேசிக்க வில்லை என்று எழுதி வாங்கியும் இருக்கிறுர் கள். இனி மேல் பயிரிடாமல் வெளியேறி விடுகிறோம் என்றும் எழுதி வாங்கியிருக்கிறுர்கள். மற்றும் மாட்டு வாரம்தார்களின் மீது சென்னை உயர் நீதி மன்றங்களில் நிலச் சுவாந்தார்கள் தங்கள் சார்பாக தீர்ப்புகள் வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறுர்கள். " சர்ரண்டர் " செய்தவர்களை வழக்கில் ஈடுபடுத்தி இந்தச் சட்டம் வந்தாலும் அவர்களுக்கு இந்தச் சட்டம் செல்லாது என்ற முறையில் எழுதி வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறுர் கள். அப்படிப்பட்ட வழக்குகள் உண்மையாக இருந்தபோதிலும் அவர் களுக்கு இந்தச் சட்டத்தின் பயன் கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே இந்தச் சட்டத்தின் உண்மையான பலன் அவர்களுக்குக் கிடைக்க வேண்டு மென்ற அடிப்படையில் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே இந்த திருத்தத்தை ஏற்றுக்கொண்டு பல மாட்டு வாரம்தார் களுக்கு நல்ல பலன் அடைய இதை ஏற்றுக்கொள்ளவேண்டும். மாட்டு வாரம்தார்கள் இந்தச் சட்டத்தினுல் பலன் அடைவார்களா இல்லையா என்பது

தெரியவில்லை. இதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தும் அவர்களுக்குப் பிரயோசனம் இல்லாமல் போய் விடும் என்ற காரணத்தால் இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுதுள்ள முப்பது நாட்கள் என்பதை 90 நாட்கள் என்று மாற்றவேண்டுமென்ற திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு திருத்தத்தை கொடுத்து மாட்டு வாரம்தார்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படி 90 நாட்கள் என்று மாற்ற வேண்டியது அவசியம் தானு என்பதை கனம் அங்கத்தினர் அவர்களே பார்த்துக்கொள்ளவேண்டும். அப்படி மாற்றுவதனுல் மாட்டு வாரம்தார்களுக்கு உண்மையிலேயே பலன் கிடைக்குமா என்பதை அவர்களே சிந்தித்துப் பார்க்கவேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு காலத்தை கடத்திக்கொண்டு போகிறேமோ அவ்வளவு கவ்வளவு அவர்களுக்கு கெடுதல் என்பதை அவர் உணரவேண்டும். ஆங்கிலத்தில் சொல்லுவார்கள் "டிலே" கால தாமதம் என்று. கால தாமதம் செய்தால் அதன் பலன் கிடைக்காமல் போய்விடும். எவ்வளவு சீக்கிரமாக விறு விறுப்பாக எந்தக் காரியத்தைச் செய்கிறேமோ அப்பொழுதுதான் நல்ல பலன் கிடைக்கும். காலத்தைக் கடத்திக்கொண்டுபோய் ஆறப் போட்டு விட்டால் அதன் பலன் கிடைக்காமல் போய்விடும். அதனுல் முப்பது நாட்கள் என்று இருப்பதை 90 நாட்கள் என்று மாற்ற வேண்டிய அவசியமே இல்லை. உண்மையிலேயே மாட்டு வாரம் தாரர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று கருதினுல் எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமாக விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவுக்கு அவ்வளவு சீக்கிரமாக விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். அப்படிச் செய்து கொண்டால் தான் அவர்களுக்கு நன்மை ஏற்படும். ஆர அமரச் செய்தால் பிரயோசனம் இல்லை. 90 நாட்கள் என்று இருந்தால், இந்த 90 நாட்கள் கழிந்த பிறகு வழக்குத் தொடர்ந்து அது முடிவு பெறுவதற்கு இன்னும் அதிகப்படியான கால தாமதம் ஏற்படும். அதனுல் உண்மையிலேயே மாட்டு வாரம்தார்களுக்கு எந்த விதமான நன்மையும் ஏற்படாது.

முப்பது நாட்களுக்கு அவர்களுக்கு தெரியாவிட்டால் என்ன செய்வது என்று சொல்லுகிறார்கள். அதற்கு என்று ஒரு சராவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. முப்பது நாட்களுக்குள் விண்ணப்பம் செய்து கொள்ளத் தவறிவிட்டால் அதற்கு தகுந்த காரணம் காட்டினுல் அதை ஏற்றுக்கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதனுல் தகுந்த காரணம் இருந்தால் அதை ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆகவே முப்பது நாட்களுக்குள் விண்ணப்பம் செய்து கொள்ளாவிட்டால் தகுந்த காரணம் காட்டி அதற்குப் பிறகு விண்ணப்பம் செய்து கொள்ளலாம் என்று இருக்கும்போது முப்பது நாட்கள் என்று இருப்பதை 90 நாட்கள் என்று மாற்றுவதற்கு அவசியமே இல்லை. அப்படி அமைத்தால் மாட்டு வாரம் தார்களுக்கு அவர் நன்மை செய்கிருரா என்பதை சற்று சிந்தித்துப் பார்க்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே கனம் அங்கத்தினர் அவர்கள் இதை சற்று அமைதியாக ஆராய்ந்து பார்த்து விட்டு தன்னுடைய திருத்தத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி வாங்கிக் கொண்டால் நலமாக இருக்கும் என்றும் நினைக்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஸார், இந்த காலத்தை முப்பது என்று இருப்பதை 90 என்று மாற்றவேண்டும் என்பதற்கா திருத்தம் கொடுத்ததைப்பற்றி கனம் அம்மையார் அவர்கள், ஒரு வழக்கு அறிஞர், நல்ல முறையில் பதில் சொல்லிவிட்டார். ஆகையால் அதை மீண்டும் நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. நியாயமான அளவுக்கு ஒரு காலத்தைக் அமைக்கவேண்டும் என்பதற்காகத்தான் அப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் விண்ணப்பம் செய்துகொள்ளாவிட்டால், அதற்கு தகுந்த காரணம் காட்டினுல் அதை ஏற்றுக்கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதனுல் இந்த திருத்தம் தேவையில்லை. இன்

னும் மற்ற திருத்தங்களையும் ஒத்துக்கொள்வதற்கு இல்லை. ஏனென்றால் பொறுக்குக் கமிட்டியில் இதையெல்லாம் தீர்க்க ஆலோசனை செய்து கடைசியில் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதையொட்டித்தான் இதையெல்லாம் இம்மாதிரியாக வகுத்திருக்கிறோம். ஆகையினால் இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று சொல்லுகிறேன்.

The amendment of Sri M. Kalyanasundaram to sub-clauses (1) and (2) was, by leave, withdrawn.

The amendment of Sri M. Kalyanasundaram to sub-clause (2) and the amendments of Sri S. M. Annamalai were put and lost.

The Government amendment was put and carried.

Clause 8, as amended, was put and carried.

Clause 9.

MR. SPEAKER : The motion is—

'That clause 9 do stand part of the Bill.'

SRI S. M. ANNAMALAI : Sir, I move :

'In sub-clause (1), *for* the word "three" *substitute* the word "two".'

'In sub-clause (2) *for* the word "ten" *substitute* the word "five".'

'*Add* the following as proviso to sub-clause (2) :

"Provided that termination of engagement shall be done once in five years".'

The amendments were duly seconded.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move :

'In sub-clause (2), in line 2 *for* the words "tenacres", *substitute* the words "seven acres".'

The amendment was duly seconded.

SRI S. LAZAR : Sir, I move :

'In sub-clause 1 *after* the words "sales tax" *omit* the words "profession tax".'

'In sub-clause 3 *add* the following as proviso :

"provided that a landowner may also dismiss or terminate the engagement of a mattuvaramdar for misconduct or neglect of duty".'

The amendments were duly seconded.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : மன்றத் தலைவர் அவர்களே, மூன்று 11-50 a.m.
ஏக்கருக்கு அதிகப்படாமல் வைத்திருக்கும் நிலச் சொந்தக்காரர், விற்பனை வரியோ, தொழில் வரியோ, வருமான வரியோ செலுத்தாமலிருந்தால், அவர் தன்னுடைய நிலத்தை சொந்த சாகுபடிக்கு வைத்துக்கொள்ளலாம் என்று இந்த மசோதாவில் இருக்கிறது. சாதாரணமாக ஒன்று இரண்டு

எக்கர்களில் தான் சொந்த பயிர் வைத்துக் கொள்வார்கள். ஆகவே, முதல் உட்பிரிவில் " மூன்று எக்கர்கள் " என்று இருப்பதை " இரண்டு எக்கர்கள் " என்று இருந்தால் போதும் என்று மாற்றும்படி நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப்போலவே, இதற்கு முன்னால் சொல்லிய காரணத்தையே வைத்துக்கொண்டு, " பத்து எக்கர்கள் " என்று இருப்பதையும் " ஐந்து எக்கர்கள் " என்று ஆக்கவேண்டுமென்றும் இண்டாவது உட்பிரிவுக்கு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது உட்பிரிவின் கீழ் கீழ்க்கண்ட ப்ரொவைஸோ ஒன்றைச் சேர்க்கவேண்டும் என்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன் :

' *Add* the following as proviso to sub-clause (2) :

" Provided that termination of engagement shall be done once in five years ".'

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் வேலையிலிருந்து நீக்கவேண்டுமானால் நீக்கவேண்டும் என்ற முறையில் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். காரணம் என்னவென்றால், ஒரு நிலத்தில் வேலை செய்வதென்றால், அதில் ஏறத்தாழ ஐந்து ஆண்டுகள் தொடர்சியாக இருந்தால் தான் அதிலிருந்து பலன் அடையமுடியும். ஆகையால், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் நீக்கக்கூடிய முறையில் அமைந்திருக்கவேண்டுமென்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, மூன்று எக்கர் சொந்தமாக விவசாயத்திற்கு எடுத்துக்கொண்டால் அதில் இருக்கும் மாட்டுவாரக்காரர்களை வெளியேற்றலாம் என்று இருக்கிறது. நான் கேட்டுக் கொள்வதென்னவென்றால், 1956-ம் வருஷத்திய கல்ட்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் சட்டப் பிரகாரம் அதுவே இதற்கும் அப்ளை ஆகிற மாதிரி செய்தால் பொருந்துகிறமாதிரி இருக்கும். அதில் சொல்லியிருக்கிறது. தான் சொந்தமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் பாதி எடுத்துக்கொள்ளலாம், குத்தகைதாரர் இஷ்டப்பட்டால் பழைய குத்தகையைக் கொடுத்து அதில் இருக்கலாம் என்று இருக்கிறது. அதே சட்டம் இதற்கும் பொருந்துகிற மாதிரி கொண்டு வரவேண்டும்.

அந்த மிராசுதார்கள் எந்த பூமியை எடுத்துக்கொள்வது என்பதை அந்த மிராசுதார் தான் தீர்மானிக்க வேண்டும் என்று இருப்பது, அதில் இருக்கக்கூடிய சலுகை கிடைக்காமல் இருப்பதற்கான ஒரு வழி தான் என்று நான் சொல்கிறேன். காரணம் என்னவென்றால், இரண்டு மூன்று மாட்டுவாரக்காரர்கள் இருந்தால் நான் இவ்வளவு தான் கொடுப்பேன் இல்லையென்றால் பூமியிலிருந்து வெளியேறு என்று சொல்வதற்கு வழி இன்று இருக்கிறது. இதிலும் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும். இந்த இரண்டையும் திருத்தி சரியான முறையில் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*SRI R. SRINIVASA IYER : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 9-வது செக்ஷனிலே " ஸேல்ஸ் டாக்ஸ், ப்ரொபஷன் டாக்ஸ் அல்லது இன்கம் டாக்ஸ் " என்று போட்டிருக்கிறது. செலக்ட் கமிட்டியிலே ஏக மனதாக தீர்மானம் பண்ணும்போது, மூன்று எக்கர், மூன்று எக்கருக்கு குறைச்சலாக இருக்கும் மிராசுதாருக்கு இந்தச் சட்டம் வரக்கூடாது ; ஆனால், அவன் ஸேல்ஸ் டாக்ஸ், இன்கம் டாக்ஸ் செலுத்தினால் அந்தச் சட்டம் அவனுக்கும் வரலாம் என்று போட்டோம். இப்பொழுது ப்ரொபஷன் டாக்ஸும் சேர்ந்திருக்கிறது. மாதம் 50 ரூபாய் சம்பாதித்தால் பஞ்சாயத்து இருக்கும் இடங்களில் ப்ரொபஷன் டாக்ஸ் போடப்படுகிறது. வருஷம் 600 ரூபாய் வருகிறவர்கள் ப்ரொபஷன் டாக்ஸ் கட்ட வேண்டியிருக்கிறது. சாதாரண சிறு தொழில் செய்கிறவர்களும், டீ கடை வைத்

5th November 1958] [Sri R. Srinivasa Iyer.]

பவர்களும் கூட இந்த ப்ரொபஷன் டாக்ஸ் கட்டுபவர்களாவார்கள். அவர்கள் ஏதோ 3 ஏக்கர் நிலம் வைத்திருந்தால் அவர்களெல்லாம் இந்த சட்டத்தினால் பாதிக்கப்படுவார்கள். ஆகவேதான் அவர்களையெல்லாம் பாதிக்காத வகையில் சட்டம் கொண்டுவரவேண்டுமென்று, "இன்கம் டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ் செலுத்தினால்தான்" என்று ஏகமனதாக செலக்ட் கமிட்டியில் தீர்மானம் செய்யப்பட்டது. "சேல்ஸ் டாக்ஸ், இன்கம் டாக்ஸ்" இந்த இரண்டு இனத்தையும் சேர்த்திருப்பது சரி. ஆனால், ப்ரொபஷன் டாக்சும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அது சரியல்ல.

'An income of over Rs. 2,000 per annum, என்று வேண்டுமானால் போட்டுக்கொள்ளலாம். மூன்று ஏக்கர் வைத்துக்கொண்டிருந்தால் சொந்த சாகுபடி பண்ணக்கூடாது என்று சொல்வது செலக்ட் கமிட்டியில் முடிவு பண்ணியதற்கு விரோதமாக இருக்கிறது. மாதம் ஐம்பது ரூபாய் சம்பாதித்தால், பஞ்சாயத்து போர்டு ப்ரொபஷன் டாக்ஸ் வசூலித்துவிடும். முனிசிபாலிடியில் மட்டும் இல்லை. எல்லாப் பஞ்சாயத்து போர்டுகளிலும் வந்துவிட்டது. 43 கிராமங்களுக்கும் கண்டிப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன். "சேல்ஸ் டாக்ஸ் அல்லது இன்கம் டாக்ஸ்" என்று செலக்ட் கமிட்டி செய்திருந்தபடியே இருந்தால் நல்லது என்பது என் யோசனை. அப்படிச் செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய இரண்டு திருத்தங்களில் முதல் திருத்தத்தை பற்றி கனம் ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதில் சொல்லியிருக்கிற பிரகாரம், செலக்ட் கமிட்டி உட்கார்ந்து நிர்ணயித்து கொடுத்திருக்கும் ரிப்போர்ட்டிலே வருமான வரி, விற்பனை வரி செலுத்தக் கூடியவர்களுக்கு சொந்த சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு அளிக்கக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த முடிவுக்கு விரோதமாக, இந்த இடத்திலே தொழில் வரி செலுத்துபவர்கள் இது போல் சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று சேர்த்திருப்பது சரியல்ல என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

எனக்குத் தெரிந்த வரைக்கும், இந்த ஒரு பிரிவை இப்பொழுதிருக்கும் ரெண்ட் கண்ட்ரோல் சட்டத்திலிருந்து அப்படியே எடுத்து இதில் புகுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுதிருக்கும் ரெண்ட் கண்ட்ரோல் சட்டத்திலே, சொந்தத்திற்கு ஒருவன் குடியிருப்பதற்கு வீடு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், இதுபோல் விற்பனை வரி, தொழில் வரி, வருமான வரி கொடுப்பவராய் இருந்தால், அப்படி அந்த வீட்டை சொந்த உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று இருக்கிறது. ஆனால், நிலத்தைப் பொறுத்த வரைக்கும் அது போன்ற கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தால், யாருக்கு நாம் இப்பொழுது இந்த வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வருகிறோமோ அந்தப் பலன் அவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடும். உதாரணமாக, கிராமத்தில் இருக்கும் ஆசிரியர் அல்லது ஒரு ப்யூன் போன்ற சதாரண ஆசாமி முதற்கொண்டு இன்றைக்கு இருக்கும் விதிகளின்படி, மாதம் சராசரி 50 ரூபாய் சம்பளம் வந்தால் அவன் தொழில் வரி செலுத்துகிறான். ஒவ்வொரு இடத்திலும் பஞ்சாயத்து போர்டு இருக்கும் என்ற காரணத்தால். அப்படி ஐம்பது ரூபாய் வருமானம் வரக்கூடிய ஒருவருக்கு இந்தப் பலன் கிடைக்காமல் போய்விடும். சிறுநில மிராசுதார்களாக இருக்கும் காரணத்தால், அவர்களுக்கு இந்தச்சட்டம் குறுக்கே நின்று அவர்களுக்குக் கிடைக்கும் பலன் கிடைக்காமல் போய் விடக்கூடாதென்று நோக்கத்துடன் 9-வது பிரிவை நாம் கொண்டுவந்திருக்கிறோம், சிறிய மிராசுதார் சொந்த சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற காரணத்தோடு, இந்த ப்ரொபஷன் டாக்ஸ் என்பதைச் சேர்ப்பதால் நம்முடைய நோக்கம் உள்ளபடியே பாழ்படுகிறது. ப்ரொபஷன் டாக்ஸ் என்று இருப்பதை எடுத்துவிட வேண்டியது மிக மிக அவசியம்.

[Sri S. Lazar] [5th November 1958

அடுத்தபடியாக, இப்பொழுது மாட்டுவாரக்காரர்களைப் பொறுத்து பார்க்கும்போது, சரியானபடி நடக்கவில்லை என்று சொன்னால், அல்லது அவர்கள் குற்றம் புரியக் கூடியவர்களாக இருந்தால், வேலை செய்வதற்கு ஒத்துழைப்பு கொடுக்கக் கூடாதவர்களாக இருந்தால் அவர்களைப் பொறுத்த வரைக்கும் இந்தச் சட்டத்திலே முதலிலிருந்து கடைசி வரையில் துருவிப் பார்த்தால் இப்பொழுது கிடைக்கவே கிடைக்காது. நான் இப்பொழுது சொல்வதற்குக் காரணம், அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும், கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் சட்டத்தின் 7 (பி) பிரிவிப்படி எந்த அளவு இவர்களுக்கு அமுல் செய்ய முடியும் என்று பார்த்தால், வெளியேற்றுவதற்கான வாய்ப்பாவது மூன்றுவது செக்ஷனிலே இருக்கிறது. ஆகவே, தனியாக நான் கொடுத்திருக்கும் இரண்டாவது திருத்தம் தேவை இல்லை என்று எண்ணக்கூடும். கல்டிவேடிங் டெனன்ட்ஸ் சட்டத்தின் மூன்றுவது செக்ஷனைப் பற்றி கனம் அனந்தநாயகி அவர்கள் விவரமாக எடுத்துச் சொன்னூர்கள். அதில் இருக்கும் எந்த எந்த காரணத்திற்காக ஒரு டெனன்டை வெளியேற்ற முடியுமோ அந்தக் காரணம் எதுவுமே மாட்டுவாரம்தாரரைப் பொறுத்த வரைக்கும் பொருந்தாது. அந்த சட்டத்திலே ஐந்து காரணங்கள் காணப்படுகின்றன. முதலாவது குத்தகை பாக்கி (arrears of rent) இருந்தால் மாட்டு வாரந்தாரர்களை வெளியேற்றலாம் என்ற பிரச்னை எழுவதற்கில்லை. குத்தகை பாக்கி என்ற நிலைமை அதில் வராது.

அடுத்தபடியாக, அவர் நிலத்திற்குக் கெடுதல் செய்யக்கூடிய முறையிலே எதாவது செய்தால், அப்பொழுதும் வெளியேற்றலாம் என்று இருக்கிறது. அதே சந்தர்ப்பத்திலே நிலத்தினுடைய கண்ட்ரோல் நிலக்காரனிடத்தில் இருக்கிறது என்று ஹைகோர்ட் முடிவு செய்திருப்பதால் அதைப் பொறுத்தும், மாட்டுவாரம்தாரர்களைப் பொறுத்து அனுவசியமாக குற்றஞ்சாட்டி வெளியேற்றுவதற்கான வாய்ப்பு ஏற்படுமே தவிர, நியாயப் பிரகாரம் அவர்களை வெளியேற்றுவதற்கான வாய்ப்பு அதில் கிடையாது.

நிலத்தைச் சாகுபடி செய்யாமல் விட்டால் அப்பொழுது வெளியேற்றலாம் என்று அந்தச் சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ஒரு வேளை இதிலே பொருந்த முடியும். தனக்கு வேலை வேண்டாம் என்று விலகிவிடலாம். மற்றப்படி அவன் ஒரு தவறு செய்தால், விவசாயிக்கு ஒத்து வேலை செய்யாமல் இருப்பவர்களுக்கு இதுபோன்ற காரியங்களை எப்படி வைத்து வேலை வாங்குவது, நிலத்தின் நிலைமை என்ன ஆவது, சாகுபடி என்ன ஆவது என்பதுபற்றி எந்த விதமான விதிகளும் அமைக்கப்படவில்லை. ஆகையால், கடைசியாக ஒரு ப்ரொவைசோ வேண்டுமென்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

In sub-clause 3 *add* the following as proviso :

" Provided that a land owner may also dismiss or terminate the enagement of a mattuvaramdar for misconduct or neglect of duty ".

மாட்டுவாரம்தாரரை எப்படி வெளியேற்றவேண்டுமென்றால், நான்காவது பிரிவில் 2-வது உப பிரிவில் எப்படிச் சொல்லியிருக்கிறதோ, அதுபோன்று ஒரு விதியை இந்த இடத்தில் கொண்டுவந்து சேர்த்து, இப்பொழுது நாம் திருத்தியிருப்பது போல், அப்படி அவர்களை வெளியேற்றினால், ஒரு வார காலத்திற்குள்ளாக சம்பந்தப்பட்ட தாசில்தாருக்கு அறிவிக்கவேண்டும் என்று விதியிலே சேர்த்துக் கொள்வதில் ஆட்சேபனை இல்லை. இதுபோன்ற ஒரு விதி இருக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து, இதைச் சேர்க்கவில்லையென்றால் கண்டிப்பாக இருவருக்கும் இடையே இருக்கும் நிலைமை சற்று முரண்பட்டு, இருவருக்கு நல்ல பரஸ்பரம் இல்லையென்றால் நிலம் பாழ்படக்கூடிய நிலைமை இருக்கும். இதை நன்றாக அரசாங்கம் கவனித்து, இந்தத் திருத்தத்தை எற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

5th November 1958]

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 9-வது ஷரத்தை நாம் பொறுக்குக் கமிட்டியில் நன்றாக ஆராய்ந்து பார்க்கும்போதே 3 ஏக்கருக்கு விலக்கு என்று இருப்பதை 5 ஏக்கருக்கு என்று திருத்த வேண்டும் என்று அங்கத்தினர்கள் சொன்னார்கள். மூன்று ஏக்கர் என்றாலும், 5 ஏக்கர் என்றாலும் சிறிய விவசாயிகளுக்கு இந்தச் சட்டத்தினால் பாதகம் ஏற்படக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டே 3 ஏக்கர் என்று போட்டால் போதும். அவர்களுக்காவது இந்தப் பாதுகாப்பு அவசியம் இருக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. 12' noon.

ஆனால் இன்றைய தினம் 3 ஏக்கர் உடையவர்களாக இருந்தாலும் வருமான வரி கட்டுபவர்களுக்கு, இந்த விலக்குச் செல்லாது என்று திருத்தப்படுகிறது. இது மிகவும் அநியாயமாவதாகும். ஒரு கையால் கொடுத்ததை மறு கையால் பறித்துவிடுவதைப் போலத்தான் இருக்கிறது. ஏனென்று கேட்டால் ஒரு சாதாரண பஞ்சாயத்து ஏரியாவில் கூட வருஷத்திற்கு 600 ரூபாய்க்கு மேல் வருமானம் இருக்கிறவர்களுக்கு வருமான வரி விதிக்கப்படுகிறது. மூன்று ஏக்கர் வைத்துக் கொண்டு கிராமத்தில் பாடுபடுகிற எந்தச் சிறிய விவசாயிக்கும்கூட வருஷத்திற்கு 600 ரூபாய் வருமானம் இடைக்காமல் போகாது. அதுவும் திருச்சி ஜில்லாவில் ஒருவன் நெல்லைப் பிடித்து லாரியில் ஏற்றி வேறு இடத்திற்கு அனுப்பினால்கூட ஒருவருக்கு 600 ரூபாய் வருமானம் வந்துவிடும். அப்பட்டமான திண்ணைத்தூங்கியாக இருக்கக் கூடியவர்களுக்கு வேண்டுமானால் வருஷத்தில் 600 ரூபாய்கூட வருமானம் வராது என்று சொல்லலாமே தவிர மற்றவர்களுக்கு வருமானம் வந்துவிடும். பஞ்சாயத்துக்களுக்கு அவர்கள் வருமான வரி செலுத்தும்படியாக நேரிடலாம். அதன் காரணமாக மேலும் அவர்களுக்கு இந்த விலக்குச் செல்லாது என்று சொல்வதானது நம்முடைய நோக்கத்திற்கே முரணாக இருக்கிறது. ஆகவே ஸ்ரீ லாசர் கூறியது போல ப்ரொபஷனல் டாக்ஸ் என்று போட்டிருப்பதை நீக்கிவிட்டு மூன்று ஏக்கர் என்று இருப்பதை இந்தச் சமயத்தில் 5 ஏக்கர் என்று போட முடியுமா என்பதையும்கூட கனம் அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கையேர் வாரக்காரர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டால் வேலையை விட்டு நீக்கப்படலாம் என்று இருப்பதைப்போல மாட்டு வாரக்காரர்களுக்கும் இந்த மாதிரியான ஒரு கட்டுப்பாடு இருக்கவேண்டும். ஒழுக்கக் குறைவாக யாருமே நடந்துகொள்ள மாட்டார்கள் என்று கருத முடியாது. மாட்டு வாரக்காரர்களுக்கு கையேர்வாரக்காரர்களுக்கு **'Any land owner may dismiss—for misconduct or for neglect of duty.'** என்று இருப்பதைப் போல ஏன் போடவில்லை என்பது எனக்குப் புரியவில்லை.

ஆகவே கனம் ஸ்ரீ எஸ். லாசர் அவர்கள் குறிப்பிட்டதுபோல அந்தத் திருத்தங்களையெல்லாம் ஏற்றுக் கொண்டு நல்ல முறையில் இந்த ஷரத்தைத் திருத்தி அமைக்கவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

***SRI T. SAMPATH** : தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் இந்த ஷரத்தை அதாவது ப்ரொபஷன் டாக்ஸ் என்று சேர்த்து இருக்கக்கூடிய வார்த்தை சிறு நிலச்சுவான்தார்களுக்கு மிகவும் பாதகத்தை விளைவிக்கும் என்று குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டியில் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபோது சிறு மிராசுதார்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும், அவர்களுக்குச் சலுகை கொடுக்கவேண்டும் என்று விஷயம் செலக்ட் கமிட்டி கூட்டத்தில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

Small land owners owning three acres and without any other means of livelihood and who do not pay any sales tax or income tax are to be completely exempted from the provisions of this Act.

என்பதாகும். இப்போது இந்த ப்ரொபஷனல் டாக்ஸ் என்று வார்த்தையைச் சேர்த்திருப்பதனுல் அவர்கள் எப்படிப் பாதிக்கப்படுவார்கள் என்பதை கனம் ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னுர்கள். ஒரு சாதாரண விவசாயின் வருமானம்கூட வருஷத்திற்கு 600 ரூபாய்க்கு மேல் போய் அவர் பஞ்சாயத்துக்கு வருமான வரி கட்டக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே ஒரு பக்கத்தில் சிறு நிலச் சுவான்தார்களுக்கு நிவாரணம் அளிப்பது போல செய்துவிட்டு இந்தத் திருத்தத்தின் மூலம் அதைப் பதிப்பது என்பது உசிதமாக இல்லை. ஆகவே ஸ்ரீ லாசர் அவர்கள் குறிப்பிட்டது போல ப்ரொபஷனல் டாக்ஸ் என்று இருப்பதை எடுத்துவிடவேண்டும் என நானும் வலியுறுத்துகிறேன்.

இரண்டாவதாக மாட்டு வாரக்காரர்களை தக்க காரணங்களைக் கொண்டு நீக்குவதுபோல் கையேறு வாரக்காரர்களை நீக்குவதற்கு வகையிருக்க வேண்டும். ஒழுங்கீனராக நடந்து கொண்டால் நீக்குவதற்கும் வழி இருக்க வேண்டும். ஆகவே லாசர் அவர்களுடைய திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த ஷரத்தில் வருமான வரி கட்டுகிறவர்களுக்கு விதி விலக்கு கிடையாது என்பது பொறுக்குக் கமிட்டியில் சேர்க்கப்படவில்லை. புதிதாக சர்க்கார் சேர்த்துவிட்டார்கள். இதனுல் சிறு விவசாயிகள் பாதிக்கப் படுவார்கள். ஆகவே இதை விலக்கிவிட வேண்டுமென்று எனக்கு முன் பலர் பேசினுர்கள். அவர்களுடைய கருத்தை நான் ஆதரிக்கிறேன் என்ருலும் முழுக்கவும் அதை எடுக்கவேண்டாம். இத்தனை ரூபாய்க்கு மேல் வருமான வரி கட்டுகிறவர்களுக்கு விதி விலக்கு செல்லாது என்ருவது போடலாம். ஏனென்ருல் சிறிய மிராசுதார்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமே தவிர அதிகமான வருமான வரி செலுத்தக்கூடியவர்களுக்கு இந்த நிவாரணம் அளிக்கவேண்டும் என்பது சரியல்ல.

அடுத்தபடியாக ஸ்ரீ லாசர் குறிப்பிட்ட திருத்தத்திலும்கூட சர்க்காருடைய வாசகத்திலும் " டிஸ்மிஸல் " என்ற வார்த்தை வருகிறது. " டிஸ்மிஸ் " என்பது வார்த்தை அளவில்கூட சரியாக இல்லாத காரணமாக அந்த வார்த்தைக்குப் பதிலாக dispense with or remove என்ருவது போடலாமா என்று யோசிக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த ஷரா சின்ன விவசாயிகளை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்பது தான் நமது நோக்கம். அதிலே விற்பனை வரி, வருமான வரி, உத்யோக வரி இவை எல்லாம் கொடுக்கிறவர்கள் கொஞ்சம் பணவசதி உள்ளவர்கள்தாம். அவர்களை சின்ன மிராசுதார்கள் என்று சொல்வதற்கில்லை. அப்படி எண்ணித்தான் இந்த ப்ரொபஷனல் டாக்ஸ் என்பதைச் சேர்த்தோம். ஆனுல் கனம் அங்கத்தினர்கள் பேசியதிலிருந்து பார்த்தால் சிறு பஞ்சாயத்துகளில்கூட 600 ரூபாய்க்கு மேல் வருமானம் என்ருல் வரி போட்டுவிடுவார்கள். இதனுல் சிறு விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படுமோ என்றுகூடத் தோன்றுகிறது. ஆகவே எனக்கு " ப்ரொபஷனல் டாக்ஸ் " என்பதை நீக்குவதில் ஆட்சேபனை இல்லை. அதை ஒத்துக் கொள்கிறேன்.

Sir, I am accepting the amendment of Sri S. Lazar. I think the expression ' profession tax ' occurs in sub-clause (1) and also in another place. In regard to the other amendment of Sri S. Lazar, I may say that it is not necessary, because the tenant will be governed by the Cultivating Tenants Protection Act. There is provision for taking action if the man acts in a negligent

5th November 1958] [Sri M. A. Manickavelu]

way or in a manner destructive of, or injurious to, the land or any crop thereon. So, I think the other amendment of Sri S. Lazar is not necessary. I accept the amendment seeking to delete the words 'profession tax' wherever they occur. I do not accept the other amendments.

MR. SPEAKER : The words 'profession tax' occur in sub-clauses (1) and (2). That means both these sub-clauses have to be amended.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"In sub-clauses (1) and (2), *omit* the words 'profession tax' occurring after the words 'sales tax'."

The amendments of Sri S. M. Annamalai were put and lost.

MR. SPEAKER : As hon. Member Sri M. Kalyanasundaram is absent, his amendment is deemed to have been withdrawn.

The amendments of Sri S. Lazar were, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 9, as amended, was put and carried.

Clauses 10 and 11 were put and carried.

Clause 12.

MR. SPEAKER : The motion is :—

"That clause 12 do stand part of the Bill."

SRI S. M. ANNAMALAI : Sir, I move :

"*Add* at the end the following :

'the decision with regard to the scope and applicability of this Act rests mainly witn the Tahsildar or the Revenue Divisional Officer as the case may be.' "

என்று நான் திருத்தம் பிரேரேபித்திருக்கிறேன். காரணம், சில வழக்குகள் சிவில் கோர்ட்டுக்குப் போகின்றன. அதாவது 440-வது பிரிவுப்படி "ட்ரெஸ் பாஸ்" செய்ததாக துராக்ரதமாக வயலுக்கும் சென்று அங்கே இருந்ததை எடுத்துச் சென்று விட்டார்கள் என்று யார் பேரிலாவது மிராசுதார் வழக்குத் தொடரலாம். அப்படிப்பட்ட வழக்குகள் சிவில் கோர்ட்டுக்குப் போகின்றன. அப்படிப்பட்ட வழக்குகளை விசாரிக்கும் உரிமைகூட தாசில்தாருக்கும் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கும் இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்தத் திருத்தத்தைப் பிரேரேபித்திருக்கிறேன். இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

The amendment was duly seconded.

* THE HON. SRI M. A. MANICKAVELU : There is no need for this amendment because this is only barring the jurisdiction of Civil Courts. In the clause itself, the position is made clear and it

is stated therein, "No civil court shall entertain any suit or other proceeding to set aside or modify any order, decision or award passed by any Tahsildar, Revenue Divisional Officer or other authority. . . ." It is quite understandable. So, I oppose the amendment.

The amendment was put and lost.

Clause 12 was put and carried.

Clause 13 was put and carried.

Clause 14.

MR. SPEAKER :—The motion is :—

"That clause 14 do stand part of the Bill."

SRI S. LAZAR : Sir, I move—

"At the end of clause 14 *add* the following words :—

'as soon as possible after they are made and shall be subject to such modifications whether by way of repeal or amendment as the Legislature may make within thirty days on which the Houses actually sit either in the same session or in more than one session.'"

SRI M. KALYANASUNDARAM : I second the amendment, Sir.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்திலுள்ள அம்சம் இந்தச் சட்டசபையில் இயற்றப்படும் ஒவ்வொரு சட்டத்திலும் இருக்கிறது. இயற்றப்படும் சட்டம் அமல் நடத்தப்படும்போது எதாவது சங்கடங்கள் இருந்தால் அவைகளை நீக்குவதற்கான உத்தரவுகளைப் போடுவதற்கான அதிகாரத்தை அரசாங்கத்தார் 14-வது பிரிவில் எடுத்துக் கொள்கிறார்கள். அந்த அதிகாரம் அரசாங்கத்தாருக்குக் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால், அரசாங்கம் அவ்வாறு போடக்கூடிய உத்திரவுகளில் நகலை சட்டசபையில் வைக்க வேண்டுமென்று இந்தப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, சட்டசபை அங்கத்தினர்கள் அந்த உத்தரவுகள் சம்பந்தமாகத் தெரிவிக்கும் அவர்களுடைய கருத்துக்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு இந்தப் பிரிவில் வகை செய்யப்படவில்லை. அதாவது, அந்த உத்தரவை எந்த முறையிலாவது திருத்த வேண்டுமென்று சட்டசபை கருதினால் அந்த முறையில் அதைத் திருத்துவதற்கோ அல்லது அந்த உத்தரவு வேண்டாம் என்று சட்டசபை அபிப்பிராயப்பட்டால் அதை ரத்துசெய்வதற்கோ இந்த மசோதாவில் வகை செய்யப் படவில்லை. இந்தக் குறையை என் திருத்தம் நீக்குகிறது. இந்த அம்சம் சட்டசபை இயற்றும் ஒவ்வொரு சட்டத்திலும் இருக்கிறது. பஞ்சாயத்துச் சட்டத்தை எடுத்துக் கொண்டால் அதிலே ஒரு பிரிவில் இந்த அம்சம் இருக்கிறது. அந்தச் சட்டத்திலுள்ள பிரிவை வாசிக்கிறேன்.

"Clause 198 (2) : "All orders made under sub-section (1) shall as soon as possible after they are made, be placed on the table of both Houses of the Legislature and shall be subject to such modifications by way of amendments or repeal as the Legislative Assembly may make within fourteen days on which the House actually sits either in the same session or in more than one session."

5th November 1958] [Sri S. Lazar]

இந்த அம்சம் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் சட்டத்திலும் இருக்கிறது. இந்த மாதிரி எந்தச் சட்டங்களிலெல்லாம் இந்த அம்சம் இருக்கிறதென்று நான் வரிசைக்கிரமமாகச் சட்டங்களை குறிப்பிட்டுக்கொண்டே போகமுடியும். நாம் இயற்றும் ஒவ்வொரு சட்டத்திலும் இந்த அம்சத்தைப் புகுத்திக் கொண்டே போகிறோம். எனவே இந்த மசோதாவிலும் இந்த அம்சத்தைப் புகுத்துவதற்காக என் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டு மென்று கனம் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒரு திருத்தத்தைப் பொறுத்தவரையிலாவது, கனம் அங்கத்தினர் ஸ்ரீ லாசர் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை ஆதரிக்கும் நிலையில் நான் இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருவதில் அவருடைய நோக்கமும் என்னுடைய நோக்கமும் வேறுபடலாம். சட்டம் சம்பந்தமாக சர்க்கார் பிறப்பிக்கும் உத்தரவுகள் சட்டசபையில் திருத்தங்களுக்கு உட்பட வேண்டுமென்பதுதான் இந்தத் திருந்தத்தின் நோக்கம். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டு மென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I am not in a position to accept the amendment, because we have to make a distinction between clauses 13 and 14. Clause 13 deals with "Power to make rules" and Clause 14 deals with "Power to remove difficulties". They are intended for different purposes. That being the case, it may not be desirable to bring this clause on a par with clause 13. So, I oppose the amendment.

SRI S. LAZAR : I would like to draw the attention of the Hon. Minister to clause 198 of the Madras Panchayats Bill which we have passed. An exactly similar provision is found there. If necessary, I shall pass on a copy of this Bill for reference by the Hon. Minister.

MR. SPEAKER : The Hon. Minister has said that he was not accepting it.

The amendment was put and declared lost.

SRI M. KALYANASUNDARAM : I demand a poll, Sir.

(The Division Bell was rung.)

MR. SPEAKER : Shall I put Mr. Lazar's amendment to vote again?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I would like to suggest a small change in it and accept the amendment in a modified form. We are not having the provision in the form suggested by Mr. Lazar. That is the real difficulty. In the Madras Panchayats Bill which we have passed, we are having it in the form I am going to suggest now. So, I would respectfully submit that the amendment that I am proposing may be accepted and that Sri Lazar may withdraw his amendment. I move— 12-20 p.m.

"At the end of clause 14 *add* the following words :—

'as soon as possible after they are made and shall be subject to such modifications whether by way of repeal or amendment as the Legislature may make in the same session or in the next session '."

My amendment proposes the omission of the words 'within thirty days on which the Houses actually sit either' from Mr. Lazar's amendment and the substitution of the words 'the next' for the words 'more than one' therein.

The amendment of Sri S. Lazar was, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 14, as amended, was put and carried.

Clause 1 and the Preamble

• THE HON. SRI M. A. MANICKAVELU : I move—

"In clause 1—

(i) in the heading, *for* the words 'and extent', *substitute* the words 'extent and commencement'.

(ii) *After* sub-clause (2), *add* the following sub-clause, namely :—

'(3) It shall come into force on the 1st day of April 1959'."

SRI S. M. ANNAMALAI : I move—

"In sub-clause (1) *omit* the word 'Tiruchirappalli'."

"In sub-clause (2) *for* the words 'villages . . . Schedule I', *substitute* the words 'whole of the State of Madras'."

SRI M. SELVARAJ : I second the amendments.

SRI M. KALYANASUNDARAM : I move—

"In sub-clause (2) *omit* the words and figure 'specified in Schedule I' in line 21."

"*After* the word and figure 'Schedule I', in line 21, *add* the following 'and any other village which may be notified by the Government'."

SRI N. K. PALANISAMI : I second the amendments.

SRI S. LAZAR : I move the following amendment—

"*Add* the following as sub-clause (3).

'(3) It shall come into force on the 1st April 1959'."

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

"*After* the word 'mattuvaram' in line 6 of the Preamble, *add* the following in Tirunelveli district called 'pethuvaram'."

The amendment was duly seconded.

MR. SPEAKER : Clause 1, the Preamble and the amendments are before the House for discussion.

5th November 1958]

SRI S. M. ANNAMALAI : சட்டமன்ற தலைவர் அவர்களே, இந்த மாட்டு வாரந்தார்களும், கையேர் வாரந்தார்களும் திருச்சி மாவட்டத்தில் மட்டுந்தான் இருக்கிறார்கள் என்பது சர்க்காரின் கொள்கை. ஆனால் இவர்கள் இந்த மாநிலம் பூராவிலும் இருக்கிறார்கள் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மாட்டு வாரந்தார், கையேர் வாரந்தார் என்ற பெயர்களானது, நியாயவாரச் சட்டம் அமுலுக்கு வந்த பின்னர்தான், அந்த சட்டத்திலிருந்து நிலச் சொந்தக்காரர்கள் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் மாட்டுவாரந்தார், கையேர் வாரந்தார் என்ற புதுப் பெயர்களை கொடுத்திருக்கிறார்கள். மாட்டு வாரந்தார் என்பவர் மாட்டோடு வாரம் பயிரிடுகிறவர் என்று சொல்லப்படுகிறது. இது, திருச்சி மாவட்டத்தில் மட்டுமல்ல இருப்பது. இவர்களுக்கு உண்மையிலேயே நன்மை செய்ய வேண்டுமென்ற கருத்து இந்த சர்க்காருக்கு இருக்குமானால், ஒரு தனிக் குழுவை நியமிக்கவேண்டும். இ இருந்து ரெவன்யூ போர்ட் மெம்பர் ஒருவரை அனுப்பி இரண்டு மணி நேரத்தில் கையேர் வாரந்தார், மாட்டுவாரந்தார் இவர்களின் கஷ்ட நஷ்டங்கள் என்ன? எந்த எந்த கிராமங்களில் இவர்கள் இருக்கிறார்கள் என்று இரண்டு மணி நேரத்திற்குள் ஒன்றும் விசாரித்து அறிந்துவிட முடியாது. இந்தளவில் இரண்டு மணி நேரம் விசாரித்து விட்டு 43 கிராமங்களில்தான் இவர்கள் இருக்கிறார்கள் என்று அதற்கு ஒரு சட்டம் கொண்டு வந்து, அந்தச் சட்டத்திலும் பலவித ஓட்டைகளை புகுத்தி அதன் மூலம் விவசாயிகளை வேண்டுமென்றே அழுத்துகிறார்கள். உண்மையிலேயே அவர்களுக்கு நன்மையை செய்யவேண்டுமென்ற நோக்கம் இந்த சர்க்காருக்கு கிடையாது. அதேபோல் கையேர் வாரந்தார்கள் இந்த மாநிலம் பூராவும் இருக்கிறார்கள். கையேர் வாரந்தார் என்றால், புருஷன் நிலத்தில் உழுவான், அதோடு தண்ணீர் பாய்ச்சுவதும் அவன் வேலை, மனைவியானவள் களை பறிப்பது, நடவு நடுவது போன்ற காரியங்களைச் செய்வாள். இப்பொழுது பல மாவட்டங்களிலும் மின்சாரம் பரவிக் கொண்டு வரும் காரணத்தினால் நிலச் சொந்தக்காரர்கள் பம்ப் செட்கள் வைத்து சொந்த சாகுபடி வைத்துக்கொண்டு, கையேர் வாரந்தார்களை வைத்துக் கொண்டு எட்டில் ஒரு பாகம், பத்தில் ஒரு பாகம், பனிரெண்டில் ஒரு பாகம் என்று கொடுக்கக் கூடியதொரு முறை பிற மாவட்டங்களிலும் இருக்கின்றன. எல்லா மாவட்டங்களிலும் இந்த கையேர் வாரந்தார்களும், மாட்டு வாரந்தார்களும் இருக்கிறார்கள் என்று சொல்லித்தான் என் திருத்தத்தை கொடுத்திருக்கிறேன். நான் இந்த அரசாங்கத்திற்கு சவால் விடுகிறேன். வேண்டுமானால் ஒரு குழுவை நியமிக்கட்டும். அந்தக் குழு விசாரித்து இந்த மாட்டு வாரந்தார்களும், கையேர் வாரந்தார்களும் பிற மாவட்டங்களில் இல்லை என்று சொன்னால் நான் ராஜிநாமா செய்கிறேன். அல்லது அப்படி பிற மாவட்டங்களில் இருக்கிறார்கள் என்று அந்தக் குழு உண்மையில் நினைக்குமானால் இந்த மந்திரி சபை ராஜிநாமா செய்யுமா என்று நான் சவால் விட்டு கேட்க ஆசைப்படுகிறேன்.

MR. SPEAKER : சட்டசபையில் சவால் விடக்கூடாது.

SRI S. M. ANNAMALAI : அடுத்தபடியாக, 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு பிறகுதான் இந்த சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். சர்க்கார் மூலம் இந்த திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். ஏன் இப்படி கொண்டு வர வேண்டும்? சில நில சொந்தக்காரர்கள் இந்த நாலைந்து நாட்களில் சர்க்காரை அணுகி இதை எப்படியாவது ஒத்திப் போட வேண்டுமென்று கேட்டுக் கொண்ட காரணத்தினால்தான், அப்படி ஒரு சதி செய்துதான் 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு பின்னர்தான் இது அமுலுக்கு கொண்டு வரவேண்டுமென்ற திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அவசரச் சட்டம் கவர்னர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டு அது பின்னர் செலக்ட் கமிட்டிக்குப் போய் அது கைவிடப்பட்டது. இதற்குள் நிலச் சொந்தக்காரர்கள் எவ்வளவு கையேர் வாரந்தார்களையும், மாட்டு வாரந்தார்களையும் நிலத்தை விட்டு வெளியேற்ற வேண்டுமோ அவர்களையெல்லாம் வெளியேற்றி விட்டார்கள். அப்படி வெளியேற்றும்

பட்ட பிறகுதான் இந்தச் சட்டம் இந்த சட்ட மன்றத்தில் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இதற்கும், குளித்தலையில் உள்ள சில நிலச் சொந்தக் காரர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் "ரிட்" போட்டிருக்கிறார்கள். கையேர் வாரம், மாட்டுவாரச்சட்டம் செல்லாது, நியாயவாரச்சட்டம் செல்லாது என்று சொல்லி "ரிட்" போட்டிருக்கிறார்கள். இந்த சட்டத்தை 1959-ம் வருஷம் வரை தள்ளிப் போட்டால் எப்படியாவது "ஸ்டே ஆர்டர்" வாங்கி விடலாம் என்று நினைக்கிறார்கள். அப்படி "ஸ்டே" வாங்கி இந்த சட்டத்தை அமுல் செய்ய முடியாமல் இதை நிறுத்தி விடலாம் என்ற நோக்கத்தோடுதான் "ரிட்" தாக்கல் செய்து விட்டு இந்த சர்க்காரை அணுகி எப்ரல் 1959-ம் வருஷம் வரையில் ஒத்தி வையுங்கள் என்று சொல்லி, மறைமுகமாக ஒரு சதி செய்துகொண்டு வந்த திருத்தந்தான், இந்த திருத்தம். ஆகவே எனது திருத்தத்தை எற்றுக் கொண்டு சர்க்காரின் திருத்தத்தை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

12-30 p.m. SRI M. KALYANASUNDARAM: ஸார், என்னுடைய திருத்தங்கள் இரண்டு. ஒன்று சட்டத்தில் ஷெட்யூல்லில் குறிப்பிட்டிருக்கிற கிராமங்களுக்கு இந்த சட்டம் அமலாகும் என்று இருப்பதை மாற்றி ஜில்லா பூராவுக்கும் இந்த சட்டம் அமுலாகும் என்று கொண்டு வரவேண்டுமென்று ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். இதை சர்க்கார் ஒப்புக் கொள்ளாவிட்டால் இபபோது ஷெட்யூலில் இருக்கும் கிராமங்களை தவிர இன்னும் இதர கிராமங்களிலும் இந்தமாதிரி நிலைமை இருந்தால் அந்த கிராமங்களுக்கும் இந்த சட்டத்தை அமுலாக்கும் அதிகாரம் சர்க்காருக்கு இருக்க வேண்டும் என்று எனது இரண்டாவது திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். இந்த திருத்தத்தையே ஏற்றுக்கொண்டால் பிரச்னையை சுலபமாக தீர்த்துவிடலாம். இப்போது இருக்கின்ற சட்டத்தின் மூலமாக கையேர் வாரம்தார்களுக்கோ அல்லது மாட்டேர்வாரம்தார்களுக்கோ பிரமாதமான சலுகை ஒன்றும் கிடைக்கப்போவதில்லை. அப்படி இருக்கையில் இந்த சட்டம் சில கிராமங்களுக்குத்தான் செல்லுபடியாகுமென்று கிராமங்களை கட்டுப்படுத்த வேண்டியதின் அவசியம் என்ன என்பதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏதோ ரெவன்யூ போர்டு மெம்பர் போய் பார்வை யிட்டு வந்தார்கள் என்று சொல்லுகிறார்கள். ரெவின்யூ போர்டு மெம்பர் இரண்டு கிராமங்களுக்குப் போய், இரண்டு மணி நேரம் விசாரித்துவிட்டு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார் என்றால் அது ஜில்லா பூராவும் இருக்கும் நிலைமையை தெரிவிப்பதாக இருக்காது என்பதை நாம் திட்டவட்டமாக கூற முடியும். ஆகவே இதன் அடிப்படையில் இந்த கருத்து திட்டவட்டமான முடிவு என்று எடுத்துக்கொள்வது நியாயமல்ல. திருச்சி ஜில்லாவில் பல கிராமங்கள் இருக்கின்றன. இந்த கிராமங்களைப்பற்றி பல கன்ஸிலியேஷன் ரிப்போர்டுகளிலும் கூறப்பட்டிருக்கின்றன. இந்த கிராமங்களுடைய பெயர்களையெல்லாம் என்னுடைய திருத்தத்தில் ஷெட்யூலில் சேர்க்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். அல்லது இதை இப்போது குறிப்பிட்டிருக்கும் ஜில்லா பூராவுக்கும் அமுல் நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* SRI R. SRINIVASA IYER: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை திருச்சி ஜில்லாவில் பூராவும் அமுல் நடத்தப்படவேண்டும் என்றுள்ள ஒரு திருத்தமும், இப்போது ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கும் 43 கிராமங்கள் தவிர கூடுதல் கிராமங்களையும் சேர்த்துக்கொள்ள சர்க்காருக்கு அதிகாரம் இருக்கவேண்டும் என்றுள்ள இன்னொரு திருத்தமும் இப்போது சபை முன் இருக்கின்றன. இதைப்பற்றி ஒரு அதிகாரி இரண்டு மணி நேரம் தான்போய் விசாரித்தார் என்று ஒரு குற்றச்சாட்டையும் சொல்லப் பட்டது. இந்த மசோதா சம்பந்தமாக ஆர்டினன்ஸ் வருவதற்கு முன்பு இதைப்பற்றி செலக்ட் கமிட்டியில் விவாதிக்கிற சமயத்தில் இந்த ஜாபிதாவை வைத்துக்கொண்டு இன்னின்ன கிராமங்கள் சேர்க்கவேண்டும், இன்னின்ன கிராமங்களை நீக்கவேண்டும் என்று விவாதித்து இரு தரப்

பினரும் ஒத்துக்கொண்டு ஒரு ஜாபிதா தயாரிக்கப்பட்டது. அப்போது அதில் 28 கிராமங்கள்தான் இருந்தன. அதை அங்கிருந்த அங்கத்தினர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டார்கள். . . .

SRI S. M. ANNAMALAI : On a point of order, Sir. அப்போது நடந்த ஜாயிண்ட் செலக்ட் கமிட்டியில் நான் minutes of dissent கொடுத்திருக்கிறேன். அதைப்பார்க்காமல் அங்கிருந்த அங்கத்தினர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் false allegation செய்கிறார்கள் . . .

* SRI R. SRINIVASA IYER : The expression 'false allegation' is absolutely unparliamentary, Sir. His dissenting minute does not refer to the number of villages at all. What I say is absolutely correct. Let him look at the dissenting minutes again and withdraw the expression 'false allegation'.

MR. SPEAKER : Why there should be so much heat over this, I do not understand. Why should the hon. Member Sri Annamalai use words such as 'false allegations', when his dissenting minute does not refer to the number of villages? I think it is not decorous to use words like 'false', and 'lie' in the discussion here. I would appeal to the hon. Member not to use such words. He should withdraw the word 'false'. He may use some other word to express his idea. I suggest to him that he may use the word 'incorrect' instead.

SRI S. M. ANNAMALAI : On a point of order, Sir. என்னுடைய minute of dissent-ல் மாகாணம் பூராவும் இது வேறு வேறு பெயரில் இருக்கின்றன. ஆகவே இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதை சரிவர கனம் அங்கத்தினர் அவர்கள் பார்க்காமல் நான் என் minute of dissent-ல் இதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை என்று சொல்லுவது முறையாகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : I am not here to read the dissenting minutes of the hon. Member. If the hon. Member Sri Srinivasa Iyer says that what he says is correct, the hon. Member Sri Annamalai may say on a point of personal explanation that it is incorrect. Anyway I strongly deprecate the use of the word 'false' and similar words. The hon. Member will please withdraw that word. He may say it is incorrect.

SRI S. M. ANNAMALAI : I withdraw it, Sir.

* SRI R. SRINIVASA IYER : Let me refer to the dissenting minutes. The hon. Member Sri Kalyanasundaram has said that it should be made applicable to the 28 villages only where such peculiar set up is enforced. The view that it should be extended to the entire district or that Government should take power to extend it to other places now expressed through these amendments, is not expressed there. So far as the dissenting minute of my hon. Friend on my right is concernd, he did not append a list of villages to his minute of dissent. What I am at is this. I have no objection to the Government extending the provisions of this Act to other places. But let them extend it by passing a fresh legislation. If anything has got to be added to the schedule, let it be

done by the Legislature. Let it not be done by an order of the Government. If it is brought before the Legislature the public of the villages to be affected will know what is going to be done and they may have a say in the matter as to whether such a set up is prevalent there or not. At the time the Bill was thought of, we contemplated applying the provisions of the Bill only to 28 villages but now we have made it applicable to 43 villages. If the Government want to extend the provisions of the Act let it be done through legislation and not by an order of the Government. That is my submission.

Regarding the amendment to enforce the Act from 1st January 1959, it is only intended for the purpose of getting over the existing crops on the land. We need not give retrospective effect since it will deprive people to whom protection is sought to be given. Sufficient protection is already there. It is not necessary to go back from 1st January 1959.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடையபேரில் இதில் இருக்கின்ற திருத்தம் திருநெல்வேலி ஜில்லாவிலும் இதேபோன்றுபேத்து வாரம் என்று இருப்பதை இதோடு சேர்த்துக்கொள்ள வேண்டு மென்பது. கழிந்த சட்டசபை பட்ஜெட் கூட்டத்தின்போது எல்லா ஜில்லாக்களிலிருந்து பல விவசாயிகள் இங்கு வந்து தங்களுடைய குறை களை தெரிவித்தார்கள். திருநெல்வேலி ஜில்லாவிலிருந்தும் சுமார் 300 பேர்கள் இங்கு வந்திருந்தார்கள். அவர்களுடைய குறைகளைப்பற்றி அப்போது தெரிவித்தார்கள். இந்த பேத்துவாரம்தார்கள் தங்களுடைய குறைகளைப்பற்றி இதற்கு முன் பல தடவை சொல்லியிருக்கிறார்கள். இது மாத்திரமல்ல, மற்ற ஜில்லாக்களிலும் வெவ்வேறு பெயரில் பலவிதமான வாரம்தார்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் இதே போன்று சட்டம் கொண்டு வரவேண்டும். இப்போது இருக்கின்ற சட்டத்திலே நாம் ஒட்டுப் பிளாஸ்திரி போடுவது போல் பல திருத்தங்களை கொண்டு வந்து நிறைவேற்றினாலும் கூட இந்தமாதிரியான சட்டங்கள் எல்லாம்கொண்டு வரவேண்டியதின் காரணம் என்ன வென்றால், இந்த நாட்டில் நிலச் சீர்திருத்தத்தை சீக்கிரமாக கொண்டு வராததின் காரணமாகத்தான் இது போன்ற பல சட்டங்கள் அடிக்கடி கொண்டு வரவேண்டிய நிலை ஏற் படுகின்றது. ஆகவே இந்த நிலைமை மற்ற ஜில்லாக்களிலும் இருந்து கொண்டிருப்பதால் அவர்களுக்கும் இப்போதே இந்த சட்டம் அமுலாகும் விதத்தில் கொண்டுவரவேண்டும். அதல்லாமல் அவர்கள் போராடி சிறைக் குச்சென்று ஒன்றிரண்டு உயிர்களை பலியிட்ட பிறகு தான் சட்டத்தை கொண்டு வருவோம் என்ற நிலைமை இருக்கக்கூடாது. காளி, மாரி யாத்தாள் போன்ற தெய்வங்கள் பலி கொடுத்தால் வரத்தை கொடுப்பார் கள் என்று சொல்லுவது போல் விவசாயிகள் போராடி ஒன்றிரண்டு பேர்களின் உயிர்களை பலிகொடுத்த பின்புதான் சட்டத்தைக்கொண்டு வருவோம் என்ற நிலைமையில் சர்க்கார் இருக்கிறதா என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஆகவே நிலசீர்திருத்த சட்டத்தை சீக்கிரமேகொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இதில்பேத்துவாரம்தார்களை யும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்கிற திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய பெயரில் இருக்கும் 9-வது திருத்தம் இந்த சட்டம் 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ந்தேதியிலிருந்து அமுலுக்கு கொண்டு வரவேண்டுமென் பது. ஏற்கெனவே இதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது மிகவும் வரவேற்கத்தக்கது. 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ந்தேதியிலிருந்து இதை அமுலுக்கு கொண்டுவரவேண்டும் என்று சொல்லுவது ஏதோ சில ஆட்களுக்கு இதை தாமதப்படுத்தவேண்டும் என்கின்ற காரணத்திற்காக

5th November 1958] [Sri S. Lazar]

வும், இதனால் சிலர் லாபம் அடைவதற்கு ஏதுவாக இருக்கும் என்றும் இம்மாதிரிப்பட்ட கெட்ட எண்ணத்தோடு தான் இது கொண்டு வரப்படுகிறது என்றும் தவறான எண்ணங்களை கற்பிக்க முற்படுவது உள்ளபடியே இந்த சபைக்கு உகந்தது ஆகாது என்பது தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம், இருக்கக்கூடிய நடைமுறையிலே இந்தச் சட்டம் அமுலுக்கு வருகிற நேரத்திலே என்ன கஷ்டம் இருக்கிறது என்று எடுத்துக் காட்டியதாலே தான் இப்பேர்ப்பட்ட ஒரு திருத்தம் வரவேண்டிய அவசியம் 12 40 p.m. ஏற்பட்டிருக்கிறது. இப்போது அங்குள்ள நிலத்திலே சாகுபடி இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் ஒத்துக்கொள்வார்கள். இப்போது இருக்கும் சாகுபடி எத்தனை மாதங்களுக்கு இருக்கும் என்று அந்த வட்டாரத்தில் போய்ப் பார்த்தவர்களுக்கு தெரிந்திருக்கும். பிப்ரவரி கடைசியிலே, அல்லது பிப்ரவரி பாதியிலே அறுவடைக்கு வரும். அப்படி இருக்கும் போது இந்தச் சட்டத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னால், உள்ளபடியே நாட்டிலே சுமுகமான நிலையையும், சமாதான நிலையையும் இருக்கவேண்டும் என்று கனம் அங்கத்தினருக்கும், அவருடைய கட்சிக்கும் உள்ள கொள்கையா? அல்லது இந்த இடங்களிலெல்லாம் தகராறுகளும், புரட்சிகளும், அடிதடிகளும் ஏற்படவேண்டும் என்பது அங்கத்தினருடைய கொள்கையா என்று புரிந்துகொள்ள முடியவில்லை. நிலத்திலே சாகுபடி இருக்கிறது. நிலம் ஒப்பந்தத்தின் பேரில் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. யார் நிலத்தைப் பண்படுத்த வேண்டும், யார் உரம் போடவேண்டும், யார் மற்ற வேலைகளைச் செய்ய வேண்டும் எப்படி மகசூலைப் பிரித்துக் கொள்ளவேண்டுமென்றெல்லாம் ஒப்பந்தம் ஏற்பட்டு இப்போது நிலமானது சாகுபடியில் இருக்கிறது. இந்தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டுவருவதன் காரணமாக 10 ஏக்கருக்கு அதிகமாக உள்ள நிலச்சுவான்தாரர்களைப் பொறுத்த வரையில் சங்கடம் ஏற்படுகிறது. 60, 40 வீதத்திற்கு உரியவர்கள் என்று இப்போது சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அப்படிக் கொண்டு வந்திருப்பதன் காரணத்தினால் நிலத்தை அறுவடை செய்யும்போது, மாட்டுவாரம் தாரர் 60 பாகம் வரையில் தான் எடுத்துக்கொண்டு 40 பாகத்தை நிலக் காரருக்குக் கொடுக்கலாம். இப்போது இருக்கும் முறையிலே, எந்த அண்டர்ஸ்டாண்டிங் ஏற்பட்டிருக்கிறதோ, எந்த ஒப்பந்தத்தோடு சாகுபடி செய்யப்பட்டிருக்கிறதோ அந்த வகையிலே மாட்டு வாரதார் சில வேலைகளைச் செய்திருந்தால், மற்ற எல்லாச் செலவுகளையும் நிலக்காரர் ஏற்றுக் கொண்டிருக்கலாம். இதை கொஞ்சம் யோசித்துப் பார்த்திருந்தால் புரிந்து கொண்டிருக்க முடியும்.

அங்கத்தினர் பேசும்போது, ஏற்கெனவே சொன்னபடி திருத்தம் கொண்டு வந்தவர் பேரிலும், சர்க்கார் பேரிலும் கூறியது நல்லதல்ல. அமுலுக்கு வந்தால் ஏற்படக்கூடிய கஷ்டங்களை எடுத்துச் சொல்வதையும், அதன் பேரில் திருத்தம் கொண்டுவரப்படுவதையும் ஒரு குறைபாடாக நினைப்பது கண்டிக்கத் தக்க ஒரு அம்சமாக இருக்கிறது என்று மீண்டும் சொல்லிக் கொண்டு, 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ந்தேதி முதல் இந்தச் சட்டம் அமுலுக்கு வரவேண்டுமென்ற திருத்தத்தை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: Sir, the hon. Member Sri Srinivasa Iyer tried to make it appear that the Report of the Select Committee was unanimous and that it was not challenged. At several stages, I challenged the facts furnished by the Member of the Board of Revenue who went there for investigation. If he goes through the Minute of Dissent given by me, he will find it. This is what I have stated :—

'This mode of tenancy is prevalent in a large number of villages in the taluks of Kulithalai, Musiri, Tiruchirappalli, Lalgudi

and to some extent in Karur in the district of Tiruchirappalli. It is not correct to state that this mode of tenancy is confined to some 28 villages in the district.'

*SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஸார் இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தங்களிலே, கனம் அண்ணுமலை அவர்களும், கனம் கல்யாணசுந்தரம் அவர்களும் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தங்களை நான் ஆட்சேபிக்கிறேன். ஒரு கதை சொல்லுவார்கள், அதாவது "சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானும் தாசன்" என்று அந்த முறையில், இந்த முறையானது மாகாணம் பூராவிலும் இருக்கிறது என்று சொல்லுவது பைத்தியக்காரத்தனம் என்று சொல்லுகிறேன்.

MR. SPEAKER : பைத்தியக்காரத்தனம் என்று சொல்வது நல்லதல்ல. இந்த மாதிரியான வார்த்தைகளை உபயோகிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : பைத்தியக்காரத்தனம் என்று சொல்வது பார்லிமெண்டரியா ?

MR. SPEAKER : இந்த மாதிரியான வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது என்று தான் சொன்னேன். அதை விட்டு விட்டு மேலே பேசுங்கள். (ஸ்ரீ எஸ். எம். அண்ணுமலேயும், ஸ்ரீ ஸி. நடராஜ உடையாரும் எழுந்து நின்றார்கள்.) இரண்டு அங்கத்தினர்கள் சேர்ந்து நிற்கக் கூடாது. ஒவ்வொருவராகக் கேளுங்கள். ஸ்ரீ நடராஜ உடையார் முதலில் கேட்கட்டும்.

SRI C. NATARAJA ODAYAR : தலைவர் அவர்களே, அந்த வார்த்தையை அங்கத்தினர் வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்கிறேன்.

MR. SPEAKER : பைத்தியக்காரன் என்று சொல்லக்கூடாது.

THE HON. SRI C. SUBRAMANIAM : பைத்தியக்காரன் என்று சொல்லவில்லை, பைத்தியக்காரத்தனம் என்று தான் சொன்னார்.

SRI A. GOVINDASAMY : இது பார்லிமெண்டரியா என்று கனம் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டும்.

MR. SPEAKER : பைத்தியக்காரன் என்று சொல்வதிலுள்ள seriousness இதிலே இல்லை. கொஞ்சம் கம்மி. மொத்தத்திலே இந்த மாதிரியான வார்த்தைகளை உபயோகப்படுத்தவேண்டாமென்று சொல்லுகிறேன். தகராறு வேண்டாம், விட்டுவிடுங்கள். ஸ்ரீ எம். ஆர். கந்தசுவாமி முதலியார் மேலே பேசலாம்.

*SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இப்போது உள்ள திருத்தம் எந்த இடங்களிலே

SRI V. K. KOTHANDARAMAN : பைத்தியக்காரத்தனம் போல என்று பேசலாமா ? இனிமேல் போல, போல என்று என்ன வேண்டுமானலும் பேசலாமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Hon. Speaker has ruled that the hon. Member should not use that word again. That is the end of the matter.

MR. SPEAKER : உபயோகப்படுத்தவேண்டாமென்று சொல்லியாகி விட்டது. திரும்பவும் கேட்கிறீர்களே ?

5th November 1958]

* **SRI M. R. KANDASWAMI MUDALIAR** : இப்போது எந்த இடங்களில சிக்கல்கள் ஏற்பட்டு, அதனால் விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்களோ, அவர்களுடைய கஷ்டங்களுக்குப் பரிகாரம் தேடு வதற்காக வரப்பட்ட மசோதா, மாகாணம் பூரா கொண்டுவரவேண்டா மென்று சொன்னால், கனம் அங்கத்தினர் சில நிலச்சுவாந்தார்களுக்காகப் பரிந்து பேசி, அவர்களுக்குச் சலுகை கொடுப்பதற்காக அரசாங்கம் ஒத்திப் போடுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த முறை மாகாணத்திலே எல்லா இடங்களிலும் இருக்கிறது என்று காண்பித்தால் மந்திரிசபை ராஜிநாமா செய்யுமா என்று சொன்னார்கள். மாகா ணம் பூராவிலும் கைஏர்வாரம், மாட்டு வாரம் என்ற முறை இல்லை. கனம் அங்கத்தினர் சொன்னதைப் போல் இல்லை என்று சொல்லுகிறேன். அப்படி இருக்கிறது என்று காண்பித்தால் நான் ராஜிநாமா செய்கிறேன். அப்படி இல்லை யென்றால் அவர் ராஜிநாமா செய்வாரா என்று நான் சவால் விடுகிறேன். சேலம் ஜில்லா போன்ற ஜில்லாக்களிலே மாட்டு வாரம், கைஏர்வாரம் என்ற பிரச்னை இல்லை. சிக்கலான தகராறு இல்லை. மாகாணம் பூராவுக்கும் இந்தச் சட்டத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று சொல்லி, ஆங்காங்கு வேலை செய்கிற தொழிலாளர்களைத் தூண்டி விட்டு, கிளர்ச்சியை உண்டுபண்ணி, விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் கட்சி நல்லது செய்வதாகச் சொல்லிக் கொண்டு, விவசாயிகளிடத்திலே அமைதியின்மையை உண்டு பண்ணுவதற்குத்தான் பிரயோசனப்படும். அதனால் எந்த இடத்திலே கை ஏர் வாரம்தாரர் முறை, மாட்டுவாரம் தாரர் முறை பழக்க வழக்கத்தில் இருந்ததோ அந்த இடத்திற்குத் தான் இந்தச் சட்டம் பொருந்துவதாக இருக்கவேண்டுமே தவிர மற்ற இடங்களில் விவசாயம் செய்யக் கூடியவர்களுக்கு இதை விஸ்தரிக்கக் கூடாது. மற்ற இடங்களிலே ஏர் ஓட்டு கிறார்கள், அன்றாடம் 2½ ரூபாய் அல்லது 3 ரூபாய் கூலி வாங்கிக் கொண்டு போகிறார்கள். அதே மாதிரி களை பிடுங்குதல், உரம் போடுதல், நாற்று நடுதல் என்றெல்லாம் நடக்கிறது. அவைகளுக்கு அவ்வப்போது கூலியை வாங்கிக்கொண்டு போகிறார்கள். திருச்சியில் இருக்கக்கூடிய கை ஏர் வாரம், மாட்டு வாரம் முறை மிக சிக்கலான முறையில் இருப்பதால் நல்ல முறையில் தீர்க்க முடியாதபடி இந்த சட்ட சபையிலே கூட இரண்டு மூன்று கூட்டங்களுக்குத் தள்ளிப்போடும்போது, இதை எல்லா ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்காமல் எந்தெந்த இடங்களிலே இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டியிருக்கிறதோ அந்த இடங்களுக்கு மட்டும் விஸ்தரிக்கவேண்டும். மாகாணம் பூராவுக்கும் விஸ்தரிக்கக்கூடாது என்று சொல்லிக்கொண்டு இந்தத் திருத்தங்களை எதிர்க்கிறேன்.

SRI A. GOVINDASAMY : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 12-50 p.m.
கை ஏர் மாட்டு வாரச் சட்டம் உடனடியாக அமுலுக்கு வரும் என்று, விவசாயத் தொழிலாளர்கள் எதிர்பார்த்திருக்கின்ற நேரத்திலே, இந்தச் சட்டத்தை அவர்களுடைய பாதுகாப்புக்காகக் கொண்டுவருகிறோம் என்று சொல்லிக்கொண்டு, காலம் கடத்தி இந்தச் சட்டத்தை விவாதித்து, 4, 5 மாதங்களுக்குப் பிறகு ஏப்ரல் 1-ம் தேதி இது அமுலுக்கு வரும் என்று சொன்னால், மிராசுதார்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்செய லாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது. மிராசுதார்கள் தரப்பிலே மிகத் திறமையாக வாதாடுவதைப் பார்க்கும்பொழுது, சர்க்கார் தரப்பில் நண்பர் லாசர் அவர்கள் கொண்டுவந்த திருத்தத்தை, அப்படியே நாங்களும் ஒத்துக்கொள்ளத் தயாராயிருக்கிறோம் என்பதற்கு அத்தாட்சியாக, அரசாங்கமே அதே திருத்தத்தைக் கொண்டுவந்தி ருக்கிறது என்று சொன்னால், ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்களுக்கும், அமைச்சர் அவையும் மிராசுதார்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதிலே அக்கறை காட்டுகிறார்கள் என்றுதான் தோன்றுகிறது. இந்த சர்க்கார் திருத்தத்தினால் அங்கேயுள்ள மிராசுதார்களுக்குத்தான் பலன் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்த சட்டத்தை நிறைவேற்றி, கவர்னர், அனுமதி பெற்றதும் உடனடியாக இதை அமலுக்குக் கொண்டுவந்தால் தான், அங்கேயுள்ள கை ஏர், மாட்டுவாரம்தார்களுக்கு இந்த கிராப் ஸீசனிலேயே ஏதாவது நன்மை கிடைக்கும். அதைக் காலம் கடத்த வேண்டிய அவசியம் கிடையாது. இந்த ராஜ்யம் பூராவிலுமுள்ள பகுதி

களுக்கு இந்த சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று நண்பர் அண்ணாமலை அவர்கள் சொன்னபொழுது, கை ஏர் வாரம்தார், மாட்டுவாரம்தார் என்ற முறை அங்கெல்லாம் இருப்பதாக நினைத்து அவர் சொல்லவில்லை. பல இடங்களிலே, வேறு பெயரில் இருந்தாலும், இம்மாதிரியான நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதிகளுக்கும் பொருந்தும் படி, பொதுவாக ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்றுதான் அவர் வலியுறுத்தினர். அந்தக் கருத்தை அரசாங்கம் இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும், எங்கு எல்லாம் அந்த மாதிரி நிலைமை யிருக்கிறதோ—கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் திருச்சி மாவட்டத்திலே இன்னும் சில கிராமங்களைச் சேர்க்கவேண்டுமென்று திருத்தம் கொடுத் திருக்கிறார்கள்—அங்கு எல்லாம் இந்த சட்டத்தைக் கொண்டுவருவதற்கு நமது அமைச்சர் அவை முன்வரவேண்டுமென்று வலியுறுத்துகிறேன். மிராசுதார்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது குறிக்கோளாக இல்லாமல், விவசாயத் தொழிலாளிகளுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **SRI M. P. SUBRAMANIAM** : நான் பேசவேண்டியதை சுருக்கமாக முடித்துவிடுகிறேன். இப்பொழுது இந்த மசோதாவில் குறிப்பிட்டுள்ள கிராமங்களில் இந்த கை ஏர், மாட்டு வாரம்தார் பிரச்னை இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. மற்ற பகுதிகளிலும் இந்தப் பிரச்னை இருக்கிறது என்ற அபிப்பிராயம் இருக்கிறது. நண்பர் கல்யாணசுந்தரம் கொடுத்திருக்கும் திருத்தமானது, இந்தமாதிரிப் பிரச்னை வேறு எந்த கிராமத்திலேயாவது ஏற்பட்டால், அதையும் "நோட்டிபை" செய்வ வதற்கு சர்க்காருக்கு அதிகாரம் இருக்கவேண்டுமென்பதுதான். எந்தெந்த இடங்களில் இந்தப் பிரச்னை எழுகிறதோ அதை சமாளிப்பதற்கு அரசாங்கத் திற்கு அதிகாரம் கோரப்படுகிறது. இதிலே ஆட்சேபணை செய்வதற்கு ஒன்றும் இல்லை. இப்பொழுது கொண்டுவந்திருக்கும் சட்டமே அந்த மாதிரிப் பிரச்னையை சமாளிப்பதற்காகத்தான் கொண்டுவரப்பட்டி ருக்கிறது. பல சந்தர்ப்பங்களிலே, "அரசாங்கத்திற்கு அதிகாரம் வேண்டும், அவசியமானபோது பயன்படுத்த அதிகாரம் வேண்டும்" என்று சொல்லுகிற அரசாங்கத்தரப்பு உறுப்பினர்கள் இந்த விஷயத்தில் ஏன் அரசாங்கத்தை நம்பாமல் இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இது விஷயத்திலே கருத்து மாறுபாடுக்கு இடமில்லை. நிலைமையைப் பரிசீலித்து, அவசியப்பட்டால் சட்டத்தின் மூலமாகச் செய்வதற்கு அமைச்சரவைக்கு அதிகாரம் கேட்கப்படுகிறது. அதை துஷ்பிரயோகம் செய்யவேண்டுமென்றால், அவர்களுடைய கட்சியைச் சார்ந்த அமைச்சர் அவைதான் செய்ய முடியுமே தவிர, எதிர்க்கட்சிக்கு வாய்ப்பு இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, with your permission, I move the following amendment :—

"In sub-clause (2) of clause 1, *for* the word and figure 'Schedule I' *substitute* the words 'the Schedule'."

சபாநாயகர் அவர்களே, "சவால்" விடுவதைப்பற்றி இங்கே சொல்லப் பட்டது. நான் தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்வது என்ன வென்றால், இந்த மன்றத்திலே அந்த வேலை வேண்டாம் என்பதுதான். அதற்கெல்லாம் வேறு இடம் இருக்கிறது. (சிரிப்பு.) இங்கே என்ன விவாதத்திற்கு வருகிறதோ அதைப்பற்றிமட்டும் பேசினால் போதும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த விவசாய முறை திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலே நாம் குறிப்பிட்டு இருக்கக்கூடிய கிராமங்களிலேமட்டுமில்லை, இன்னும் மற்ற கிராமங் களிலேயும் இருக்கிறது, அந்த ஜில்லாவிலேமட்டுமில்லை, இன்னும் பல இடங்களிலேயும் இருக்கிறது. ஆகையால் இந்த மசோதாவை மற்ற இடங் களுக்கும் பொருந்தும்படியாக திருத்தவேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதோடு, இது விஷயமாக விசாரிக்கப்போன

5th November 1958] [Sri M. A. Manickavelu]

போர்டு மெம்பர் இரண்டு மணி நேரம்தான் அங்கே இருந்தார் என்றும் சொல்லப்பட்டது. அதற்கு ஒரு திருத்தம். இரண்டு மணி நேரம் இல்லை, ஒரு நாள் பூராவும் இருந்து பார்த்தார். (சிரிப்பு.) ஏற்கெனவே சேகரித்த விவரங்களையும் வைத்துக்கொண்டு, தீர்க்காலோசனை செய்த பிறகு தான் இந்த முடிவுக்கு வரப்பட்டது.

இந்த மசோதா ஒரு விசேஷமான மசோதா. எப்படியென்றால், ஒரு சின்ன பகுதிக்கு மசோதா கொண்டுவருவது சாதாரணமாகக் கிடையாது. ஆனால் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம். அந்தப் பகுதியிலே இந்த விவசாயமுறை அதிகமாக கையாளப்படுகிறது. ஒரு குழப்பமான சூழ்நிலையை நிவர்த்தி செய்வதற்காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, "அத்தி பூத்தாப்போல்" இன்னும் ஒன்றிரண்டு இடங்கள் இருக்கின்றன, அதற்கெல்லாம் இம்மாதிரி சட்டம் கொண்டுவரவேண்டும் என்று சொன்னால், அது சரியாக இருக்காது. நன்றாகப் பரிசீலனை செய்ததில் இது அநேகமாக இங்கே குறிப்பிட்ட இடங்களில்தான் இருக்கிறது என்று தெரிகிறது.

இன்னொரு திருத்தத்தின் மூலமாக, மற்ற கிராமங்களுக்கும் இதை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் உரிமை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்படுகிறது. உரிமை எடுத்துக்கொள்ளலாம். அதிலே கஷ்டம் என்னவென்று சொன்னால், இம்மாதிரி ஒரு உரிமை இருக்கிறதே, ஆகையால் "ஒரு சான்ஸ்" பார்க்கலாம் என்று நினைத்து, குழப்பமும் கிளர்ச்சியும் ஏற்பட்டு ஒரு முடிவு இல்லாமல் போய்விடும். உண்மையிலே இம்மாதிரி நிலைமையிருந்தது என்றால், சட்டபூர்வமாகச் செய்யலாம். அதற்கு ஆட்சேபணை இல்லை. ஒரு அதிகாரம் இருக்கிறது என்றால், அனாவசியமான ஒரு நம்பிக்கை ஜனங்களுக்கு ஏற்படுகிறது. ஜனங்களுக்கு ஏற்படாவிட்டாலும், மற்றவர்கள் போய் ஏற்படுத்துவார்கள். அந்த மாதிரி சூழ்நிலையை உண்டுபண்ணுவது நல்லதல்ல. பிரத்தியட்சமாக நான் பார்த்திருக்கிறேன். **Tenants protection Act**-ஐ பெரிய நகரங்களிலே உள்ள சுற்றுப்புரங்களுக்கும் விஸ்தரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். அதற்காக வேண்டி நிறைய விண்ணப்பங்களும், மகசர்களும் வருகின்றன. இங்கேயும் அம்மாதிரி ஒரு விதி இருந்தால், இதை மற்ற இடங்களுக்கு விஸ்தரிக்கவேண்டுமென்று அநேகர் சொல்லலாம். அதனால் குழப்பம் ஏற்படும். உண்மையிலேயே இதை இன்னும் விஸ்தரிக்கக்கூடுமென்று நான் நினைக்கவில்லை. தீர விசாரித்துத்தான் செய்திருக்கிறோம். ஏதோ ஒரு கிராமம் அல்லது இரண்டு கிராமம் இருந்தாலும் இருக்கலாம். அப்படியிருந்தாலும், சட்டபூர்வமாகச் செய்வது தான் சரியே தவிர, இந்த மாதிரி ஒரு உரிமை எடுத்துக்கொண்டால், அதனால் பாதகம்தான் ஏற்படும். ஆகையால் வேண்டாமென்று சொல்ல விரும்புகிறேன்.

இந்த சட்டம் 1—4—1959-லிருந்து அமலுக்கு வரவேண்டுமென்று ஒரு அங்கத்தினர் திருத்தம் கொடுத்திருக்கிறார். அரசாங்கமும் ஒரு திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தக் கட்சியிலே இருக்கிறவர்கள் திருத்தம் கொடுத்தால் அது ஒத்துக்கொள்ளப்படுகிறது என்ற வகையிலே ஒரு அங்கத்தினர் சொன்னார்கள். அவர்களே எத்தனையோ திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஒத்துக்கொண்டிருக்கிறோம். எது நியாயமாக இருக்கிறதோ அதை ஒத்துக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது நடுவிலே திடீரென்று கொண்டுவந்தால், குழப்பங்கள், கஷ்டங்கள் ஏற்படும். மிராசுதார்கள் விதைக்காக எல்லாம் பணம் போட்டிருப்பார்கள், அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னாலும்கூட எந்த வகையில் எடுத்துக்கொள்வது என்பதைப்பற்றி எல்லாம் தகராறு வரும். அந்தத் தகராரின் காரணமாக மகசூலை நிலத்திலே வைத்துக்கொண்டால், மழை பெய்தால் கெட்டுப்போய்விடும். clean s'ate என்று சொல்வதுபோல, "cultivating season" ஆரம்பத்திலிருந்து இந்த சட்டம் அமலுக்கு வருவதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். திருச்சி ஜில்லாவைப் பொறுத்தவரையில் அது ஏப்ரல் மாதம் என்று சொன்னார்கள். அப்பொழுது நிலம் தரிசாகத்தான் இருக்கும்.

பதிதாக விவசாயம் ஆரம்பம் செய்யக்கூடிய காலமாக இருக்கும். இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள்தான் இருக்கின்றன. அதனால் ஒன்றும் ஆய்விடாது. ஆகவே இந்தத் திருத்தங்களை ஒத்துக் கொள்வதற்கு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். நியாயமான திருத்தங்கள் எல்லாம் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் நன்றாக யோசித்து, பொறுக்கு கமிட்டி பரிசிலனை செய்து ஒரு முடிவுக்கு வந்த பிற்பாடுதான் இந்த மசோதா இங்கே கொண்டு வரப்பட்டது என்று சொல்லிக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

The amendment of Sri V. K. Kothandaraman, the amendments of Sri S. M. Annamalai and the amendments of Sri M. Kalyanasundaram were put and lost.

The amendment of Sri S. Lazar was, by leave, withdrawn.

The Government amendments were put and carried.

Clause 1, as amended, was put and carried.

The Preamble was put and carried.

MR. SPEAKER : The Government have to move an amendment consequent on the amendments made to clause 1. The Hon. Minister will move it.

Schedule I.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"*After* clause 14, *for* the words 'Schedule I' *substitute* the words 'The Schedule'."

The amendment was put and carried.

MR. SPEAKER : In the new clause 3 substituted by the Government, there is no reference to Schedule II. Therefore an amendment to delete 'Schedule II' must be moved by Government.

* THE HON. SRI M. A. MANICKAVELU : The amendment will be moved after the Schedule is passed.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

Add at the end the following items :

(6) *Musiri taluk.*

1. Seeplaputtur.
2. Karaikadu.
3. Srinivasanallur.
4. Musiri.
5. Kolakudi.
6. Evur.
7. Kottur.
8. Thinnakonam.
9. Nachampatti.
10. Veeranampatti.

5th November 1958] [Sri M. Kalyanasundaram]

(7) *Tiruchirappalli taluk.*

1. Keelamullakudi.
2. Kollakudi.
3. Ottakudi.

The amendment was duly seconded.

SRI M. KALYANASUNDARAM : இனி விவாதித்து அமைச்சர் அவர்களுடைய கருத்தை மாற்ற முடியும் என்று நான் நம்பவில்லை. ஆகையினால், நான பேச விரும்பவில்லை.

The amendment was put and lost.

The Schedule as amended was put and carried.

Schedule II.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

'*Omit* Schedule II and the entries thereunder'.

The amendment was put and carried.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

'That the Tiruchirappalli, Kaiæruvaram and Mettuvaram Bill, 1958 (L.A. Bill No. 25 of 1958), as amended, be passed'.

The motion was put and carried and the Bill as amended was passed.

MR. SPEAKER : We may now adjourn and meet again at 3 p.m.

SRI M. KALYANASUNDARAM : We may adjourn now and meet again at 3 p.m. and go on till 5 p.m.

MR. SPEAKER : We may sit in the afternoon till we finish our business.

The House will now adjourn and meet again at 3 p.m.

The House then adjourned.

(After lunch—3 p.m.)

MR. SPEAKER : We have now three Bills to be discussed. The Hon. the Leader of the House has told me that the Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958) may be taken up for consideration first. So, let the Hon. Minister in charge of the Bill move a motion for changing the order of business.

VII.—GOVERNMENT MOTIONS.

(1) CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Sir, under Rule 21 (3) of the Assembly Rules, I move—

"That item (5) in the agenda, viz., 'The Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958)' be taken up now."

The motion was put and carried.

VI.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS (TRANSFERRED TERRITORY) EXTENSION OF TERM OF OFFICE OF MUNICIPAL COUNCILLORS BILL, 1958 (L.C. BILL NO. 9 OF 1958)

* THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Mr. Speaker, Sir, I beg to move—

'That the Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958) as passed by the Legislative Council be taken into consideration'.

Sir, the municipal councils in the transferred territory are governed by the Travancore District Municipalities Act, 1116 (Travancore Act XXIII of 1116). The term of office of the councillors of these municipal councils expires on the forenoon of the 1st January 1959. According to the present position, elections for these municipalities will have to be conducted before that date. The provisions of the Madras District Municipalities Act, 1920, have not yet been extended to the transferred territory. Such extension has to be done by legislation and it will take some time before it is finalized. It is not therefore possible to conduct the elections under the Election Rules of this State before the said date, namely, the 1st January 1959. It is therefore proposed to take power for the Government to continue the existing councils for six months more, i.e., up to the 30th June 1959 so that elections of councillors to these municipalities may be conducted before the expiry of this period. It is therefore necessary that we should proceed with the proposed legislation. I therefore move that the Bill be taken into consideration.

MR. SPEAKER: Motion moved—

'That the Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958) as passed by the Legislative Council be taken into consideration.'

* SRI M. S. SELVARAJAN: கனம் சபாநாயகர் அவர்களே, பழைய கேரள ராஜ்யத்திலிருந்த தமிழ் பகுதிகளில் பெரும்பாலானவை நமது ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. நம் ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அந்தப் பகுதிகளிலுள்ள பல சட்டங்களும் நடைமுறைகளும் இந்த ராஜ்யத்தில் இதர பகுதிகளிலுள்ள சட்டங்களினின்றும் நடைமுறைகளி னின்றும் வேறுபட்டவையாக இருப்பதை நாம் காண்கிறோம். இதைப் பார்க்கும்போது, அந்தப் பகுதிகள் சென்னை ராஜ்யத்துடன் இணைந்து பல மாதங்களாகியும்கூட ஏன் இன்னும் ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளிலும் சட்டதிட்டங்கள் ஒருப்போலவே அமல் நடத்தப்படுவதில்லை என்ற கேள்வி எல்லோருடைய மனதிலும் எழலாம். ஒரு ராஜ்யத்தைச் சேர்ந்த சில பகுதிகள் வேறு ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டாலும், ஒரு நிர்வாகப் பிரதேசத்தைச் சேர்ந்த சில பகுதிகள் வேறு நிர்வாகப் பிரதேசத்துடன் சேர்க்கப்பட்டாலும், அதற்குப் பிறகு அதன் விளைவாக சில சிக்கல்கள் அந்தப் பகுதிகள் இருக்கும் புதிய ராஜ்யத்திலும் புதிய பிரதேசத்திலும் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். திருவிதாங்கூர் ராஜ்யத்துடன் கொச்சிப் பகுதி இணைந்த பிறகும் இதே நிலைமை ஏற்பட்டது. அந்த இணைப்பு ஏற்பட்டு சுமார் 15 வருஷங்கள் ஆகிவிட்டன. 15

5th November 1958] [Sri M. S. Selvarajan]

வருஷங்கள் ஆகியிருந்தாலும், அந்த இரு பகுதிகளிலும் எல்லா நடைமுறைகளும் சட்டதிட்டங்களும் இன்றுவரையில் ஒரே மாதிரியாக ஆகிவிடவில்லை. இதைப் பார்க்கும்போது, பழைய கேரள ராஜ்யத்திலிருந்து ஓரிரு வருஷங்களுக்கு முன்பே நம் ராஜ்யத்துடன் இணைந்த பகுதிகளிலுள்ள சட்டதிட்டங்கள் இந்த ராஜ்யத்தின் இதர பகுதிகளிலுள்ள சட்டதிட்டங்களினின்றும் வேறுபட்டவையாக இருப்பதில் வியப்பில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். சென்னை ராஜ்யத்தின் இதர பகுதிகளில் எத்தகைய பிரதேசங்கள் மேஜர் பஞ்சாயத்துக்கள் என்று அழைக்கப்படுகின்றனவோ அவை கன்னியாகுமரி போன்ற பிரதேசங்களில் முனிசிபாலிடிகள் என்று அழைக்கப்படுகின்றன. அவை திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலிருந்தபோது அந்தப் பெயராலேயே அழைக்கப்பட்டுவந்தன. எனவே அதே பெயருடன் இங்கேயும் அழைக்கப்பட்டு வருகின்றன. இதர பகுதிகளிலுள்ள பஞ்சாயத்துக்களின் வருமான வரையறையும் கன்னியாகுமரி முதலிய பகுதிகளிலுள்ள முனிசிபாலிடிகளின் வருமான வரையரையும் வேறுபடுகின்றன. நமது ராஜ்யத்தில் எல்லா நடைமுறைகளேயும் சட்டதிட்டங்களேயும் கூடியசீக்கிரம் எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியாக அமல் நடத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஒரேமாதிரியான பகுதியை கன்னியாகுமரி முதலிய பிரதேசங்களில் முனிசிபாலிடி என்றும், இதர பிரதேசங்களில் மேஜர் பஞ்சாயத்து என்றும் அழைப்பதால் பெரிய கஷ்டங்கள் ஏற்படும் என்று நான் கருதவில்லை. இதர பகுதிகளிலுள்ள பஞ்சாயத்துக்கள் நிர்வாக அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன ; பஞ்சாயத்துத் தலைவர்களும் பஞ்சாயத்து மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அதேமாதிரி கன்னியாகுமரி போன்ற பகுதிகளிலுள்ள இந்தப் பஞ்சாயத்துக்களிலும் தலைவர்களும் மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் ; அந்தப் பஞ்சாயத்துக்களும் நிர்வாக அதிகாரிகளால் தான் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி முதலிய பகுதிகளில் இந்த முனிசிபாலிடிகளை நடத்தும் நிர்வாக அதிகாரிகள் அதற்கென்றே பயிற்சியளிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

இங்கு நிர்வாக அதிகாரிகளை பயிற்றுவிக்கும் முறை அல்லது நடைமுறைகள் அதேபோல் அங்கு பின்பற்றப்படாமல் வேறு விதமாக பயிற்றுவிக்கப்படலாம். ஆகவே அங்குள்ள அதிகாரிகள் இங்கு பணியாற்றவும், இங்குள்ள அதிகாரிகள் அங்கு சென்று பணியாற்றவும் அவர்கள் தாங்களே இஷ்டப்பட்டாலும், அரசாங்கம் இஷ்டப்பட்டாலும் நம் ராஜ்யத்தில் உள்ளவர்கள் இந்த ராஜ்யத்தில் உள்ள எல்லா பாகங்களுக்கும் சென்று பணியாற்றுவதற்கு கஷ்டங்கள் பலதும் வரலாம். ஆகவே அவசரத்தைக் கருதி முனிஸபல் தேர்தல்களை ஓரளவு காலதாமதமாக நடத்த சட்ட ரீதியாக உரிமையை அரசாங்கம் கேட்டாலும்கூட எவ்வளவு சீக்கிரமாக அவைகளை நடத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் கேட்ட பிரகாரம் கூடுதல் சிறிது காலம் பெற்றுக்கொண்டாலும்கூட அதற்குள்ளாக இருக்கக்கூடிய எல்லா சிக்கல்களையும் தீர்த்துவிட்டு திருவிதாங்கூர்-கொச்சி, இரண்டு பிரதேசங்களின் இணைப்பும்கூட இன்னும் பூரணமாகத் தீரவில்லை என்ற காரணத்தை காட்டாது, அக்காரணத்தைக் கவசமாகக் கொள்ளாது இந்த ராஜ்யம் முழுமைக்கும் ஒரேவிதமாக எல்லாக் காரியங்களையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ராஜ்யம் பூராவிற்கும் ஒரே நிர்வாக அமைப்பு இருக்கவேண்டும். இந்த ராஜ்யம் முழுமையிலுமுள்ள சிப்பந்திகளின் நலபுலன்கள் ஒரேவிதமாக கவனிக்கப்படவேண்டும். ஆகவே, தேர்தல் நடத்துவதற்கு, சிறிது தாமதமாக நடத்துவதற்கு அனுமதி பெற்றாலும் அந்தக் காலத்திற்குள்ளாகவாவது எல்லாவிதமான சிக்கல்களையும் தீர்த்து ராஜ்யம் முழுமைக்கும் ஒன்றுபோல் வசதி செய்து கொடுக்கவேண்டும். ஆகவே அரசாங்கம் முனிசிபல் தேர்தல்களை சிறிது காலம் தாமதித்து நடத்துவதற்கு அனுமதி கேட்டிருப்பது சந்தர்ப்பத்திற்கு உகந்ததும், அங்குள்ள நிலைமைக்கு ஏற்றதுமாகும் என்று சொல்லிக்கொண்டு இதை ஆதரிக்கிறேன். 3-10 p.m.

SRI T. T. DANIEL : Mr. Speaker, Sir, while supporting this Bill, I would like to point out some facts for the consideration of the Government. Nearly two years ago, the transferred territory was added to the Madras State. The Government are very careful to consider and to study the peculiar conditions that are prevailing in that district before extending any of the existing Madras State laws to that district. Some of the laws that are prevalent in the Madras State have already been extended. But so far as the Municipal Acts are concerned, it is really proper for the Government to consider the peculiar difficulties which are experienced by the people in that district, because of the continuance of the existing law there. So far as that district is concerned, there is no Surcharge Act. The municipality is not collecting any tax from registration fees. This is one of the peculiarities prevalent there. So far as water tax is concerned, it is being collected by the municipality. There must be difference between the rates that are prevailing in that district and the rates that are prevailing in the other districts. In regard to the powers of the Commissioner also, I think there are some differences between the powers of the Commissioner there under the present law and the powers of the Commissioner under the District Municipalities Act here. Before extending this Act, it is proper for the Government to ascertain from the local representatives the particular difficulties that are being experienced at present by the continuance of that law there and also ascertain from them the nature of the difficulties that people will have to endure if the Madras District Municipalities Act, as it is, is extended to that place. It is really proper on the part of the Government to postpone the election till the time that is asked for in the Bill. But I would like to point out to the Government that further extension on no ground should be sought by the Government. It is better that elections are conducted as early as possible in that district, after studying all the difficulties in that district and after extending the Act to that district, if necessary, with some modification to suit the conditions prevailing there.

SRI A. GOVINDASAMY : சட்டமன்ற தலைவர் அவர்களே, புதிதாக நம் தாயகத்தோடு சேர்ந்திருக்கிற பகுதிகளில் நகரசபை தேர்தல்களை தள்ளிப்போடுவதற்காக கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன். அதற்கு காரணம், அப்பகுதிகள் நமது தாயகத்தோடு சேர்ந்து இரண்டு வருடங்களாகியும், திருவிதாங்கூர் முனிஸிபல் சட்டப் பிரகாரம் முனிசிபல் தேர்தல்கள் ஜனவரி முதல் தேதியோடு முடிகிறது, என்பது அவர்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தும்கூட அப் பகுதிகள் இங்கு சேர்ந்தது முதல் இன்றுவரை யாதொரு நடவடிக்கைகளும் எடுக்காமல் தேர்தல்கள் நெருங்குகிறது என்ற சமயம் வரும்போது அந்த நெருக்கடியான கட்டத்தில் இந்த மசோதாவை இங்கு கொண்டுவந்து ஆறு மாத காலம் வேண்டுமென்று கேட்பது என்றால் அவர்கள் இதுவரை அவர்களின் பொறுப்பை உணராது இருந்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொல்லாமல் இருக்க முடியாது. குறிப்பாக நான்கு முனிஸிப்பாலிட்டிகள்தான் அங்கு இருக்கின்றன என்ற தகவல் எனக்கு கிடைத்திருக்கிறது. ஒன்று, செங்கோட்டை, மற்றொன்று நாகர்கோவில், மூன்றாவது அம்மையார் அவர்களின் தொகுதியாகிய குளச்சல், அடுத்தது விளவங்கோடு என்று நினைக்கிறேன்.

5th November 1958] [Sri A. Govindasamy]

இந்த நான்கு முனிஸிப்பாலிட்டிகளில் வோட்டர் லிஸ்ட் தயார் செய்யவோ அல்லது டிவிஷன்கள் பிரிப்பதற்கோ என்ன சங்கடங்கள் இருந்தது, இந்த இரண்டு வருடங்களில் என்று கேட்க விரும்புகிறேன். சாதாரணமாக கவனித்திருக்கக்கூடிய விஷயந்தான். அதை கவனித்திருந்தால், நமது தாயகத்தில் தேர்தல்கள் நடக்கும்போது, ஜனவரி அல்லது பிப்ரவரி மாதம் வரும் என்று நினைக்கிறேன், அந்தப் பகுதிகளிலும் தேர்தல் நடத்துவதற்கு வாய்ப்பு இருந்து இருக்க முடியும். அந்தப் பகுதிகளில்மட்டும் தேர்தல்களை ஆறு மாதம் ஒத்திப்போடவேண்டுமென்று கேட்பது என்று சொன்னால், நான் அமைச்சரவையை குற்றம் சாட்டாமல் இருப்பதற்கில்லை. தேர்தல் நெருங்கும்போது இந்த மசோதாவைச் கொண்டு வருவானேன் ? திருவிதாங்கூர் பகுதியோடு அவைகள் எதாவது தொடர்பு கொண்டு அதன் பேரில் ஒரு முடிவு காணாமல் இருந்திருந்தால் வேண்டுமானால் இப்படி காலதாமதம் கேட்க அவசியம் இருந்திருக்கக்கூடும். எப்பொழுது அந்தப் பகுதிகள் தாயகத்தோடு இரண்டறக்கலந்துவிட்டனவோ அப்பொழுதே இதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவேண்டும். அப்படி செய்ய தவறிய குற்றத்திற்காக அரசாங்கத்தின்மீது நான் பழி சுமத்த விரும்புகிறேன். அதற்கு அமைச்சர் அவர்களின் சமாதானத்தை அறிய விரும்புகிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, this is only a Bill for extending the life of the Municipal Councillors of the transferred territory of Shencottah and other taluks in the Kanyakumari district. I know the practical difficulties involved in having elections immediately. We are now completely revising the Municipal Act, and a committee is going into this question. We have finally decided to have the elections of the municipal councils in our State, including the Kanyakumari district, before the 30th April 1959. The present term of the municipal councillors of the Kanyakumari district expires by the 1st January 1959. Before the election dates, I am sure we will be finalising the Municipal Amendment Act, and the elections also will be completed some time before March 1959. So, I would request the Hon. Minister to see that election are held even in the Kanyakumari district in the month of March instead of postponing them by two months. The Hon. Minister says that there will be some difficulty in making provision for extending the Act. I have nothing to say except to request Government to see that elections are held at least before April and that there is no further postponement of the elections to the municipal councils.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று இங்கு கொண்டுவந்திருக்கின்ற மசோதா தேர்தல் நடத்துவதில் கால தாமதம் ஆக்கவேண்டுமென்றோ அல்லது வோட்டர்கள் லிஸ்டு தயாரிப்பதில் கால தாமதம் செய்யவேண்டுமென்றோ அல்லது வேறு விதமான தகராறுகள் இருக்கிறது என்பதற்காகவோ இந்த நீடிப்பு வேண்டும் என்று கோரப்படவில்லை. பொதுவாக சட்ட இணைப்புகள் எல்லாம் இதுவரை முடிவடையவில்லை. பாதிச் சட்டங்கள் தான் அங்கு இயங்குகின்றதே தவிர பூராவும் இதுவரை முற்றுப்பெறவில்லை. ஆகவே இந்த தேர்தலை நடத்துவதற்கு இன்னும் ஆறு மாதம் நீடித்து தரவேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. இந்த ஆறு மாதம் என்பது ஜூன் மாத கடைசிவரை இருக்கலாம். இருந்தாலும் அதற்கு முன்னதாகவே இந்த இணைப்புகள் எல்லாம் முற்றுபெற்றுவிட்டால் ஜூன் மாதத்திற்கு முன்னதாகவே தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சி

எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இப்போது ஆறு மாதகாலம் நீடித்து தர வேண்டும் என்றுள்ள மசோதாவை நிறைவேற்றி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958) as passed by the Legislative Council, be taken into consideration '.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

* THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Sir, I move—

'That the Madras (Transferred Territory) Extension of Term of Office of Municipal Councillors Bill, 1958 (L.C. Bill No. 9 of 1958), as passed by the Legislative Council, be passed '.

SRI A. GOVINDASAMY : இணைப்பு பூர்த்திபெறுததினால்தான் இப்போது தேர்தல் நடத்துவதற்கில்லை என்றும் அதற்காக ஆறு மாத காலம் நீடித்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அங்கே வோட்டர் லிஸ்டு தயார் செய்வதிலும், வார்டுகள் பிரிப்பதிலும் ஏற்படுகின்ற காலதாமதத்தினால்தான் இவ்விதம் நீடிக்கவேண்டியிருக்கிறது என்று சொன்னேன். அதற்கு கனம் அமைச்சர் அவர்களின் பதில் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : சட்டங்களை இணைப்பதில் ஏற்படுகின்ற காலதாமதமே தவிர, வோட்டர் லிஸ்டு தயாரிப்பதிலோ, அல்லது வார்டுகள் பிரிப்பதிலோ, அல்லது வேறு எந்த விதமான தகராறுகளினாலோ இந்த காலதாமதம் ஏற்படுவதில்லை என்று நான் என்னுடைய பதிலிலே கூறியிருக்கிறேன்.

The motion was put and carried and the Bill was passed.

(4) THE MADRAS PANCHAYATS BILL, 1958 (L.A. BILL NO. 33 OF 1958).

MR. SPEAKER : We will take up the next item of business, viz., the Madras Panchayats Bill, 1958 (L.A. Bill No. 33 of 1958).

SRI M. P. SUBRAMANIAM : Sir, I rise on a point of order. I wish to draw the attention of the Hon. Speaker to Rule 71 of the Assembly Rules which says—

'A motion must not raise a question substantially identical with one on which the Assembly has given a decision in the same session '.

We have discussed this Panchayats Bill at the last sitting of this same session, and we have taken decisions. The same thing cannot be reopened now in the same session itself. I think it is out of order to bring in the Panchayats Bill for consideration of the amendments passed by the Council.

5th November 1958]

MR. SPEAKER : I would draw the attention of the hon. Member to Rule 235, which says, ' Any member may, with the consent of the Speaker, move that any rule may be suspended in its application to a particular motion before the House . . .'

The Hon. Minister has my consent to move the motion.

SRI M. P. SUBRAMANIAM : But the question is not put to the vote of the House.

MR. SPEAKER : If the hon. Member raises this technical objection, I will ask the Hon. Minister to move a motion, under Rule 235.

VII.—GOVERNMENT MOTIONS—*cont.*

(2) MOTION UNDER RULE 235 OF THE ASSEMBLY RULES

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, under Rule 235 of the Assembly Rules, I move—

' That Rule 71 of the Assembly Rules be suspended and the House do proceed to consider the amendments made by the Legislative Council to the Madras Panchayats Bill, 1958 (L.A. Bill No. 33 of 1958), as passed by the Legislative Assembly '.

I thought I could move this motion when the amendments were actually taken up.

The motion was put and carried.

* SRI M. P. SUBRAMANIAM : I want to make one more submission, Sir. இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்து மசோதாவில் 39 திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உண்மையிலேயே இந்த 39 திருத்தங்களின்மீதும் நல்ல முறையில் விவாதம் நடத்த முடியாது. போதிய காலம் இல்லை. இங்கே இந்த மசோதா நிறைவேற்றின சமயத்தில் அவசர அவசரமாக நிறைவேற்றியதின் காரணமாகத்தான் இப்போது இந்த 39 திருத்தங்களை திரும்பியும் கொண்டுவரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதோடு இந்த திருத்தங்கள் எல்லாம் நேற்று இரவுதான் ஸர்க்குலேட் செய்யப்பட்டன. இதற்குள், அங்கத்தினர்கள் ஒருவரும் இதை சரியாக படித்து தெரிந்துகொண்டிருக்க முடியாது என்று நம்புகிறேன். இதில் கொண்டுவரப்பட்டிருக்கின்ற திருத்தங்களில் பல இங்கேயே இதற்கு முன்பு கொண்டுவரப்பட்டது. அப்போது மிக அவசரமாக நிறைவேற்றிய காரணத்தால் அதை ஒப்புக்கொள்வதற்கு அரசாங்கம் தயாரில்லாமல் இருந்தது. இப்போது சாவகாசமாக பார்த்ததின் பின்னால் அமைச்சர் அவர்கள் இப்போது சில திருத்தங்களை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இங்கும் அவசரமில்லாமல் நிறைவேற்றப்பட்டிருந்தால் இந்த திருத்தங்களில் பல இங்கேயே ஒப்புக்கொண்டிருக்கலாம். இப்பொழுதும் இது அவசரமாக கொண்டுவரப்படவேண்டிய சட்டம் ஒன்றுமில்லை. ஆகவே இதை பின்னால் கூடுகின்ற சபையில் வைத்து விவாதிக்கலாம் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

VI.—GOVERNMENT BILL—*cont.*

(4) THE MADRAS PANCHAYATS BILL, 1958 (L.A. BILL NO. 33 OF 1958)—*cont.*

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the House has already given permission to move it.

Sir, I move—

" That the amendments specified in the annexure being the amendments made by the Legislative Council to the Madras Panchayats Bill, 1958 (L.A. Bill No. 33 of 1958) as passed by the Legislative Assembly be taken into consideration ".

MR. SPEAKER : The question is—

'In clause 188, sub-clause (3), *omit* the second and third sentences'.

The amendment was put and carried.

Clause 198.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the amendment to this clause is the same as has been proposed to clause 179. The object of this amendment is that the Council also should have power.

MR. SPEAKER : The question is—

'In sub-clause (2) :

(i) *for* the words "Legislative Assembly" *substitute* the word "Legislature".

(ii) *omit* the words "within fourteen days on which the House actually sits".

(iii) *for* the words "or in more than one session" *substitute* the words "or in the next session".'

The amendment was put and carried.

Schedule IV.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the amendment to this clause is a verbal amendment. The words "or library" are to be removed.

MR. SPEAKER : The question is—

'(i) In rule 11 (3) *for* the words "shall continue to do so until his employment in the panchayat union council is terminated or until his remuneration, terms and conditions are duly altered by the panchayat union council" substitute the words "shall continue to do so until he ceases to be in the employment of the panchayat union council".

(ii) In rule 13, *omit* the words "or library".

(iii) In rule 26, omit the words "or of any of the Acts amended by this Act" and for the word "order" substitute "notification".'

The amendment was put and carried.

(5) THE MADRAS BETTING TAX (AMENDMENT) BILL, 1958 (L.A. BILL NO. 30 OF 1958).

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I move—

'That the Madras Betting Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 30 of 1958) be taken into consideration.'

5th November 1958] [Sri C. Subramaniam]

கனம் தலைவர் அவர்களே, இது, குதிரைப் பந்தயத்தில் பந்தயமாகக் கட்டப்படும் தொகைக்கு வரி போடுவது சம்பந்தப் பட்ட மசோதா. இங்கேயுள்ள அங்கத்தினர்களில் எத்தனை பேர் குதிரைப் பந்தயம் நடக்கும் இடத்திற்குச் சென்று பந்தயத்தைப் பார்த்ததுடன் மட்டுமின்றி பந்தயமும் கட்டியிருக்கிறார்களோ, எனக் குத் தெரியாது. நான் குதிரைப் பந்தயம் நடக்கும் இடத்திற்கும் சென் றிருக்கிறேன். ஆனால் நான் பந்தயம் கட்டியதில்லை. குதிரைப் பந்த யத்தில் இரண்டு விதமாகப் பந்தயம் கட்டலாம். பந்தயம் குதிரைகள் பேரில் 5 ரூபாய்க்கு, 10 ரூபாய்க்கு என்று டிக்கெட்டுகள் இருக்கும். எந்தக் குதிரையின் பேரில் பந்தயம் கட்டுகிறோமோ அந்தக் குதிரையின் பேரிலுள்ள டிக்கெட்டை நாம் வாங்கிக்கொள்ள வேண்டும். இது ஒரு வகைப் பந்தயம். இந்த டிக்கெட்டுகளை விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தில் கொஞ்சத்தை ரேஸ் க்ளப்புக்காரர்கள் தங்கள் க்ளப்பிற்கு எடுத்துக்கொண்டு பாக்கிப் பணத்தை டிக்கெட் வாங்கியவர்களுக்குத் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். "புகீஸ்" அல்லது "புக்மேகர்ஸ்" என்று சொல்லப்படும் இன்னொரு ரகப் பந்தயக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பந்தயத்தைப் பொறுத்த வரையில், அவர்கள் எந்தக் குதிரைகள் பேரில் பந்தயம் கட்டுகிறார்களோ அவைகள் ஜெயிப்பதைப் பொறுத்து, அவர்களுக்கு ரேஸ் க்ளப்காரர்கள் பணம் கொடுப்பார்கள். அவர்கள் ஒவ்வொரு குதிரைக்கும் விகிதாசாரத்தில் பணம் வைத்திருப் பார்கள். குதிரை ஜெயிக்கும் என்றால் போட்ட பணத்திற்குத் தகுந்தபடி பணம் கொடுப்பார்கள். குதிரை ஜெயிக்காமல் போனால் அவர்கள் கொடுக் கும் பணம் கம்மியாகும்.

சில சமயம் நூறு ரூபாய் போட்டால் இரண்டாயிரம் ரூபாயும் கிடைக்கக் கூடும். பல சமயங்கள் ஜெயிக்காமலேயே அத்தொகையை இழக்கவும் கூடும். இப்பொழுது, "பாக்கர்ஸ்"-க்கு "புக்மேக்கர்ஸ்" கொடுக்கும் பணத்தின்மேல் தான் வரி போடப் படுகிறது. ஆனால் இந்த மசோதா வின் மூலம், "புக்மேக்கர்ஸ்"-க்கு ஆக மொத்தம் எவ்வளவு கிடைக் கிறதோ அந்தப் பணத்தின்மேல் 10 பர்செண்ட் வரி போட வேண்டும் என்பதற்குத்தான் இது கொண்டு வரப் பட்டிருக்கிறது. ஒரு கணக்கிற்கு சொல்கிறேன், ஒரு கோடி ரூபாய் அவரிடம் போனால் அவர் திருப்பிக் கொடுப்பது 60 லட்சம் ரூபாய் தான். மீதி அவர்களுக்கு போகிறது. இது போல் நிறைய பேர்கள் இருக்கிறார்கள், அங்கே. அடுத்தபடியாக இந்த திருத்த மசோதாவிற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறேன் அதாவது, "டோட்டலைஸேட்டர்"-ல் செல்லும் பணத்திற்கும், "பாக்கர்ஸ்" "புக்மேக்கர்ஸ்"-க்கு கொடுத்த அல்லது கொடுக்க ஒப்புக்கொண்டுள்ள பணத்திற்கும் அக்கவுண்ட்ஸ் வைத்து அவைகளுக்கு வரி போட வேண்டு மென்பது. குதிரை பந்தயம் வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி நான் சொல்லவில்லை. குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமா வேண் டாமா என்பது பற்றி அபிப்பிராயபேதம் இருந்தாலும் இப்பொழுது இருக்கிறபடி அங்கிருந்து எவ்வளவு கூடுதல் வரி எடுக்க முடியுமோ அவ்வளவு கூடுதல் வரி எடுக்கலாம் என்பதில் அபிப்பிராயபேதம் இருக் காது என்று நினைக்கிறேன். ஆகவே, இந்த மசோதாவை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 4–00 p.m.

MR. SPEAKER : Motion moved :

That the Madras Betting Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 30 of 1958) be taken into consideration.

SRI A. GOVINDASAMY : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தை வரவேற்றுப் பேசுகிற நேரத்தில், இதை வரவேற்பதால் இந்த குதிரைப் பந்தயம் நீடித்திருக்க வேண்டுமென்ற கருத்து எங்களுக்கு இடையாது, குதிரைப் பந்தயத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற நோக் கத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம். குதிரைப் பந்தயம் ஒழிக்கப்

படவேண்டுமென்று இந்த சபையில் பலமுறை பேசப்பட்டிருக்கிறது. குதிரைப் பந்தயம் என்பது ஒரு சூதாட்டமாகையால் அது ஒழிக்கப்பட வேண்டுமென்று நாங்கள் இந்த சபையில் பன்முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்த சபையில் எத்தனை பேர்கள் குதிரைப் பந்தயத்தில் கலந்து கொள்கிறார்கள், எத்தனை பேர்கள் வேடிக்கை பார்க்கிறவர்கள், எத்தனை பேர்கள் பணம் வைத்து விளையாடுகிறவர்கள் இருக்கிறார்கள் என்றதொரு கேள்வியினை எடுத்த எடுப்பிலேயே நிதியமைச்சர் அவர்கள் எழுப்பினார்கள். நான் அவர்களிடம் கேட்டேன், நீங்கள் போயிருக்கிறீர்களா என்று? "நான் வேடிக்கை பார்க்க போயிருக்கிறேன்" என்று அவர்கள் சொன்னார்கள். ஒரு நாள் வேடிக்கை பார்க்கப் போனவர்களில் நானும் ஒருவன். அப்படி ஒரு நாள் வேடிக்கை பார்த்து விட்டு திரும்பும்போது தோல்வியடைந்தவர்கள், அதில் பணத்தை இழந்தவர்கள் வயிற்றெரிச்சலோடு காட்சி அளித்தது, மிகவும் சோகக் காட்சியாக இருந்தது. இப்பொழுதுள்ள அமைச்சரவையில் யாராவது அதில் கலந்து கொள்கிறாரா என்று தெரியாது. இதற்கு முன் இருந்தவர்கள் கலந்து கொண்டிருந்தது எனக்குத் தெரியும். அவர்கள் பெரிய பணக்காரர்களாக இருக்கலாம். ஆனால் அப்படி யாராவது இப்பொழுதும் மந்திரி சபையில் இருப்பார்களேயானால், அவர்கள் அப்படி செய்யாது மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டும். அமைச்சர்களே போகிறார்களே, பின் நாம் ஏன் போகக் கூடாது என்று மக்கள் எண்ணலாம். ஆகவே அப்படி போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பணக்காரர்கள்தான் "புக்மேக்கர்ஸ்"-யிடம் சென்று கட்டுகிறார்கள் என்று சொன்னாலும், அதனால் நமக்கு நாலைந்து லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது என்று வைத்துக் கொண்டாலும் கூட பல பேர்களின் பணம் பணக்காரர்களுக்குத் தான் போய் சேருகிறது. நமக்கு பணம் கூடுதல் கிடைக்கிறது என்பதற்காக நாம் இப்பொழுது இந்த சட்டத்தை நிறைவேற்றுகிறோம். எதிர் காலத்தில் கூட, நமக்கு வருவாய் அதிகமாக வருகிறதே, ஆகவே இந்த குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமா என்று நினைக்கக் கூடிய ஒரு நிலை வரும். குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட்டேயாக வேண்டும். அப்படி குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்றால், நல்ல குதிரைகளை எல்லாம் வளர்த்து விட்டார்களே அவைகளுக்கு வேலை வேண்டாமா என்று கேட்கலாம். வேண்டுமானால் அவைகளை பட்டாளத்தில் சேர்த்துக் கொள்ளட்டும். இல்லையெனில், பணம் கட்டாமல் அவைகளை ஓட்டலாம். இந்த குதிரைப் பந்தயம் காரணமாக பல குடும்பங்கள் சீரழிந்து வருகின்றன. ஐந்தும் பத்தும் ரூபாய் கட்டி விளையாடுகிறவர்களைப் பற்றி சொன்னார்கள். அங்கு போய் பார்த்தால் தெரியும், அரசன் முதல் ஆண்டி வரை, இளைஞர்கள் முதல் சுடுகாட்டிற்குப் போகயிருக்கும் படு கிழங்கள் வரை அங்கு விளையாட வருவதைப் பார்க்கலாம். இது, ஜோசியக்காரர்கள் பிழைக்க ஒரு வழியாக இருக்கிறது. இந்தக் குதிரை ஜயிக்கும், அந்தக் குதிரை ஜயிக்கும் என்று குறி சொல்பவர்களும் அங்கிருந்து கொண்டு பணம் அடிப்பதைக் காணலாம். ஆகவே, இந்த குதிரைப் பந்தயத்தை நீடித்து நடத்த விடலாமா என்பதை ஆலோசனை செய்து பார்க்க வேண்டும். வருவாய் அதிகம் வருவதால் தற்போது இந்த மசோதாவை ஆதரிக்கிறேனே தவிர எதிர் காலத்தில் நிச்சயம் இந்த குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டும். அப்படி ஒழித்தால் நாம் மக்களுக்கும், இந்த நாட்டிற்கும் பெரிய நன்மை செய்தவர்களாவோம் என்று சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

4-00 p.m.

SRI V. SANKARAN : தலைவர் அவர்களே, இந்த மசோதா எல்லோரும் வரவேற்கக் கூடியதொரு மசோதாவாகும். அதே சமயத்தில் ஒன்றிரண்டு அபிப்பிராயங்களை நான் சொல்ல விரும்புகிறேன். எல்லாவற்றிற்கும் வரி போட்டால், மற்ற சாமான்கள் எப்படி ப்ளாக் மார்க்கட்டில் போகிறதோ அதேபோல் இதுவும் வெளியே வராமல் உள்ளேயே இருக்கும்படியான நிலை வருவதற்கு இடம் கொடுத்து விடக் கூடாது. அப்படிப்பட்டதொரு நிலை ஏற்படலாம். அதற்கு இடமிருக்கிறது. இரண்

5th November 1958] [Sri V. Sankaran]

டாவதாக, எவ்வளவுதான் வரி போட்டாலும் ஒரு காரியம் தவறு அல்லது தீது என்றல் அதை முற்றிலும் ஒழித்துக் கட்டவேண்டும். அதை விட்டு விட்டு அதன் பேரில் கூடுதல் வரி போடுவதால் அதன் தீமை குறைந்து விடாது. சினிமாவிற்கு அதிகம் வரி போட்டாலும் அதனுல் சினிமாவிற்குச் செல்லும் கூட்டம் குறையவில்லே. அதே சமயத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பாகவே புக்கிங் ஆகிவிடுகிறது. எப்பொழுது இந்த குதிரைப் பந்தயம் தீதானது என்று ஒப்புக் கொள்கிறேமோ அதன் பின்பு அதை " கன்டிஷன் " பேரில் " அலவ் " செய்வது தவறு. எப்படி மதுவிலக்கை நாம் அமுல் நடத்திறேமோ அதேபோல் இந்த " ஹார்ஸ் ரேஸிங் " கையும் அறவே ஒழித்து விடவேண்டும். அதுதான் சிரிய முறையாகுமே தவிர அதை " கன்டின்யூ " செய்து கொண்டு போவதல்ல. அதனுல் இப்பொழுது எடுத்திருக்கும் " ஸ்டெப் " தவறு என்று நான் சொல்லவில்லை. ஆகவே, தற்காலம் இதை வரவேற்று விரைவில் இந்த குதிரை பந்தயம் ஒழிக்கப்படவேண்டுமென்று சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை பிரேரேபித்தபோது அமைச்சர் அவர்கள் அரசாங்கத்திற்கு இதனுல் வருமானம் அதிகரிக்கிற காரணத்தினுல் தான் இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது என்று தெரிவித்தார்கள். முதல் முதலாக இந்த சட்டம் 1935-ல் கொண்டு வந்தார்கள். அப்போது இந்த சட்டத்தை கொண்டு வந்த பன்னீர்செல்வம் அவர்கள் இந்த மசோதாவின் மூலம் அரசாங் கத்திற்கு சுமார் ஒரு லட்ச ரூபாய் வரை அதிகப்படியாக வருமானம் கிடைக்கும் ஆகவே இதை என் விட்டு வைக்கவேண்டும் என்று கருதித்தான் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டதாகத் தெரிகிறது. ஆனல் நாம் இப்போது முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்றல் இப்போது மூன்று கட்டங்களில் குதிரை பந்தயத்திலிருந்து வருமானம் கிடைக்கின்றது. அதாவது என்ட்ரன்ஸ் பீஸ் என்ற முறையில் ஒன்று, இரண்டாவது டோட்டலே ஸேட்டர் டாக்ஸ் என்ற முறையில், மூன்ருவது வின்னிங் தொகையிலிருந்து வரி வசூலிப்பது. இவ்விதமாக மூன்று விதங்களில் வரி வசூலிக்கப்பட்டாகவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சட்டம் முதலாவதாக கொண்டு வந்த காலத்தில் இதற்கு அதிகப்படியாக 4½ சத விகிதம் தான் விதிக்கலாம், என்று கருதி அப்போது உடனடியாக 1¼ சத விகிதம் வரி விதிக்கப்பட்டதாக தெரிகிறது. அப்போது 12 சத விகிதம் என்று உயர்த்தவேண்டுமென்று திருத்தம் கொண்டு வந்து கிருஷ்ணய்யா சௌத்திரி அவர்கள் வற்புறுத்தியபொழுது அரசாங்க சார்பிலிருந்து சொல்லப்பட்டது என்னவென்றல், இந்த விஷயத்தில் பொருளாதார தத்துவத்தின் அடிப்படையில் இதை கவனிக்க வேண்டும் என்றும் பொருளாதாரத்தில் " லா ஆப் டிமினிஷிங் ரிட்டர்ன்ஸ் " என்ற முறையில் வரி அதிகமாக அதிகமாக வருமானம் அதிகரிப்பதற்கு பதிலாக வருமானம் குறையத்தான் செய்யும். வரியை அதிகப்படுத்தினுல் புக் மேக்கர்ஸ் எல்லாம், ப்ளாக் மார்க்கட்டில் " பக்கட் ஷாப் " போன்ற முறையில் வரி கொடுக்காமல் வேறு விதத்தில் தொழிலை ஆரம்பித்து விடுவார்கள், இதன் காரணமாக அரசாங்கத்தின் வருமானம் குறைந்து போகும் என்று எடுத்துச் சொல்லப்பட்டதாகவும், அதன் பேரில் அந்த திருத்தம் வாபஸ் வாங்கப்பட்டதாகவும் தெரிகிறது. இதை என் குறிப்பிடுகிறேன் என்றல் 4½ சத விகிதத்துக்கு மேல் அதிகப்படியாக இருந்தால் வருமானம் குறைந்து போகக் கூடிய சூழ்நிலை ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமை என்பதை எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். இதே மாதிரியான ஒரு சட்டம் பம்பாய் ராஜ்யத்தில் கொண்டு வரப்பட்டபோது வெற்றிகரமாக நடத்த முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டு அதைவிட வேண்டிய நிலை வந்தது. அதுபோன்ற ஒரு சூழ்நிலை இங்கு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனல் நமது அரசாங்கத்தை பொறுத்தவரையில் இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பாகவே 12½ சத விகிதம் வரி வாங்கி வருவதாகத் தெரிகிறது. ஆகவே இப்போது இதிலிருந்து எவ்வளவு கூடுதல் வருமானம் கிடைக்கிறது என்று தெரிய

4-10 p.m

[Sri S. Lazar] [5th November 1958

வில்லை. கனம் அமைச்சர் அவர்கள் இந்தப் புள்ளி விவரங்களை கொடுத்தால் மிகுந்த உபயோகமாக இருக்கும் என்பதையும் தெரிவிதுத்க்கொள்கிறேன். ஆனால் இவ்விதம் வரியை உயர்த்துவதால் புக்-மேக்கர்ஸ்-எல்லாம் சரியான கணக்கை அரசாங்கத்திற்கு கொடுப்பார்களா என்று தெரியவில்லை. இவ்விதம் அதிகமான வரி போடும்பொழுது இதில் போய் பெட் செய்யக்கூடியவர்கள் வெளியில் போய் சட்டவிரோதமாக நடத்தப்படும் இடங்களில் போய் கலந்து கொள்வார்கள். இவ்விதம் உயர்த்தும் போது புக்-மேக்கர்ஸ்-களும் தங்கள் கையிலிருந்து அதிக தொகை கொடுக்க முன் வர மாட்டார்கள். வின்னிங் தொகைக்கு ஏற்படுத்தும் போதும் இதைப்பற்றி நாம் ஆலோசித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. இப்போது சினிமாவுக்கு வரியை உயர்த்தினபோது சினிமா தியேட்டர் சொந்தக்காரர்கள் தங்கள் வருமானத்திலிருந்து கொடுக்கவில்லை. டிக்கட்டை தான் உயர்த்தினார்கள். இது போன்ற நிலைமைதான் இதிலும் ஏற்படும். இவ்வித நிலைமை ஏற்படும்போது அதிகமாக ப்ளாக் மார்க்கட்டில் "பக்கட் ஷாப்" அதிகமாக ஏற்படுத்த வியாபாரிகள் முனைவார்கள். இதை அரசாங்கம் நன்றாக கவனிக்க வேண்டும். கடைசியாக பேசிய ஒன்றிரண்டு அங்கத்தினர்கள் சமூக சீர்திருத்தத்தில் தனிப்பட்டவர்களுடைய "இம்மாரலிடி" யைப்பற்றி குறிப்பிட்டார்கள். தனிப்பட்டவர்களுடைய "இம்மாரலிடி" யை போக்குவதற்கு வேண்டி பப்ளிக்-இல் "மொராலிட்டி"யை பரப்புவது அவசியமாக இருக்கிறது. இதை முக்கியமாக கவனிக்கவேண்டும்.

'The State need not be concerned with the immorality of the individuals provided it does not effect the public morality.'

இந்த அறிக்கையின் அடிப்படையில் பார்க்கும்போது இது எந்த அளவுக்கு வாதத்திற்குரிய அம்சமாகும் என்பதை நாம் உணர வேண்டும் என்பதை தெரிவித்துக்கொண்டு இதை அமுல் நடத்துகின்றபோது நான் குறிப்பிட்ட ஒன்றிரண்டு கருத்துக்களை அரசாங்கம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* SRI M. JAGANNATHAN : Sir, I oppose this Madras Betting Tax (Amendment) Bill and I oppose it for three important and valid reasons. I very much expected the Hon. the Finance Minister, who is in-charge of this Bill, to come forward with a statement as to how much of revenue he expects from this taxation measure. But, unfortunately, I was disappointed to find that he had not mentioned anything about the amount expected to be realised from this measure to enrich the State's coffers. When we go through the Statement of Objects and Reasons we find that this Bill is brought forward to augment the revenues of the State. Even if the Hon. Minister has given us an idea as to the amount that is going to be canalised towards the State's coffers from this taxation measure, I am doubtful whether this amount will ever be realised. Because I am told—I myself do not have any personal experience, since I am not a race goer . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : Never become one.

* SRI M. JAGANNATHAN : Thank you for your advice. I am told that the so-called totalisator operations are far from satisfactory. There is anything but fairplay going on within the race enclosure in the name of betting on horse races.

5th November 1958] [Sri M. Jagannathan]

Moreover, on account of the fact that this betting on horses is a gambling by its very nature, we cannot expect any honest dealings in this matter. Therefore, when we go about imposing more and more of taxation on these book-makers, it is very difficult to stop what is called ' tax evasion '. It is goin gto be a very great problem and, I am sure, the Government are going to experience the trial of their life in order to get even a single naya paisa out of these book-makers. They are such a sort of people by themselves. 4-20 p.m.

The second reason why I came forward to oppose this Bill is that this Bill is going to hit very hard these book-makers, in the sense that the incidence of this taxation is going to fall mainly on the poor book-makers. I am not holding any brief for book-makers. But still I am calling them as poor book-makers for the reason that they have already been fleeced.

THE HON. SRI C. SUBRAMANIAM : They are fleecing others.

* SRI M. JAGANNATHAN : In the first instance betting tax has been imposed on the book-makers and over and above that, these book-makers have to pay five times the amount paid by backers to gain admission into the enclosure. Now we are bringing forward this taxation measure with a view to impose additional tax on the total takings of the book-makers. So, at every stage, these poor book-makers, as I call them, are actually fleeced. As my hon. Friend, the hon. Member coming from Lalgudi has put it, the law of diminishing returns in the science of economics is going to operate in this field, resulting in the reduction of income to the State coffers. Do the Government still think that any revenue is going to come out of this taxation measure? The book-makers will try all sorts of contrivances to escape from this taxation.

The third reason, which is the most important of all reasons is that this measure of taxation is opposed to public policy. Sir, I want to ask the Hon. Minister for Finance, how this betting revenue is on a different footing from abkari revenue? In those days Congressmen used to cry from house tops that prohibition should be introduced and the traffic in liquor should be stopped, as it was very bad, it was a crime, it was a social evil and so on so forth. Further, they stated that it was very bad to expect any revenue out of this traffic in liquor.

MR. SPEAKER : The hon. Member is going away from the provisions of the Bill.

* SRI M. JAGANNATHAN : I am coming to the point. It has got relevance to the subject under discussion. They stated that it was very bad to expect any revenue out of this social evil of drinking and it was tainted money. So they introduced prohibition and they even went to the extent of sacrificing somewhere

[Sri M. Jagannathan] [5th November 1958

about Rs. 20 crores which we were getting for the State coffers from the traffic in liquor. I want to ask one question : 'How does this betting revenue stand on a different footing?' This is also a social evil. It is a gamble and it is accepted on all hands. No less a person than Mahatma Gandhi denounced this gamble of betting on horses in very bad terms, and therefore advised all his followers to give up this practice of betting on horses. With your permission I would like to read an extract from the book entitled 'Drink, Drugs and Gambling . . .'

MR. SPEAKER : Unless hon. Members have got a copy of it, how can the hon. Member read it Let him give a summary of it.

* SRI M. JAGANNATHAN : This book is kept in the State Legislature Library. Anybody can read it. Further, quotation from a book is not prohibited.

MR. SPEAKER : Is it relevant to the subject under discussion?

* SRI M. JAGANNATHAN : Otherwise, I would not have bothered to refer to it. Please allow me to read it. This is what Mahatma Gandhi writes on 'Gambling' :—

'Gambling on the race-course is, so far as I am aware, an importation like many other importations, from the West, and if I had my way I would withdraw the protection of the law that gambling on the race course enjoys even to the extent it does. The Congress programme being one of self-purifications, as is stated in so many words in the resolution of 1920, the Congress can have nothing to do with income derived from any vice. The Ministers, will, therefore, use the authority that they have obtained for educating public opinion in the right direction and for stopping gambling in high quarters. It is useless to hope that the unwary public will not copy the bad manners of the so-called high-placed people. I have heard it argued that horse-racing is necessary for breeding good horses. There may be truth in this. Is it not possible to have horse racing without gambling, or is gambling also an aid to the good breeding of horses?'

Sir, these are the wise words of the late lamented Mahatmaji, the Father of our Nation, and this is high time that Congressmen—I would call them rather Gandhian jingoists—should come forward and take stock of the situation. Otherwise, I am sure, a day will come—that is not very far in my opinion—when all these Congressmen will have to mourn in sack cloth and ashes for these deliberate aberrations of policy and the principles which they have been

5th November 1958] [Sri M. Jagannathan]

pursuing in the name of the Father of Our Nation, Mahatma Gandhi. With these words, I once again emphasize strongly that I oppose this Bill in the most strongest terms possible.

* Sri K. ANBAZHAGAN : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுது விதிக்கப்பட்டிருக்கிற "சூதாட்ட வரி" குறித்து குதிரைப் பந்தயச் சூதாட்டம் என்று சேர்த்துச் சொல்ல வேண்டும். அரசியலார் அடிக்கடி எடுத்துச் சொல்லி வருகிற கொள்கையையும், இன்றையதினம் வரி போட்டிருக்கிற தன்மையையும் ஒப்பிட்டு நினைக்கிறபொழுது, இந்த வரி போடுவதுகூட ஒரு சூதாட்ட முறையில் இருக்கிறது என்றே கருதுகிறேன். சூதாட்டம் என்கிற காரணத்தினாலே இப்படி ஒரு முறையைக் கையாளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கலாம். இந்த வரி போடுவதன் மூலமாக அரசாங்கத்தின் வருவாயைச் சிறிதளவு பெருக்கிக்கொள்ள விரும்புவார்களேயானால், இந்த வரி விதிப்பதற்கு குறுக்கீடாக இருக்க எதிர்க்கட்சியினர் பொதுவாக விரும்பவில்லை. எனக்கு முன்பு பேசிய நண்பர் ஜகந்நாதன் அவர்கள் இந்த வரியை எதிர்த்துப் பேசியபொழுது, எனக்குத் தோன்றியதொரு கருத்து, இன்றையதினம் ஆட்சியாளர்கள் உத்தமர் காந்தி கூறிய நெறியைப் பின்பற்றி ஆண்டுகொண்டிருக்கிறார்கள், அப்படி ஆளுகிறவர்கள் இதில்மட்டும் தவறிவிட்டார்கள் என்று அவர் பேசியதுபோல் தோன்றுகிறது. ஆனால், ஆட்சியாளர்களோ முன்னமேயே காந்திய நெறி காக்கத் தவறி விட்டார்கள். இனித் திருந்துவதற்கான வாய்ப்பைத் தேடிக் கொள்ளலாமென்று நினைத்து, குதிரைப்பந்தயம் நடக்கிற வரையிலாவது அதிலே கிடைக்கிற வரியை ஒழுங்காக வசூலிக்கலாமென்று கருதுகிறார்கள் போலும். வரி போடுவதினால் எந்தவிதத் தீமையும் ஏற்படவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டுமென்ற கருத்தில் மாறுபட்டவர்கள் பொதுவாக இல்லை. அது நிலைத்து நிற்கவேண்டும் என்று சொல்லுகிறவர்களின் கருத்தும், வாதமும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. இதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். குதிரைகள் நல்ல முறையில் வளர்க்கப்படவேண்டுமென்ற காரணத்திற்காகக்கூட மக்கள் வாழ்வு பலியிடப்படக் கூடாது. அதிலும் குறிப்பாக ஏழை மக்கள் பலியிடப்படவிடக் கூடாது. செல்வர்களது கொண்டாட்டமாக நடந்து வருகிற இந்தத் திருவிழாவிலே, பாமர மக்கள் தங்களுடைய வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்ளக் கூடிய சூழ்நிலையும் வழியும் இருக்கிற காரணத்தினால், இந்த நிலைமை இருக்கக் கூடாது என்பதை நல்லெண்ணம்கொண்ட அனைவரும் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள். ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் "நம்முடைய மாகாணத்திலே இந்த சூதாட்டம் நிறுத்தப்பட்டாலும், பிற மாகாணத்தில் இந்தச் சூதாட்டம் இருப்பதனால், நம்முடைய மக்களை அங்கே இழுத்து, அதன் மூலமாக நம்முடைய மாகாண மக்கள் பணத்தை வேறு மாகாணத்திற்குக் கொண்டு போவதற்கான வாய்ப்பு இருக்கும்" என்று தெரிவித்தது போல, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், இந்தச் சூதாட்டம் நீடிக்கப்படுகின்ற வரையில், இந்த வரி போடுகிற வகையில் அரசாங்கத்தின் வருவாயைப் பெருக்கிக்கொள்ள விரும்புவதை நான் மறுக்கவில்லை வரவேற்கிறேன்.

ஆனால் இந்தச் சூதாட்டம் நடைபெறுவதிலே இடையிலே இருக்கும் புக்கீஸ் என்று சொல்லப்படுகிறவர்கள், இத்தனை தவணை பங்கு தருகிறோம் என்று சொல்லிச் சூதாட்டம் நடத்துகிறவர்கள் அதிக அளவு லாபம் சம்பாதிக்கிற காரணத்தினாலே, அவர்களுக்கு வரி போடாமல் இருப்பது தவறு, எனவே பொதுவாக 10 சத விகிதம் வரி போடப்படுகிறது போல அவர்களுக்கும் போடப்படுகிறது என்று அமைச்சர் தெரிவித்தார். பொதுவாகச் சூதாட்டத்தைப் பற்றியே எனக்கு அதிகம் தெரியாது. அதிலும் குறிப்பாக குதிரைப் பந்தயத்தைப் பற்றி அறிவதற்கு எனக்கு வாய்ப்பு இல்லை. ஆனால் இந்தப் பந்தயத்திற்குப் போய் திரும்பி வருகிறவர்களின் முகத்தைப் பார்த்தால் இது எவ்வளவு கொடுமையாக இருக்கிறது என்பதை நான் ஓரளவுக்கு உணர்ந்திருக்கிறேன். அப்படி ஆளான

[Sri K. Anbazhagan] [5th November 1958

வர்கள் சொன்ன சில கருத்துக்களிலிருந்து நான் அறிந்தது இந்த புக்கீஸ்களிடம் அதிகமான தொகை கட்டி, அதிலிருந்து ஏராளமான லாபம் பெறலாம் என்று எதிர்பார்த்து பலரும் பணம் கட்டுகிறார்கள். மிக அதிகமான தொகை திடீரென்று கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே, இந்த புக்கீஸ்கள் ஏராளமான லாபம் சம்பாதிக்கவும் வழியாகிறது. இவர்கள் முறையற்ற அளவுக்கு லாபம் சம்பாதிக்க வழியாகவும், வகையாகவும் இருக்கிறது இன்றையதினம் இருக்கிற குதிரைப் பந்தய சூதாட்ட முறை. இன்றைய தினம் இந்தக் குதிரைப் பந்தய சங்கத்தார் நடத்துகிற சூதாட்டப் போட்டியிலே புக்கீஸ்கள் இடத்தில் ஈடுகட்டுபவர்கள் அதிகப் பணத்தை இழக்கிறார்கள் என்ற காரணத்தினாலே, மற்ற வகையிலே போடும் வரி 10 சத விகிதம் என்று சொன்னாலும்கூட, இந்த புக்கீஸ்களுக்கு வரி போடுவது ஏறத்தாழ 20 சத விகிதமாக இருக்கலாம், அந்த அளவுக்கு இந்த வரியை உயர்த்தலாமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்களும் இதே கருத்தை—வரியைப் பொறுத்தல்ல—புக்கீஸ்களிடம் அதிக தொகை கட்டப்படுகிறது, அதிக லாபம் அவர்கட்கு வருகிறது என்று தெரிவித்தார்கள். மொத்தமாகவே கிடைக்கிற தொகையிலிருந்து 10 சத விகிதந்தான் வரி போட இயலும் என்று கருதப்படுமேயானால், இந்த புக்கீஸ்கள் ஒவ்வொருவரும் நாளும் ஆடுகிற ஆட்டத்தின் மிகுதியான லாபத்திலிருந்தாவது ஏறத்தாழ 25 சத விகிதத்திற்காவது வரி போடவேண்டும். இது சூதாட்டத்திலிருந்து தனித்தனியாக திரட்டப்படுகிற பொருள். இவர்களால் எந்தக் குதிரைகளும் வளரவில்லை, ஏன், கழுதைகள்கூட வளரவில்லை. அப்படிப்பட்டவர்களிடமிருந்து அதிக வரியைப் பெறுவதற்கு இந்த அரசாங்கம் உரிமை பெற்றிருக்கிறது. ஆகவே அவர்கள் சம்பாதிக்கிற லாபத்தின் மீது அரசாங்கம் தக்க வரி போட முன்வரவேண்டும். இப்படியேதான் பொருளைச் சம்பாதிக்க வேண்டுமென்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. ஓரளவுக்கு இதைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று கருதுவோமேயானால், இந்த புக்கீஸ்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்குக் கிடைக்கும் லாபத்தின் மீது, பந்தய மிச்சத் தொகையின் மீது அதிக வரி போடுவது என்பது மிக மிக வரவேற்கத்தக்கதாகும். செய்ய வேண்டிய காரியமும்கூட, உதாரணத்திற்கு—நான் பிற நாடுகளைப் பற்றிக் குறைத்துச் சொல்ல விரும்பவில்லை—வேறு சில நாடுகளில், வேறு சில பஞ்சமா பாதகங்களுக்குக்கூட லைசென்ஸும் கட்டணமும் வைத்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அந்தப் பாதகங்கள் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் மிக மிகக் குறைவாகவே இருக்கிறது. அவை வளரக்கூடாது. தடுக்கப்பட வேண்டும். குதிரைப் பந்தய சூதாட்டம் மக்களுடைய எண்ணத்தைத் தவறான வழியிலே இழுத்துச் செல்லும் ஆற்றல் பெற்றது. அவைகளைத் தடுப்பதற்கான வழி வகைகளை எண்ணிப்பார்த்து, யார் அதிக லாபம் பெறுகிறார்களோ, அவர்களுக்கு வரியில் அதிகமான பங்கு என்ற முறையில், இந்த புக்கீஸ்களைப் பொறுத்த வரையில் அதிக வரி விதிப்பது தவறு இல்லை என்று கூறிக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

* Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, though I welcome the idea of the Government in introducing this Bill with a view to augmenting the revenues of the State, still I should say, as a matter of policy, it is wrong to bring forward this Bill. The Government should come forward as early as possible with a repealing enactment, if the old Act has become obsolete. I do not want to dilate much on this Bill except to say that I would request the Hon. Minister to clarify a certain point. It is mentioned in the Statement of Objects and Reasons that the book-makers should be allowed to pass on to the winners such portion of the tax as is leviable on the amounts paid out to the winners. I want to know from the Hon. the Finance Minister whether the

5th November 1958] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

tax will be on the bets. If the book-makers can pass on the tax, will they be permitted to pass on all the tax to the winners, and, if so, to what etent? Or, if they are permitted to pass on only a portion of the tax, to what extent they will be asked to pass on the tax? Will all the tax be borne by the winners or only a certain portion thereof? If so, what is the extent? This is the clarification, I want.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வரி விதிப்பின் காரணமாக எவ்வளவு நிதி கிடைக்கும் என்பதைப் பற்றிக் கேட்டார்கள். அதற்கு முன்பு இந்த வரி விகிதம் உயர்த்தப்பட்ட காரணத்தினால் வருமானம் எவ்வளவு அதிகமாயிற்று என்று கேட்டார்கள். "Diminishing returns" என்ற பொருளாதாரக் கொள்கையைச் சொல்லி, வரியை உயர்த்தியதனால், வருமானம் குறைந்திருக்கிறதா, அதிகமாயிருக்கிறதா என்று கனம் லாசர் கேட்டார்கள். முதலிலே இந்த வரி விகிதம் 12½ சத விகிதமாக இருந்தது. அப்படியிருக்கும் பொழுது இந்தப் பந்தயத்தை நடத்தக்கூடியவர்கள் வந்து, "இது அதிகமான வரி விகிதம், உயர்ந்ததாக இருக்கிற காரணத்தினாலே, இந்த வரியை ஏமாற்றுவதற்கு தூண்டுதலாக இருக்கிறது. இதைக் குறைத்தால் இப்பொழுது இருக்கிற 12½ சத விகிதம வருவதை விட அதிகமாக வரும்படி வரும்" என்ற யோசனையைத் தெரிவித்தார்கள். இப்படி யோசனை சொல்லுகிறார்களே, ஒரு வேளை ஜாஸ்தியாக இருக்கிறதோ என்று நினைத்து, 1955–56-லே 10 சத விகிதமாகக் குறைத்தோம். அதன் காரணமாக என்ன ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். 1954–55-லே 12½ சத விகிதமாக வரி இருந்த பொழுது, 11,27,000 ரூபாய் வசூல் ஆயிற்று. 1955–56-லே 10 சத விகிதமாகக் குறைத்தோம். அப்பொழுது 10,96,000 ரூபாயாக வசூல் இருந்தது. முப்பத்தோராயிரம் ரூபாய் குறைவாகக் கிடைத்தது. குறைவாக வந்திருக்கிறதே என்று கேட்டபொழுது, இப்பொழுதுதான் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம், அடுத்த வருஷத்திலே அதிகமாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். 1956–57-லே 12,71,000 ரூபாய் வந்தது. 1957–58-லே ரூபாய் 17,73,000 வந்திருக்கிறது. புக்கீஸ் நடத்துவதிலே இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை என்னவென்றால், வெகு சுலபமாக, கணக்குக்குக் கொண்டு வராமலே இந்தப் பந்தயங்களை வைத்துக்கொள்ள முடியும். இப்பொழுது கனம் அன்பழகன் சொன்ன மாதிரி அவர்கள் மீது 20 சத விகிதம் வரி போட்டு விடலாம். என்னைப் பொறுத்த வரையில் 50 சத விகிதம்கூட போடுவதற்குத் தயார். ஆனால் பந்தயங்களை மறைத்துக்கொள்வதற்கு அது ஒரு தூண்டுதலாக இருக்கும். ஓரளவு குறைவாக இருந்தால் கொடுத்துவிட்டுப் போய்விடலாமே, பின்னால் கண்டு பிடித்தால் தண்டனை கிடைக்குமே என்று நினைத்துக் கொடுத்து விடலாம். ஆனால் அதிகமாகப் போட்டால், தண்டனை வந்தாலும் கொடுத்து விடலாம், இப்பொழுது ஏமாற்றி விடுவோமே என்று நினைக்கத் தோன்றும். பத்து சத விகிதம் ஆக்கின பிறகு அதிகமாக வசூலாவதிலிருந்து இது தெரிகிறது. ஆகவே 10 சத விகிதமாக வைப்பதாகத்தான் அபிப்பிராயம். இப்பொழுது வரி போடுவதிலே, ஒரு பகுதி வரி போடாமல் இருப்பதையும் சேர்த்து வரி போடுகிறோம். அதன் மூலமாக 3 லட்சத்திலிருந்து 5 லட்சம் வரை சிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. குறைநதது 4 லட்சம் ரூபாய் எதிர் பார்க்கலாம். ஆகையால், இப்பொழுது 17 லட்சமாக இருப்பது 21 அல்லது 22 லட்சமாக உயருமென்று நினைக்கிறேன். வரி விகிதத்தை அதிகப்படுத்தி இன்னும் அதிகமாக இதிலிருந்து நாம் தொகையைப் பெறலாமென்று நினைப்பது ஓரளவுக்கு ஏமாற்றத்தை கொடுக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

காந்தியினுடைய கொள்கைகளைச் சொல்லி, அவர்கள் சொல்லிய பிரகாரம் இந்த குதிரைப் பந்தயச் சூதாட்டத்தை உடனடியாக ஒழித்து விடவேண்டுமென்று கனம் ஜெகன்னாதன் அவர்கள் சொன்னார்கள்.

சூதாட்டம் பொல்லாதது என்பது இப்பொழுது மட்டுமல்ல, பாரதத்திலே பெரிய நிகழ்ச்சிகள் எல்லாம் சூதாட்டத்தின் காரணமாக நடந்திருக்கிறது என்று சொன்னார்கள். உலகத்திலே நல்லவர் என்று சொல்லக்கூடிய தர்மபுத்திரரே சூதாட்டம் ஆடி பெண்சாதியைப் பணயமாக வைத்துவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. உண்மையாக நடந்திருக்கிறதோ, இல்லையோ தெரியாது. ஆனால் சூதாட்டத்தில் இறங்கினால் அது எவ்வளவு தூரம் கொண்டு போய் விடும் என்பதை வலியுறுத்தும் வகையிலே இந்த நிகழ்ச்சிகள் இருக்கின்றன. மனித சுபாவம் எப்படியிருக்கிறது என்றால், மனித அனுபவம் ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்த போதிலும்கூட, அந்த அனுபவத்தை மீறியும்கூட சில காரியங்களைச் 4-40 p.m. செய்யக்கூடிய நிலைமை இருந்துகொண்டே வருகிறது. இப்போது குதிரைப் பந்தயத்தை வெகு சுலபமாக எடுத்து விடலாம். ஆனால், சூதாட்ட மனப்பான்மையை மக்கள் மனதிலிருந்து எடுத்துவிட முடியுமா என்று பார்க்க வேண்டும். பணம் வைத்துப் பந்தயங்கள் கட்டுவது குதிரைகள் மீதுதான் என்பதற்கில்லை. பஞ்சின் விலையின் பேரில் பந்தயங்கள்—பருத்தி சூதாட்டங்கள்—நடந்தன. எங்கேயோ, அமெரிக்காவில், விற்கும் பருத்தி என்ன விலைக்கு விற்கும் என்பதுபற்றி சூதாட்டங்கள் நடந்தன. பருத்தி சூதாட்டம் நம் நகரில் எவ்வளவு அபாயகரமான நிலைமையை உண்டாக்கியிருந்தது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்ந்திருப்பார்கள். சில இடங்களில் நத்தைப் பந்தயங்கள் நடந்திருக்கின்றன. கார்களின் நம்பர்கள் பேரில் சூதாட்டம் நடத்துகிறார்கள். எனவே மக்கள் பலவிதமான சூதாட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். மக்கள் மனதிலுள்ள சூதாட்ட மனப்பான்மையை சட்டம் போட்டுத் தடுப்பதென்பது மிகவும் கஷ்டமான காரியம். மதுவிலக்கை எடுத்துக் கொள்வோம். மதுவிலக்குச் சட்டத்தை இயற்றியிருக்கிறோம். மது அருந்தும் பழக்கத்தை ஒழிக்க தீவிர முயற்சி எடுத்து வருகிறோம். சட்டத்தையும் மீறி எத்தனை பேர் குடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை கனம் அங்கத்தினர்களே பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே சட்டம் போடுவதால் மட்டும் இத்தகைய தீய காரியங்களைத் தடுத்து விட முடியாது. மக்கள் மனப்பான்மை மாறுவதுடன் சமுதாயச் சூழ் நிலையும் மாறும் போதுதான் இவைகளெல்லாம் தடுக்கப்பட முடியும். குதிரைப் பந்தயத்தை எடுத்து விடுவதனாலேயே சூதாட்ட மனப்பான்மை மக்கள் மனதிலிருந்து நீங்கி விடாது. குதிரைப் பந்தயத்தை எடுக்காவிட்டாலும், சூதாட்டங்களில் மக்கள் ஈடுபடுவதை கட்டுப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். முன்பெல்லாம் குதிரைப் பந்தயங்கள் எங்கோ நடந்து கொண்டிருக்கும். எந்தக் குதிரை ஜெயிக்கும் என்று ஊருக்குள்ளேயே பந்தயம் நடக்கும். அது சட்டத்தையும் மீறி இப்போதும் கொஞ்சம் நடந்து கொண்டிருக்கக் கூடும். ஆனால் இது இப்போது ஓரளவு குறைந்திருக்கிறது. எனவே சூதாட்டங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஜெகன்னாதன் காந்திஜீயின் புத்தகத்திலிருந்து சில பகுதிகளைப் படித்துக் காண்பித்தார். " We should educate the public opinion " என்றும் அவர் அந்தப் புத்தகத்தில் சொல்லியிருக்கிறார். அந்தப் பகுதியை விட்டு விட்டு அதைக் கொஞ்சம் மறைத்து—கனம் அங்கத்தினர் அப்புத்தகத்தைப் படித்தார்.

SRI M. JAGANNATHAN : நான் அவ்வாறு செய்யவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : இத்தகைய பந்தயங்கள் மூலம் கிடைக்கும் பணம் நல்ல காரியங்களுக்காகச் செலவழிக்கப்பட வேண்டுமென்றும் காந்திஜீ சொல்லியிருக்கிறார். சூதாட்டத்தில் ஈடுபடக்கூடாது என்ற மனப்பான்மை குழந்தைப் பருவம் முதற்கொண்டே எல்லோரிடமும் வளர்க்கப்பட வேண்டும். பணத்திற்கு மதிப்பு இருக்கும் வரையிலும், எந்த விதத்தில் பணம் சம்பாதித்தாலும் பணக்காரர்கள்தான் பெரியவர்கள் என்று மதிக்கப்படும் வரையிலும், எந்த விதத்திலாவது பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற மனப்பான்மை மக்களிடம் இருக்கத்தான்

5th November 1958] [Sri C. Subramaniam]

செய்யும். உழைப்பின் மூலம் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற மனப்பான்மையை மக்களுக்கு ஊட்டவேண்டும். அந்த மனப்பான்மையை மக்களிடம் வளர்க்கவேண்டும். சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க முயற்சித்தால் சமூகத்தில் சூதாட்டம் போன்ற தீங்குகள் இருக்காது என்பதால்தான் சோஷலிஸ சமுதாயத்தை நமது லட்சியமாக ஏற்றுக் கொண்டு, அந்த லட்சியத்தை அடைய பாடு பட்டுக் கொண்டிருக்கிறோம். ஸ்ரீ ஜெகன்னாதன் உண்மையான காந்தி சிஷ்யராக இருக்கலாம். எங்களைப் பொறுத்தவரையில், காந்திஜீ சொன்னபடி நாங்கள் ஓரளவு நடந்து வருகிறோம். "நாங்கள் காந்திஜீ சொன்னபடி அப்படியே நடக்கிறோம், நாங்கள் உண்மையான காந்தி சிஷ்யர்களாக இருக்கிறோம்" என்று நான் சொல்லவில்லை. காந்திஜீ சொன்னது முழுவதையும் எங்களால் கடைப்பிடிக்க முடியவில்லை. காந்திஜீ சொன்னது முழுவதையும் நாம் கடைப்பிடிக்க முடியவில்லை என்றால், அதற்குக் காரணம், "நாம் ஒவ்வொருவரும் மகாத்மா காந்தி அல்ல, நம்மிடம் மனிதக் குறைகள் இருக்கின்றன" என்பதுதான் ஆகும். நாம் ஒவ்வொருவரும் மகாத்மா காந்தி அல்ல. ஆகவே நம்மிடம் மனிதக் குறைகள் இருக்கத்தான் செய்யும். மகாத்மா காந்திஜீ கூறிய எல்லாவற்றையும் நாம் நடைமுறைக்குக் கொண்டுவர முடியவில்லை என்று ஸ்ரீ ஜெகன்னாதன் சொன்னால், அது ஒப்புக்கொள்ளத் தக்க குற்றச்சாட்டுதான். காந்திஜீ சொன்ன முறையில் மனித சமுதாயம் ஒருக்கால் பின்னர் மாறக் கூடுமோ என்னமோ, எனக்குத் தெரியவில்லை. அரிச்சந்திரன் கதை சொல்லப் பட்டும் கேட்கப்பட்டும் வருகிறது. நாம் அரிச்சந்திரன் கதையைக் கேட்டிருக்கிறோம். அந்தக் கதையின் நீதி, யாரும் ஒருபோதும் பொய்யே சொல்லக்கூடாது என்பதல்ல. யாராவது ஒரு பொய் சொல்லிவிட்டாலும் அதற்குப் பிறகு அவர் இந்த உலகத்தில் இருக்க அருகதையற்றவர் என்பதல்ல அக்கதையின் நீதி. பொய் சொல்வதைக் கூடிய வரையில் கட்டுப்படுத்தவேண்டும் என்பதைத்தான் அக்கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டும். மனிதர்களிடம் இருக்கும் குறைகளை எவ்வளவுக்கெவ்வளவு கட்டுப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு கட்டுப்படுத்துவதற்கு, சர்க்கார் என்ற முறையில் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். எங்கள் காலம் சூதாடிய காலம் என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஜெகன்னாதன் சொல்லிவிட்டார். ஒருக்கால், அவர் இந்த ராஜ்ய அமைச்சரவையில் இடம் பெற்றால், காந்திஜீ சொன்னபடி செயலாற்றுவரோ என்னமோ, எனக்குத் தெரியவில்லை. காந்திஜீ சொன்னபடி நடக்கக்கூடியவர் என்று அவரை எல்லோரும் கருதி அவரிடம் நம்பிக்கை கொள்ளக்கூடிய முறையில் அவர் பேசினார். ஆனால் அந்தப் பேச்சைக் கேட்டு அவரிடம் எத்தனை பேர் அவ்வாறு நம்பிக்கை கொள்வார்களோ, எனக்குத் தெரியாது.

இன்றுள்ள நிலைமையில் இந்த வரியைப் போடுவது நல்லது என்பதை பல கனம் அங்கத்தினர்கள் ஒப்புக் கொண்டார்கள். இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். "இனிமேல் புது வரி போட மாட்டேன்" என்று சமீபத்தில் ஒரு வாக்குறுதி கொடுத்தேன். இந்த மசோதா புதியதொரு வரியை விதிக்கும் மசோதா அல்ல. ஏற்கனவே இருக்கும் வரியை உயர்த்தும் மசோதாதான் இது. இந்த வரி உயர்வை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று கருதித்தான் இந்த வரியை உயர்த்துகிறேன். இந்த வரி உயர்வை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Madras Betting Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 30 of 1958) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. SPEAKER : The motion is—

'That clause 2 do stand part of the Bill.'

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

'In clause 2, *omit* the proviso to new sub-section (1) of section 5.'

The amendment was put and carried.

Clause 2, as amended, was put and carried

Clause 3.

MR. SPEAKER : The motion is—

'That clause 3 do stand part of the Bill.'

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move the following amendment :—

'*For* clause 3, substitute the following clause, namely :—

"3. *Amendment of section* 6, *Madras Act XX of* 1935 :—In section 6 of the principal Act, for clause (*a*) substitute the following clause, namely :—

'(*a*) cause accounts to be kept in the prescribed manner of all sums paid into every totalizator used, and of all sums paid or agreed to be paid to every bookmaker by backers in consequence of bets made by them at such meetings'." '

The amendment was put and carried.

Clause 3, as amended, was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

'That the Madras Betting Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 30 of 1958) as amended be passed.'

The motion was put and carried and he Bill as amended was passed.

II.—ANNOUNCEMENT *RE.* BILLS PASSED BY THE COUNCIL.

MR. SPEAKER : I have to announce that the Madras Industrial Establishments (National and Festival Holidays) Bill, 1958 (L.A. Bill No. 19 of 1958) was passed by the Legislative Council on the 4th November 1958, without any amendment.

I now adjourn the House *sine die.*

The House adjourned *sine die.*

VIII. PAPERS LAID ON THE TABLE OF THE HOUES.

